
ஆதிசைவர் மரபும் சான்றோர்களும்



ஆசிரியர்
சிவாகமஞானசாகரம், ஸௌம்ய சாக்த கலாரத்னா,
கயிலைமாமணி
சிவஸ்ரீ ந.இராமநாத சிவாச்சாரியார்
திருக்கோலக்கா, சீர்காழி.

உ
சிவமயம்
ஸ்ரீ செல்வகணபதி துணை

ஆதிசைவர் மரபும் சான்றோர்களும்



ஆசிரியர்
கயிலைமாமணி, சிவாகமஞானசாகரம், ஸௌம்ய சாக்த கலாரத்னா
திருக்கோலக்கா **N. இராமநாத சிவாச்சாரியார்**
சீர்காழி - 609 110. போன் : 04364-272116

விபரம்

நூலின் பெயர் : ஆதிசைவர் மரபும், சான்றோர்களும்

ஆசிரியர் : கயிலைமாமணி
ந. இராமநாத சிவாச்சாரியார், திருக்கோலக்கா.

வெளியிடுபவர் : குடவரசி அம்பாள் டிரஸ்ட், திருக்கோலக்கா.

பொருள் : ஆதிசைவர்களின் தோற்றமும்,
ஆகமப் பணியில் சிவாச்சாரியார்களும்

மொழி : தமிழ்

பிரதிகள் : 3000

முதல் பதிப்பு : மே – 2004

வெளியீட்டு விழா இடமும் நாளும் : அனைத்திந்திய ஆதிசைவ சமுதாய நல மாநாடு
AVC புதிய திருமண மண்டபம், மயிலாடுதுறை
12–05–2004 (தாரண சித்திரை 30)

பிரிண்டர்ஸ் : விஸ்வம் அச்சகம், திருவண்ணாமலை.
போன் : 04175 – 227516


கனனி அச்சுக்கோர்ப்பு : ஸ்ரீ ராஜேஸ்வரி, திருவண்ணாமலை.
செல் : 04175 – 312464

விலை : ரூ. 100/-

5-1

உ

ஸ்ரீ செல்வகணபதி துணை



ஆதிபூஜ்யாய தேவாய தந்த மோதக தாரிணே
வல்லபா ப்ராணகாந்தாய ஸ்ரீகணேசாய மங்களம்

பொருளடக்கம்

1. ஸ்ரீ செல்வகணபதி துதி 3
2. பொருளடக்கம் 4
3. ஆசியுரைகள்
   (அ) ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம், காஞ்சிபுரம் 5
   (ஆ) தருமையாதீனம், தருமபுரம் 7
   (இ) திரு ஆவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை 9
   (ஈ) சூரியனார் கோவில் ஆதீனம், திருமங்கலக்குடி 11
4. ஸ்ரீ ஸதாசிவ மூர்த்தி துதி 13
5. ஸ்ரீ கண்ட சிவாச்சாரியார் துதி 14
6. ஸ்ரீ சுந்தரர் பஞ்ச ரத்ன துதி 17
7. சிவாச்சார்ய ப்ரசஸ்தி 20
8. ஸ்ரீ சிவாச்சாரிய பரம்பராகமன மார்கானுதர்சி 20
9. முன்னுரை 23
10. அணிந்துரை 24
11. சிவாச்சார்யார் வரலாறு 29
12. ஆதிசைவ மரபும் ஆகமங்களும் 34
13. முப்போதும் திருமேனி தீண்டுவார் 38
14. ஆதிசைவ ப்ரவரம் 43
15. சிவதீக்ஷை 44
16. ஏழுவகை தீக்ஷைகள் 45
17. சமயாச்சார்யார்கள் தீக்ஷை 47
18. அஸ்த்ராபிஷேகம் 48
19. ஆச்சார்யாபிஷேகம் 48
20. ஆத்மார்த்த சிவபூஜை 51
21. வேதத்தில் ஆதிசைவர் 54
22. ஆகமங்களில் ஆதிசைவர் 56
23. ஆதிசைவர் பழக்க வழக்கங்கள் 57
24. கல்வெட்டுகளில் சிவாச்சாரியார் 59
25. தொல்பொருள் ஆய்வில் சிவாச்சாரியார் 75
26. சைவ புராணங்களில் சிவாச்சாரியார் 80
27. பெரிய புராணத்தில் ஆதிசைவர் 84
28. கந்தபுராணத்தில் ஆதிசைவர் 85
29. திருவிளையாடற் புராணத்தில் ஆதிசைவர் 86
30. ஆதிசைவர் தமிழ் பணிகள் 88
31. ஆதிசைவ சான்றோர்கள் 93
32. நன்றியுரை 191

5-1

Phone : (04112) 222115
Fax : 224305
Email:- skmkanci@md3.vsnl.net.in.

Sri Chandramouleeswaraya Namaha:
Sri Sankara Bhaghavadpadacharya Paramparagatha Moolamnaya Sarvagnapeeta

His Holiness Sri Kanchi Kamakoti Peetadhipathi

JAGADGURU SRI SANKARACHARYA SWAMIGAL

Srimatam Samsthanam

No.1, Salai Street, Kancheepuram - 631 502.

Date: 2. 5. 2004

நமது அனாதியான ஸனாதன தர்மங்களுக்கு ஆணிவேராக உள்ள வேதங்களை தனது மூச்சுக் காற்றாக உடைய பரமேச்வரன் கருணையுடன் இவ்வுலகில் உள்ள எல்லாவிதமான ஜீவராசிகளிலும் பரம்பொருளாக இருந்து காத்து ரக்ஷிக்கிறார். அப்படிப்பட்ட பரமேச்வரனை பூஜித்து, அவரது திருவருளை மக்களுக்கு வாரிவழங்கும் அந்த பூஜகர்கள், சிவாசாரியார்கள், தீக்ஷிதர்கள், பட்டர்கள், குருக்கள்கள் என்னும் பெயர்களுடன் விளங்குகிறார்கள். இந்த அநேகப் பெயர்களில் சிவாசாரியார்கள் என்னும் புனிதமான பட்டபெயர் மிகவும் உசிதமானதும் ச்லாக்யமாகவும் ப்ரஸித்த மாகவும் கொண்டாடப்படுகிறது. அப்படிப்பட்ட சிவாசார்யார்களின் பெருமைகளையும், சான்றோர் களின் பெருமைகளையும், முக்ய வரலாறுகளையும் விளக்க "ஸ்ரீ ஆதி சைவ மஹாநாட்டை நடத்தி அம் மஹாநாட்டில் **ஸ்ரீ ஆதி சைவர் மரபு**" என்ற நூலை வெளியிட இருப்பதையறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறோம்.

ஸ்ரீ மஹா திருபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீ சுந்தர மௌளீச்வர ஸ்வாமியின் அருளால் நிர்விக்னமாய் மஹாநாடும் சிறப்பாக நடந்து, மலரும் பயன் படும்படி நறுமணத்துடன் அமைந்து, ஸ்ரீ சிவாசார்யார்களும் பூஜைகளை செய்துகொண்டு உலகம் அனைத்தும் இஹபர ஸகல மங்களங்களையும் அடைந்து பரம க்ஷேமமாக வாழ வேண்டும் என்று ஆசீர்வதிக்கின்றோம்.

நாராயணஸ்ம்ருதி:

உ
குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்
26-வது குரு மகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

தருமபுரம்,
மயிலாடுதுறை (அஞ்சல்) - 609 001.

நாள் : 05-05-2004

அருள் வாழ்த்துரை

"ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே"

அம்மானே ஆகம சீலர்க்கு அருள்நல்கும்
பெம்மானே பேரரு ளாளன் பிடவூரன்
தம்மானே தண்டமிழ் நூற்பல வானர்க்கோர்
அம்மாவே பரவையுன் மண்டளி அம்மானே

- சுந்தரர்

சிவபெருமானால் அருளிச் செய்யப்பெற்றவை வேதசிவாகமங்கள் இவற்றுள் வேதம் உலகவாழ்க்கையில் மக்கள் பலரும் பின்பற்றி வாழத் தக்க ஒழுக்க நெறிகள் பலவற்றையும் விரித்துக் கூறலின் பொதுநூல் எனவும், சிவ ஆகமங்கள் சிறப்பாகச் சமய நெறிகளையும் ஆலய வழிபாட்டு முறைகளையும் கூறுதலின் சிறப்புநூல் எனவும் கூறப்படும். வேதங்கள் - இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என நான்காகும். சிவாகமங்கள் காமிகம், யோகஜம் முதலிய இருபத்தெட்டாகும்.

ஆகமங்கள் எண்ணிலாதன இருந்தன எனவும், இப்போதுள்ளவை இருபத்தெட்டு எனவும் கூறுவர். "எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர்" எனச் சேக்கிழார் கூறுவதாலும்.

அஞ்சவ மேனி அரிவையோர் பாகத்தன்
அஞ்சொடு இருபத்து மூன்றுள ஆகமம்
அஞ்சலி கூப்பி அறுபத்து அறுவரும்
அஞ்சாம் முகத்தில் அரும்பொருள் கேட்டதே

எனத் திருமந்திரத்துள் திருமூலர் கூறுவதாலும் அறியலாம்.

சிவாகமங்களைச் சிறப்பாகக் கற்றுணர்ந்து உலக நலங்கருதிச் சிவாலய வழிபாடுகளை முறையாகச் செய்துவரும் சிறப்புக்குரியவர்கள் ஆதிசைவர்கள் ஆவர். சிவவேதியர்கள் எனப்படும் இம்மரபில் தோன்றியவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள், இவரது திருவவதாரத்தைச் சேக்கிழார்.

மாதொரு பாகனார்க்கு வழிவழி அடிமைசெய்யும்
" வேதியர் குலத்துள் தோன்றி மேம்படு சடையனார்க்கு "
ஏறமில் கற்பின் வாழ்க்கை மனைஇசை ஞானியார்பால்
தீதகன் றுலகம் உய்யத் திருஅவதாரம் செய்தார்

என்று கூறுவர். நாயன்மார்களில் சுந்தரர், புகழ்த்துணையார் முதலியோர் ஆதிசைவ மரபில் தோன்றி அருஞ்செயல் புரிந்தோராவர்.

ஆதிசைவர்கள் சிவபெருமானை முப்போதும் திருமேனி தீண்டி வழிபடும் சிறப்புடையோராதலின் தொகையடியார் வரிசையில் முப்போதும் திருமேனி தீண்டுவார் என ஆதிசைவர்களைச் சுந்தரர் போற்றியுள்ளார்.

இன்றைய நிலையில் அனைத்துச் சமுதாயத்தினரும் தத்தம் மரபுகளைப் பேணிவளர்த்து வரும் முறையில் ஆதிசைவர்களும் தமக்குள் ஒருங்கிணைந்து மயிலாடுதுறையில் அனைத்திந்திய ஆதிசைவ சமுதாயப்பணி மேம்பாட்டு மாநாடு நிகழ்த்துவதையும், அதுபோது ஆதிசைவர் மரபும் சான்றோர்களும் என்ற பெயரில் சிறப்பு நூல் ஒன்றை வெளியிடுவதையும் அறிந்து மகிழ்கின்றோம்.

மாநாடு சிறப்புற நிகழவும் நூல் வெளியீடு மிக்க பயனை அளிக்கவும் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத்
திருஆவடுதுறை ஆதீனம்
(தோற்றம் 14-ஆம் நூற்றாண்டு)
23-வது குரு மகாசன்னிதானம்
**சீர் - வளர் - சீர் சிவப்பிரகாச
தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்**

திருவாவடுதுறை - 609 803
(நாகை மாவட்டம்)
✆ 04364 - 232021

நாள் : 05-05-2004

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சின் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க

அருள் வாழ்த்துரை

எப்போதும் இனியபிரான் இன்னருளால் அதிகரித்து
மெய்ப்போத நெறிவந்த விதிமுறைமை வழுவாமே
அப்போதைக் கப்போதும் ஆர்வமிகும் அன்பினராய்
முப்போதும் அர்ச்சிப்பார் முதல்சைவராம் முனிவர்

- திருத்தொண்டர் புராணம்

அனைத்திந்திய ஆதிசைவ சமுதாய நல மாநாடு தாரண வருடம் சித்திரை மாதம் 30, 31 (12-05-04, 13-05-04) ஆகிய இரு தினங்களில் **A.V.C. புதிய திருமண மண்டபம்** மயிலாடுதுறையில் சிறப்பாக நடைபெற உள்ளமை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றோம்.

பெரியபுராணத்தில் தெய்வச் சேக்கிழார் பெருமான் முப்போதும் திருமேனி தீண்டுவார் புராணத்தில் ஆதிசைவர் பெருமையினை அழகுற எடுத்து இயம்பி உள்ளார். வழிவழியே திருத்தொண்டின் விரும்பிய அர்ச்சனைகள் சிவ வேதியர்க்கே உரியன என்பது பெரியபுராணம் கூறும் கருத்து. இத்திருமுறைக் கருத்து எந்நாளும் நின்று நிலவிடும் முறையில் உரிய தருணத்தில் இம்மாநாடு நிகழ்த்தப் பெறுவது பாராட்டுக்குரியது.

சிவாகம நெறி வழுவாது சிவாலயத்தில் பரார்த்த பூசைகள் நடக்க வேண்டும் என்பது சைவ சமய அடிப்படைக் கருத்தாகும். சிவாகம நெறி இம்மண்ணுலகுக்கு மட்டுமின்றி விண்ணுலகுக்கும் பொதுவாகும் என்ற கருத்தினை விதியினால் இமையோர் தொழுதேத்தும் விகிர்தனே என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாவடுதுறைப் பதிகத்தில் குறிப்பிட்டு அருள்கிறார்.

சிவாகமம் வேதசாரம் என்னும் மகுடாகமக் கருத்தினை நமது ஆதீன மாபாடியகாரர் மாதவச் சிவஞான யோகிகள் தமது சிவஞான மாபாடியத்துள் குறிப்பிட்டருள்கிறார். இவ்வுண்மைகளை எல்லாம் இன்றைய சைவத் தமிழுலகம் உணரும் வகையில் **ஆதிசைவர் மரபும், சான்றோர்களும்** என்னும் அரிய நூல் இம்மாநாட்டு மலராக வர இருப்பது போற்றுதற்குரிய சிவபுண்ணியச் செயலாகும். சிவதீக்கை சிவபூசை, ஆதிசைவப்ரவரம், வேத சிவாகம ப்ராணங்களில் ஆதிசைவர் குறித்த செய்திகள், கல்வெட்டு வரலாற்றுச் செய்திகள் முதலிய அரிய பல கருத்துக்களை உள்ளடக்கி கயிலைமாமணி சிவத்திரு. ந. இராமநாத சிவாச்சாரியார் அவர்கள் இந்நூலினை ஆக்கியிருப்பது பாராட்டுதலுக்கு உரியது.

அனைத்திந்திய ஆதிசைவ சமுதாயநல மாநாடு வெற்றிகரமாக நடந்தேறவும், எங்கும் சிவாகம நெறி தழைத்தோங்கவும், ஆதிசைவ குலம் நீடு தழைக்கவும், மாநாட்டினைப் பொறுப்பேற்று நடத்துகின்ற, கலந்து பயன்பெறுகின்ற அன்பர்களுக்கெல்லாம் இம்மை மறுமை வளங்கள் யாவும் கைகூடித் திருவருள் பெருகிச் சிறந்திடவும் நமது வழிபடு கடவுளாகிய அருள்மிகு ஞானப்பெருங்கூத்தன் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

நாள் : 05-05-2004

அருள் வாழ்த்துரை

திருக்கயிலாய பரம்பரை, ஸ்ரீ கந்தபரம்பரை
ஸ்ரீ சிவாக்கிரயோகிகள் ஆதீனம்
27-வது குரு மகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சங்கரலிங்க தேசிக பரமாச்சார்ய சுவாமிகள்

சூரியனார் கோயில் - திருமங்கலக்குடி - 612 102.

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

"நமச்சிவாய வாழ்க
நாதன் தாள் வாழ்க"

அனைத்திந்திய ஆதிசைவ பணிமேம்பாட்டு மாநாடு அழைப்பிதழ் கிடைக்கப்பெற்று மகிழ்ந்தோம். இப்புனித மாநாட்டுத் தொடர்பாக சீர்காழி, திருக்கோலக்கா. சிவஸ்ரீ. ந. இராமநாத சிவாச்சாரியார் அவர் எழுதி வெளியிடும் ஆதிசைவர் மரபும், சான்றோர்களும் என்கின்ற நூல் வெளியிடுவது குறித்து அகமகிழ்கின்றோம். இந்நூல் ஸ்ரீ செல்வகணபதி துதி தொடங்கி, நன்றியுரை முடிய 31 தலைப்புகளில் 192 பக்க அளவில் நேர்த்தியான அட்டையும் வெளியிடப்பட்டுள்ளது. அட்டையில் அருள்மிகு தழுவும் நாயகியும், தழுவக்குழையும் நாதரையும் கண்ணாறக் கண்டு அருள் பெறலாம். இந்நூலில் சிவாச்சாரியார் வரலாறு பல தென், வடமொழி நூல்களை ஆய்ந்து தொகுத்தளிக்கப்பட்டுள்ளது. இதில் ரிஷிகள் தோன்றிய வரலாறு மிகவும் தெளிவாக சொல்லப்பட்டுள்ளது. ஆதிசைவ மரபும், ஆகமங்கள், முப்போதும் திருமேனி தீண்டுவார் வரலாறு, அவர்தம் சிறப்புக்கள் அரிய பல தகவல்கள் அருமையாகத் தொகுத்தளிக்கப்பட்டு விளக்கப்பட்டுள்ளது.

ஆத்மார்த்த சிவபூசை பற்றிய செய்திகள் உள்ளன.

அத்யயனம் யஜனம் தானம் இம்மூன்றும் ஆன்மார்த்தம்
அத்யாபம் யாஜனம் ப்ரதிக்ரஹம் இம்மூன்றும் பரார்த்தம் என்று

ரத்தின சுருக்கமாக ஆத்மார்த்த பரார்த்த பூசைகளைப் பற்றிய ஆகமம் விதித்துள்ளவற்றைக் கூறி, அதற்குமேலாக, ஆச்சார்ய லக்ஷணத்தைப் பற்றியும் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது இந்நூல்.

"ஆதிசைவர்களின் ஆச்சார்யசீலம் வாழ அகிலம் வாழும்" என்பது கருத்து. இப்படியாக இந்நூலில் ஏகப்பட்ட வேதாகமக் கருத்துக்கள் கொட்டிக்குவிக்கப்பட்டுள்ளன. மிகவும் அற்புதமானதொரு நூல் இது. அனைவரும் பயின்று அறிதல் மகாசிவ புண்யமாகும்.

இந்நூல் ஒவ்வொரு சிவாச்சாரியார், மற்றும் சைவர்கள் இல்லத்தில் இருக்கவேண்டியதொரு அரும்பெரும் பொக்கிஷமாகும்.

இவ்வரிய நூலினை எழுதிய கயிலை மாமணி, சிவாகஞானசாகரம், சீர்காழி திருக்கோலக்கா ந. இராமநாத சிவாச்சாரியார் அவர்கள் நியமம் மாறாததொரு நேர்த்தியான மகா புருஷர். இவரும் இவர்தம் இல்லத்தாரும், வாழ்வில் அனைத்து நலன்களையும், வளங்களையும் பெற்றுய்யவும், இவர்தம் சிவப்பணி மென்மேலும் சிறக்கவும் இருமைப் பேற்றினையும் பெற்றுய்யவும் வேண்டி எமது அன்பார்ந்த மூர்த்தமாம் அருள்மிகு ஞானப்பூங்கோதை உடனாகிய ஸ்ரீ காளத்திநாதனின் திருவடி மலர்களைச் சிந்திக்கின்றோம்.

ஆதிசைவமரபு வாழ்க! அவர்தம் சிவப்பணி தழைத்தோங்குக!

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!

உ

ஸ்ரீ ஸதாசிவ மூர்த்தி



இந்துநிப பஞ்சயுத ஹஸ்ததச யுக்மம்
சூலவர டங்கமஸி வஜ்ர மபயம் ஸ்யாத் /
பாசவரதாங்குச மணீர்தஹந வாமே
ச்வேத கமலாஸன ஸதாசிவ ஸ்வரூபம் //

ஸ்ரீ கண்ட சிவாச்சாரியார்



ஸதாசிவ ஸமாரம்பாம் ஸ்ரீகண்டாச்சார்ய மத்யமாம்/
அஸ்மத் ஆச்சார்ய பரியந்தாம் வந்தே குருபரம்பராம்//

உ

ஸ்ரீகண்டாசார்ய ஸ்துதி

1. ஸ்ரீகண்டவம்சோ ததிபூர்ண சந்திரம்
ஸ்ரீகண்டசாஸ்த்ரார்த்த விதம் முனீந்திரம்
ஸ்ரீகண்ட பாவாஞ்சித யஞ்ஜஸூத்ரம்
ஸ்ரீகண்டம் ஆச்சார்யம் அஹம் பஜாமி.

2. ச்வேதாஹ்வயா சார்ய பதாரவிந்த
த்வந்த்வார்பணா நந்தித சித்தபிருங்கம்
ஜடா கலா போல்லஸிதோ த்தமாங்கம்
நமாமிதம் யோகீ மநோ பிஷங்கம்.

3. வாஸஸ்ய ஸூத்ரம் விதுஷாம் ஸுநேத்ரம்
பிரும்மாவலோகே ஸமலம் புரா பூத்
அகாரி யேநாமல மாத்ம சக்த்யா
த்யாயாமித தேசிகமப்ரமேயம்

4. ஆமர்த பூமீதர மஸ்தகேய
சிவிரந்ய வாஸீந்நிய தோஜிதாத்மா
ஜிஞ்ஜாஸு ராத்யாத்மிக தத்வமைசம்
மாம்பாது தத்வா ஸகுருர்ப்ருசம்சம்

5. கலேர்மஹிம்நா புவனே ப்ரவ்ருத்தே
மோஹாந்த காரே தரஸாபநேதும்
தம் போத தாம்நா மஹதா வதீர்ணம்
ஸ்ரீகண்டநாம்நா சிவமாத்ம நீடே


6. தக்ஷிணஹஸ்தேன ஸுயோக தண்டம்
ஸ்திதேந திவ்யாமலி நாக்ஷமாலாம்
வாமேநசஞ்ஜாநமய ப்ரபோதம்
பிப்ராண மாசார்ய வரம் ப்ரபத்யே

7. பத்மாந நஸ்தாசல பூர்வ தேஹம்
தபோ பலவ்யாப்தி நிரஸ்த மோஹம்
ஸ்மராமி பக்த்யா ஹ்ருதயேந மோஹம்
க்ருத்வாத்ய ஹ்ருஷ்யத்ஸு மநஸ்ஸமூகம்

8. கோதாவரீ திவ்ய நதீதடஸ்தே
காளேச்வரே மரசப்த பூர்வே
சம்பும் மநஸ்ஸஸ்மர மேருதீரம்
ஆசார்ய ருபேண க்ருதாவதாரம்

9. ஸம்ஸார தாவாநல காலமேகம்
ஹிம்ஸாதி பாபால்பஸ ரோநிதாகம்
ஆசார்ய பாதம் கலயாமி சித்தே
வாசாதி காமேய விபூதிமார்யம்

10. மஹானுபாவம் த்விஜ மாதிசைவம்
மோஹாடவீதாவ ஸமித்தபாவம்
ஸம்ஸார வாதுர்யுத்தரணைவம்
ஸம்ஸ்தோம்ய யஜஸ்ரம் ஹ்ருதி பக்தியுக்த்யா.




ஸ்ரீ ஆலால சுந்தரர்

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் பஞ்சரத்ன ஸ்துதி

1. ஸ்ரீகைலாஸ விநோத தர்சனபவம் ஸ்ரீசாம்பவம் சுந்தரம்
பித்யந்த ப்ரதிபிம்பஜம் சிவஸுதம் ஸ்ரீசைவ பஸ்மோத்வஹம்
தைதேயாமரவாரிதி மந்தனபவம் ஹாலாஹல க்ராஹிணம்
வந்தேசங்கர பக்தரூபமமலம் சைவ த்விஜேந்தரம் கவிம்

2. உத்யானோத்பவ காமமுக்த தருணம் சம்போக்ருபா சோதிதம்
ஸ்ரீபுர்யுத்த சிவவ்ரதஸ்ய தநுஜம் மாது ஸுமத்யா: ப்ரியம்
சம்போர்ஜாத மஹா விவாத ஜநிதஜ்ஞான ப்ரதீபோஜ்வலம்
த்யக்தோத்வாஹ முமாஸஹாயஸுஹ்ருதம்
சைவ த்விஜேந்தரம் பஜே

3. சம்போர் நிரீக்ஷகம் ததுபரி ந்யஸ்தஸ்வ ஸந்மாநஸம்
ஸத்வேனான் விதமுத்தமம் சுபதனும் பிந்துப்ரபத்யாயினம்
வ்யோம க்ஷேத்ர ஸபாபதிப்ரியகரம் ஸ்வானந்த ரூபாந்விதம்
வந்தே ஸுந்தரபக்தமூர்த்திமமலம் சைவ த்விஜேந்தரம் ப்ரபும்

4. த்யாகேசார்பித மானஸம், சிவஸுதம் ஸ்ரீஸாகரீவல்லபம்
ஈசாத்வ்ருத்தி சுவர்ணலாப முதிதம் ஸ்ரீச்ருங்கலா நாயகம்
நக்ர க்ரஸ்தகுமாரஜீவனகரம் க்ஷேத்ராடனோல்லாஸிதம்
ஸ்ரீசேரேச்வர மித்ரரத்னரசிதம் சைவ த்விஜேந்தரம் பஜே.

5. முக்தாஹார லஸத்கிரீடமகுடம் ஸ்ரீ பூர்ண சந்திராநநம்
நித்யம்புஷ்ப சிவாக்ஷ பூஜிததனும் கல்யாண வேஷோஜ்வலம்
ஸித்தாந்தாகம தத்வநிர்ணயபரம் நாதாத்மபாசார்தகம்
வந்தேஸுந்தர ஸத்குரும் வரகவிம் சைவ த்விஜேந்திரம்சிவம்.



ஆதி சைவ குலதிலகம் ஸ்ரீ சடையனார்

நம்பியாண்டார் நம்பி அருளிய துதி

திருசிற்றம்பலம்

தலம் விளங்குந் திருநாவலூர் தன்னிற் சடையனென்னும்
குலம் விளங்கும் புகழோனை உரைப்பார் குவலயத்தில்
நலம் விளங்கும்படி நாம் விளங்கும்படி நற்றவத்தின்
பலம் விளங்கும்படி ஆரூரனை முன் பயந்தமையே

இசைஞானியார் துதி

பயந்தாள் கறுவுடைச்செங்கண் வெள்ளைப் பொள்ளல்நாள்
பனைக்கைக்
கயந்தால் உகைத்த நற்காளையை என்றுங் கபாலங்கைக்கொண்
டயுந்தான் புகுமரன் ஆரூர்ப்புனித அரன் திருத்தாள்
நயந்தாள் தனதுள்ளத் தென்றும் உரைப்பது ஞானியையே

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

1. தொழுதும் வணங்கியும் மாலயன் தேடருஞ்சோதிசென்றாங்
கெழுதுந் தமிழ்ப் பழஆவணம் காட்டி எனக்குன் குடி
முழுதும் அடிமை வந்தாட்செய் எனப்பெற்ற வன்முரல்தேன்
ஒழுகு மலரினற்றார் எம்பிரான் நம்பியாரூரனே

2. அருட்முறை அத்தற்கடிமைப் பட்டேன் இனி அல்லனென்னும்
பொருட்டுறை யாவதென்னே என்ன வல்லவன் பூங்குவளை
இருட்டுறை நீர்வயல் நாவற்பதிக்கும் பிரான் அடைந்தோர்
மருட்டுறை நீக்கி நல்வான்வழி காட்டிட வல்லவனே

3. நிதியார் துருத்திதென் வேள்விக்குடியாய் நினைமறந்த
மதியோற் கறிகுறிவைத்த புகர்பின்னை மாற்றிடென்று
துதியா அருள் சொன்ன வாறறிவாரிடைப் பெற்றவன்தான்
நதியார் புனல்வயல் நாவலார்கோ னென்னும் நற்றவனே

4. நந்திக்கும் நம்பெருமாற்கு நல்லாருரில் நாயகற்குப்
யந்திபரியன செந்தமிழ் பாடிப்படர் புனலிற்
சிந்திபரியன சேவடி பெற்றவன் சேவடியே
வந்திப்பவன் பெயர் வன்றொண்டன் என்பர் இவ்வையகத்தே

5. துணையும் அளவும் இல்லாதவன் றன்னருளே துணையாக்
கணையுங் கதிர்நெடுவேலும் கறுத்த கயலிணையும்
பிணையும் நிகர்த்த கட்சங்கிலி பேரமைத் தோள் இரண்டும்
அணையும் அவன் திருவாரூரன் ஆகின்ற அற்புதமே

5. கூற்றுக்கெவனோ புகல் திருவாரூரன் பொன்முடிமேல்
ஏற்றுத் தொடையலும் சின்னடைக் காயும் இடுதருமக்
கோற்றொத்து கூனனங்கூன் போய் குருடனுங்கண் பெற்றமை
சாற்றித்திரியும் பழமொழியாம் இத்தரணியிலே

7. பல்லவை செங்கதிரோனைப் பறித்தவன் பாதம்புகழ்
சொல்லவன் தென்புகலூர் அரன்பால் துய்ய செம்பொன்
கொள்ள
வல்லவன் நாட்டியத்தான் குடிமாணிக்க வண்ணனுக்கு
நல்லவன் தனபதி நாவலூர் ஆகின்ற நன்னரே

8. கொடுத்தான் முதலைக்கொள் பிள்ளைக்குயிர்அன்று
புக்கொளியூர்த்
தொடுத்தான் மதுரகவி அவிநாசியை வேடர் சுற்றம்
படுத்தான் திருமுருகன் பூண்டியினிற் பராபரத்தேன்
மருத்தானவனென்பர் வன்றொண்டனாகிய மாதவனே

9. தகுமகட் பேசினோன் வீயவேநூல்போன சங்கிலிபாற்
புகுமணக்காதலினால் ஒற்றியூர் உறைபுண்ணியன்றன்
மிகுமலர்ப்பாதம் பணிந்தருளால் இவ்வியனுலகம்
நகும் வழக்கே நம்மையாப் புணர்ந்தான் நாவலூரரசே

10. செழுநீர் வயல் முதுகுன்றினிற் செந்தமிழ் பாடிவெய்ய
மழுநீள் தடக்கையன் ஈந்தபொன் ஆங்குக் கொள்ளாதுவந்தப்
பொழி நீடருதிருவாரூரில் வாசியும் பொன்னுங்கொண்டோன்
கெழுநீள் புகழ்த்திருவாரூரன் என்று நாங்கேட்பதுவே

11. ஞானவாரூரைச் சேரரை அல்லது நாம் அறியோம்
மாணவாக்கை யொடும்புக்கவரை வளரொளிப்பூண்
வானவரானும் மருவற்கரிய வடகயிலைக்
கோணவன் கோயிற் பெருந்தவத்தோர் தங்கள் கூட்டதிலே

திருசிற்றம்பலம்

சிவாச்சார்ய ப்ரசஸ்தி

ஸ்ரீமத்பஞ்ச ரிஷீந்த்ர கோத்ர தநுஜாநு
பஞ்சாநநைர் தீக்ஷிதாநு
லிங்காக்னி ஸூர்ய கலச ஸ்வாத்மார்ச்சனா
பூஷணாநு
சைவாசார்யவராநு ஸதா பசுபதிம்
காலத்ரயேப்யர்சகாநு
ஸத்பக்தான் சிவமானஸான் ஹ்ருதிபஜே
சைவாகமோத்தாரகாநு

ஸ்ரீ சிவாச்சாரிய பரம்பராகமன மார்க்காநுதர்சீ

1. கைலாஸ சிகரேரம்யே நாநாலங்கார சோபிதே
ரத்நோ பராஜிதே பீடே ஸம்யகாஸீந சங்கரம்
நாநாகண ஸுவ்யேந்தம் நாநாலங்கார பூஷிதம்
தத்ராகதாம் மஹாதேவீ ப்ரணம்ய ப்ராணநாயகம்

2. மந்நாத ஜகதாம் நாத பஞ்சக்ருத்ய பராயண
பவதீய ப்ரியம் ப்ரூஹி ததஹம் கர்த்துமீச்வர
பவதாஞ்ஜாபிதம் ஸர்வம் கர்த்து மீஹே மஹேச்வர
மந்தஸ்மிதோ மஹாதேவோ ப்ரீத்யுவாச ஸுஸாதரம்

3. மத்பரியே மங்களே தேவி விச்வ வஷ்டியே ஜகத்ப்ரியே
சிவாகமோக்த பூஜாயாம் ரதிம்மே பக்தவத்ஸல
தச்சுருத்வாத் மஹாகௌரி பவதாமயி போதிதம்
தத்ப்ரகாரேண ஸம்யஷ்டும் அனுக்ஞாம் தேஹிமே ப்ரபோ

4. ஆத்மார்த்தஞ்ச பரார்த்தஞ்ச பூஜா த்வைத முச்யதே
மர்த்ய லோகைவ கர்த்தவ்யம் ச்லாக்யம் கார்யம் ததீரிதம்
க்ஷணிகம் த்வாதசம் ப்ரோக்தம் ஆத்மார்த்த யஜநாயமே
ஸ்தாவரம் ஸ்ப்தகம் ஞ்ஞேயயம் பரார்த்த பூஜநே மம

5. பக்திவச்யம் அஹம்தஸ்மாத் ப்ரதாந்யம் பக்திரேவமே
அத : காரணயத்யஸ்மான் பூலோகே பூஜ்யதாம் சிவம்
காஞ்சீ ப்ரதேசே ஸம்யஞ்ஜாம் ஸமாராதய ஸாதரம்
தன்யோஹமிதி மந்யாஸா தமாராதன தத்பரா.

6. ததைவ கரணீயா ஸாம் ருண்மயே சிவலிங்ககே
பூஜாந்தே ப்ரார்த்தநீ யாஸா பரமேசம் ஜகத்குரும்
தத்சோதந பரோதேவ கங்கயா ஸுப்ரவாஹிதே
தேநபீத மநோபூத்வா ஆலிங்க லிங்கரூபகம்.

7. பக்திப்ரேம தமம் த்ருஷ்டுவா கம்பாம் தஸ்யைவ ப்ரஸீதது
தஸ்மாதேவதன்ன மாத்ப்ராஸித்தா ஸாபராத்பரா
பூஜ்யாபூரிதம் பூர்வம் கௌரீம் ஸந்துஷ்டிய மாநஸம்
த்வயாமயி பராந் ப்ரித்யா ப்ரூயதாம் ஹிதகாம்யயா

8. தவாப்யர்த்தம் மமப்யர்த்தம் தநுரேகம் சிவாஸ்பதம்
ததைவா ஹம் ததைவா ஸி இத : பரமிதபரம்
இதப்பரம் கதம்தேவ பரார்த்த பூஜநநும் ஜகத்
அஸ்மச் சாயா ஸமுத்பூதம் ஸுந்தரம்ப்ரிய ஸுந்தரம்.

9. தஸ்யவம்சாவளீஜாதம் ஜகத்ஹித ஸுபூஜநம்
கௌசிகாத்யா ஸுஜாதாச்ச முநிபுங்க ஸம்ஜிகா:
ஆத்மார்த்தஞ்ச பரார்த்சஞ்சதை ரேவ கரணீயகம்
அன்யேஷாம் சைவ ஸர்வேஷாம் ஆத்மார்த்த மேவ ஸம்ஜக:

10. ஈசம்ப்ரச்சது பார்வதீ ஸமுசிதம் த்வத்ப்ரீதி ப்ரூஹிப்ரபோ
பூஜாவைவ மபீஷ்டபூர்ணபலதம் பாதம் க்ரியாஸாரகம்
சர்யாயோக ஸுஞ்ஜாந யாகஸுக்ருதம் பாத்
யேஷ்டஸித்திப்ரதம்
தச்சாயாது ஸமுத்பவம் குலபதிம் சைவ த்விஜேந்த்ரம் சிவம்



ஸ்ரீமத் ஸமயாதீத ஸார்வபௌம சிவாகமஞானசாகர ஸௌம்ய சாக்த கலாரத்னா, கயிலைமாமணி

ஸ்ரீமதி ஜெயலக்ஷ்மியம்பா சமேத ஸ்ரீ இராமநாத ஈசான சிவாச்சாரியார்

ஸ்ரீ செல்வகணபதி துணை

முன்னுரை

குரும் கணபதிம் ஸ்கந்தம் சாம்பஞ்ச பரமேஸ்வரம்।
வந்தே வாணீம் மஹாலக்ஷ்மீம் இஷ்டகாம்யார்த்த ஸித்தயே॥

சிவநேய செல்வர்களே!

அநாதி சைவனாம் ஸ்ரீசாம்பபரமேஸ்வரரை முப்போதும் தீண்டி பூஜிக்கும் ஆதிசைவர்களது சீலம், முதலான நல்ல குணங்களாலும், பூஜையினது விசேஷங்களாலும், பூஜா மூர்த்திகள் சில்ப லக்ஷணங்களுடன் கூடி இருப்பதாலும், விக்ரகங்கள் தெய்வ ஸாந்நித்யம் பெறுகின்றன. மேற்கூறப்பட்ட கருத்துக்கள் யாவும் ஸித்தாந்தமான காமிகம் முதல் வாதுளம் ஈறாக உள்ள மூலாகமங்களிலும் மிருகேந்திரம், முதலான உப ஆகமங்களிலும் கூறப்பட்டதாகும்.

இச்சிவ பூஜாக்ரமங்கள் தூர்வாஸர் முதலான பதினெட்டு பத்ததிகாரர்களால் விவரமாக கூறப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் பூர்ணமாக தெரிந்து கொண்டு நடைமுறையில் செயல்படுத்த வேண்டும் என்றும் கூறப்படுகிறது. அவ்வாறு இயலாவிடினும் கொஞ்சமாவது ஆதிசைவர்களாகிய நாம் யார்? என தெரிந்து கொண்டு, தம் அனுஷ்டானாதிகளோடு சிவாலய பூஜைகளை செய்வதால் உலகம் உஜ்ஜீவித்து இருக்கும்.

"அர்ச்சகஸ்ய ஹர சாக்ஷாத்" என்ற வாக்கியப்படி சிவஸ்ருபமான சிவாச்சார்யார்களைப் பற்றி வேதம், சிவாகமம், புராணம், கல்வெட்டு முதலான பலவற்றிலும் கூறப்பட்டுள்ள செய்திகளை, என் சிற்றறிவிற்கு எட்டியவரை ஒருங்கிணைத்து, அத்துடன் சிவாமகத்தை நூல்களாகவும், சொற்பொழிவுகளாகவும் செய்து ஆகமத்தை பரப்பிய பல சிவாச்சாரிய சான்றோர்களின் பெருமைகளையும், சிவாகமப்பணிகளையும் சேர்த்து சுருக்கமாகவும், விளக்கத்துடனும் எழுதியுள்ளேன்.

இந்நூலை உருவாக்கிய பெருமை, என்னுள் இருந்து என்னை இயக்கும் எம் அன்னை ஸ்ரீகுடவரசியையும், எம் குருநாதர் (பெரிய தகப்பனார்) மாதர்வேலூர் சிவஸ்ரீ. சுந்தரேச சிவம் அவர்களையும், எம் தந்தை, ஆன்மீக மந்த்ர, சாஸ்த்ர குருவுமான சிவஸ்ரீ. நடேச சிவம் அவர்களையுமே சாரும்.

இதனை "ஜங்கமஸ்த்வாதி சைவக:" என்ற சிவாகம வாக்கியபடி, ஜங்கம லிங்கங்களாகிய ஆதிசைவ பெருமக்கள் பார்த்து, இதிலுள்ள குறைகளை மறந்து, "பாலுண் குருகி" என்றதமிழ்படி நீரைத்தள்ளி, பாலை மட்டும் ஏற்கும் அன்னப் பறவைப்போல் குணங்களை கொள்ளவேணுமாய் மிக்க வந்தனத்துடன் கேட்டுக்கொள்கிறேன்.

கயிலை மாமணி, சிவாகமஞானசாகரம்,
ஸௌம்ய சாக்த கலா ரத்னா
திருக்கோலக்கா **N. இராமநாத சிவாச்சாரியார்**

அணிந்துரை

பேராசிரியர் டாக்டர் **த.அகரமுதல்வன்** எம்.ஏ.,எம்.பில்.,பி.எச்டி.,

திருக்கோயில்களில் இறைவனின் திருமேனி தீண்டி அர்ச்சனை செய்வோர் சிவாச்சாரியார் எனப்படுவர். செய்தொழிலால் சிறப்புடைய சிவாச்சாரியாரின் வரலாற்றையும், பெருமைகளையும் இந்நூலில் சிவஸ்ரீ ந. இராமநாத சிவாச்சாரியார் அவர்கள் சிறப்பாக எழுதி உள்ளார்.

ஒரு சமூகத்தின் வரலாற்றை ஆராய்வதால் நம் நாட்டின் நாகரிகத்தையும் ,பண்பாட்டையும் அறியலாம். தொடக்க கால மனிதன் தன்னையும், இயற்கையையும் இயக்கும் ஒரு சக்தி உண்டெனபதை உணர்ந்தான். மனிதனுக்கு "தெய்வமென்பதோர் சித்தம்" உண்டான அந்தக்காலமே அறிவியலும், ஆன்மீகமும் தோன்றிய காலம் எனலாம். அத்தெய்வத்தைப் புறக்கருவிகளால் அறிய முயன்று தோற்றுப் போய், அகக் கருவிகளால் உணர்ந்து அதனை வெளிப்படுத்தியபோதே வழிபாடும் திருக்கோயில்களும் தோன்றின.

தொடக்ககால மக்கள் காட்டிலோ மலையிலோ ஆற்றின் கரையிலோ இயற்கையாகத் தோன்றியிருந்த கல், மரம் முதலியவற்றில் இறைவன் குடியிருப்பதாகக் கருதி அதனை வழிபட்டனர். இறைவன் குடிகொண்டிருந்த இடத்தைக் "குடி" என்றே அழைத்தனர். தமிழிலிருந்து பிரிந்த கன்னடத்திலும், தெலுங்கிலும் இன்றும் கோயிலைக் குடி என்ற சொல்லினாலேயே குறிப்பிடுகின்றனர்.

இறைவன் குடிகொண்டிருப்பதாகக் கருதப்பட்ட இடத்தின்மேல் ஒரு சிறு கீற்றுக் கொட்டகை அமைத்தனர். அதுவே குடி + செய் = குடிசை என்று ஆயிற்று. குடிசையே கோயில்களின் தொடக்ககாலத் தோற்றம். பின்னர் காலப்போக்கில் கல்லாலும், மரத்தாலும் அக்குடிசைகள் கட்டப்பெற்றன. கலைமலிந்த சுதைகளுடன் கூடிய கற்கோயில்கள் பின்னர் எழுப்பப் பெற்றன. எனினும், கேரளாவில் இன்றும் குடிசை வடிவிலேயே கோயில்கள் உள்ளன. சிதம்பரம் நடராஜர் திருக்கோயில் குடிசை வடிவம் உடையதே. அவ்வடிவத்தை மாற்றாமல் மண்ணோடும், பின்னர் பொன்னோடும் வேயப்பட்டுள்ளன. பழமையான கிராமக் கோயில்கள் பல இன்றும் குடிசை வடிவத்திலேயே உள்ளன.

குடியைச் சுற்றி வீடுகளைக் கட்டிக் கொண்டு குடியை வழிபட்டுக் கொண்டு வாழ்ந்தவர் குடிமக்கள் ஆயினர். எனவே காட்டில் வசித்த மனிதனைக் குடிமகன் (Citizen) ஆக்கிய பெருமை கோயிலுக்கே

உரியது. வழிபாடே மனித குலத்தின் முதற்பண்பாடு. கோயிலைச் சுற்றி வாழுமிடத்தை அமைத்துக் கொண்டதே மனித குலத்தின் முதல் நாகரிகம். எனவே நம் நாட்டின் பண்பாடும் நாகரிகமும் (Culture & Civilization) கோயிலில் இருந்தே தொடங்குகின்றன. ஆதலின் இந்தியப் பண்பாட்டைக் கோயிற் பண்பாடு (Indian Culture is the Temple Culture) என்று சிறப்பிக்கின்றனர். அக்கோயில்களில் வழிபாட்டைச் செய்யும் தொழிலை மேற்கொண்டு, அதனை வழிவழியாகச் செய்து வரும் மரபினரே சிவாச்சாரியார்.

ஹரப்பாவிலும், மொகஞ்சதாரோவிலும் ஊரின் மத்தியில் சிவன் கோயில்களும், சிவலிங்கம் முதலிய திருமேனிகளும் இருந்துள்ளதை ஆய்வு தெளிவாகக் காட்டுகின்றது. ஆதலின் அக்கோயில் திருமேனிகளைப் பாதுகாத்து அர்ச்சிக்கும் மரபினரும் இருந்திருக்க வேண்டும். ஆதலின் அர்ச்சகர் மரபு வேத காலத்திற்கு முந்தையது எனத் தெரியலாம்.

சிவாச்சாரியார்களைப் புராணம் ஆதி சைவர் என்கிறது. அனாதி சைவர் என்பர் சிவ பரம்பொருள். அவருடைய ஐந்து முகங்களிலிருந்தும் ஆதி சைவர் தோன்றினர் என்று புராணம் கூறுகிறது. சிவாச்சாரியார்களை சிவத்துவிஜர், சிவப்பிராமணர், சிவ வேதியர் என்று புராணம் சிறப்பிக்கின்றது. சைவர்களுக்கு தீட்சை செய்விக்கும் குருமார்களும் இவர்களே. ஆதலின் ஆதி சைவர் "குருக்கள்" என்றும் அழைக்கப்படு கின்றனர். பெரிய புராணம்,

"விரும்பிய அருச்சனைகள்
சிவ வேதியர்க்கே உரியன" (பெரியபுராணம் 4161)

என்று குறிப்பிடுகிறது. சிவாச்சாரியார், இல்லத்தில் ஆத்மார்த்த பூஜையும் திருக்கோயிலில் பரார்த்த பூஜையும் செய்வதைப் பரம்பரையாகக் கொண்டுள்ளனர்.

சிவாச்சாரிய பெருமக்கள் சுந்தரமூர்த்தி சுவாமிகள் போன்று "சொற்றமிழ் பாடியும்" புகழ்த்துணை நாயனார் போன்று வறுமையிலும் சிவபூஜை செய்தும் செம்மையாய் வாழ்ந்தவர்கள் என்று சேக்கிழார் செம்மாந்து பாடுகின்றார். பெரிய புராணத்தில் குறிப்பிடப் பெற்றுள்ள ஆதி சைவர்கள் அனைவரையும் பற்றி இந்நூலினுள் ஆசிரியர் விளக்கமாக எழுதியுள்ளார்.

சங்க காலக் கோயில்கள் ஊர் மக்களால் பராமரிக்கப்பட்டன. கி.பி. 6-ஆம் நூற்றாண்டு முதல் பல்லவர்கள் திருக்கோயில்களைக் கட்டியதோடு அவற்றைப் பராமரிக்கும் வாரியம் பொறுப்பும் அதிகாரமும் மிகுந்ததாக விளங்கியது. கோயில் வாரியக் குழுவினர் அமிர்த கணத்தார் எனப்பட்டனர். அக்குழுவில் அர்ச்சகர்களும் இடம் பெற்றிருந்தனர்.

சோழ மன்னர்களின் குல குருவாக சிவாச்சாரியார்களே இருந்துள்ளனர். முதலாம் இராஜராஜசோழனுக்கு ஈசான சிவபண்டிதரும், இராஜேந்திர சோழனுக்கு சர்வ சிவபண்டியரும், இராஜாதிராஜனுக்கு குருதேவரும், மூன்றாம் குலோத்துங்கருக்கு சோமேஸ்வரரும் ராஜகுருவாக விளங்கியுள்ளனர். இராஜராஜேஸ்வரம் எனும் தஞ்சை பெரிய கோயிலின் தலைமைக் குருக்கள் பவனபிடாரன் எனும் சிவாச்சாரியார் ஆவார். சிவாச்சாரியார்களுக்கு

1) காளிசம் (மதியப்பிரதேசம்), 2) ஆமர்த்தகி (கிழக்குப் பகுதி),
3) புஷ்பகிரி (தெற்குப் பகுதி), 4) கோளகி (வடக்குப் பகுதி),
5) ரணபத்திரம் (மேற்குப் பகுதி)

ஆகிய ஐந்து மடங்கள் உள்ளன. இவற்றுள் கோளகி மடத்தைச் சேர்ந்த சிவாச்சாரியார்களே இடைக்கால சோழர்களுக்கு குலகுருவாக விளங்கியுள்ளனர்.

பல்லவர், சோழர் ஆட்சியின் போது சிவாச்சாரியார்களின் நிலை பற்றி நிறைய கல்வெட்டுகள் உள்ளன. திருக்கோயிலைப் பராமரிக்கப் பல குழுக்கள் இருந்துள்ளதை அக்கல்வெட்டுக்களால் அறிய முடிகிறது. அக்குழுக்களில்

1) சபை, 2) பதிபாத மூலத்தார், 3) கணப் பெருமக்கள்
4) மூலப்பருடை 5) தேவகன்மிகள், 6) ஸ்ரீகாரியம் பார்ப்போர்,
7) உபாசகர், 8) தானத்தார், 9) குலங்கிழார்

ஆகியன குறிப்பிடத்தக்கன.

இக்குழுவினர் தானங்களைப் பெற்று அவற்றைக் கொண்டு சிவாச்சாரியார்கள் மூலம் பூஜைகள் செய்து வந்துள்ளனர். இக்குழுக்களில் அர்ச்சகர்களும் உறுப்பினராக இருந்துள்ளனர். இக்குழுக்களின் செயற்பாடுகள் பற்றியும் சிவாச்சாரியார்களின் நிலை பற்றியும் கல்வெட்டு ஆதாரங்களோடு ஆயிரம் பக்கங்களுக்கு மேற்பட்ட ஓர் ஆய்வினை செய்ய இயலும். அறிஞர்கள் அம்முயற்சியில் ஈடுபட வேண்டும்.

நாற்பத்தி எட்டாயிரம் சிவாச்சாரியார்கள் இருந்துள்ளதைப் பற்றியும், ஒவ்வோர் ஊரிலும் இருந்த சிவாச்சாரியார்களின் எண்ணிக்கை பற்றியும்

கல்வெட்டுக்கள் பல இடங்களில் குறிப்பிடுகின்றன. அவற்றினை இந்நூலினுள் காணலாம். சிவாச்சாரியார்கள்

1) அகநாழிகையார், 2) உண்ணாழிப்பெருமக்கள்
3) சிவயோகிகள், 4) பிடாரர்,
5) நாயனார், 6) பட்டர்,
7) குருக்கள் ஆகிய சொற்களால் குறிப்பிடப்படுகின்றனர்.

சிவாச்சாரியார் மரபில் சைவ சமய ஆச்சாரியர் நால்வருள் ஒருவராகிய சுந்தரரும், சந்தான ஆச்சாரியருள் ஒருவராசிய அருண்நந்தி சிவமும், பதினோராம் திருமுறையில் சில பதிகங்களைப் பாடியதோடு, திருமுறைகளைத் தொகுத்தளித்தவருமான ஸ்ரீ நம்பியாண்டார் நம்பியும் தோன்றியுள்ளனர். பத்ததிகளைச் செய்த ஸ்ரீ அகோர சிவாச்சாரியார் மற்றும் பல சாதனைகளைச் செய்த சிவாச்சாரியார்களைப் பற்றி இந்நூலாசிரியர் சிவஸ்ரீ. இராமநாத சிவாச்சாரியார் அவர்கள் விரிவாக இந்நூலில் எழுதியுள்ளார்.

இந்நூலாசிரியர் சிவஸ்ரீ ந. இராமநாத சிவாச்சாரியார் அவர்கள் வேத ஆகமங்களைப் பழுதறப் பயின்றவர், பண்ணுடன் திருமுறைகளைப் பாடவும் வல்லவர், சீலமிகு சிவாச்சாரியார். தமிழகத்திலும் பிற மாநிலங்களிலும் அயல்நாடுகளிலும் 1500-க்கும் மேற்பட்ட திருக்குடமுழுக்குப் பெருவிழாவினைச் சிறப்பாக நிகழ்த்தியவர்கள். தற்சமயம் சீர்காழி திருஞானசம்பந்தர் அவதார இல்லத்தில் நடைபெறும் வேதஆமகப் பாடசாலையின் பேராசிரியராகவும் உள்ளார்கள். இது போன்ற நூல்களை எழுதும் முழுத் தகுதியும் இவர்களுக்கு உண்டு.

சீர்காழிக்கு மேற்கே 1 கி.மீ. தொலைவில் உள்ளது திருக்கோலக்கா என்னும் சிற்றூர். சீர்காழி நகராட்சியுடன் இணைந்துள்ள இவ்வூரைத் திருத்தாளமுடையார் கோயில் என்றும் கூறுவர். திருஞானசம்பந்தர் ஞானப்பால் உண்ட நாளன்று மாலை இத்திருக்கோயிலுக்குத் தம் தந்தையாருடன் எழுந்தருளி "மடையில் வாளை பாய..." எனும் பதிகம் பாடியருளினார். பதிகம் பாடும்போது பிள்ளையார் கையினால் தாளமிட்டவாறு பாடுவதைக் கண்ட இத்தலத்து சிவபெருமான் திருஞானசம்பந்தருக்குப் பொற்றாளங்களை வழங்கினார். அத்தாளங்களில் ஒசை வருமாறு அருள் பாலித்தார் இறைவி. ஆதலின் சுவாமிக்குத் திருத்தாளமுடையார் என்றும், அம்பாளுக்கு ஓசைநாயகி என்றும் பெயர் வழங்கலாயிற்று. இத்தொன்மையான தலத்தில் வாழ்ந்து வந்த சிவஸ்ரீ நடேச சிவாச்சாரியாருக்கும் திருமதி மீனாட்சி அம்மையாருக்கும் மூத்த பிள்ளையாய் பிறந்தவர் சிவஸ்ரீ இராமநாத சிவாச்சாரியார்.

இவர் தம் தந்தையாரிடம் சிவாகமங்களைப் பயின்றார். இவருக்கு 7 வயதில் உபநயனமும், பதினைந்து வயதில் திருமணமும் நடைபெற்றது. திருமதி. ஜெயலட்சுமி அம்மையாரை இவர் மணந்து கொண்டார். திருக்குடமுழுக்கு செய்யும் முறைகளைத் தம் பெரியதந்தையார் மாதர்வேளூர் சிவஸ்ரீ சுந்தரேச சிவாச்சாரியாரிடமும், வேதத்தை சீர்காழி பிரம்மஸ்ரீ ஹாலாஸ்ய கனபாடிகளிடமும், பிற சாஸ்திரங்களை சட்டநாதபுரம் வைத்தியநாத சாஸ்திரிகளிடமும் கற்றறிந்தார். திருக்கோலக்கா திருக்கோயிலிலும், தென்பாதி கதிர்காம ஸ்ரீ பாலதண்டாயுதபாணி ஆலயத்திலும் அர்ச்சகரானார். பின்னர் நாடெங்கும் திருக்குடமுழுக்குப் பெருவிழா நிகழ்த்தியும், பல்வேறு ஹோமங்கள் செய்தும் புகழ் பெற்றார். இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, அமெரிக்கா, லண்டன் போன்ற அயல் நாடுகளுக்கு அடிக்கடி சென்று திருக்குடமுழுக்கு செய்து வருகின்றார். சாதி வேறுபாடு கருதாது அன்பர்களுக்கு முறையாக சிவதீட்சை செய்து வைக்கின்றார்.

(எளியேனுக்கும் இவர்களே தீட்சாகுரு ஆவார்.) அரிய சமய விஷயங்ளையும் எளிமையாகவும், இனிமையாகவும் எடுத்து இயம்ப வல்லவர். பல கட்டுரைகளும், சில நூலும் இவர் எழுதியுள்ளார். பொருட்பற்று இல்லாதவர், நிரம்ப தான, தர்மங்களை செய்யக்கூடியவர். "சிவாகம ஞானசாகரம்", "சௌம்யசாக்த கல்ரத்னம்", "சிவாகமபானு", "சிவாகமணி", "சிவாகமஞானப்பிரகாசம்" ஆகிய விருதுகளை மெய்யன்பர்கள் இவர்களுக்கு வழங்கி உள்ளனர். எல்லாவற்றிற்கும் மேலாக இவர் நல்ல உள்ளம் படைத்த உயர்ந்த மனிதர் என்பதுதான் இவர்களுக்குரிய தனிப்பெரும் சிறப்பாகும்.

சிவாச்சாரியார்களின் வரலாறும், பெருமையும் பேசும் இந்நூலை மிக முயன்று ஆய்ந்து எழுதி, தம் சொந்தச் செலவிலேயே இவர்கள் வெளியிடுகின்றார்கள். இந்நூல் ஒரு சமூகத்தினின் வரலாறு மட்டுமல்ல. ஒரு நாட்டின் பண்பாட்டு வரலாறும் ஆகும். சமூக வரலாறு சார்பின்றி ஆராயப்பட வேண்டும். ஆய்வில் கிடைக்கும் அரிய உண்மைகள் ஒரு நாட்டின் பண்பாட்டையும், நாகரிகத்தையும், பழக்க வழக்கங்களையும், வாழ்வியல் நெறிகளையும் நினைவூட்டுவதோடு, நிலைபெறவும் செய்யும். அந்தப் பயனை இந்நூல் அனைவருக்கும் அளிக்கிறது. எல்லோரும் இந்நூலைப் படித்துப் பயன்பெற வேண்டும் எனப் பணிவுடன் வேண்டுகிறேன். எந்த வகையிலும் தகுதியற்ற எனக்கு அணிந்துரை எழுதக் கிடைத்த வாய்ப்பை இறையருள் என்பதா? அல்லது என் குருவருள் என்பதா?

அன்பன்

த.அகரமுதல்வன்

சிவாச்சார்யார் வரலாறு

திருக்கயிலாயத்தில் பார்வதி பரமேசுவரன் திருக்கல்யாணம் நடந்த சமயம் பார்வதி பரமேசுவரனிடம், "சுவாமி! தங்களுக்கு மிகவிருப்பமானதை செய்திட ஆசைபடுகிறேன்" என்றிட, இறைவன் தனக்கு விருப்பமானது பூசனை என கூறிட,

"எண்ணிலா ஆகமம் இயம்பிய இறைவர் தாம் விரும்பும்
உண்மையாவது பூசனை" என உரைத்தருள
அண்ணலார் தமை அர்ச்சனை புரிய ஆதரித்தாள்
பெண்ணில் நல்லவளாயின பெருந்தவக் கொழுந்து

உமாதேவியார் மிக உவந்து பூசனை பொருட்களுடன் வந்து, "இறைவா! பூசனைபுரிய அனுமதிக்க வேணும்" எனக் கேட்டு நின்றாள்.

இறைவர், "தேவீ! பூசனைக்கேற்ற இடம் பூலோகமே. பூலோகத்தில் பூசனை செய்து அதன் பயனைக் கைலாயத்தில் அனுபவிக்கலாம் என்றிட,

தேவி "பூலோகத்தில் எங்கு பூஜிக்கலாம்? எப்படி பூஜிக்க வேண்டும்?" என்று கேட்க, இறைவன், "நகரேஷு காஞ்சி என்னும் (ப்ருத்வீ தலம்) காஞ்சிபுரம் அங்கு சென்று பூஜிக்க" என்று கூறி, பூசனை செய்ய நான்கு வேதங்கள், இருபத்தியெட்டு ஆகமங்கள், ஆறு அங்கங்கள் ஆகியவற்றையும் உபதேசமாகக் கூறினார்.

ஸ்காந்தே அகஸ்த்ய ஸம்ஹிதாயாம்

ப்ரணவாத்யா மஹா மந்த்ரா : அகாராத்ய க்ஷராணிச
சிவக்ஞாநாநி த்ரவ்யாணி காமிகாதீநி பூஸுரா:
ஶ்ரீமத் ஹாலாஸ்ய நாதஸ்ய ஸம்பவத் ஊர்த்வ வக்த்ரத:
புநஸ்த்வ தேவ தேவஸ் தத்புருஷாக்யேந வக்த்ரத:
ஏகவிம்சதி பேதேநயுக்தம் ருக்வேத மப்ரவீது
யஜுர்வேத த்வேகசத பேதயுக்தம் அகோரத:
ஸஹஸ்ர சாகா ஸம்யுக்தம் ஸாமவேதந்து வாமத
அதர்வம் நவதாபிந்நம் ஸத்யாஜாதேந மப்ரவீது

ஊர்த்துவ முகமான ஈசானத்திலிருந்து சிவஞானத்தைத் தரக்கூடிய சிவாகமங்கள் இருபத்தியெட்டினையும், தத்புருஷ முகத்திலிருந்து இருபத்தியொரு பேதங்களை உடைய இருக்கு வேதத்தையும், அகோர முகத்திலிருந்து நூற்றியொரு பேதங்கள்

உடைய யஜுர் வேதத்தையும், வாமதேவ முகத்திலிருந்து ஆயிரம் சாகைகளையுடைய ஸாம வேதத்தையும், ஸத்யோஜாத முகத்திலிருந்து ஒன்பது பேதங்களையுடைய அதர்வண வேதத்தையும் உபதேசமாகக் கூறினார். "ஆகமத்தின் மூலமாக பூஜை செய்ய வேண்டிய முறைகள் எத்தனை லிங்கங்கள் வைத்து ஆத்மார்த்த பூஜை செய்ய வேண்டும்? என்னென்ன லிங்கங்களை வைத்து பூஜை செய்தால் என்னென்ன பலன்கள்?" என்று தேவி கேட்டாள்.

ஆத்மார்த்த பூஜையில் க்ஷணிகலிங்க பூஜையை கல் முதலிய பன்னிரெண்டினாலும் செய்யலாம், என்றிட அவற்றுள் நாலாவதாக கூறிய நதீமிருத்தை (மண்ணையே) சிவலிங்கமாகக் கொண்டு பூஜை செய்ய முற்பட்டாள். அதனை திருஞானசம்பந்த சுவாமிகள்

"வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாக
போதத்தால் வழிப்பட்டாள் புள்ளிருக்கு வேளுரே"

என்று பாடியுள்ளார்.

இவ்வாறு தினம் வழிபாடு செய்து வரும்போது ஒரு நாள் தேவியின் பக்தியை சோதிக்க எண்ணி, தனது தலையில் உள்ள கங்கையை பூஜை செய்யும் இடத்திற்கு மேற்கே சென்று அவிழ்த்துவிட ஓவென்ற இரைச்சலுடன் வெள்ளமாக வர, உடனே பூஜிக்கும் சிவலிங்கத்திற்கு எந்த இடையூறும் வராமல் பாதுகாப்பாக இருகைகளாலும் தழுவிக் கொண்டாள். இதனை சுந்தரமூர்த்தி சுவாமிகள்

எள்கல் இன்றி இமையவர் கோனை
ஈசனை வழிபாடு செய்வாள் போல்
உள்ளத்துள்ளி உகந்துமை நங்கை
வழிபடச் சென்று நின்றவா கண்டு
வெள்ளங்காட்டி வெருட்டிட அஞ்சி
வெருவி ஓடித்தழுவ வெளிப்பட்ட
கள்ளக்கம்பனை எங்கள் பிரானைக்
காணக்கண் அடியேன் பெற்றவாறே.

மேற்கேயிருந்து வந்த வெள்ளத்தைக் கண்டு தன் இருகைகளாலும் தழுவிட வெள்ளம் இருபக்கமும் சென்று கிழக்கில் ஒன்று சேர்ந்துள்ளது கம்பாநதி. தன்னை மறந்து, என்னை நினைந்து, சிறப்பான முறையில் வழிபட்டு வரும் தேவிமுன் காட்சி தந்து உன்

பக்தியில் மகிழ்ச்சி அடைந்தோம்!, உனக்கு என்ன வரம் வேண்டும்? என்று கேட்க தங்களை என்றும் பிரியாமல் இருக்க வரம் தருமாறு கேட்டாள். அவ்வாறே தம்முடலில் இடது பாகத்தைத் தருகிறோம், என்று சுவாமி கூறிட, மேலும் இன்று வரை தங்களை பூஜித்து வந்தது தடைப்படாமல் தொடர்ந்து நடைபெற அருள் பாலிக்க வேணுமெனக்கேட்க, இறைவன் உடனே தன ஐந்து முகங்களிலிருந்து ஐந்து ரிஷிகளை சிருஷ்டித்தார்

கௌசிக காச்யபச்சைவ பாரத்வாஜோத கௌதம:
அகஸ்த்யச்சைவ பஞ்சே தே பஞ்சவக்த்ரேஷு தீக்ஷிதா:

கௌசிகர், காச்யபர், பாரத்வாஜர், கௌதமர், அகஸ்தியர் என்ற ஐந்து ரிஷிகளையும் தோற்றுவித்து தனது ஐந்து முகங்களின்று தீக்ஷை செய்து, அவர்களுக்கு ஐந்து மடங்களைத் தந்து சிவபரிபாலனம் செய்து வருமாறு அருளி செய்தார் பல சிஷ்யர்களை உருவாக்கி அவர்களுக்கு சிவ தீக்ஷை செய்து, கர்ஷணாதி ப்ரதிஷ்டாந்தம் ப்ரதிஷ்டாதி உத்ஸவாந்தம், உத்ஸவாதி பிராயச்சித்தாந்தம் செய்யும் முறைகளை அறிவித்து, சமயதீக்ஷை, விசேஷதீக்ஷை, நிர்வாணதீக்ஷை, ஆச்சார்யாபிஷேகம், முதலியவைகளைச் செய்வித்து ஆத்மார்த்த சிவபூஜை, பரார்த்த பூஜைகள் முதலியவைகளை பரவச் செய்து, சிவ பரிபாலனம் செய்து வருமாறு ஆக்ஞாபித்தார்.

கைலாஸ சிகரேரம்யே சிவஸ்யாப்யர்ச்சநார்த்தகம்
மத்யே மந்தானகாளீசம், பூர்வேச ஆமர்த்தகீ ததா
யாம்யே புஷ்பகிரீஞ் சைவ கோளகம் ஸௌம்ய தேசகே
ரணபத்ரம் பச்சிமே சாபி அதிபாஞ்ச ததச்ருணு
தூர்வாஸ ருருச்சைவ ததீசி ச்வேதமேவச
உபமன்யுரிதிக்யாத: மடாநாம் அதிபாம் ச்ருணு
கௌசிகோ ஊர்த்து வக்தரேண தீக்ஷிதோ சிவகோசர:
காச்யபோ புருஷேனைவ சிகாகோசர ஸம்ஸகம்
பாரத்வாஜோப்ய கோரேண தீக்ஷிதோ ஜோதிகோசர:
வாமே கௌதம ஸம்க்ஞானம் ஸாவித்ரி கோசரஸ்மிருதம்
ஸத்ய வக்தரோத்ய கஸ்தயச்ச தீக்ஷிதோ வ்யோமகோசர
பஞ்சகோசர ஸம்க்ஞானம் ஆதிசைவா இதிஸ்ம்ருதா
கோசரம் சிவ சின்னம்ஹி கோத்ரஸ்ய முனிவர்ககம்
ஸூத்ர மாசாரமேவம்ஹி சைவாநாம் உத்யதே க்ரமாது
ருத்ராக்ஷமுபவீதஞ்ச ததாசைவ சோத்தரீயகம்

பஸ்மஞ்ச தண்ட கௌபீனம் பஞ்சமுத்ரா ப்ரகீர்த்திதா
சிகாநாமேவ ஸாமாந்யம் உஷ்ணீஷம் குருணாமபி
ஆதௌ சிவஸ்வமஸ்தீதி ஆதிசைவ உதீரத:
சிவ தீக்ஷிதச் சைவ ஏதே சிவப்ராஹ்மண இதி ஸ்ம்ருதா :

1. கௌசிகர்

ஈசான முகத்தால் தீக்ஷை செய்விக்கப்பெற்று மந்தானகாளீச மடத்தையும் அதன் அதிபராக தூர்வாஸ மஹரிஷியையும் பெற்று, சிவகோசரத்தின் மூலமாக

கௌசிகோ நந்தகோ தக்ஷோ விச்வாமித்ர ஸுநந்தன :
வால்மீகிச முனிஸ்ஸத்யம் புலஸ்த்யோ விபுலஸ்ததா
அதிதீர்க்கச்ச வக்த்ராங்கோ போதாயநஸ் ஸநாதன :
ஸநத்குமாரோ மேதாவி வால்மீகோ மத்யமஸ்தக
ஆச்வாலாயநச்சாங்கிச்ச சிவகோசரவர்க்கிண :

1. கௌசிகர்	2. நந்தகர்	3. தக்ஷர்	4. விச்வாமித்ரர்
5. ஸுநந்தஸ்	6. வால்மீகி	7. ஸத்யர்	8. புலஸ்தியர்
9. விபுலர்	10. அதிதீர்க்கர்	11. வக்தராங்கர்	12. போதாயனர்
13. ஸநாதர்	14. ஸனத்குமாரர்	15. மேதாவி	16. ஆச்வலாயநர்

இவர்கள் கௌசிகரிடம் சிவ தீட்சை பெற்ற சிவகோசரத்தை சார்ந்தவர்கள்.

2. காச்யபர்

தத்புருஷ முகத்தால் தீக்ஷை செய்விக்கப் பெற்று ஆமர்த்தகீ மடத்தையும் அதன் அதிபராக ருருமஹரிஷியையும் பெற்று சிகாகோசரத்தின் மூலமாக

காச்யபோ ஆங்கிரஸ ஸ்தூல கர்த்தபச்சய வநோதக :।
நாட்யாயனச்ச சாண்டில்ய சங்குகர்ண புராந்தந :॥
சங்கஸ்தூல சிகினச்சைவ முக்யோவை ரோம ஹர்ஷண :।
ஆபஸ்தம்பா இமேஸர்வா : சிகாகோசரவர்கிண :॥

1. காச்யபர்	2. ஆங்கிரசர்	3. ஸ்தூலரிஷி	4. கர்த்தபரிஷி
5. வநோதகர்	6. நாட்டியாயனர்	7. சாண்டில்யர்	8. சங்குகர்ணர்
9. புராந்தனர்	10.சங்கர்	11. ஸ்தூல	12. சிகினர்
13. முக்யர்	14. ரோமரிஷி	15. ஹர்ஷணர்	16. ஆபஸ்தம்பர்

இவர்கள் காச்யபரிடம் சிவதீக்ஷை பெற்ற சிகா கோசரத்தை சார்ந்தவர்கள்.

3. பாரத்வாஜர்

அகோர முகத்தால் சிவ தீக்ஷை செய்விக்கப்பெற்று புஷ்பகிரி மடத்தையும் அதன் அதிபராக ததீசி முனிவரையும் பெற்று ஜோதி கோசர முலமாக

பாரத்வாஜ த்ரிசங்குச்ச மார்க்கண்டேயோ சநோரஜ :
ஸுமஹோ தேவலோ ஜங்க: பிங்களோ வருணஸ்ததா
விச்வஸ்ருட் வியாக்ரபாதச்ச ரோமச்சாந்தர வாஜஸ:
க்ருஷ்ணச்சைவ இமேஸர்வே ஜோதி கோசர வர்கிண:

1. பாரத்வாஜர் 2. திருசங்கு 3. மார்க்கண்டேயர் 4. சனோரஜர்
5. ஸுமஹர் 6. தேவலர் 7. ஜங்கர் 8. பிங்களர்
9. வருணர் 10. விச்வஸ்ருட் 11. வ்யாக்ரபாதர் 12. ரோமசர்
13. சாந்தரவர் 14. கிருஷ்ணர் இவர்கள் பாரத்வாஜரிடம் சிவ தீக்ஷை பெற்ற ஜோதி கோசரத்தை சார்ந்தவர்கள்

4. கௌதமர்

வாமதேவ முகத்தால் சிவ தீக்ஷை செய்விக்கப்பெற்று கோளகீ மடத்தையும் அதன் அதிபராக ச்வேத மஹரிஷியையும் பெற்று ஸாவித்ரிகோசர மூலமாக

கௌதமோ கலபச் சைவ முத்கலோ வியவஸ் ததா
கவ்யச்ச விஜயச்சைவ பிந்துச்சோபந்த வஸ்ததா
ரிக்யச்சாங்கோ வஸிஷ்டச்ச காத்யாயநோ ப்ரஹஸ்பதி :
ஸாவித்ரி கோசரச்சைவ புனந்தே வ்யோம கோசரா:

1. கௌதமர் 2. கலபர் 3. முத்கலர் 4. வயவர்
5. கவ்யர் 6. விஜயர் 7.பிந்துசோபர் 8. ரிக்யர்
9. சாங்கியர் 10. வஸிஷ்டர் 11. காத்யாயனர் 12. ப்ரஹஸ்பதி
இவர்கள் கௌதமரிடம் சிவ தீக்ஷை பெற்ற ஸாவித்ரி கோசரத்தை சார்ந்தவர்கள்

5. அகஸ்தியர்

ஸத்யோஜாத முகத்தால் சிவ தீக்ஷை செய்விக்கப்பெற்று ரணபத்ர மடத்தையும் அதன் அதிபராக உபமன்யு மஹரிஷியையும் பெற்று வ்யோமகோசரத்தின் மூலமாக

பூதரோ கௌதமச்சைவ ச்வேத கௌத்ஸோ விபாவஸு:
பராசரச்ச பலிச : சம்பரோ நீலலோஹிதர்
பலவச்ச இமே ஸர்வே வ்யோம கோசர வர்கிண:

1. அகஸ்தியர் 2. பூதரர் 3. கௌதமர் 4. சுவேதர்
5. கௌத்ஸுகர் 6. விபாவஸு 7. பராசரர் 8. பலி
9. சம்பர : 10. நீலலோஹித 11. பலவர்

இவர்கள் அகஸ்தியரிடம் சிவ தீக்ஷை பெற்ற வ்யோம கோசரத்தை சார்ந்தவர்கள்

ஆதி சைவ மரபும் ஆகமங்களும்

ஆதிசைவ மரபு சீரோடும், சிறப்போடும் தமிழகத்தில் மட்டுமல்லாமல், பாரதநாடு முழுவதிலும் வேதகாலம், சங்க காலம் ஆகிய மிக பழங்காலத்திலிருந்தே விளங்கிக் கொண்டு வருவது. சங்க இலக்கியங்கள் பலவற்றிலும் அறு தொழில் மறையோன் என்றும், அறுதொழில் அந்தணர் என்றும் குறிக்கப்படுகின்றவர்கள் ஆதிசைவ மரபினரே ஆவர்.

ஆபயன்குன்றும் அறுதொழிலோர் நூல் மறப்பர்
காவலன் காவான் எனின்

எனத் திருவள்ளுவரால் கூறப்படும் அறுதொழிலோர், ஆதிசைவ மரபினரும்.

திருமண அழைப்பிதழ் முதலானவற்றில் "ஜைாநாதி ஷட்கர்ம நிரதர்களான...... அவர்களுக்கு" என நாம் குறிப்பிட்டுக் கொண்டு வருகிறோம். யஜனம் என்பது அக்னி காரியத்தை உள்ளடக்கிய சிவவழிபாடு. இத்தகைய சிவவழிபாடு முதல் ஆறு செயல்களிலும் உளமார ஈடுபட்டிருப்பவர்கள் என்பது அத்தொடரின் பொருள்.

அந்த ஆறு கிரியைகள் யாவை? என்பதைப் பற்றிக் காரண ஆகமமம் கூறுகிறது.

அத்யாபகஞ்ச அத்யயனம் யாஜனம் யஜநம் ததா
தானப்ரதிக்ரஹம் சைவஷட்கர்ம நிரதாஸ்ஸதா

பூர்வகாரண ஆகமம் ஆசார்ய லக்ஷணபடலம்

இதனையே ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் எனத் தமிழ் நூல்கள் கூறும்.

அத்யாபகம் - ஓதுவித்தல் வேதசிவாகம பொருள்களை விளக்கி கூறுதல்.
அத்யயனம் - ஓதல் வேத சிவாகமங்கை முறைப்படிப் பயிலுதல்.
யாஜனம் - வேள்வி செய்வித்தல் வேள்வியைச் செய்யச் செய்தல்

யஜனம் - வேள்வி செய்தல்
தானம் - ஈகை (கொடுத்தல்)
ப்ரதிக்ரஹம் - பிறர் கொடுப்பதை ஏற்றுக் கொள்ளல்

இந்த ஆறு செயல்களிலும் சிரத்தையுடன் ஈடுபட்டு இருப்பவர்கள் அறுதொழில் அந்தணராகிய ஆதிசைவர்கள். இந்த ஆறையும் சுருக்கி, ஆன்மார்த்தம், பரார்த்தம் என இரண்டு வகைப் படுத்தியும் ஆகமங்கள் கூறுகின்றது.

அத்யயனம் யஜனம் தானம் இம்மூன்றும் ஆன்மார்த்தம்

அத்யாபம் யாஜனம் ப்ரதிக்ரஹம் இம்மூன்றும் பரார்த்தம்

ஆன்மார்த்தம், பரார்த்தம் ஆகிய இரண்டையுமே சீரான முறையில் பரிபாலித்துக் கொண்டு ஆதிசைவ மரபினர் ஆசார சீலராக வாழவேண்டும் என்பது ஆகம விதி.

பெரும்பாலான ஆகமங்கள், "ஆசார்ய லக்ஷணம்" எனும் படலத்தில் சிவாச்சாரியப் பெருமக்கள் எத்தகைய இலக்கணங்கள் வாய்க்கப் பெற்றவர்களாக விளங்க வேண்டும் என வரையறுத்துக் கூறியுள்ளன. இவற்றை யெல்லாம் தொகுத்து அகோர சிவாச்சாரியார் "பரார்த்த நித்ய பூஜாவிதி" எனும் நூலின் தொடக்கத்தில் மூன்று சுலோகங்களில் தருகின்றார்.

வேதாதி நானாவித மந்திர தந்திர
முத்ரா க்ரியா சில்ப ஸுவாக் ஸ்வரூபம்
ஆசாரயுக்தம் ஸுகுணம் ஸுரூபம்
ஆசார்ய மாஹு சிவம் ஆதிசைவம்

ஸதத்வக்ஞான ஸம்பன்ன ஷடத் வஸ்தான சிந்தக:
பரதாஷ்டாங்க யோகக்ஞோ க்ஞான ஸம்பத்தி போதக:

தீக்ஷாபிஷேக சுத்தாத்மா ஸர்வ ஜீவதயாபர
ஜ்யோதி சாஸ்த்ர க்ரியாயுக்தோ வாக் ப்ரஸாத சுபப்ரத:
இத்யாதி குணஸம்பன்னோ தேசிகேந்த் ரோபீதியதே

இவற்றின் பொருள் வருமாறு

வேத சிவாகமங்கள் இவை தொடர்பான பற்பல சாஸ்திரங்கள் பற்பலவான மந்திர சாஸ்திரங்கள், சாக்த சம்பந்தமான தந்திர சாஸ்திரங்கள், முத்திரை வகைகள், க்ரியைகள், சிற்பசம்பந்தமான வாஸ்து சாஸ்திரங்கள் மற்றும் பீஜாக்ஷரம் முதலான நல்ல

மங்களகரமான வாக்குகளின் சொரூபங்கள். இவற்றை நன்கு அறிந்தவர்களாகவும், நல்ல ஆசார ஒழுக்க முறைகளை உடையவர் களாகவும், நற்குணம் உடையவர்களாகவும், நல்ல தோற்றம் வாய்த்தவர்களாகவும், உலகோர்க்கு மங்களங்களை அளிக்க வல்லவர்களாகவும் திகழும் ஆதிசைவர்களையே ஆச்சாரியார்கள் எனப் பெரியோர்கள் கூறுகின்றனர்.

பற்பல சம்பிரதாயங்களின் தத்துவ ஞானம், நன்கு வாய்க்கப் பெற்றவர்களாகவும், ஆறு அத்வாக்களின் ஸ்தானபேதம், ரூபபேதம் ஆகியவற்றைச் சிந்தித்து இருப்பவர்களாகவும், பரத சாஸ்திரம், அஷ்டாங்க யோகம் என்னும் இவற்றை அறிந்தவர்களாகவும், சிவஞான தத்துவ நுட்பங்களைப் போதிப்பவர்களாகவும், ஆச்சார்ய அபிஷேகம் எனும் உத்தமமான தீக்ஷா விசேஷத்தால், பரிசுத்தமான ஆத்மாவை உடையவர்களாகவும், எல்லா உயிர்களிடத்தும் கருணைக் கொண்டு இருப்பவர்களாகவும், சோதிட நூல்களை நன்கு பயின்றவர்களாகவும், சோதிட (வான சாஸ்திர) நூல்கள் கூறும் செயல் முறைகளில் வல்லவர்களாகவும், தமது வாக்குத் திறத்தால் அனைவர்க்கும் சுபமங்களங்களைக் கொடுப்பவர்களாகவும் திகழும் ஆதி சைவர்களே மிகவும் உத்தமமான ஆசாரியார்கள் ஆவார் என ஆகம நூல்களில் கூறப்பட்டுள்ளது.

ஆதிசைவ மரபினர்க்கு என ஆகமங்கள் விதித்து கூறும் இலக்கணங்கள் மேலும் பற்பல உண்டு.

நம்முடைய நடைமுறைகளில் இந்த இலக்கணங்கள் பிரதிபலிக்குமாறு சிவாச்சாரியார்கள் தமது வாழ்க்கை முறையை ஒழுங்குபடுத்திக் கொள்ளவேண்டும் என சூரிய பட்டர் எனும் சிவாச்சாரியார் தமது "சிவபூஜாஸ்தவம்" எனும் நூலில் அறிவுறுத்துகின்றார்.

சங்க காலத்திலும் இராஜராஜசோழன் முதலான பேரரசர்களின் காலத்திலும் பரிபாடல் பதிற்றுப்பத்து, புறநானூறு முதலான நூல்கள் தோன்றிய சங்க காலத்தில், தமிழ் நாட்டில் இருந்த "பிறவா யாக்கைப் பெரியோன் கோயில்" ஆகிய சிவன் கோவிலிலும், "அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயில்" ஆகிய முருகப் பெருமான் கோவிலிலும், மலைமகள் கோவிலிலும் கொற்றவை (துர்க்கை) கோவிலிலும், சிறப்பான முறையில் ஆகம விதிப்படி வழிபாடுகள் செய்து வந்துள்ளார்கள்.

பட்டராமகண்டபிரானைக் குருவாகக் கொண்டு சிவாகமங்களின் நாற்பாதக் கருத்துக்களையும் ஆழ்ந்து பயின்று "கிரணாகமம்", "சர்வக்ஞானோத்தர ஆகம" நூல்களுக்கு வடமொழியில் பாஷியம் எழுதியும் "தத்துவ பிரகாசம்", இரத்தினத்திரயம் முதலான காரிகை நூல்களுக்கு வடமொழியில் உரை எழுதியும், "மிருகேந்திர ஆகம தீபிகை" அருளியும் பாரத நாடு முழுவதிலும் தகுதியுடையவர்க்கு உரிய தீக்ஷைகளை அருளியும், மிகப்பெரும்பணி ஆற்றியவருமான ஸ்ரீமத் அகோர சிவாச்சாரியார் "க்ரியாக்ரம த்யோதிகை" என்ற பெரும் தலைப்பில் பத்ததி நூல்கள் பலவற்றை அருளியுள்ளார்.


ஸ்வாயம்புவ ஆகமத்திற்கும், ரௌரவ ஆகமத்திற்கும், உரை எழுதியும் தத்வத்திரய நிர்ணயம், போக காரிகை நாதகாரிகை மோக்ஷகாரிகை முதலான காரிகை நூல்களை எழுதி ஆகம நெறி தழைக்கச் செய்தவர் சத்யஜோதி சிவாச்சாரியார்.

சிவாகமங்களின் சரியை முதலான நான்கு பாதங்களிலும் கூறப்படுள்ளனவற்றின் சாரத்தை பிழிந்தெடுத்து தாத்பர்ய முரண்பாடு ஏற்படாதவகையில் "சித்தாந்த சாராவளி" என்னும் அருமையான கிரந்தத்தைப் படைத்துள்ளவர் திரிலோசன சிவாச்சாரியார்.

சித்தாந்த சாராவளிக்கும் உரியமுறையில் பாஷியம் எழுதியுள்ளவர் ஸ்ரீ அனந்தசிவாச்சாரியார் ஆவார்.

சிவாகமங்களுக்கு பதினெட்டு சிவாச்சாரியார்கள் பத்ததி நூல்களை எழுதியுள்ளார்கள்.

(பேராசிரியர் டாக்டர் S.P. சபாரத்ன சிவாச்சாரியார் அவர்கள் ஆதிசைவ மரபும் ஆகமங்களும் என்று எழுதிய கட்டுரையை ஆதாரமாக கொண்டு எழுதியது.)



முப்போதும் திருமேனி தீண்டுவார்

ஆதிசைவர்

முப்போதும் திருமேனிதீண்டுவாரைச் சிவப்பிராமணர் என்பர். மாதொருபாகனார்க்கு வழிவழி அடிமைசெய்யும் வேதியர் அவர் என்று திருத்தொண்டர்புராணம் கூறுகிறது.

இவர்கள் முதற்படைப்பில் சிவபெருமானது ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், ஸத்யோஜாதம் என்னும் ஐந்து முகத்திலிருந்து வழி தோன்றிய கௌசிகர், காச்யபர், பாரத்வாஜர், கௌதமர், அகஸ்தியர் என்ற ஐந்து முனிவர்களின் கோத்திரங்களைக் கொண்டவர்கள்.

சிவசம்பந்தம் சைவம் என்பதற்கு ஏற்ப, சதாசிவரே அநாதி சைவராவர், அவர் முகத்திலிருந்து தோன்றிய இந்த ஐந்து முனிவர்களும் (பஞ்சரிஷிகள்) ஆதிசைவர் எனப்பெயர் பெறலாயினர். சிவவேதியர்கள் என்னும் பெயருக்கு உரியோரும் இவர்களே ஆவர். இவர்களே மரபு இடையறாது சந்ததி சந்ததியாகப் பரார்த்த பூஜையாகிய சிவாலயபூஜை புரிதற்கு உரியவராவர்.

கீர்த்திதருவது

ஆதிசைவர்களைச் சிவன் என்றும், சிவப்பிராமணர், என்றும் குரு என்றும், ஆகமங்கள் குறிப்பிடுகின்றன. சிவத்தால் சைவமும், சிவத்தின் சேர்க்கையால் பரிசுத்த ஆன்மாவாகவும் ஆனதால், சிவப்பிராமணர்கள் என வழங்கப் பெறுகின்றனர்.

இவர்கள் வேதங்களைப்படித்தும், படிக்கச் செய்தும் சைவசித்தாந்தம் சிவாகமங்களைப்படித்தும், படிக்கச் செய்தும், இருக்கவேண்டும். ஆதிசைவர்களுடைய பூஜைதான் கீர்த்தியையும் பயனையும் தரும்.

விப்ர சைவர்

"சிவன்முகத்திலே தோன்றிய விப்பரசைவர் இவரே அர்ச்சனைக்கு என்று எண்" என்கிறது சைவசமய நெறி இவர்கள் சிவபெருமானிடத்து உபதேசம் பெற்றவர்கள் என்றும் கூறப்பெறுகிறது.

சிவவேதியர்க்கே உரியன

இந்த சிவ வேதியர்களுக்கு மட்டுமே வழிவழியாக வழிபாட்டு அர்ச்சனைகள் உரியன என்பதை சேக்கிழார்.

...............வழிவழியே திருத்தொண்டின் விரும்பிய அர்ச்சனைகள் சிவ வேதியர்க்கே உரியன........... வழிவழியாகச் சிவனது அகம்படித்திருத்தொண்டில் விரும்பிய வழிபாட்டு அர்ச்சனைகள் சிவமறையோர்க்கே உரியனவாம் என்று கூறுகிறார்.

இதன் வழி திருக்கோயில் பரார்த்த வழிபாடுகள் ஏனைய மறையோர்க்கு உரியன அல்ல என்று அவர் உறுதியாகக் கூறுகிறார்.

ஆசாரிய இலக்கணம்

இருப்பினும் இவர்கள் வேதங்கள் அவற்றின் அங்கங்கள் பலவித மந்திரங்கள், தியானங்கள், தந்திரங்கள், சாஸ்திரங்கள், முத்திரைகள், கிரியா முறைகள் சிற்பசாஸ்திரங்கள் முதலியவைகளுடன் இவைகளை விளக்கி சொல்லும் சொற்களையும் அறிந்திருக்க வேண்டும். ஆச்சாரம், ஒழுக்கம், சீலம், நேர்மை, பக்தி உடையவராயும், நல்லவடிவம் உள்ளவராயும், மங்களத்தை செய்பவராயும் இருக்கின்ற ஆதிசைவரையே ஆச்சாரியார் என்று பெரியோர் கூறுகின்றனர்.

சிவபூஜை செய்த பின் செய்,

சிவபூஜைச் செய்யுமுன் மற்றொன்றும் செய்யேல்
சிவபூஜைச் செய்தபின் செய் (சைவசமயநெறி)

இவர்களும் ஆன்மார்த்த பூஜை செய்த பின்னரே திருக்கோயில் பரார்த்தபூஜை செய்ய வேண்டுமீ. இல்லாவிட்டில் பூஜையின் பயனை இழப்பதோடு நரகத்துன்பத்தையும் அடைவர்.

ஆன்மார்த்தபூஜை

அந்தணன், அரசன், வைசியன், சூத்திரன், ஆகியோர் சிவ தீட்சைபெற்ற பிறகுதான் ஆன்மார்த்த பூஜை செய்யலாம். இந்த நான்கு வர்ணத்தாரும் பரார்த்த பூஜை செய்யலாகாது என காரணாகமம் கூறுகிறது.

தருமிக்குப் பொற்கிழி

அர்ச்சகர் என்போர் ஆதிசைவ அந்தணர்களே! என்பது ஏதோ இடைக்கால ஏற்பாடு என்று பலர் கருதுகின்றனர். அது தவறு திருவிளையாடற் புராணத்தில் தருமிக்குப் பொற்கிழி அளித்த கதையில் நக்கீரர் இறைவனோடு வாதாடுகிறார். நக்கீரர் கடைச்சங்கப்புலவர் அவர் முதல் நூற்றாண்டுக்கு முன்பு இருந்தவர்


எனலாம். அப்படியானால் சங்க காலத்திலேயே ஆதிசைவ அந்தணர் கோயில் வழிபாடுகளைச் செய்து வந்தனர் என்று தெரிகிறது அல்லவா?

ஆர்வமிகும் அன்பினர்

பரார்த்த பூசை செய்யும் பேறு பெற்ற ஆதிசைவப் பெருமக்களைத் தெய்வச்சேக்கிழார் "ஆர்வமிகும் அன்பினர் ஆசை மிகும் அன்புடையவர்கள்" என்று போற்றி மகிழ்கிறார். இறைவனை பாலினால், நறுநெய்யால், பழத்தினால், பயின்றாட்டும் பெரும்பேறு பெற்றவர்கள் இவர்களே ஆவர்.

அர்ச்சனை பற்றிய ஐயம்

அர்ச்சனைப் பற்றிய ஐயம் ஒன்றினை பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தம் அவர்கள் இன்றுள்ள பலஆகமங்களிலும் அர்ச்சனை பற்றிய குறிப்புகள் ஒன்றும் இல்லை. ஆனால் மூவர் முதலிகளும் சிறப்பாகப் பிள்ளையாரும் அர்ச்சனைபற்றிப் பல இடங்களில் பாடிச் செல்கிறார்கள். அர்ச்சனை என்பது ஆகமம் கூறாத ஒன்று தனி மனிதர் இறைவன் புகழ்பாடி மலர் கொண்டு அவனை அர்ச்சித்தலே அதுவாகும் என்பது அவர் கருத்து இதனை மும்மொழி புலவர் பெ.கா. சண்முக நாதனும் ஒப்புக்கொள்கிறார். என்று மலேசியா கோலாலம்பூர் பன்னிரு திருமுறை வளர்ச்சி மையம் வெளியிட்டுள்ள தொகையடியார் என்னும் நூலில் சிவத்திரு எல்.ஆர்.எம். பழநியப்பச் செட்டியார் எழுதியுள்ளார்.



அர்ச்சனைக்கு வேதசிவாகமங்களில் சான்று

வேதங்களில் நடுவாகிய யஜுர் வேதத்தில் உள்ள தைத்திரிய, சாகை ஏழு காண்டங்களை உடையது. நடுவாகிய நான்காம் காண்டத்தில் "ஸ்ரீருத்ரம்" என்ற மஹாமந்திரமுடையது. சிவபெருமானுக்கு மிகபிரிய மந்திரம் ஸ்ரீ ருத்ரம். அந்த மந்திரங்களை கொண்ட அர்ச்சனை ருத்ர திரிசதி (300) முன்னூறு நாமாக்களைக் கொண்டது. அதே யஜுர் வேதத்தில் ஓம் நிதன பதயே நம: என்று இருபத்தி இரண்டு நாமாக்களைக் கொண்ட அர்ச்சனை மகந்யாசத்தில் உள்ளது. சிவாகமம் சைவசித்தாந்தத்தை பேசும் போது அதற்கு அடிப்படையாக கொண்டது ஆறு அத்வா.

1. கலை - 5
2. தத்துவம் - 36
3. புவனம் - 224
4. வர்ணம் - 51
5. பதம் - 81
6. மந்திரம் - 11

இந்த ஆறு அத்வாக்களை (வழிகளை) கொண்டது தான் சைவ சித்தாந்தம். இவைகளை சிவாகமம் இரண்டு விதமாக 1. ஸகல ஷடுத்வார்ச்சனை என்றும், 2. நிஷ்கள ஷடத்வார்ச்சனை என்றும் இருவகையாக கும்பாபிஷேக பிரதிஷ்டையில் கலாகர்ஷணத்தின் போதும், பிரதிஷ்டை தினத்திலும் செய்திட கூறுகிறது. மேலும் காரணாகமம் மஹாபிஷேக விதிப் படலத்தில்

ஸஹஸ்ரநாம மந்த்ரேண பில்வபத்ரேண அர்ச்சயேத்

என்று கூறுவதால் ஆகமத்தில் அர்ச்சனை கிடையாது என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல.

முதற் சைவராம் முனிவர்

சேக்கிழார் அந்த அர்ச்சகர்களை முதற்சைவராம் முனிவர் (4160) ஆதிசைவர்களாகிய முனிவர்கள் என்று முதன்முதலில் குறிப்பிடுகிறார். சிவன் "அநாதி" சைவர் அவரிடம் முதல் தீக்ஷை பெற்று வழிவழி வருதலால், முதற் சைவர் (ஆதி சைவர்) ஆகின்றார் என்று சி.கே.சுப்பிரமணிய முதலியார் விளக்கம் கூறுகிறார். (உரை நூல் 7-ம் பகுதி, பக்கம் 495)

அடுத்த பாட்டில் தான் (4161) இத்தகைய அர்ச்சனைகள் நித்தம் நைமித்திகம், காம்யம் என்னும் மூன்றும் "சிவவேதியர்க்கே உரியன" என்று ஏகாரம் இட்டு இந்த உரிமை ஏனையோர்க்கு இல்லை என்கிறார் சேக்கிழார். சிவன் கோயில் யாவும் சிவாகம விதியின் படியே அமைத்து ஸ்தாபிக்கப்பெற்றவை. ஆதலால் அவற்றில் வழிபாடுகளும் அந்த ஆகம முறைப்படியே நிகழ்வது தான் சரியானதாகும் என்று சி.கே.சுப்பிரமணிய முதலியார் கருத்து. (உரை நூல் 7-ம் பகுதி, பக்கம் 496)

முப்போதும் விளக்கம்

முப்போதும் என்பதால் மூன்று வேளைகள் என்று மட்டும் யாவரும் தவறாக பொருள்கொண்டு விடக்கூடாது, என்பதற்காக முப்போதும் என்று கூறிவிட்டு, தொடர்ந்து "செல்காலம், நிகழ்காலம், வருங்காலம்" ஆனவற்றின் (4161) "சிறப்பு நிகழ்வு எதிர்வு" என்று மூன்றாகப் பகுக்கப்பெறும் (எக்காலத்திலும்) என்று சேக்கிழார் சுவாமிகள் தெளிவுப்படுத்த மறக்கவில்லை.

வாழையடிவாழையாக இத்தகைய இறைத்தொண்டு செய்து வரும் இந்த சிவவேதியர்களின் சிறப்பினை எம்மால் எடுத்துரைக்க இயலுமோ என்று முத்தாய்ப்பு வைக்கிறார் சேக்கிழார் சுவாமிகள்.

புராணப்பொழிப்பு

எப்போதும் இனியவராகிய சிவனின் முகத்தில் தோன்றி, அவர் அருளால் வாழையடிவாழையாக பெருகி சிவாகமநெறி வழுவாமல் ஆர்வமிகும் அன்புடன் முப்போதும் சிவனை அர்ச்சிக்கும் ஆதி சைவர்களாகிய முனிவர்கள் முப்போதும் திருமேனி தீண்டுவார் எனப் பெறுவர்.



ஆதி சைவ ப்ரவரம்

1. கௌசிக கோத்திரம்

அபிவாதயே வைச்வாமித்திர அகமர்ஷண கௌசிக த்ரயாரிஷே : ப்ரவராந்வித: மந்தானகாளீசமட ஈசான சிவாச்சார்ய பீட தூர்வாஸ ஸந்தான சிவ கோசர: கௌசிக கோத்ர: போதாயன ஸூத்ர : யஜுச்சாகாதி சதுர்வேத சிவாகம ஸகல சாஸ்திர அத்யாயீ, ஆதிசைவ விப்ரேந்திர :...... சர்மா நாமா அஹம் அஸ்மிபோ

2. காச்யப கோத்திரம்

அபிவாதயே காச்யப ஆபவஸ்தார நைத்ருவ த்ரயாரிஷே: ப்ரவராந்வித: ஆமர்த்தகீமட தத்புருஷ சிவாச்சார்ய பீட ருருசந்தான சிகாகோசர: காச்யபகோத்ர: போதாயனஸூத்ர: யஜுச்சாகாதி சதுர்வேத சிவாகம ஸகலசாஸ்திர அத்யாயி. ஆதி சைவ விப்ரேந்திர:.......... சர்மா நாமா அஹம் அஸ்மிபோ:

3. பாரத்வாஜ கோத்திரம்

அபிவாதயே ஆங்கீரஸ பார்ஹஸ்பத்ய பாரத்வாஜ த்ரயாரிஷே : ப்ரவாராந்வித: புஷ்பகிரிமட அகோர சிவாச்சார்ய பீட ததீசி சந்தான ஜோதிகோசர : பாரத்வாஜ கோத்திர: போதாயன ஸூத்ர: யஜுச்சாகாதி சதுர்வேத சிவாகம ஸகல சாஸ்திர அத்யாயீ, ஆதிசைவ விப்ரேந்திர......... சர்மா நாமா அஹம் அஸ்மிபோ :

4. கௌதம கோத்திரம்

அபிவாதயே கௌதம ஆயஸ ஆங்கீரஸ த்ரயாரிஷே : ப்ரவராந்வித: கோளகீமடவாமதேவ சிவாச்சாரியபீட சுவேதாசார்ய ஸந்தான ஸாவித்ரி கோசர: கௌதம கோத்ர: போதாயன ஸூத்ர : யஜுச்சாகாதி சதுர்வேத சிவாகம ஸகலசாஸ்திர அத்யாயீ ஆதிசைவ விப்ரேந்திர :............ சர்மா நாமா அஹம் அஸ்மிபோ :

5. அகஸ்திய கோத்திரம்

அபிவாதயே அகஸ்திய தாருட்ய இத்மாவஹ த்ரயாரிஷே: ப்ரவராந்வித: ரணபத்ரமட ஸத்யோஜாத சிவாச்சார்யபீட உபமன்யு ஸந்தான வ்யோம கோசர : அகஸ்திய கோத்ர: போதாயன ஸூத்ர: யஜுச்சாகாதி சதுர்வேத சிவாகம ஸகல சாஸ்திர அத்யாயீ........ சாமாநாமா அஹம் அஸ்மிபோ:

சிவதீட்சை

உலகில் பரிபக்குவமுள்ள ஜீவராசிகள் உய்யும் பொருட்டு சிவபெருமானாலே ஆதியில் அருளி செய்து வழிவழியாக ஞான பரம்பரையின் மூலம் முனிவர்கள், தேவர்கள் என்று ஒருவரால் மற்றொருவருக்கு தீக்ஷை கொடுத்து வரப்படுகின்றது. மக்கள் இதனைத் தங்கள் குருவின் மூலமாகப் பெறுகின்றனர். குருவால் சீடனுக்கு முறையாக தீட்சை கொடுக்கப்படுதல், சீடனால் அதுபெறப் படுதல் என்ற வகையில் இவற்றின் வகைகளைக் காணலாம்.

முதலில் இந்த தீக்ஷையால் அடையப்படும் பலன்களைப் பொறுத்து பௌதிக, நைஷ்டிக என்று இருவகைப்படும் பௌதிக என்பது காம்யமான சுகபோகங்களைத் தருவது நைஷ்டிகீ என்பது தவச்சீலர்களுக்கு நிஷ்டையைக் கூட்டுவித்து இறுதியில் மோக்ஷத்தை தரவல்லதாகும். மேலும் நியதிகளைக்கடைபிடிக்கும் வகையில் இவை ஸாபேக்ஷை நிராபேக்ஷை என இருவகைப்படும் ஸாபேக்ஷை என்பது சமயத்தில் கூறியுள்ள பல்வேறு நியதிகளைக் கடைபிடிக்கும் வகையையும், ஏற்றுக் கொள்ளும் வகையையும் உணர்த்துகின்றது. நிராபேக்ஷை எந்த நியதியையும் கடைபிடியாது மோக்ஷத்தில் பற்றுக் கொண்டு சுயக் கட்டுபாட்டுடன் வாழ ஏற்றுக் கொள்ளும் நிலையாகும்.

மேலும் குரு, சீடன் என்பவர் ஒருவரை ஒருவர் தேடி அளித்துப் பெற்றுக்கொள்ளும் நிலையையொட்டி இதனை நிராதாரா, சாதாரா என இருவகையாகக் கொள்வர். நிராதாரா என்பது இறைவனே குருவடிவில் வந்து அன்பனுக்கு தீக்ஷையளித்து ஆண்டு கொள்வதாகும். சாதாரா என்பது சீடன் உரிய குருவைத் தானே தேடிச்சென்று தீக்ஷை பெறுவதாகும். தீக்ஷை பெறும் முறை எப்படியாயினும், தீக்ஷையின் பயன் (மந்திரங்கள்) மருந்துகள் விஷத்தை இறக்கிவிடுவதுபோல, சீடனின் ஆன்மாவைப்பற்றியுள்ள மும்மலங்களை நீக்கி அவனுக்கு இறைவனை உணர்த்துவதாகும்.

எனவே தீக்ஷை என்னும் இக்கிரியை ஆன்ம ஸம்ஸ்காரம், ஆன்மா தெளிதல், தெளிவித்தல், எனப்பெயர் பெறுகின்றது. அறிவு அறிவற்ற பொருள்களின் தன்மையை விளக்கிக் கூறி ஆன்மா மோக்ஷ பாதையில் செலுத்தலின் இதுவே தலை சிறந்த நெறியாகப் போற்றப்படுகின்றது. குருவினால் சீடனுக்கு பலமுறைகளில் தீக்ஷை செய்விக்கப்படுகின்றது. இனி இவற்றின் வகைகளைக் காணலாம்.

ஏழுவகை தீக்ஷைகள்

1. நயன தீக்ஷை : குருவானவர் பரிபக்குவமுள்ள சிஷ்யனை இறைவனை வேண்டி, அனுமதிப் பெற்று முதலில் தன் தியானத்தினால் பக்குவப்பட்ட தன் கண்ணால் நோக்குவது நயன தீக்ஷையாகும்.

மீன் தன் குஞ்சுகளை நோக்க அவைகளுக்கு எல்லா நிறைவும் கிடைக்க செய்யும் சகலாகம பண்டிதரான அருணந்தி சிவாச்சாரியாரை மெய்கண்டார் கண்ணால் நோக்க சித்தாந்த ஞானம் பெற்றார்

2. ஸ்பர்ச தீக்ஷை : குருவானவர் சிஷ்யனை முப்பொழுதும் திருமேனியைத் தொட்டு பூஜித்த கைகளால் தொடுவது, கோழி தான் இட்ட முட்டைகளைத் தன் இறைக்கையால் அணைக்கின்ற போது அவைகள் குஞ்சாக மாறுகின்றன. இராமகிருஷ்ண பரமஹம்ஸர் விவேகானந்தர் சிரசில் தன் கையை வைத்து தியானிக்கும் போது ஞானம் வரப்பெற்றார்.

3. மாநஸதீக்ஷை : குருவானவர் சிஷ்யனை மனதினால் ஆசீர்வதிப்பது. ஆமை ஒரு இடத்தில் தன் ரேதஸை விட்டுச்சென்று என்றோ ஒருநாள் அது மனதால் நினைக்கும்போது அவைகள் குஞ்சாகமாறுகின்றன என்பதை விஞ்ஞானம் கூறுகின்றன. ஏகலைவனின் குருபக்தியை அறிந்த துரோணர் மனதால் ஆசீர்வதிக்க அர்ஜுனனுக்கு கற்றுத்தந்த அத்தனை கலைகளும் ஏகலைவனுக்கு கிடைத்தது என்று பாரதம் கூறுகிறது.

4. வாசக தீக்ஷை : குருவானவர் வேத சிவாகமங்களையும் மூலமந்திரமாகிய பஞ்சாக்ஷரங்களையும் ஸதா ஓதிய திருவாக்கால், சிஷ்யனின் காதில் ஓதி செய்யப்படுவதே வாசக தீக்ஷையாகும்.

5. சாஸ்திர தீக்ஷை : குருவானவர் குருகுலத்தில் சிஷ்யர்களை வைத்து வேத சிவாகமங்கள், மந்திரசாஸ்திரங்களை போதிப்பது.

6. யோக தீக்ஷை : குருவானவர் தன் தவயோகசாதனை (பூதசுத்தி முதலியன) மூலம் சிஷ்யனை யோக நிலையை கற்பித்து ஞானமடையசெய்வது.

7. ஔத்ரி தீக்ஷை : இது இருவகைப்படும் 1. க்ரியாவதி 2. ஞானவதி எனப்படும்.

1. க்ரியாவதி : இம்முறையில் மண்டலம், கும்பம், ஹோமகுண்டம் முதலியவைகளைக்கொண்டு பூஜை, ஹோமம் முதலியவைகளை செய்து, அந்த நீரை சிஷ்யனுக்கு அபிஷேகம் செய்வது கிரியாவதி தீக்ஷையாகும்.

2. ஞானவதி : இம்முறையில் குண்டம், மண்டலம், கும்பம் இவற்றை குருவானவர் தன் மனதில் கற்பித்து பரிபக்குவமுள்ள குருவானவர், பரிபக்குவமுள்ள சிஷ்யனுக்கு செய்விக்கப்படுவது. (பூசலார் நாயனார் மனதினால் ஆலயம் அமைத்து கும்பாபிஷேகம் செய்தது போல)

இந்த வகையில் க்ரியாவதி தீக்ஷை இரண்டு வகைப்படும்

1. சபீஜதீக்ஷை 2. நிர்பீஜ தீக்ஷை என்பவையாகும்.

சபீஜதீக்ஷை என்பது ஒரு குருவிடத்தில் சிஷ்யன் பலகாலம் வேதம், சிவாகமம் பயின்று நெறிகளில் வழுவாது நிற்கும் சிஷ்யனுக்கு எல்லா பீஜ மந்திரங்களை உபதேசிப்பது சபீஜதீக்ஷையாகும்.

நிர்பீஜதீக்ஷை என்பது 1. லோகதர்மிணி 2.சிவதர்மிணி என இருவகைப்படும். லோகதர்மிணி இந்த லோகத்தில் ஸகல போக போக்யங்களை அடையச்செய்வது. சிவதர்மிணி மோக்ஷத்தில் பற்றுக் கொண்ட சீடனுக்கு சிகாச்சேதம் முதலிய க்ரியைகளை செய்து மோக்ஷத்தில் சேர வகை செய்வது. சிவபெருமான் உத்திரவு பிரகாரம் உமாபதி சிவாச்சாரியார் சாம்பன் என்ற பக்குவமுள்ள சிஷ்யனுக்கு தீக்ஷை செய்து மோக்ஷமளித்ததை, மறுத்து, அவன் மனைவி அரசரிடம் முறையிட அரசன் முன்பு பரிபக்குவமுள்ள எருக்கஞ்செடிக்கு தீக்ஷை செய்து மோக்ஷமடைய செய்ததை தில்லை சிதம்பர புராணம் விவரிக்கிறது.

சாம்பவிதீக்ஷை

ஓயாது ஜல வெள்ளம் பாய, அதனை தேவையானவர்கள் தேவைக்கேற்ப பயன்படுத்தி சுகம் பெருவது போல, அருள் ஞான வெள்ளத்தை பக்குவம் பெற்ற அன்பர்கள் பயன்படுத்தி பேறு பெரும் வகையில் நடைபெறும் உற்சவ விழாவிற்கு "சாம்பவிதீக்ஷை" என்று

பெயர் இதில் இறைவன் குருவாக இருந்து தீக்ஷிக்கிறார். ஆனால் பக்குவம் பெற்ற ஆன்மாக்களே பயன் பெறுகின்றனர். பொதுவாக தீக்ஷை செய்யும்போது குருவானவர் மண்டலம் கும்பம் அக்னி முதலியவைகளைக் கொண்டு செய்வது முறையாகும்.

தீக்ஷையில் மண்டலம், கும்பம், அக்னி, ஆச்சாரியர், சிஷ்யன் ஆகிய ஐவர் இடம்பெறுகின்றனர். இதனை பஞ்சஸ்வீகரணம் என்பர். திருவிழாவாகிய உற்சவத்தில் நான்கு வீதிகளில் எட்டு திக்குகளிலும் நவசந்தி செய்வது ஒரு மண்டலமாகவும் யாகசாலையில் கும்பங்களுக்கு காலை, மாலை, இருவேளைகளிலும் பூஜை செய்வதே கும்பமாகவும், அக்னியில் வேள்வியும், பூர்ணாகுதியும் அக்னியாகவும், இதில் ரக்ஷாபந்தனம் செய்துக்கொள்ளும் சிவாச்சாரியாரே குருவாகவும், தரிசிக்கவரும் பக்குவமுள்ள பக்தர்களை சிஷ்யர்களாகவும் கொண்டு அந்தந்த ஆலயத்திற்குரிய தீர்த்தத்தில் உற்சவ நிறைவில் இறைவனோடு பக்தர்களும் நீராடுவதையே சாம்பவி தீக்ஷை எனலாம்.

சமயாச்சாரியர்கள் தீக்ஷை

நமது சமயாச்சாரியர்கள் தீக்ஷையின் மூலந்தான் சிவஸாயுஜ்யம் பெற்றார்கள். திருஞானசம்பந்தருக்கு சீர்காழியில் உபநயநம் செய்த போது தோன்றாத் துணையாகவுள்ள இறைவன் தனது மூலமந்திரமான பஞ்சாக்ஷரத்தை உணர்த்தியதால், "துஞ்சலும் துஞ்சலிலாத......." என்ற பதிகம் பாடி தான்பெற்ற பேற்றினை விளக்குகிறார். இது கேட்காமலேயே கிடைத்தது.

திருநாவுக்கரசு சுவாமிகள் திருத்தூங்கானை மாடத்து இறைவனிடம், பொன்னார் திருவடிக்கு ஒன்று உண்டு விண்ணப்பம் என்று தன்மேல் மூவிலைச்சூலம் பொறி எனக்கேட்டு தீட்சைப்பெற்றார்

சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு திருவதிகை சித்தவடமடத்தில் இரவு நித்திரைக்கொள்ளும்போது, இறைவன் வயோதிக வடிவத்தில் சுந்தரர் தலைமேல் தன் திருவடிகளை வைத்து செய்தார், கேட்காமலேயே பெற்றது.

மாணிக்கவாசகருக்கு ஆவுடையார் கோவிலில் (திருப்பெருந்துறை) குருந்த மரத்தடியில் ஞான தீக்ஷை தந்தருளினார் இறைவன்.

ஸ்ரீ முருகப்பெருமானை நேரில் கண்டு அருள்பெற்ற குமரகுருபர சுவாமிகளை, நீ! குருமூலம் தீக்ஷைப்பெற்று முக்தியடைவாய்! என்று கூறிட, பலதலங்களை தரிசித்து, பிறகு தருமபுரத்தில் ஸ்ரீமாசிலா மணிதேசிக சுவாமிகளிடத்தில் தீக்ஷைப்பெற்று முக்திபெற்றார். அருணகிரிநாதருக்கு ஸ்ரீ முருகப்பெருமானே தீக்ஷை செய்திட பல திருப்புகழ் பாடல்களை பாடி முக்திப்பேற்றினைப் பெற்றார்.

அஸ்த்ராபிஷேக விதி

வந்த்யாநம் ம்ருத வத்ஸாநாம் ஸ்தீரிப்ரஸூநாஞ்ச யோஷிதாம்
துர்பகாநாம் அபீஜாநாம் பும்ஸாமபி ஹிதாவஹ :
ந்ருபாணாம் பாக்ய ஹீநாநாம் ரிபுபி: பீடிதாத்மாம்
லக்ஷ்மீ விஜய ஸௌபாக்ய தர்மகாமார்த்த ஸாதக:

வந்த்யாநாம் - குழந்தை இல்லாதது,
ம்ருதவத்ஸநாம் - இறந்த குழந்தைகள்,
ஸ்திரீப்ரஸூநாம் - பெண் குழந்தையாக பிறப்பது,

பெண் ஆண்கள், நபும்ஸகர்களாக இருந்தால்
அரசர்களுக்கு சத்ரு பாதை உண்டான போதும்,
பாக்யஹீணர்களுக்கு பாக்ய மேற்படவும்,
லக்ஷ்மீபிராப்தி ஸௌபாக்ய பிராப்தி
நல்ல தர்ம கர்மாக்களை செய்திடவும்,
மந்திரஸித்தி ஏற்படவும் அஸ்திராபிஷேகம் செய்ய வேண்டியது

ஆச்சார்யாபிஷேக விதி

ஸமயவிசேஷ நிர்வாண தீக்ஷையைப்பற்றி திருநாவுக்கரசர் திருவாரூர் திருத்தாண்டகத்தில்

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவன் இருக்கும் வண்ணம் கேட்டாள்
பிள்ளை அவன் ஆரூர் கேட்டாள் — சமயதீக்ஷை (சரியை)

பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள் - 1 — விசேஷ தீக்ஷை (க்ரியை)

அன்னையயும் அத்தனையும் அன்றே நீத்தார்
அகன்றாள் அகலிடத்தாள்
ஆசாரத்தை தன்னை மறந்தாள்
தன் நாமம் கெட்டாள் — நிர்வாண தீக்ஷை (யோகம்)

தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே - ஆச்சார்யாபிஷேகம் (ஞானம்)

மாணிக்கவாசகர் திருவாசகத்தில்,

முக்திநெறியறியாத மூர்க்கரோடு முயல்வேனை
பக்தி நெறி அறிவித்து பழவினைகள் பாரும் வண்ணம்
சித்தமலம் அறிவித்து சிவமாக்கி எனை யாண்ட
அத்தன் எனக் கருளிய வாறுயார் பெறுவார் அச்சோவே என்கிறார்

திருவள்ளுவர் திருக்குறளில்,

எண்குணத்தான்கோள் இல்பொறியில் குணம் இலவே
எண்குணத்தான் தாளைவணங்காத் தலை.

இந்த குறளுக்கு பொருள் கூறவந்த பரிமேலழகர் எண்குணத்தான் என்பதற்கு பொருள் சிவாகமத்தில் கண்டு கொள்க என்று கூறியுள்ளார் சிவாகமம் இருபத்தியெட்டுனுள் நிச்வாசாகமம் சிவபெருமானின் எட்டு குணங்களையும் தெளிவாக கூறுகிறது.

எட்டு குணங்களாவன

1. ஸர்வக்ஞத்வம் - முற்றுமுணர்ந்தவர்
2. ஸர்வாந்தர்யாமித்வம் - எங்கும் நீக்கமற நிறைந்தவர்
3. அநந்த சக்தித்வம் - பேராற்றல் உடையவர்
4. அலுப்த சக்தித்வம் - விருப்பு வெறுப்பு அற்றவர்
5. அநாதி போதத்வம் - ஆதிபிரளய காலத்தில்தனது உடுக்கையிலிருந்து நாதம், பிந்து பிரணவம், சொல், பொருள் முதலியவைகளைக் கொண்டு ஸகலகலா வித்தைகளை அருளியவர்
6. பரிதிருப்தத்வம் - பேரானந்தமுள்ளவர்
7. ஸ்வதந்த்ரத்வம் - கட்டுப்பாடற்றவர்
8. ஸர்வ போக்த்ரத்வம் - பேரருள் புரிபவர்

என்று கூறியுள்ளது.

சிவாகமங்களுக்கு பத்ததி (விளக்கவுரை) அருளியவர்கள் பதினெண்மர் (18). அதில் மிக எளிமையாகவும் சுலபமாகவும் அனுஷ்டிக்கும் படியாகவுள்ளது. ஸ்ரீ அகோர சிவாச்சாரியார்

பத்ததியாகும். அதில் க்ரியாக்ரம த்யோதிகா மிக சிறந்தது. அதில் சிவதீக்ஷை முறைகளை விரிவாக கூறியுள்ளது. அதற்கு 'பிரபை' என்ற வியாக்யானத்தை திருவாரூர் ஸ்ரீநிர்மலமணி தேசிகர் அவர்கள் இயற்றியுள்ளார். அதில் எட்டுகுணங்களையுடைய சிவ பெருமானை அடைய வழியாக அமைந்தது தீக்ஷையாகும் என்பதுடன், ஆகமத்திலிருந்து எண்குணத்தான் என்பதற்கு விளக்கம் தருகிறார்

நமது சமய ஆச்சாரியர்களில் திருநாவுக்கரசு சுவாமிகள் சிவபெருமான் எண்குணத்தான் என்பதை ஐந்தாந்திருமுறை தனித் திருக்குறுந்தொகையில்

"எட்டு மூர்த்தியாய் நின்றயலுந்தொழில்
எட்டுவான் குணத்தீசன் எம்மான்றனை" என்றும்

ஆறாந்திருமுறை திருவிடைமருதூர் திருத்தாண்டகத்தில்

"திண்குலத்தார் தேவர்கணங்களேத்தித்.....
எண்குணத்தார் எண்ணாயிறவர் போலும்" என்றும்


ஏழாந்திருமுறையில் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருகானாட்டு முள்ளூர் தேவாரத்தில்

"இரும்புயர்ந்த மூவிலைய சூலத்தினானை
இறைவனை மறையனை எண்குணத்தினானை"

என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மனிதன் செய்து வருகின்ற சடங்குகள் யாவும் சரீரத்திற்கே யல்லாது, உயிர்க்கில்லை. ஆகையால், உயிர் மீண்டும் மீண்டும் பிறவி எடுத்துப் பல இன்ப துன்பங்களை அனுபவித்து வருகின்றது.

உயிர் பிறவி எடுக்காது ஆனந்தத்தில் திளைக்கச் செய்யும் சடங்கே தீக்ஷையாகும். நல்ல குருவின் மூலம் தீக்ஷைப் பெற்ற உயிர் மீண்டும் பிறவி எடுக்காததுடன், பேரானந்தத்தில் திளைக்கும் என்பதை சிவாகமங்கள் உறுதியாக கூறுகின்றன.



ஆத்மார்த்த சிவபூஜை

ஆத்மார்த்த சிவபூஜை என்பது இருவகைப்படும். முதலாவது க்ஷணிகலிங்க பூஜை, இதை காரணாகமம்

ஸிகதம் தண்டுலஞ் சாந்நம் நதீமிருத் கோமயம் ததா
நவநீதஞ்ச ருத்ராக்ஷம் சந்தனம் கூர்ச்சமேவச
புஷ்பமாலா குளம் பிஷ்டம் க்ஷணிகம் த்வாதச முச்யதே
என்கிறது.

1. ஆற்றுமணல் லிங்கம்
2. அரிசி லிங்கம்,
3. அன்ன லிங்கம்,
4. நதிமண் லிங்கம்,
5. கோமய லிங்கம் (பசு சாணத்தில் லிங்கம்)
6. வெண்ணை லிங்கம்,
7. ருத்ராஷ லிங்கம்,
8. சந்தன லிங்கம்,
9. தர்ப்பை (கூர்ச்ச) லிங்கம்
10. புஷ்பமாலை லிங்கம்,
11. வெல்ல லிங்கம்,
12. மாவினால் செய்தலிங்கம்,

இந்த பன்னிரெண்டில் குருவானவர் எந்த லிங்கத்தை மனமுவந்து தருகிறாரோ அந்த லிங்கமே ஆத்மார்த்த பூஜைக்கு உகந்தது. மிகுந்த பயனைத் தரவல்லது.

அம்சுமதி ஆகமம் க்ஷணிக லிங்க பூஜையின் பலனைப் பின்வருமாறு கூறுகிறது.

க்ஷணிகாநாம் பலம் வக்ஷ்யே ஸைகதம் மோக்ஷ காங்க்ஷிணம்
தண்டுலம் விபவார்த்தினாம் அன்னம் அன்னப்ரதாயினம்
நதீமிருத் பூமிலாபம் ஸ்யாது. கோமயம் ரோக நாசனம்
நவநீதம் மனோக்லாதம் ருத்ராக்ஷம் ஜ்ஞாநவர்த்தநம்
கந்தம் ஸ்யாத் போக க்ஷங்க்ஷிணம் கூர்ச்சம் முக்தியர்தினாம் ஸ்ம்ருதம்
ஆயுஷ்ய வர்த்தனம் புஷ்பம் குளம் இஷ்டார்த்த ஸித்திதம்
பிஷ்டம் புஷ்டித ப்ரதம் ப்ரோக்தம் க்ஷணிகாநாம் பலம் லபேத்
தத்தேச குருணா லிங்கே ஸ்தண்டிலே ஸ்வயமாத்மனி
க்ஷணிகே மண்டலே தோயோ ஆத்மார்த்த யஜநம் ஸ்மருதம்.

இரண்டாவது உடையவர் பூஜை. அது இருவகைப்படும். ஒன்று உலோகஜம், மற்றொன்று ரத்னஜம்

1. உலோகஜம் என்பது (தங்கம், வெள்ளி, தாமிரம், பித்தளை, இரும்பு, வெண்கலம்) முதலியவற்றால் ஆனது.

இதனை சிந்திய விச்வ ஆகமம்

ஸ்வர்ணேன க்ருதம் லிங்கம் புத்திமுக்தி ப்ரதாயகம்
தாம்ரஜம் புத்ரதம் ப்ரோக்தம் ரஜதம் ஸ்ரீகரம் பவேது
ஸுகதம் காம்ஸ்யமித்யுக்தம் பைத்தலம் ரோகநாசனம்
ஆயஸம் சத்ரு நாசந்து த்ருலோஹம் மரணம்பவேது

என்கிறது.

1. சுவர்ண லிங்கம் - புக்தி முக்தியைத் தரும்
2. தாம்ர லிங்கம் - புத்திர ப்ராப்தியைத் தரும்
3. வெள்ளி லிங்கம் - செல்வ ப்ராப்தியைத் தரும்
4. வெங்கல லிங்கம் - சுகத்தைத் தரும்
5. பித்தளை லிங்கம் - ரோகங்களைப் போக்கும்
6. இரும்பு லிங்கம் - சத்ருநாசஞ் செய்யும்
7. நாகத்தகட்டால் ஆனலிங்கம் - மரணத்தை உண்டாக்கும்

2. ரத்தினஜம் - நவரத்தினத்தால் ஆனது.

(இதனை சிந்திய விச்வாகமம்)

மரகதம் புஷ்டிதம் ப்ரோக்தம் பத்மராகம் தனார்த்தினாம்
ஆயுஷ்யம் ரித்திவைடூர்யம் ஸ்படிகம் புத்ர வர்த்தனம்
ஸ்தம்பனம் புஷ்பராகம் ஸ்யாத் ராஷ்ட்ரவச்யம் ப்ரவாளகம்
கர்ஷணந்து வஜ்ராக்யம் மாணிக்கம் ஸர்வஸித்திதம்
இந்திர நீலந்து மோக்ஷார்த்தம் ரத்னஜாநாம் பலம் பவேது

என்கிறது.

1. மரகத லிங்கம் - புஷ்டியைத் தரும்
2. பத்மராகம் (முத்து) - தனலாபந்தரும்
3. வைடூர்ய லிங்கம் - ஆயுள் விருத்தி தரும்
4. ஸ்படிக லிங்கம் - புத்திர ப்ராப்தி தரும்
5. புஷ்பராக லிங்கம் - ஸ்தம்பனத்தைப் போக்கும்
6. ப்ரவாளம் (பவழம்) - ராஜ்ய வச்யந்தரும்
7. வஜ்ரம் (வைரம்) - ஆகர்ஷணம் வசியந்தரும்
8. மாணிக்கம் (சிகப்பு) - ஸர்வ சித்திகளையுந் தரும்
9. இந்திரநீல லிங்கம் - மோக்ஷத்தைத் தரும்

ஆத்மார்த்த சிவபூஜை - மூன்று விதங்கள்

1. சுத்த பூஜை - சிவனை (பாணம்) மட்டும் பூஜிப்பது
2. கேவல பூஜை - சக்தியோடு (ஆவுடையாரோடு) கூடிய சிவலிங்க பூஜை
3. மிச்ர பூஜை - சூரிய பூஜைமுதல் முறையாக சண்டிகேசுவரர் வரை பூஜிப்பது

சுத்த கேவல ஸம்மிச்ர மாத்மார்த்த யஜனம் பவேது
ஜிதேந்திரியார்சிதம் சுத்தம் கேவலஞ்சைவ சார்ச்சயேது
ஆசார்யோ மிச்ரகஞ்சைவ கேவலம் சுத்த மார்ச்சயேது
சுத்தம்வா சக்திரஹிதம் கேவலம் சக்திஸம்யுதம்
ஸௌராதி சண்ட பர்யந்தம் மிச்ரஞ்சேதி ப்ரகீர்த்திதம்

என்ற ஸ்லோகம் மூலம் அறியலாம். மேலும் நாலுவர்ணத்தாரும் ஆத்மார்த்த சிவபூஜை செய்வதை மகுடாகமம்

விப்ர க்ஷத்ரிய விட்சூத்ரா தீக்ஷிதாச்ச ப்ரவேசகா:
ஆத்மார்த்த யஜனம் குர்யாத் நகுர்யாஸ்து பரார்த்தகம்

என்கிறது

பெண்களும் ஆத்மார்த்த சிவபூஜை செய்யலாம் என்பதை அம்சுமதி ஆகமம் பின்வருமாறு கூறுகிறது

சாதுர்வர்ணோத்பவ ஸ்தீரீணாம் அர்ச்சநந்து விசேஷத :
அன்யத் கர்ம நகுர்வீத யாவந் நாராதித சிவ :

ஆசௌச (சூதக) காலத்தில் சிவபூஜாவிதிப் பற்றி அம்சுமதி ஆகமத்தில்

சூதகே ப்ரேதகாசௌசே ஆத்மார்த்த யஜனம் ஸ்ம்ருதம்
பூஜா லோபோ நகர்த்வ்ய: சூதகே ப்ரேதகே க்வசிது
சிவமந்த்ரேன கர்த்தவ்யம் ஸ்நான மஸ்திரேண சுத்திதம்
ஆசௌச பவே தத்ர பத்மபத்ர மிவாம் பஸா
பூஜாந்தே ப்ரவிசேச்சேத மாசௌசஞ்ச விசேஷத :
மௌநம் லிங்கார்ச்சநம் குர்யாத் காம்யாநுஷ்டாந ஹீநகம்
அதவா சூதகே ப்ரேதே நஸ்வயம் லிங்க பூஜநம்
மாநஸஞ்ச யஜேத்தீமான் ஸர்வம் மாநஸ கல்பனம்
தல்லிங்கம் பூஜயித்வாது குருணா ஸ்வபந்துனா
அந்யே நைவவார்சனம் குர்யாது அந்தே புஷ்பாஞ்ஜலித்ரயம்:

என்று கூறுகிறது.

பெண்கள் மாதவிடாய் காலத்தில் பூஜை செய்வது எப்படி? என்பதை

கதம் புஷ்பவதீ நாரீ அர்ச்சனம் குருதேவத
அந்தர்யாகம் ப்ரகர்த்தவ்யம் தயாபூர்வ தினத்ரயம்
சதுர்தே திவஸே ஸ்நாத்வா கவ்யம் ப்ராச்ய யஜேத்து ஸா

என்கிறது. எத்தனை லிங்கங்களை வைத்து பூஜை செய்யலாம்? அதன் பலன் என்ன என்பதை காரணாகமம்,

ஏகலிங்கம் ததா மோக்ஷம் வ்யாதிரூபம் த்வயம் பவேது
லிங்கத்ரயம் குர்யாது போக மோக்ஷப்ரதாயகம்
சதுர்த்த லிங்கங்கந்து யத்ரைவ தத்ர கீர்த்தி ஹாநிதம்
பஞ்சலிங்கமிதி ச்ரேஷ்டம் பஞ்சபாதக நாசனம்
ஷஷ்டஞ்சஞ்சேதி மரணம் குர்யாது சப்தமம் வைரண நாசனம்
அஷ்டமந்து மஹாவ்யாதி அதவா சத்ருவர்த்தநம்
நவலிங்கம் ததா சேஷ்டம் சிவலோக மஹீயதே

என்று கூறுகிறது.

வேதத்தில் ஆதிஶைவர்

இறைவனால் அருளி செய்யப்பட்ட நான்கு வேதங்களில் இரண்டாவதாக உள்ள யஜுர்வேதம். அது 101 சாகைகளை உடையது. அதில் 51-வது சாகை "தைத்திரிய" சாகையாகும். தைத்ரிய சாகை ஏழு காண்டங்களை உடையது. நடுவாகிய நாலாங் காண்டத்தின் நடுவில் "ஸ்ரீருத்ரம்" என்ற மஹாமந்த்ரம் உள்ளது. அதன் இறுதியில்

அயம்மே ஹஸ்தோ பகவான்
அயம்மே பகவத்தர:
அயம்மே விச்வபேஷஜீ
சிவாபிமர்சன: என்று கூறுகிறது.

1. "அயம்மே ஹஸ்தோ பகவான்" என்பது என்னுடைய கையானது பகவான்

"மணிபந்தே ஸ்வயம் விஷ்ணு அங்குஷ்டேன சதாசிவம்
தர்ஜன்யாம் ஈஸ்வரம் ப்ரோக்தம் மத்யமா ருத்ரதைவதம்
அநாமிகாம் விக்நராஜம்ச கனிஷ்டா ஸ்கந்தமேவச

அக்ரோப்ருஷ்டா சசி பானு நகா நத்ர தேவதா:
ரேகா ஸுவசு தைவத்யம் சிவஹஸ்தஸ்ய லக்ஷணம்"

என்பதால் என்னுடைய கை பகவான்.

2. "அயம்மே பகவத்தர"

பாற்கடல் கடைந்த போது தோன்றிய ஆலகால விஷம் எல்லோரையும் துன்புறுத்தவே தேவர்களும், மூவர்களும் சிவ பெருமானிடம் வந்து சரணடைய சிவபெருமான், அணுக்க தொண்டரும் ஆதிசைவகுல தோன்றலுமான ஸ்ரீ சுந்தரரிடம் "அவ்விஷத்தை இவ்விடம் கொண்டு வா" என்று ஆக்ஞையிட, சுந்தரர் ஆலகால விஷத்தை நெல்லிக்கனிப் போல உருட்டி எடுத்து வந்து சிவபெருமானிடம் கொடுக்க அவ்விஷத்தை தனது வாயில் போட்டுக் கொள்ள, அதனை "உண்டாய் நஞ்சை உலகமுய்யவே" என்பர் ஞானசம்பந்தர். அவ்வாறு உண்ட சிவபெருமான் கழுத்தில் உமா தேவியார் கைவைத்து நிறுத்த அவ்விஷம் கழுத்திலேயே தங்கி நீலகண்டராக ஆனார், "கறைகண்டனாக" ஆனார். அவ்விஷத்தை தனது கரத்தில் நெல்லிக்கனி போல் எடுத்துவந்த சுந்தரரின் கை கறைபடவில்லை. எனவே "அயம்மே பகவத்தர" என்றும்

3. "அயம்மே விச்வ பேஷிஜி"

ஸத்யாநந்தகரம் ஸதாசுபகரம் ஸத்கீர்த்தி வித்யாதரம்
வாணி ஸித்திகரம் மனச்சுசிகரம் காருண்ய லக்ஷ்மீகரம்
தேஹீல்லாஸகரம் சிவப்ரியகரம் சிவபக்தி முக்திப்ரதம்
சைவம் பஸ்ம லலாட சோபிதகரம் த்ரைலோக்ய ரக்ஷாகரம்

விபூதி கொடுத்து பல துன்பங்களை போக்கியும் பல நன்மைகளை செய்வதால் "அயம்மே விச்வ பேஷிஜி"

4. "சிவாபிமர்சன"

முப்போதும் திருமேனியை தீண்டி பூஜை, அபிஷேகம் முதலியவைகளை செய்வதால், "சிவாபிமர்சன" அந்த கைக்கு அவ்வளவு சிறப்பு என ஆதிசைவர் பெருமையை வேதம் கூறுகிறது.



ஆகமங்களில் ஆதிசைவர்
(சூக்ஷ்மாகமம்)

நிஷ்களோத்பவமாசார்யம் ஸர்வ ஜீவதயாபரம்
சாந்தம் ஸத்குணாமாசாரம் மந்த்ர தந்த்ர மநோஹரம்
தத்வக்ஞான மனுக்ராஹ்யம் க்ருபாஸகல ஸத்குரும்
ஆசாபாச விநிர்முக்தா காமக்ரோதவிவர்ஜித :
சுத்தவைதீக சைவம்து வேதாகம பராயணம்
கோத்ர கோசர ஸந்தானம் மடாதிப மந்திரணம்
குருஸ்தானஞ்ச மூர்த்தீநாம் ஸூத்ரமாசார மேவஹி
சிவஞ்ஞானஞ்ச சாஸ்திரஞ்ச புடனம் ஸர்வ லக்ஷணம்
ஷோடஸம் பஞ்சவிம்சஞ்ச த்வாத்ரும்சத் உத்தமேவச
சத்வாரிஞ்சாஷ்ட ஸம்யுக்தம் மத்யமேநது வத்ஸர :
ஷட்தசேந அதமம் இதி ஆசார்ய லக்ஷணம்

மூலாதா ஸ்மரேதக்னிம் சந்திர ஸூர்ய ஸமன்விதம்
குதாஸ்யாந்து விநிர்பிரும்மா நாபௌ விஷ்ணு முதாஹ்ருதம்
ஹ்ருதயே கேவலம் ருத்ரம் கண்டமூலே மஹேச்வரம்
ஜிஹ்வாமூலந்து நாதாக்யம் நாஸாக்ரே பிந்து தேவதா
ப்ரும்மரந்தரே சிவம்வித்யா தூர்த்வே நிருத்தம் ஸஞ்சிந்தயேது
சுக்ல ச்ரோணிதயோர் மத்யே பிந்துருபம் பராத்பரம்
சிவம்மத்யே கதம்சாந்தம் சாந்த்யதீதபரம் சிவம்
பராத்பர மிதம் தேஹம் சிவோஹமிதி பாவயே

சதுர்புஜம் த்ரிநேத்ரஞ்ச அவ்யக்தோ மார்த்த விக்ரஹம்
அந்தர்கத லலாடக்ஷம் அந்தர்கத புஜத்வயம்
அந்தர்கத பராசக்திம் வந்தே தேசிக விக்ரஹம்



ஆதிசைவர்களின் பழக்க வழக்கங்கள்

ஆதிசைவர்களான சிவாச்சாரியார்கள் குருக்கள், பட்டர், நாயனார் என்ற பல பெயர்களைக் கொண்டு அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் ஊருக்கு ஒருவர் அல்லது, அதிகம் பத்து குடும்பங்களுக்குமேல் சேர்ந்து இருந்தது இல்லை. இவர்களுக்கு ஆலய அர்ச்சகர் பணிதான் முக்கியமாக இருந்தது. இவர்கள் அதிகம் படிப்பது வேதமும் சிவாகமமும் தான், இவர்களுக்கு சிறுவயதிலேயே உபநயனம், சமயதீக்ஷையும், விவாஹம், விசேஷ நிர்வாண தீக்ஷை, ஆச்சார்யாபிஷேகம் செய்து, பலமந்திரங்களை உபதேசமாக செய்வது வழக்கமாக இருந்து வந்துள்ளது. இவர்கள் மந்திர பலத்தினால் தெய்வ பலமும் கூடிட சைவசமய அன்பர்களுக்கு கல்யாணம் முதலான பூர்வக்ரியைகளில் தீக்ஷைசெய்து, மந்திர உபதேசங்கள் செய்து, ஆத்மார்த்த சிவபூஜை செய்வதிலும் குருவாக விளங்குவதால் இவர்கள் குருக்கள் என்று அழைக்கப்படுகிறார்கள், மேலும் இவர்கள் அந்தியேஷ்டி முதலான அபரக்ரியைகளையும் முன்நின்று செய்யச் சொல்வார்கள்.

ஆதிசைவர்கள், வைதீக அந்தணர்களாகிய பிராமணர்கள் போல் உருவத்திலும், உடையிலும் உணவிலும் ஒற்றுமை இருந்தாலும், அவர்களோடு விவாஹசம்பந்தம் செய்து கொள்வதில்லை. இவர்கள் சிவனையே ஆச்சார்யனாக கொண்டுள்ளதால்,

ஸதாசிவ ஸமாரம்பாம் ஸ்ரீகண்டாசார்ய மத்யமாம் /
அஸ்மதாசார்ய பர்யந்தம் வந்தே குரு பரம்பராம் //

என்று சிவனையே தங்களது ஆச்சார்யராகப் பாவித்து வணங்கி வருபவர்கள்.

விவாஹத்தில் பிராமணர்கள், மாப்பிள்ளையை மஹா விஷ்ணுவாக வரித்துக் கன்னிகாதானம் செய்வார்கள். ஆதிசைவர்கள் மாப்பிள்ளையை உமாமகேஸ்வரனாக வரித்துக் கன்னிகாதானம் செய்கிறார்கள். பிராமணர்கள் அக்னிசாட்சியாக விவாஹம் செய்கிறார்கள். ஆதிசைவர்கள் அக்னி முதலான வைதீக க்ரியைகளோடு விசேஷமாக விவாஹ தம்பதிகளுக்கு முன்னால் இரண்டு கும்பங்களில் சிவனையும், சக்தியையும் ஆவாஹித்து, சக்தி கும்பத்தில் அணிந்துள்ள திருமாங்கல்யத்தை பூஜைசெய்த ஆச்சாரியரால் மணமகளின் தந்தை கையில் கொடுக்க அவர்

பிரார்த்தித்தபின், குமாரன் கையில் கொடுக்க சிவமந்திர தியானத்தோடு மாங்கல்யம் அணிவிப்பது வழக்கமாக உள்ளது.

கல்யாணப் பெண்ணை விவாஹ க்ரியை ஆரம்பிக்கும்போது பக்கத்தில் உள்ள ஆற்றிலோ, குளத்திலோ, ஆலயத்திலோ, அல்லது ஒரு விருக்ஷத்தின் அடியிலோ சென்று பல சுமங்கலிகள் சேர்ந்து ஸ்ரீ தேவியை பூஜை செய்யச் செய்து, அவளிடத்தில் அம்பாள் பிரசாதமாக ஸெளபாக்ய திரவியங்களை தந்து, பிறகு அழைத்து வந்து மணமேடையில் அமர்த்துவர். இதற்கு ஆராதித்தல் என்று பெயர் இது மருவி ஆராட்டல் என்று பெயர் வழங்கி வருகிறது. மாங்கல்ய தாரணம், பாணிக்கிரஹணம் ஆனவுடன் தம்பதிகள் இருவரும் கைநிறைய புஷ்பங்களோடு கும்பம், அக்னி இவைகளை வலமாக வந்து கும்பத்தில் "யோபாம் புஷ்பம் வேத........" என்ற மந்திரத்தை கூறி புஷ்பாஞ்சலி செய்வது வழக்கம்.

விவாஹத்திற்கு பிறகு சிவதீட்சை, ஆச்சார்யாபிஷேகம் பெற்று தினம் வைதீக சந்தியாவந்தனத்துடன் சைவ அனுஷ்டானம், மூன்று வேளைகளிலும் செய்து, ஆத்மார்த்த சிவபூஜை செய்து வர வேண்டும். ஜனன, மரண ஆசௌசங்களிலும் ஆத்மார்த்த பூஜை செய்தே ஆக வேண்டும் என்பது சிவாகமத்தின் கட்டளை. சிவதீட்சையில் குருவானவர் சிஷ்யனிடம் இந்த ஆத்மார்த்த சிவபூஜையையும், சைவ அனுஷ்டானத்தையும் ஜீவனுள்ளவரை எக்காரணத்தைக் கொண்டும் விடக்கூடாது என்று உறுதிமொழி பெற்றுக் கொள்கிறார்.

இவர்கள் நான்கு வேதங்களை அத்யயனம் செய்தும், ஆறு ஸூத்திரங்களில் ஒரு ஸூத்திரத்தை அனுஷ்டித்துவந்தாலும், சிவாகமத்தையே முக்கியமாகக் கொண்டவர்கள்.

பிராமணர்கள், ஆதிசைவர்கள் யாவருக்கும் பித்ருக்கள் "வசு ருத்ர ஆதித்யர்" என்பது பழக்கம். ஆனால் சமய தீட்சை பெற்றவர்களின் பித்ருக்களாக "ஸ்கந்த சண்ட கணா தீச" என்றும், நிர்வாண தீட்சை பெற்றவர்களின் பித்ருக்களாக "ஈச ஸதாசிவ சாந்த" என்றும் கூறி ச்ராத்தம் செய்வது வழக்கம்.

ஆலயங்களில் உலகத்தவர்கள் நன்மைக்காக செய்யப்படும் பரார்த்த பூஜையானது, வேதத்துடன் சிவாகமத்தையே பிரதானமாக கொண்டு செய்யப்படுவது தான் வழக்கம். முன் தலைமுறையினர்க்கு முறையாக வேத சிவாகமங்களை கற்க வேத சிவாகம பாடசாலை இல்லாத குறை. தருமபுரத்திலும், ஆச்சாள்புரம் செட்டியார்

பாடசாலையிலும், குறைந்த அளவு மாணவர்களே கற்கக்கூடிய சூழ்நிலை பெரும்பாலானவர்கள் தங்கள் தந்தையாரிடத்திலோ அல்லது உறவினர்களிடத்திலோ தான் அதிகமாக வேத சிவாகமங்களைப் பயின்றுவந்தார்கள். ஆனால் இந்த தலைமுறையினர்களுக்கு ஆங்காங்கு அதிக அளவில் வேத சிவாகமப் பாடசாலைகள் உருவாகி உள்ளன.

கல்வெட்டுகளில் சிவாச்சாரியார்கள்

(இலக்கியச் சான்றுகளுடன்)

தொல்பொருள் ஆய்வுத்துறையினரால் ஆய்வுசெய்யப்பட்டுப் பல அரிய செய்திகள் நம் பாரத திருநாட்டை பெருமைபடுத்துகிறது. பல நூல்கள், ஏட்டுசுவடிகள் காலப் போக்கில் அழிந்துவிடும். அதனால் அரசர்கள் என்றும் அழியாத கல்வெட்டுகளில், செப்பு பட்டயங்களில் கால நிகழ்வுகளை பதிவு செய்ததன் பயனாக நம் பண்டைய நாகரீகம், பண்பாடு, கலாச்சாரம், வணிகம், கலை, அறிவியல், சிற்பங்கள், படிமக்கலை, ஆலய வழிபாடுகள், ஆலய பூஜை முறைகள், வேள்விகள், போன்ற செய்திகளை அறிய முடிகிறது.

பரார்த்த பூஜை ஆலயங்களில் செய்யக்கூடிய அர்ச்சகர்கள் சிவப்பிராம்மணர்கள், சைவாச்சார்யர்கள் என்று கல்வெட்டுகள், செப்பேடுகள், தெரிவிக்கின்றது. அரசனுக்கு அறிவுரை கூறுவதிலிருந்து, நல்ல காரியங்களை முடிவெடுப்பது, படையெடுப்பது, அரசின் முக்கிய பொறுப்புகளை வகிப்பது போன்றவை சிவாச்சார்யார்களே என்பது தெளிவாகிறது.

1. கூரம் செப்பேடு

9ஆம் நூற்றாண்டில் முதலாம் பரமேஸ்வரவர்மன் செய்து வைக்கப்பட்ட கூரம் செப்பேடு, பரார்த்த பூஜை, சுவாமிக்கு செய்யப்படும் உபசார விஷயங்களை தெளிவாக்குகிறது. தளிக்கு வேண்டும் கிராமத்தின் மத்தியில் வித்யாவந்த பல்லவ பரமேச்வரனுடைய கோயில் பிரதிஷ்டை செய்யப்பட்ட பகவான் பரமேஷ்டியான பினாக பாணியுடைய பூஜை, நீராட்டுதல், புஷ்பம், சந்தனம், தூபம், தீபம், ஹவிஸ், உபசாரம், பலி முதலியன அளித்தல் சங்கம், படகம், முதலியன வாசித்தல், பாரதம் படித்தல் ஆகியவற்றிற்காக.

"தேவ கருமத்திற்கும் நவகர்மத்திற்கும் கூரத்தாச்சார்யன் மகன் அனந்த சிவாச்சாரியாருக்கு கொடுக்கப்பட்டது".

கூரத்தாச்சாரியான் மகன் அனந்த சிவாச்சாரியாருக்கு கொடுக்கப்பட்டது என்பது தேவகர்மம், நவகர்மமாம், தேவகர்மம் இதில்

1. பூஜை	2. அபிஷேகம்	3. புஷ்பம்	4. சந்தனம்
5. தூபம்	6. தீபம்	7. ஹவிஸ்	8. உபசாரம்

9.பலியென

நவகர்மம் ஆகும். சங்கம், படகம் வாசித்தல், பாரதம் படித்தல் இவையனைத்தும் பரார்த்த பூஜைகள் சிவாச்சாரியராகிய அனந்த சிவாச்சாரியாரல் நடத்தபடுவதற்கு கொடுக்கப்பட்டுள்ளது.

இதனை,

"பூவும் நீரும் பலியுஞ் சுமந்து
புகலூரரையே நாவினாலே நவின்றேத்து" - திருஞானசம்பந்தர்

இதில் பலி என்பதனை ஸ்ரீபூதபலியை சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகள் கூறுகிறார். கேரளத்தில் சீவேலி என்னும் ஸ்ரீபலி பூஜை ஆலயங்களில் நடைபெறுகிறது.

ப்ரபூதஹவிஸ் என்பதனை பெருஞ்சோறளித்தல், பாவடை நைவேத்யம், என்றும் பள்ளயம் போடுதல், பச்சைபோடுதல் என்று கூறுவர்.

தஸ்ய பகவத: பரமேஷ்டிந: பிநாகபாணே:
பூஜாஸ்தாபந குஸுும, கந்த, தூப, தீப, ஹவிஸ்,
உபசார, பலி, பாங்க, படாஹாதி, ப்ரவர்த்த நார்த்தம்

5வது செப்பேடு, 4வது வரி

உத்தர காரணகா மஹா ஸேநதத்த
தேவகர்ம : நவகர்ம : கர்ம கூரத்தாச்சார்ய புத்ர
அநந்த சிவாச்சார்ய : என தெரிவிக்கிறது.

கேரளத்தில் ஆராட்டு என்பது விக்ரஹத்தை நீராட்டு துறைக்கு எடுத்து நீராட்டுதல், இதனை தீர்த்தம் கொடுத்தல் என்பர். அஸ்த்ர தேவருடன் சென்று சிவாச்சார்யார் முதலில் ஸ்நாநம் செய்வார். பின்னர் பக்தர்கள் நீராடுவர் இதுவும் தற்போது நடைமுறையில் உள்ளது. இதனை இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் காட்சிகாதையில் பத்தினி தெய்வத்தை வழிபட விரும்பிய மன்னன் தெய்வ

ஆராதனையில் வல்லவரான சிவாச்சார்யனை கேட்டதாகக் குறிப்பிடுகிறார்.

நீர்படைக் காதையில் தீர்த்த உற்சவம் பற்றியும் வருகிறது.

இமயவர் உறையும் இமையச் செல்வரை
சிமையச் சென்னித் தெய்வம் பரசிக்
கைவினை முற்றிய தெய்வ படிமத்து
வித்தவர் இயற்றிய விளங்கிய கோலத்து
முற்றிழை நன்கலம் முழுவதும் பூட்டில
பூப்பலி செய்து காப்பு கடை நிறுத்தி
வேள்வியும் விழாவும் நாடொறு வகுத்துக்
கடவுள் மங்கலம் செய்கெனஞ்சினான்.

இதன் மூலம் சிவாகம கிரியைகள் ஒரு சிவாச்சாரியாரால் செய்விக்கப்பட்டது என்பதனை அறிகிறோம்.

2. திருவாரூர் கல்வெட்டு

"ஜனனி பவதோ ஞானசிவாச்சாரியார்
குலே அவது சைவே கௌதம கோத்ரேஸ்மின்
ஞான்யா ரவ்யே கமலாபுரி"

அநபாய சோழன் இரண்டாம் குலோத்துங்கன் கல்வெட்டில் திருவாரூர் கோயில் அநபாய சோழன் கல்வெட்டில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிவாச்சார்ய பரம்பரை பூஜை செய்ததும் கோத்ரமும், தாய் தந்தையரின் பெயரும் அறிய முடிகிறது.

கமலாபுரி, என்பது திருவாரூர் கௌதம கோத்ரத்தில் வந்த ஞான சிவாச்சாரியார் பரம்பரையில் வந்த இசைஞானி. அவர் புதல்வர் சுந்தரமூர்த்தி சிவாச்சாரியார் எனத் தெளிவாகிறது.

3. நன்னிலம் கல்வெட்டு

திருவிடைவாசல் 414/2-3, 12-13ஆம் நூற்றாண்டு புண்ணிய நாதஸ்வாமி கோயில்

திருவிடைவாயில் திருவிடை வாயிலுடைய மஹாதேவர் கோயில் காணியுடைய "சிவ பிராம்மணர்" பாரத்வாஜி மருதந் இஷப தேவநாநபத் "மஹேஸ்வர பட்டரும்" கோதமந் அருள்மொழி தேவநாக விருதராஜபயங்கபுரத்து "நாற்பத்தெண்ணாயிரவர்" ஆத்திரையர் மஹேஸ்வரந் "ஆளுடைய பட்டரும்" இம்மூவோம்.

அந்த நாட்களில் சிவாச்சார்யார்கள் குழுக்களாக இருந்து பூஜை செய்து வந்ததாக அறியப்படுகிறது.

ஆயிரவர்	விருத்தாசலம்
ஈராயிரவர்	முக்காணியர் (திருச்செந்தூர்)
மூவாயிரவர்	தில்லை (சிதம்பரம்)
நாலாயிரவர்	நாங்கூர்
ஐயாயிரவர்	அண்ணாமலை (திருவண்ணாமலை)
ஏழாயிரவர்	திருவீழிமிழலை
எண்ணாயிரவர்	மதுரை
பன்னீராயிரவர்	சுவாமிமலை

திருச்செந்தூர் புராணம் திரிசுதந்திர சருக்கம் கூறுகிறது.

மேலும் ஸ்தல புராணங்கள், கல்வெட்டுகள், இலக்கியங்கள் சிவாச்சார்யார் பாரம்பரியம் பற்றி தெரிவிக்கிறது.

"முன்னூற்று அறுபது சிவ அந்தணர்"

திருப்பாதிரிபுலியூர் கலம்பகம்

ஒரு நாளைக்கு ஒருவர் வீதம் பாதிரிப்புலியூரானை பூஜித்ததாக கூறுகிறது.

"சாத்தனூரார் சந்தை ஆயிரவர்"

திருவாவடுதுறை தேவாரம்

சாத்தனூரார் வம்ச ஆயிரவர் என கூறுகிறது.

"நாற்பெத்தெண்ணாயிரவர்" என வழுவூர் புராணம் தாருகாவன மகரிஷிகள் பரம்பரையினர் திருவானைக்கா, வழுவூர், மதுரை, பெருஞ்சேரி ஆகிய தலங்கள் பூஜித்தனர்.

"நாற்பத்தெண்ணாயிரவர் பட்டரும்"

என்பது தக்கயாகபரணியில் (6) கோயில் பாடியது. 219

"மண்ணாவுடம்பு தங்குருதி
மண்ணக் கழுவின் மிசைவைத்தார்
எண்ணாயிரவர்க் கெளியரோ
நாற்பத்தெண்ணாயிரவரோ"

இந்தபாடலுக்கு மகாமகோபாத்யாய உ.வே.சாமிநாத அய்யர் தரும் விளக்கம்.

இங்கு கூறப்படும் 48 ஆயிரவர் எனும் சிவகணத்தார் சிவபிராம்மணர்கள் பண்டை காலங்களில் சிவகைங்கர்யம் செய்து கொண்டு விளங்கினார்கள் என்பது திருவாலவாய் புராணம் கடவுள் வாழ்த்து பாடல் 22-ல் தெளிவாகிறது.

"பலந்தரு தவத்தான் மிக்கோர் பத்தி வைராக்கியத்தோர்
புலங்களுங் கடந்தோரீசன்றனையலாற் போற்றவில் போர்
ஒலந்திகழ் சரியை யாதி நான்கு மார்க்கத் தோர் நிற்றால்
இலங்கிய நாற்பத்தெண்ணாயிரவர் தாள் போற்றி"

என்பதாகும்

திருவானைக்கா உலா - 159ல்

"எதிரின்றிய நாற்பத்தெண்ணாயிரரும்"

திருப்பூவண நாதருலா - 90ல்

"எப்பற்றுந்தீர் நாற்பத்தெண்ணாயிர வாரனும்
ஒப்பற்ற வேடத்துயர் தோரும்"

ஸ்ரீ ஏகாம்பரநாதர் உலா - 69ல்

"எண்ணு மொரு நாற்பத்தெண்ணாயிரவர்
புண்ணியவே டப்புனிதரும்" என உள்ளது.

4. கீரனூர் சாக்கிய கூத்து கல்வெட்டு 253/1978 கீரனூர் 1022 A.D.

"சிவ பிராம்மணான்னாற்பத் தெண்ணாயிர பிடாரற்கு"

கல்வெட்டு 254/1978 ராஜேந்திரா- I 992 AD

"மடமுடைய ஆதித்தன்னி மள ஸிவனான
நாற்பத்தெண்ணாயிர விடா ருள்ளிட்ட தேவகன்மி
கள்ளிருந்து" எனவும்

சிவாச்சாரியார்கள் தொகுதியாகவும் கோத்ர பிரிவினர்களாகவும் என உள்ளது.

5. அச்சுதமங்கலம் கல்வெட்டு 273/1978/ 12-13 நூற்றாண்டு

"சோமநாத சருப்பேதி மங்கலத்து தச்சரில்
ஐந்நூற்றுவ பெருந்தச்சனும்"

என ஐந்நூற்றுவர் என்ற தொகுதியும்

6. திருப்புகலூர் கல்வெட்டு, 316/1978, 11,12ம் நூற்றாண்டு

"பாரத்துவாசி ஸ்ரீ புகலூர் தேவ
நாற்பத்தெண்ணாயிரபட்டரும்
உள்ளிட்ட சிவ ப்ராம்மண ரோம்"

என நாற்பத்தெண்ணாயிரவர் திருப்புகலார் கோயில் பாரத்வாஜ கோத்திரவர் பூஜித்ததாகவும் உள்ளது.

7. திருச்சேறை கல்வெட்டு, 110/1949, 1123 AD விக்ரமசோழன்

"ஸ்ரீ சார பரமேஸ்வரர்
இந்நாயனார் நாற்பத்தெண்ணாயிரவர் மடப்புறா இறையிலி"

என நாற்பத்தெண்ணாயிரவர் பூஜித்தது கூறப்படுகிறது

மேலும் திருப்புகலூர் கல்வெட்டில்

முதலாம் குலோத்துங்கன்-1 11-12ம் நூற்றாண்டு 318 / 1978

"சிவ பிராம்மணந் தேவ நா ந நூற்றெண்ம பட்டனும்
தேவர் சைவாசாரியக் காச்ய வந்..........
பட்ட நாந தன்ம சிவாச்சார்யா"

என சிவாச்சாரியார் - நூற்று என்பர்- காச்யப கோத்திர சிவ பிராம்மணர் என்றும், 323/1978 ல்

"ராஜாக்கள் தம்பிரான் சைவாச்சாரியார்
வைத்ய சிகாமணி ப்ரம்மராயனும் எனவும் 328/1978 ல்
மஹா ஸபையோம் ஸபை உள்ளிருந்து பணித்தார்
இரத கரைசிர் ஸஹஸ்ரநார் தொண்டைபுறத்து
ஸ்ரீ கிருஷ்ண பூதேவி ஸஹஸ்நார் ஸம்கர வெண்காடு
தேவ ஸகஸ்கரநார் கௌசியந் திருக்கண்ணபுரமுடையாள்
திரிபூதி ஸகஸ்ரநார்" எனவும் இருப்பதால்

ஆயிரவர் குழுமர் - தொண்டைபுரம், வெண்காடு திருக்கரைபுரம் ஆகிய ஊர்களில் இருந்து சிவாச்சாரிய குழுக்கள் ஆயிரவர் என அழைக்கப்பட்டனர்.

8. திருவிழிமிழலல கல்வெட்டு 511/1977 விக்ரம சோழன் 1120 AD

"திருவீழிமிழலை உடையவர் கோயில் சிவபிராம்மணர்கள்" திருவீழிமிழலை சிவன் கோயில் சிவாச்சாரியார் பற்றி கூறுகிறது.

"ஆதித்யன் சூர்யன் நின்றான்
இக்குடி அடங்கல் விழிகொண்டாள்
இக்குடி மிழலைநாயகன் திருவேகம்பன்
இக்குடி வெண்காடன் தேவநாயகன்
வாச்சியன் நல்ல கூகூர் சோழபாண்டியன்
பாரதாயன் ஸ்ரீ மருதுபண்டிதன்
காசியபன் திருநல்லாத்து.... திருச்சிற்றம்பலமுடையான்
காசியபன் ஜோதிகல்யாண நாயகர்"
"அஞ்ஞாறு பட்டரும்"

"குடி" என்பது கோயில் திருவிழிமிழலைநாயகன், காஞ்சிபுரம் திருவெண்காடு, நாச்சியார் கோயில் நல்ல கூகூர் ஆகிய தலத்து காச்யப கோத்திர ஜோதி கல்யாணம் என்பவர் நாயகர் பட்டத்துடன் இருந்து பூசித்தார்.

ஐநூறு குழு பட்டர் - 519/1977 - ராஜேந்திரன்-II 1054 AD இதில்

"சிவப்பிராம்மண ராமில் ஆத்திரையந்
தேவந் கங்க நாந அஞ்ஞாறு வந்தேவன்"

சிவாச்சார்யார்கள் ஆத்திரேய கோத்திரத்தவர் ஐந்நூறு குழுமத்தினர் தேவர் என்பது அடைமொழியாம்.

543/1977 இதில்

"திருவிழிமிழலை உடையார் முப்பது வட்டது
சிவப்பிராம்மண ரோம்"

சிவாச்சார்ய குழுமம் முப்பது வட்டத்தினர் பூஜித்தனர் 536/1977-ல்

"எண்ணரிய திருநாம முடையான் அஞ்ஞாறு பட்டரும்
சிவப்பிராம்மணன்"

பல பெயர் கொண்ட ஐநூறு குழுமத்தினர் சிவாச்சாரியர் எனவும், 536/1997-ல்

"செல்வன் மூவாயிரபட்டன்"
மூவாயிரத்தார் எனவும்,

566/1977-ல்

"சிவப்பிராம்மணன் ஆத்திரயன் ஆனி பெரியான்
நாற்பத்தெண் ணாயிரபட்டன்"

சிவாச்சாரியார் ஆத்திரேய கோத்திர நாற்பத்து எண்ணாயிரவர் எனவும் சிவாச்சாரியார்கள் பட்டர்கள் என்றும் மதுரை திருநெல்வேலி பக்கங்களில் பட்டர் என அழைப்பதுண்டு பராபட்டராகர், அபிராமி பட்டர் எனவும் அழைப்பதுண்டு பட்டர்கள் பூஜித்த விபரத்தினை கீழ்காணும் கல்வெட்டு கூறுகிறது.

578/1977 - குலோத்துங்கன் III 1215 AD -ல்

"திருவீழி மிழலை வாச்சியனை திருக்காராயில்
சிவசரண சேகரன் மகன் சிவசரண சேகரபட்டன்
திருவீழி மிழலை வாச்சியனை சிவசரண சேகரன்
தேவர்கள் தேவபட்டன்"

"திருவீழி மிழலை வாச்சியன் திருஞான சம்பந்தபட்டன்
கவுசிகன் ஸ்ரீ பதஞ்சலி ஆளுடைய பட்டன்"

584/1977 "ஆழித்தேர் வித்தகபட்டன்"

588/1977 "உலேச்யன் ஆழித்தேர் வித்தகபட்டன்"

திருக்காரவாசல் சிவசரண சேகரபட்டர் மகன் சிவசரண சேகரன்பட்டன் வழிபாடு செய்தவிபரம் தெரிவிக்கிறது.

588/1977 - ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் 1292 AD ல்

"திருவீழி மிழலை உடைய நாயனார் திருப்பதியில்
நாலுமடத்துக்கும் கும்பிட்டு இருக்கும் திருமேனிகளுக்கும்
திருபாட்டோதும் திருமேனிகளுக்கும் திருத்தலதொண்டு
செய்யும் திருமேனிகளுக்கு நாற்பத்தெண்ணாயிரம்
பிள்ளைக்கும்
மடம் இருபத்தொன்றுக்கும் உடையாரை பூஜிக்கும்
பண்டிதர்க்கும் மனை இராவளர் மடம் இருபத்தி மூன்றுக்கும்
அகளங்க நாடாழ்வார் வம்சம் சந்திராதித்ய வரை"

ஆலய பணி புரிவோர், திருமுறை இசைப்பவர், தொண்டு புரிபவர் சிவாச்சார்யார் (உடையவரை பூசிப்பவர்) நாடன்வார் வம்சம் எழுதி வைத்த கல்வெட்டு சாஸனம் என கூறுகிறது.

மகாமகோபாத்யாய உ.வே.சாமிநாத அய்யர் அவர்கள் ஆராய்ந்து தனது கைப்பிரதியில் 2 பக்கம் 37ல் ஆறுவட்டத்தார் - திருக்கழுகுன்றத்து சிவாச்சாரியார் என்றும் ருத்ரகன்ய கோயில் உரிமை பெற்றவர் என கூறுகிறது.

திருப்பரங்குன்றம் பூசிப்பவர் காசியிலிருந்து ஐந்நூறு சிவப்பிராம்மணர்கள் சிபி மன்னனால் வருவிக்கப்பட்டனர் என்றும், திருவீழி மிழலை கோயில் 500 பேருக்கு சிபி மன்னனால் வீடுகட்டி தரப்பட்டதாகவும், திட்டைகுடி - நானுற்றார் கங்காநதி தீரத்திலிருந்து வந்தார் என்றும், ஆக்கூர் - ஆயிரவர், கடந்தை/பெண்ணாடம் - பன்னீராயிரவர், திருநின்றவூர்-முவாயிரவர், வீழிமிழலை-ஐந்நூற்றுவர், சீர்காழி-நானூற்றுவர், நாங்கூர்-நாலாயிரவர், சாத்தனூர் சந்தை-ஆயிரவர், திருவாரூர்-ஐந்நூற்றுவர், திருப்பெருந்துறை-முன்னூற்றுவர், பிள்ளைகளுக்கு வேதம் சொல்லிக்கொடுக்க ஸ்ரீ ஆத்மநாதர் விருத்த பிராம்மணராக வந்தார் எனக் கூறுகிறது. (மகா.உ.வே.சுவாமிநாத அய்யர் கைப்பிரதி 51-ம் பக்கம் கூறுகிறது)

9. திருத்துறைப் பூண்டி கல்வெட்டுகள்

"இவை ஐந்நூற்றுவ பிரியன் எழுத்து"

163/17 - பஞ்சநதிகுளம் ஸ்ரீ தனுஷ் கோடிஸ்வரர் கோயில்

13ஆம் நூற்றாண்டு 500 குழுக்கள் எழுத்து என கூறுகிறது.

"இன்னாயநார் கோயிலில் சிவராம்மணர்கள்
முப்பது வட்டத்தார்" - கோடியக்காடு

52/12 அழகர் கோயில் 13-ஆம் நூற்றாண்டு அழகர்கோயில் முப்பதாவது வட்டத்தார் சிவாச்சாரியார் இன்னாயநார் கோயில் பூசித்தது எனவும்

"சிற்றமுன் உடைய திருவதீஸ்வர முடைய
நாயனார் கோயில் முப்பது வட்டத்து (காணி)
உடைய சிவப்பிராம்மணர்"

கூத்தனான வண்டாழை நாட்டுபட்டர் என்றும்,

63/12 ராஜேந்திர சோழன் - 12ஆம் நூற்றாண்டு

சித்தாய் முன் ஸ்ரீ சுவர்ண ஸ்தாபனேஸ்வரர் கோயில் முப்பது வட்ட சிவாச்சாரியார் காணி உடையார் உரிமை உடையவர் என்றும்

"குலதீப மங்கலத்து திருவாதித்த ஈஸ்வர முடையர் கோயில் 30 வட்டத்து காணியுடைய சிவபிராம்மணம்" எனவும்

கீரக்களுர் ஆலய அகஸ்தீஸ்வரர் கோயில் 63/12 ராஜேந்திரன் சோழன் 12-ஆம் நூற்றாண்டு முப்பது வட்டம் உரிமையுடைய காணி

உடைய சிவாச்சாரியர்கள் திருவாதித்த ஈஸ்வரமுடையார் கோயில் உரிமை உடையவர்.

"திருவசத்தியன் பள்ளி உடையார் கோயில்
முப்பது வட்டது காணி உடையாள் சிவப்பிராம்மணராம்"

3/12, அகஸ்தியம்பள்ளி - அகஸ்தீஸ்வரர் கோயில் 12ஆம் நூற்றாண்டு ஆலய அர்ச்சகர் உரிமை முப்பது வட்ட சிவாச்சார்யார் எனவும்,

"முந்நூற்றுவ பிரியன் எழுத்து" 12ஆம் நூற்றாண்டு பஞ்சநதிகுளம், தனுஷ்கோடீஸ்வரர் கோயில் என சிவாச்சாரியார் பற்றிய சிலாசாஸனங்கள் அவர்களுக்கு அரசர் கொடுத்த காணி உரிமையும் கோயில் பூஜா உரிமையும் விளக்குகிறது.

10. திருக்கொட்டாரம் கல்வெட்டு

390/6 "நானூற்று வதி"

395/13 "முப்பது வட்டத்து சிவபிராம்மணக்
காணி உடையார் காச்யபன்...
பாரத்வாஜி சேங்காலிபுரம்" சோழேஸ்வரர்

காச்யப, பாரத்வாஜ கோத்ர - சிவாச்சார்யர்கள் காணி உடைய பூஜை உரிமை பெற்றவர்கள் எனவும்

11. கும்பகோணம் கல்வெட்டு

"பூசிக்கும் நம்பிமார் சிவபிராம்மணர்
கூத்தராய் வீதி போந்தார்"

குடந்தை நாகேஸ்வரர் கோயில் 11/1977 - குலோத்துங்கன்-III 1213 AD

பூஜை செய்யும் சிவாச்சாரியார்
நடராஜ உலாவில் வீதி வந்தனர் என்ற செய்தியும்

"விஷ்ணு வர்த்தன புரத்து நாகீஸ்வரமுடைய மஹாதேவர்
கோயிலியே பூஜிக்கும் நம்பிமார் சிவப்ராம்மணர்" என்றும்,

542/1977 விக்ரம சோழன் 1124 AD

நாகேஸ்வரர் ஆலய அர்ச்சகர் சிவாச்சார்யர்களே எனவும்,

"தண்புனற் பேரியாற்றங்கரை மண்ணக்க மாநகர்" என்றும்

528/1977 திருவீழிமிழலை - 1049 ராஜாதிராஜன்-I எனவும் கூறப்படுகிறது.

12. நீடூர் கல்வெட்டு

"புராணநூல் விரிக்கும் புரிசை மாளிகை
சிவதர்மம் வாசிப்பான் ஒருவனுக்கு
நெல் அறுபதிங் கலத்துக்கு விட்டநிலம்"

சிவபுராணம், சிவதர்மம் வடிக்கும் சிவாச்சார்யார்களுக்கு அறுபது கலநெல் அளிக்க விடப்பட்ட நிலமான்ய விபரம்

528/1977 - ராஜாதிராஜன்-I 1049 AD கல்வெட்டு கூறுகிறது.

"உடையார் ஸ்ரீ விஜய ராஜேந்திர தேவர்
அணுக்கியார் பல்லவ பட்டாலி நங்கையர்க்காய்
இரண்டு ஸந்நதியும் ஸ்ரீ பலி எழுந்தருளி பகுமளவு
திருப்பதியாம் விண்ணப்பம் செய்ய கடவார்களாமே" என்றும்

509/1977 - ராஜாதிராஜன் 1054

ஸ்ரீ பலி இரண்டு ஸந்நதிகளிலும் செய்யும் பொருட்டு எழுதிய சாஸனம்

திருநாகை காரோகணம் (நாகப்பட்டினம்) சுந்தரர் தேவாரம்

"தமக்கு வேண்டிய பட்டாடைகளைக்
கோயில் பண்டாரத்திலிருந்து கொடுத்தருள வேண்டுதல்"

இராம நந்தீஸ்வரம் - 504/1-3-(இராமநாதேஸ்வரர் கோயில்) 1232 AD திரிபுவன சக்ரவர்த்திகள் எழுதிவைத்த கல்வெட்டு சாஸனம் பின் வருமாறு

ஸ்ரீ ராஜ ராஜதேவர் 15வதின் ராஜாதிராஜ வளநாட்டு
தனியூர் பெரும்பற்ற புலியூர் ஸ்ரீ ராஜராஜ தேவரின்
15வதின் எதிராண்டு ஆளுடைய நாயனார் கோயில்
காலும் பிடாரும் உள்ளிட்ட நாற்பத்தெண்ணாயிர
மஹேஸ்வரரும் - நாலுமடத்து மஹேஸ்வரரும்
திருவுணழிகை உள்ளிட்ட திருவகம் படியாகும் தேவர்கள்
தேவன் திருமண்டபத்து நிறைவற நிறைஞ்சு
குறைவர கூடி இருக்க செய மாணிக்க வளநாட்டு
மருகல் நாட்டு பிரம்ம தேவனும் திருக்கண்ணபுரத்து
பௌராணிய தேவராய் கண்டு எழுந்தருளிவித்த
உடையார் இராமநந்தீசுவர முடைய பெருமாள்
இரண்டு பெரிய திருநாள் எழுந்தருளியவும்

-பசுபதி தேவன் எழுத்து (குலோத்துங்கன்)

இராமநந்தீஸ்வர முடைய ஆலய திருநாள் உற்சவ வழிபாடு உரிய பூஜை உபசாரங்கள் குறிக்கின்றன.

திரிபுவன சக்கரவர்த்திகள் இராமநந்தீஸ்வரஆலய திருமந்திர ஓலையில் மற்ற அதிகாரிகளுடன் கையெழுத்திட்ட சிவாச்சாரியார் சாஸனம் பின் வருமாறு

"இக்கோயில் சிவப்பிராம்மண காணியாகிய நான்
முப்பதாவது வட்டத்தையும் பாரத்வாஜி திருநட்டமாடி
ஆண்டான் பாட்டனான திருமன்னு சோழ பிரம்மராயனுக்கும்
அவன் வர்க்கத்தாருக்கம் கொடுக்க வேண்டும்
என்று மழவராயன் என்பார். தேவகன் மிகன்
ஸ்ரீ மகேஸ்வர கண்காணிகள் ஸ்ரீ காரியம் செய்வார்கள்
ஆகியோரிடம் விண்ணப்பம் செய்தபடி உரிமை
வழங்கப்பட்டது"

13. குர்கோடு கல்வெட்டு

முதலாம் ராசமல்லன் கி.பி. 1173

ஒரு தானசாஸனம் பாலசிவாச்சாரியாருக்கு கொடுத்ததாக கூறுகிறது.

"லகுலீஸ்வராகமம் மற்றும் காள முகதரிசனத்தில்
சிறந்தவரான ஸ்தானாச்சாரியார் (ஸ்தானீகர்)
பாலசிவாச்சாரியார் வசம் கொடுத்த தான சாஸனம்"

கி.பி. 1181ல்

இதேகோயில் ஸ்வயம்பு தேவருக்காக ஸ்தானத் தாரண பாலிசிவ தேவர் வசம் தரபப்பட்ட தானம் E.I. XV பக்கம் 277

"ஸ்ரீ ஸ்வயம்பு தேவர் அங்க போகாங்க ரங்க
போக நைவேத்ய ஜீர்ணோத்தாரண சைத்ர
பவித்ர ஸ்வாத்யாய - வைசேஷிக வியாக்யான
கண்டிக சிவதர்ம புராணபடன"

சுவாமியின் நித்ய நைமித்திக பூஜா ஆராதனை மற்றும் கும்பாபிஷேகங்களை நடத்தி உத்ஸவம் பவித்ரோத்ஸவ சிவதர்மம் - புராணம் - படிக்கவும். மான்யம் அளித்த விபரமுள்ளது. இதிலிருந்து சிவதர்மம் வாசிப்பது என்பது ஓர் மரபு என்கிறது திருவீழிமிழலைக் கல்வெட்டு

"சிவதர்மம் வாசிப்பார் ஒருவருக்கு அறுபதிந்
கலத்துக்கு நெல் விட்ட நிலம்" என உள்ளது.

நந்தி சனத்குமாரருக்கு உரைத்தது சிவதர்மம்

"வடமொழியாஞ் சிவதரும வண்பெயராகமந்திலூரிய
பொருள் செந்தமிழாற் தொடுத்த வுடை வகுத்தே"

"உலகுளோ ரறிந்துவப்ப உரைத்திடென்று முன்னை
யிருநிலமேன் மெய்கண்டான் டென் பனையூர் வாழு
மெழில் ஞானப்பிரகாசனெனு முருவா வந்து
புரையறவே யருள் செய்ய வரருளின் படியே
புல்லறிவினாலொரு நூல் புகன்றிடுவன் யானே"

என சிவதருமத்தை வடமொழியில் நந்தி சனத்குமாரருக்கு உரைத்து. மெய்கண்டான் ஞானப்பிரகாச உருவாக வந்து உரைத்ததாக கூறுகிறது.

டேவிட் என்.லார்ஸன் என்பவர் தன் புத்தகத்தில் சிவதர்ம புராணத்தை சரியாக அடையாளம் காட்ட இயலவில்லை என்கிறார்.

பண்டிதர் உலகநாதம் பிள்ளை தஞ்சை சரஸ்வதி மஹால் தமிழ் சுவடிகள் பதிப்பில் பக்கம் 433ல் "சிவதர்மம் இது வடமொழி" சிவதருமோத்திரத்தின் மொழிபெயர்ப்பு என்கிறார்.

திருவொற்றியூர் புராணத்தில் சிவதருமத்தைப் பற்றியும் குடந்தை நாகேஸ்வரர் கோயில் புராணத்தில் பாரதம், ராமாயணம், சிவதர்மம், திருஞானம், சோமசித்தாந்தம் முதலியன படிக்கப்பட்டன என வருகிறது.

ஈசான குரு பத்ததியில் சிவதர்மஸ்லோகங்கள் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. இந்த சிவதர்மம் சிவாச்சாரியாரால் படிக்கப்பட்டு வந்துள்ளது. ஆலயத்தில் பக்தர்கள் அதனை கேட்டதாகவும் கூறுகிறது.

ஆதி சைவ மரபினர் சிறப்பு

ஒரு ஆலயத்தின் காப்பு செய்யுளில் சிவாச்சாரியாருக்கு நமஸ்காரம் என கூறி துவங்குவர்.

(உ.ம்) 1). திருநாகை புராணம் திருநகர சிறப்பு பக்கம் 94

2). திருஆலவாய் புராணம் கடவுள் வாழ்த்து பாடல் 22

சிலப்பதிகாரத்தில் "மாடலன் மறையவன்" என வருகிறது. இதனை

திருவிடைவாயில் கல்வெட்டில் கி.பி.1022 "பாரத்வாஜி மாடலன் உத்தமபட்டன் சிவப்பிராம்மணன்" என வருகிறது.

சிவாச்சாரியார்கள் கோத்ரம் மற்றும் பூஜை முறைகள் காப்பியங்களிலும், கல்வெட்டுகளிலும் இடம் பெற்றுள்ளது.

திரிபுவன வீரத்தேவன் மூன்றாம் குலோத்துங்கன் இவர்காலத்தில் ஸ்ரீ கண்டசம்புவின் குமாரர் ஈஸ்வரசம்பு, இவர் வித்வான்களில் சிறந்தவர், 18 புராணங்கள், உபநிஷதங்கள், சிவாகமங்களில், தெள்ள தெளிந்தவர், சைவ தரிசனத்தைக்கண்டவர் "சித்தாந்த ரத்னாகரம்" என்னும் நூலாசிரியர் இவரைக் கொண்டு அம்மையப்பராய் விளங்கும் பார்வதி பரமேஸ்வரருக்கு கும்பாபிஷேகம் செய்வித்தார் (பாண்டியர்) பாண்டியன் எதிரி குலோத்துங்க சோழன் எனக் கல்வெட்டு கூறுகிறது.

விஜயநகர பேரரசு வாரிசுரிமை போரில் சமரசம் செய்து அரியணை ஏற்றியமைக்காக தஷிண தேச பிரதிநிதியாக காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் ஆலய சிவாச்சாரியார் சிவஸ்ரீ செல்லப்ப சிவாச்சாரியாரை நியமித்தார். சாளுவ, நாயஹர், எனபட்டம் வழங்கியதாக வருகிறது. .அன்னாரின் பரம்பரையில் தற்போது காஞ்சிபுரம் சாளுவ, சிவஸ்ரீ க. ராஜப்பா குருக்கள் (நாயஹர்) இருக்கிறார். என்பதும் வரலாற்று அடிச்சுவட்டில் தெரியவந்துள்ளது.

பலம் கொண்ட ஈழப்படையை சிவாகம வேள்வி பூஜையால் தோற்கடித்த கல்வெட்டு கூறும் வரலாற்றினை காண்போம்.

14. ஆர்ப்பாக்கம் கல்வெட்டு

தமிழ்நாட்டில் சோழர் ஆட்சி காலத்தில் பலமிக்க சிங்களநாட்டு படை, இலங்கையிலிருந்து இராமேஸ்வரம் வழியாக ஊடுருவி சிவாலயங்களை அழித்து, சோழநாட்டை முற்றுகை இட்டனர். சோழமன்னன் தனது ராஜகுருவான சுவாமிதேவ சிவாச்சாரியாரிடம் இதை பற்றி தெரிவித்தபோது அவர் ஆர்ப்பாக்கம் என்னுமிடத்தில் அகோர பூஜை செய்தார். இதன் விளைவாக ஒரு காரணமுமின்றி சிங்களப்படை பல பிணிகளுடன் தமிழ்நாட்டிலிருந்து வெளியேறி இலங்கை சென்றுவிட்டது. இதற்கு நன்றிக் கடனாக சோழமன்னன் இவ்விபரங்களை சிலாசாஸனமாக வைத்து தக்கமான்யம் அளித்து போற்றினான்.

15. திருக்கடையூர் கல்வெட்டு

ராஜகுருவான சுவாமிதேவர் சிதம்பரத்தில் சரஸ்வதி பண்டாரம் என்ற நூலகம் நிறுவினார்.

திருக்கடையூரில் சோழமன்னனால் புதிதாக அர்ச்சகர்களை நியமனம் செய்ய உத்தரவிட்டார். அந்த உத்தரவை ரத்து செய்து பரம்பரை பூஜை செய்யும் உரிமையை சிவாச்சாரியாருக்கு பூஜை செய்ய வழிவகுத்தவர் இந்த ராஜகுரு சுவாமி தேவ சிவாச்சாரியார்.

16. திருக்களித்திட்டை கல்வெட்டு

ஸ்ரீ வேதபுரீஸ்ரார் கோயில் ராஜேந்திரன் சோழன்

"இப்படி அறிவேந் இவூர் சிவ பிராம்மணர்
பாரத்வாஜன் ஐயநட ஸுர்ய நேத்...."

என சிவாச்சாரியாரை பற்றி கூறுகிறது.

17. கஞ்சனூர் கல்வெட்டு

92/1979-விக்ரமசோழன் 1121 AD

"எங்களூர் எல்லையில் குலோத்துங்க சோழன் பெருவழக்கு
ஸமீபமாக ஐஞ்ஞூற்றெண்மர் எனும் பேரால் இவர்
செய்வித்த மடத்துக்கும்"

என சிலாசாஸனம் சிவாச்சாரியாரை கூறுகிறது.

93/1979 - 11-ஆம் நூற்றாண்டு
"காணியுடைய சிவ பிராம்மண ரோம்"

95/1979
"காலாபா கோத்திரத்து போதாயன சூத்திரத்து
துகிலிஅகரம் சேலூர் புஷ்பவன குருக்கள்"
கிருஷ்ண தேவராயர் 1525

என சிவாச்சாரியார் சாஸனங்கள் கல்வெட்டுக்களால் அறிகிறோம்.

மூன்றாம் ராஜராஜன் காலம் பிறவி மருந்தீசன் திருச்சிற்றம்பல முடையநாயனார் என்னும் சிவாச்சாரியாருக்கு குகை (மடம்) ஒன்று கட்டப்பட்டது. இங்கு வந்து அவர் மக்களின் விருப்பப்படி தங்கினார். மடத்தை காணவருவோருக்கு உணவளிக்கப்பட்டது. பின் சமயக்கலவரத்தால், சொத்துக்கள் பறிபோயின. பின்னர் ஸ்ரீமருததேவர் சீர் செய்தார், சோமதேவர், திருமாளிகை தேவர், சுவாமிதேவர் இவர்கள் யாவரும் சிவாச்சாரிய மரபினரே.

18. இந்தோனேஷிய கல்வெட்டு 968 கி.பி.


"சிவ சம்ஹிதை பரமேஸ்வர தந்திர ஆகமப்படி
சிவாச்சாரியார் கட்டிய கோயில் பற்றிய விபரம் உள்ளது"

19. கல்வெட்டுக்களால் அறியும் உண்மை

தொண்டை நாடு, சோழநாடு, பாண்டியநாடு, முழுவதும் உள்ள பல திருத்தலங்களில் கல்வெட்டுகளில் அந்தந்த பிரதேசங்களில் விளங்கிய சிவாச்சாரியார்களை பற்றி செய்திகள் உள்ளன.

காமிகாகமத்தில் ஸேனாமுகம் பற்றிய ஸ்லோகம் வருகிறது. அதில் கிராம லக்ஷணம் என்பது அரசனுடன் அனைத்து ஜாதி மக்களும் சேர்ந்து இருப்பது ஸேனாமுகம் என்று உணர்த்துகிறது.

பண்டைக்காலம் தொட்டு ஆகம வழிபாடும், சிவாச்சாரிய நெறிமுறைகளும், ஆலயதர்மங்களும் விளங்கி வருவது வரலாற்று உண்மையாகும்.



தொல்பொருள் ஆராய்ச்சியில் ஆதி சைவர்

தொல்பொருள் ஆய்வுத்துறை நிபுணர் டாக்டர் திரு. நாகசாமி அவர்கள் சிவாச்சாரியார்களின் வரலாறு குறித்து உரிய ஆதாரங்களுடன் அரிய ஒருகட்டுரையை தினமலர் தினசரிப்பத்திரிக்கையில் 17-5-1998 தேதி இதழில் எழுதினார். அந்தக் கட்டுரை கீழே தரப்படுகிறது.

அந்தணராகிய சிவாச்சாரியார்களின் ஈடு இணையற்ற பெரும் சிறப்பை இந்தக் கட்டுரை ஒருவாறு விவரிக்கிறது.

வறுமை வாட்டினாலும் தெய்வத்தை மறக்காத குருக்கள்

நம் கிராமப்புறங்களுக்குச் சென்று குரு•கள் ஐயா எங்கிருக்கிறார்? என்று கேட்டால், அவ்வூரில் பூஜை செய்கிற சிவாச்சாரியாரைக் காட்டுவார்கள். குருக்கள் என்றால் பொதுவாக சிவாச்சாரியாரைக் குறிக்கும் அவர்களுக்கு ஏன் குருக்கள் என்று பெயர்வந்தது? என்று பார்ப்பதற்கு முன்பு ஒரு செய்தி.

ஒரு காலத்தில் இவர்கள் இந்நாட்டையே ஆண்டவர்களாக திகழந்திருக்கின்றனர். அதுவும் சோழப்பேரரசர்கள் ஆண்டபோது இவர்கள் ஆணைப்படி ஆட்சியே நடந்து இருக்கிறது. வியப்புதரும் நிகழ்ச்சி கி.பி.1172ல் இரண்டாம் ராஜாதிராஜன் என்பவன் ஆண்டபோது நடந்தது.

இலங்கை அரசன் தமிழகத்தின் மீது படையெடுத்தான். அவனது படைத்தலைவன் ஜயத்ரத தண்டநாயகன் அவன் தமிழகத்தில் வந்து இறங்கி மதுரை பாண்டிய மன்னன் குலசேகரபாண்டியனைத் தோற்கடித்து, சோழநாட்டில் நுழைந்தான். சோழநாட்டு மக்கள் பீதியுற்றுக் கலங்கினர். போர்கடுமையாக இருந்ததால் சோழர் படை தோற்றுவிடுமோ? என்ற பயம் கவ்விக்கொண்டது.

அப்பொழுது காஞ்சிபுரத்துக்கருகில் சோழனுக்கு கீழ்ப்படிந்த சோழசம்புவராயன் என்பவன் அங்கிருந்த ராஜகுருவான சுவாமித்தேவர் என்பவரை அணுகி சோழநாட்டுக்கு ஏற்பட்டுள்ள அபாயத்தை கூறினான்.

சுவாமித்தேவர் ஏதாவது ஜபம், ஹோமம், அர்ச்சனை செய்து சோழநாட்டைக் காக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டான்.

அவரும் நானும் இலங்கைப் படையெடுப்பை பற்றிக் கேள்விப் பட்டுள்ளேன். அவர்கள் ராமேஸ்வரத்துக்குள் புகுந்து கோவில் சொத்தையெல்லாம் சூறையாடி, பூஜைகளையும் நிறுத்தி, சிவத் துரோஹம் செய்தனர். நான் அவர்கள் அழிய 48 நாட்கள் அகோரபூஜை இப்பொழுதே மேற்கொள்கிறேன். என்று கூறி அகோரபூஜை, ஒரு மண்டலம் மேற்கொண்டார்.

இப்பூஜை முடிவதற்குள் சோழ சேனாதிபதி பல்லவரா யரிடமிருந்து செய்தி வந்தது. இலங்கைப் படை முறியடிக்கப்பட்டுவிட்டது. ஐயத்ரத தண்டநாயகன் மற்ற சேனைத் தலைவர்கள் எல்லோரும் போரில் அழிக்கப்பட்டனர். இலங்கைப்படை தமிழகத்தை விட்டுச் சிதறி ஓடிவிட்டது என்று வந்த செய்தியோடு சம்புவராயர் சுவாமித்தேவரிடம் ஓடிவந்தார். அவருக்கு ஆர்ப்பாக்கம் என்ற ஊரை நன்றிப் பெருக்கோடு கொடுத்தான் அதை அவர் அவ்வூர் கோவில் வழிப்பாட்டுக்காக வைத்தார் என்று அவ்வூரில் உள்ள கல்வெட்டுக் கூறுகிறது. இது உண்மையில் நடைபெற்ற நிகழ்ச்சி.

இந்த சுவாமித்தேவர் என்பவர் வங்காள தேசத்திலிருந்து வந்தவர். உமாபதி சிவாச்சாரியார் என்பது இவர் இயற்பெயர். இவர் தமிழகத்தில் தங்கி ராஜகுருவாகி சோழநாட்டையே பெரும் ஆபத்திலிருந்து காப்பாற்றியிருக்கிறார். இவர்கள் போன்ற சிவாச்சாரியார்களைப் பற்றி பல செய்திகள் வரலாற்றில் கிடைக்கின்றன. சிவாச்சாரியார்களின் தோற்றத்தைப்பற்றி பல ஆகமங்கள் விளக்குகின்றன.

பரமனாகிய சிவபெருமானே தோற்றுவித்ததுதான் சைவம் சைவமார்க்கத்தில் ஒருவன் தாமே சிவபூஜை செய்வதை ஆத்மார்த்த பூஜை என்று சொல்லுவார்கள். கோவில்களில் செய்யப்படும் பூஜை, பிறருக்காக செய்யப்படுவது. இதை பரார்த்த பூஜை என்று சொல்லுவார்கள். எந்த பூஜையாக இருந்தாலும் தீட்சை பெற்றவர்கள் தாம் சிவபூஜை செய்ய முடியும்.

சிவதீட்சை என்பது குறிப்பிட்ட ஒழுக்கங்கள், கட்டுப்பாடுகள், கல்வி, தகுதி, முதலிய பெற்று சிவபூஜை மரபுகளை அறிந்து அதன்படி பூஜை செய்ய அதிகாரம் பெற்று தெய்வத்தை வழிபடும்போது தெய்வநிலைக்கு (பரிசுத்தமான நிலைக்குத்) தம்மை உயர்த்திக் கொண்டுதான் செய்ய வேண்டும். அப்போது தான் தெய்வம் வெளிப்படும் என்பது நம்பிக்கை.

தாய் வயிற்றில் பிறப்பது ஒரு பிறப்பு. தெய்வ நிலைக்கு நம்மை மாற்றிக் கொள்வது இரண்டாவது பிறப்பு. இந்த இரண்டாவது பிறப்புதான் தீட்சை. இவ்வாறு தீட்சை பெற்றவன் கோயில்களில் வழிபாடுசெய்யத் தகுந்தவனாகிறான்.

சிவபெருமான் சைவத்தை தோற்றுவித்தார். அவர் சிவ முனிவர்களுக்கு சிவதீட்சை செய்து வைத்தார். கௌசிகர், காச்யபர் பாரத்வாஜர், கௌதமர், அகஸ்தியர், என்ற அந்த ஐந்து முனிவர்களும் சிவபெருமானிடத்திலேயே சிவதீட்சை பெற்றதால் சிவபெருமான் அவர்களிடத்திலேயே உறைகிறார் என்பது கருத்து.

அம்முனிவர்கள் வழியில் பிறந்தவர்கள்தான் சிவாச்சாரியார்கள் என்பதும் ஆகமங்கள் கூறும் மரபு, அதனால் சிவாச்சாரியார்களை ஆதிசைவர் என்று கூறுவர். இவர்கள் தாம் கோவில்களில் வழிபாடு செய்யும் யோக்கியதை பெற்றவர்கள்.

இவர்கள் சாதி வேறுபாடின்றி அனைத்து சாதியினர்க்கும் சிவதீட்சை செய்து வைக்கும் தகுதி பெற்றிருந்தனர். செய்தும் வைத்துள்ளனர்.

இவர்கள் நான்கு வேதங்களையும் படித்தவர்களாகவும் பிறரிடத்தில் தயையுள்ளவர்களாயும் திகழ்ந்தனர், என்றும் தவவலிமை மிக்கவர்களாகவும் விளங்கினர் என்றும், வரலாற்றிலிருந்து அறிகிறோம். அதனால் மக்கள் இவர்களிடத்தில் மரியாதையுடனும் அன்புடனும் பழகினர். அக்காலத்து மன்னர்கள் எல்லாம் இவர்களைத் தங்கள் இராஜகுருவாக ஏற்று போற்றினர்.

முதலாம் ராஜராஜசோழனுக்கு முன்னர் சோழநாட்டில் வித்யாநந்த சிவம் என்ற ஒரு சிவாச்சாரியார் இருந்தார். அவர் சிறப்புகளைக் கேட்டு காசிதேசத்து மன்னர் அவரை தன் குருவாக ஏற்றுக்கொண்டு அங்குவரவழைத்துச் சிறப்பு செய்திருக்கிறான். அவர் சொற்படிக்கேட்டு நாட்டை ஆண்டிருக்கிறான் என வரலாற்றில் இருந்து அறிகிறோம்.

இராஜராஜசோழனும், இராஜேந்திர சோழனும் கோதாவரிக் கரையிலிருந்த சில சிவாச்சாரியார்களின் சிறப்பைக் கேட்டு அவர்களை வரவழைத்து தங்கள் குருவாக ஏற்று அவர்கள் ஆணைப்படி நடந்து இருக்கின்றனர். இந்திய நாடு முழுவதும் ஏன் ஆப்கானிஸ்தானத்திலிருந்து கடல்கடந்த நாடுகளிலும் இவர்களது சிறப்பு போற்றப்பட்டது.

திண்டிவனத்துக்கு அருகில் ஏசலாம் என்ற இடத்தில் அண்மைக்காலத்தில் கிடைத்த ஒரு செப்பேடு இராஜேந்திரசோழனின் ராஜகுருவைப்பற்றி நமக்கு பல செய்திகளைத் தருகிறது. சர்வசிவர் என்று பெயர்பெற்ற இவர் அனைத்து ஆகமங்களையும் கரைக்கண்டவர் உலக முழுவதும் ஆளுகின்ற ராஜேந்திரனுக்கே குருவென்றால் இவர் பெருமையை சொல்லவும் வேண்டுமோ?

மாற்றரசர்கள் அனைவரும் இவரைத் தலையால் வணங்குகின்றனர். அவர்களது கிரீடங்களெல்லாம், இவரது காலுக்கு மாலையாக விளங்கின. இவர் அறிஞர்க்கெல்லாம் அறிஞர். ஏழைகளுக்கு ஏராளமாக அள்ளி வழங்கியவர். இவர் சிவபெருமானே என்று ஆன்றோர் போற்றுகின்றனர்.

சோழநாட்டு மக்கள் எல்லோரும் இவரை இந்நாட்டை காக்கும் சக்தியே இவர்தாம் என்று கருதுகின்றனர் என்று இராஜேந்திரசோழனே கூறியுள்ளான். இவர் தான் "ஏசலாம்மானஸை" கட்டிவைத்தவர். தஞ்சைப் பெரிய கோவிலில் ஆச்சாரியாராக இருந்தவரும் இவரே ராஜேந்திரன் இவரைத் தன் ஞானத் தந்தையாக ஏற்றுக் கொண்டிருக்கிறான்.

அக்காலத்தில் ராஜகுருக்கள் அரசனுக்கு மந்திரித்து காப்பு அணிவிப்பார்கள். ராஜரட்சை ராஜ நீராஜனம் ராஜ்யாபிஷேகம் என்று ஆண்டுதோறும் வழிபாடு செய்து அரசனுக்கு சிறப்புச் செய்வார்கள். இவை எல்லாம் நாட்டுக்கு நலிவு ஏற்படும்போது, குழப்பம் ஏற்படும் போது, கலகம் ஏற்படும் போது காப்பாற்றுவதற்காக செய்யப்படுபவை அரசனை எப்படிப்பட்ட ஆபத்துகளிலிருந்தும் காப்பாற்றும் என்று நம்பினார். சோழச்சக்ரவர்த்திகளின் ஆணைகளுக்கும் மேற்பட்டதாக சிவாச்சாரியார் இட்ட ஆணை இருந்து விளங்கும்.

இதன்பின்னணியில் மற்றுமொரு வரலாற்றுச் செய்தியைப் பார்க்கலாம். கோவில்களில் வழிபாடு செய்யும் முறையைப் பற்றி நல்ல நூல் ஒன்றை அகோர சிவாச்சாரியார் என்பவர் எழுதியுள்ளார். அந்நூல் கி.பி.1158 இல் இரண்டாம் ராஜராஜசோழ மன்னன் காலத்தில் எழுதப்பட்டது. கடந்த 800 ஆண்டுகளுக்கும் மேலாக அந்நூலைத்தான் இன்றும் பெரும்பாலான தமிழ்க் கோயில்களில் பின்பற்றுகிறார்கள்.

அந்நூலில் பலராஜகுருக்களைப் பற்றி வரலாற்றுச் செய்திகள் உள்ளன. இருவரைப் பற்றி வரலாற்றுச் செய்திகள் சிறப்பாக உள்ளன.

கவுட தேசத்திலிருந்து (இன்றைய வங்காளம்) ஸ்ரீ கண்டசிவர் என்ற சிவாச்சாரியார் ஒருவர் சிதம்பரத்துக்கு நடராஜப்பெருமானை வழிபட வந்தார்.

அவரது கல்வி கேள்விகளைக் கேட்ட விக்ரமசோழன் அவரைத்தன் இராஜகுருவாக அமர்த்திக் கொண்டு அவர் சொற்படி நடந்துவந்தான் மேலும் ராஜகுருவானவர் ஆணைப்படி அரசன் நடந்தான் என்றும் கூறப்படுகிறது. தன் நாட்டையே அவருக்கு அர்ப்பணிப்பது மரபு இதை காப்பு, மறம் என சங்க நூல்கள் கூறுகின்றன.

ஊர்ப்புறங்கள் தோறும் சிவாச்சாரியார்கள் அனைத்து சாதியினருக்கும் சிவதீட்சை கொடுத்து தவவாழ்வு மேற்கொண்டு கோயில்களில் வழிபாடு செய்து வந்ததால்தான், அவர்களை மக்கள் அன்போடு குருக்கள் என்று அழைத்து போற்றினர்.

அரசர்களுக்கும் நாட்டிற்கும் குருக்களாக திகழ்ந்தனர். ஆதலின் எந்த கிராமத்துக்கும் சென்று குருக்கள் ஐயா எங்கே? என்றால் சிவாச்சாரியாரைக் காண்பிக்கிறார்கள், இவர்களில் 95 சதவிகிதம் இன்று வறுமைக் கோட்டுக்கு கீழ் இருந்த போதிலும், தங்கள் தெய்வத் தொண்டை விட்டுவிடவில்லை.

தஞ்சையில் சென்ற ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்ற போது இவர்கள் ஆற்றிய தொண்டைத் தமிழகம் மறந்து விடாது. யாகசாலையில் எதிர்பாராது பெரும் தீ விபத்து நேர்ந்தபோது தீ எங்கும் சூழ்ந்தது. அனைவரும் விழுந்தடித்து தமது உயிரைக் காப்பாற்ற ஓடினர். வீழ்ந்தனர் சிலர் செய்வது என்னவென்று? தெரியாது திகைத்தனர் சிலர்.

யாகசாலையில் இருநூறுக்கும் மேற்பட்ட சிவாச்சாரியார்கள் இருந்தனர். அத்துணை பேரும் தாங்கள் ஆவாஹித்து வைத்திருந்த தெய்வக் கலசங்களை எடுத்துக் கொண்டு மார்போடு மார்பாக அணைத்துக் கொண்டு கோயிலுக்குள் ஓடி அவற்றைக் காப்பாற்றினர். தங்கள் உயிரைப் பற்றி அவர்கள் நினைக்கவில்லை. தாங்கள் வழிபடும் மூர்த்தங்களைக் காப்பாற்றினர். கிராமம் கிராமமாக இருக்கும் இவர்களது குடும்பங்கள் சிறந்தால் நாடு சிறப்பாக இருக்கும் என்பது வரலாறு கூறும் நம்பிக்கை ஆகும்.

நன்றி : டாக்டர் நாகசாமி

அருந்தொண்டு ஆற்றிய தமிழக அந்தணர்கள் தொகுதி - 3

சைவ புராணங்களில் ஆதிசைவர்

உய்வுரை வேதாகமத்திற்குடன் பிறந்தாரிவர்களெனத்
தெய்வ சிவாமணியாம் பரமசிவன் பாலன்னவை செனித்த
ஐவதனத்துந் தோன்றியதுலர்களாய் விளங்காதி
சைவசிவாசாரியார் கண்மகிமைதனைச் சாற்றுதுமால்

சைவம் என்பதற்கு சிவ ஸம்பந்தமென்பது பொருளாம் எல்லாசமயங்களையும் தன்னுள் தழுவிக் கொண்டு அவைகளுக்கெல்லாம் தாய்ச்சமயமாய் விளங்குவது, சுத்தாத்துவித சித்தாந்த சைவசமயமேயாம், அச்சைவத்தைப் பற்றி நிற்போர் அநாதிசைவர், ஆதிசைவர், மஹாசைவர், அநுசைவர், அவாந்தரசைவர் பிரவரசைவர் அந்தியசைவர் என ஏழுவகைப்படுவர் இதற்கு பிரமாணம்.

ஆசௌச தீபிகை 20

அரியசதாசிவனென்போன் அநாதிசைவனவன்பால்
அவதரித்த சிவமறையோர் ஆதிசைவரிவர்பால்
உரிய சிவதீக்கை பெற்ற பூசுரர் மாசைவர்
உயர்ந்த அரசன் வணிகரனு சைவராவர்
பெரியகு வளைப்புயத்தோ னவாந்தர சைவ சீர்
பெறுசவன்னனாதியநுலோமர் பிரவரராம்
விரியவனிமிசை யொழிந்தோர் ரந்திய சைவத்தோர்
விரிந்திடுமேழ் சைவவித மிவையென நூல் விளம்பும்

கச்சியப்ப சிவாச்சாரியார் புராணம் 9

அகாரமுன்நாதி சைவ மாதிசைவத் தினோடு
மகா சைவ மனுசைவஞ்சீர் மருவாவாந்திர சைவம்பின்
தொகாத பிரவரசைவந் தொடரு மந்திய சைவம்மென்
றிகாதமெய் யிவ்வேழ் சைவத்திரண்டராஞ் சைவ மீதான்

மேற்கூறிய ஏழு சைவயினருக்குள்ளே அநாதி சைவரெனப்படும் பரமபதியாகிய ஸ்ரீ சதாசிவமூர்த்தியினது ஐந்து திருமுகங்களின்று தோற்றுவித்து தீக்ஷை செய்யபட்டவர்களே, சிவத்விஜர் குலத்தவர்களான ஆதி சைவர்கள்.

சைவ சமய நெறி 435

சிவன் முகத்திலே சனித்த விப்பிரசைவர்
இவரே யருச்சனைக் கென்றெண்.

அருணகிரி புராணம் (வலம்புரிசருக்கம்31)

அருச்சனைபுரிக விந்தவைந்திலில் கூத்து மன்பாற்
றரித்தொழு நான்குமீசன் முகத்தினுற்பவித்த சைவர்

மாயூரத்தல புராணம்

அண்ணலார் திருமுகங்களை ந்தினுந்தோற்ற முற்றார்
கண்ணலார் பொதுச் சிறப்பா முறைகளா கமங்கள் கற்றார்
நண்ணலார் பராத்தத் தோடான் மார்த்தமு நயந்தர்சிக்கும்
எண்ணலார் ஆதிசைவர்.

விநாயக புராணம்

நயந்தரு வேதமோதி நல்லவாகமங்கடேற்றிப்
புயத்தலைச் சூலம் வைத்த புனிதர் பூசனையாற்பேறு
வயத்துறு தமக்குமேனை வையகத்தெவர்க்குமாக்கும்
வியத்தகும் ஆதிசைவர்.

தணிகைப் புராணம்

அருள்வளங்கொழிக்கு மைந்தொழிலாகவடங்கிய
சிறப்போடு பூசை மருவு மெல்வகையுமாகமவழியான்
மயாறத்தெளிந்தவர் வரையாச் சுருதிகண்மிருதி
புராணமெக்கலயுந்துகளற
தெரிந்தவ ரிறைவன் - றருதிருமேனி தீண்டிடும் ஆதிசைவர்

திருநாகைக் காரோணப் புராணம்

பெருமறையுடனாக முழு துணர்ந்தார் பிறங்குமாதேவியார்பாகர்
திருமுகமோர் ஐந்தினுமினி உதித்தார் திகழுமான் மார்த்த மொன்பி
பரார்த்தம் இருதிங்களுநற்பூசனை புரிவாரினையிலாச்
சீலமிக்கமைந்தார் பொருவரும் ஆதிசைவர்கள்.

பெரிய புராணம்

எப்போதுமினிய பிரானின்னருளாலதிகரித்து
மெய்ப்போத நெறி வந்த விதிமுறைமைவழுவாமே

அப்போதைக்கப்போது மார்வமிகுமன் பினராய்
முப்போதுமர்ச்சிப்பார் முதற்சைவராமுனிவர்.

தெரிந்துணரின் முப்போதுஞ்செல்கால நிகழ்காலம்
வருங்கால மானவற்றின் வழிவழியே திருத்தொண்டின்
விரும்பிய வர்ச்சனைகள் சிவவேதியர்க்கேயுரியனவைப்
பெருந்தகையார் குலப்பெருமையாம் புகழும் பெற்றியதோ.

திருப்பெருந்துறைப்புராணம்

மறையுடனாகமமுணர்ந்த மாட்சியர்
பொறையொடான் மார்த்த பரார்த்தம் போற்றுவார்
அறைபெரும் புகழ்மிகும் ஆதிசைவர்

திருக்குடந்தைப் புராணம்

வெள்ளியங்கயிலை விமலனார் மொழிந்த வேதமாகம முழுதுணர்ந்து
தெள்ளிய சமயமுதலொரு மூன்று தீக்கையும் பெற்றபிடேகம்
நள்ளியதிறத்தான் மார்த்தமொண்பரார்த்த பூசித்திருவினையுந்
தள்ளிய பொலிவறிகளித்து வாழ் ஆதிசைவர்.

திருமயிலைப் புராணம்

ஓதிமறையொரு நான்கு மிருமூன்று மெழு நான்கு முணர்ந்தெல்லோர்க்கம்
பேதமற நிறைந்துறையுஞ் சிவனேயெம் பெருமானென்றுளத்துட் பேணி
சோதிதனைச் சின்மயனைப் பூம்பாவை யீசனெனத்து யோனம்
பொற்பாத மலரர்ச்சிக்குஞ் சிவமறையோர்

இளைசைப் புராணம்

வேதமுற் கலைகளோடு விரிந்திடு சிவாகமங்கள்
ஓதியே யுண்மை தேறியுயர் கயிலாய நாதர்
சோதிதன்மேனி தீண்டித் தொன்மை யாராதனஞ்செய்
கோதிலா ஆதிசைவர்

வைரவன் கோயிற் புராணம்

வேண்டி முப்பொழுதுந் திருமேனியைத்
தீண்டிப் பூசிக்கச் செய்தவஞ் செய்தவர்
காண்ட கத்திகழ் கண்ணுதலன்னவர்
பூண்ட மாட்சிமை புல்லியர் தேர்வரோ.

சூரைமாநகர்ப் புராணம்

பூதி கண்மணிவாஞ்சையர் பரார்த்தமும் போற்றும்
நீதிவாழ்க்கையரா கமநெறி முழுதுணர்ந்தோர்
காதி மும்மலங் கண்ணுதலடி நிழல் கலக்கும் ஆதிசைவர்

கோயிலூர் புராணம்

கொங்கலர் கடுக்கை வேணிக்குழுகரைம் முகத்துந்தோன்றித்
தங்களான் மார்த்தத்தோடு பரார்த்த பூசனையும் போற்றிப்
பொங்குவேதாகமங்கள் புரையறத் தெரிந்து நாளுந்
துங்கமார் ஆதிசைவர்

கண்டதேவிப் புராணம்

எண்ணில்வேதாக மங்களைய மெய்தாமையாய்நது
மண்ணிலான் மார்த்தத்தோடு பரார்த்தமும் வயங்க பூசித்
தொண்ணிதியருட்பேரெய்தி யொழிந்த மும்மலத்தினராம்
புண்ணிய ஆதிசைவர்

காளையார் கோயிற் புராணம்

பொதுமையுஞ்சிறப்புமென்னப் புராதனன் புகன்றவாய்மை
முதுமறையாக மங்கண் முழுதுமோர்ந்தென்றும் பூசை
பதியுமான்மார்த்தத்தோடு பரார்த்தத்தும்புரி இத்தலைக்கோர்
மதிபெறும் ஆதிசைவர்.

திருவிளையாடற் புராணம்

இந்திரன் முடிமேல் வினையெறிந்தபடலம் 21

ஆதியிவ்விலிங்கந்தீண்டற் கருகரல்லாத வேத
வேதியர் முதலோரிட்ட லிங்கத்தில் விதியாலர்ச்சித்
தோதிய விரத நோற்கவர்ச்சனைக்குரிய ரல்லாச்
சாதியர் பொருணோர்ந்தோதி சைவராற் பூசை செய்க.



பெரியபுராணத்தில் ஆதிசைவர்

தடுத்தாட்கொண்ட புராணம்

மாதொரு பாகனார்க்கு வழிவழி அடிமைசெய்யும்
வேதியர் குலத்துள் தோன்றி மேம்படுசடையனார்க்கு
ஏதமில்கற்பின் வாழ்க்கை மனை இசைஞானியார்பால்
தீதகன்றுலகம் உய்ய திருஅவதாரம் செய்தார்.

அருமறை நாவல் ஆதிசைவன் ஆரூரன் செய்கை
பெருமுனி வெண்ணெய் நல்லூர்ப்பித்தனுக்கியானும் என்பால்
வருமுறை மரபுயோரும் வழித்தொண்டு செய்தற்கோலை
இருமையில் எழுதி நேர்ந்தேன்இதற்கிவைஎன் எழுத்து

முப்போதும் திருமேனி தீண்டுவார் புராணம்

எப்போதும் இனியபிரான் இன்னருளால் அதிகரித்து
மெய்ப்போத நெறிவந்த விதிமுறைமை வழுவாமே
அப்போதைகப்மயிதும் ஆர்வ மிகும் அன்பினராய்?
முப்போதும் அர்ச்சிப்பார் முதற் சைவராம் முனிவர்

தெரிந்துணரின் முப்போதுஞ்ச செல்காலம் நிகழ்காலம்
வருங்கால மானவற்றின் வழிவழியே திருத்தொண்டில்
விரும்பிய அர்ச்சனைகள் சிவவேதியர்கே உரியன்அப்
பெருந்தகையார் குலப்பெருமையாம் புகழும் பெற்றியதோ!

கண்ணப்ப நாயனார் புராணம்

எய்திய சீர்ஆகமத்தில் இயம்புய பூசனைக்கேற்பக்
கொய்த மலரும் புனலும் முதலான கொண்டணைந்தார்
மைதழையுங்க கண்டத்துமலை மருந்தை வழிபாடு
செய்து வருந்தவமுடைய முனிவர் சிவகோசரியார்.

முப்போதும் திருமேனி தீண்டுவார் புராணம்

என்றுமெல்லா உயிர்கட்கும் இனிமையே புரிந்தருளும்
சிவனார்தம் இனியத் திருவருளால் மிகப்பெருகி
உண்மை சிவாகம உயர்ஞான நெறிப்படி

வந்த விதிகளின் முறைமைத்தவறாமல்
அந்தந்தக் காலந்தோறும் அந்தணர்தம் வழிபாட்டில்
ஆர்வமது பெருகும் அன்புடையராகி நாளும்
காலை நண்பகல் மாலை என மூன்றுக்
காலங்கள் தம்மில் திருக்கோயிலுள்ளச்
சிவலிங்கத்திருமேனி தமைதொட்டு விருப்பமுடன்
அர்ச்சிக்கும் புனிதரே ஆதிசைவராம் முனிவர்

ஆராய்ந்து தெளிந்தால் அமைந்த முக்காலரமரம்
இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் மாகிய
எக்காலத்தும் வழிவழியாய் இறைவர் தம் அணிக்கத்
தொண்டில் விரும்பியச் சிறந்த அர்ச்சனைகள்
சிவ மறையோர்களே செய்வதற்குரியன
அப்பெருந்தகையார்தம் அளவற்றக் குலப்பெருமை
சொல்லால் யாம்புகழும் தன்மை யுடையதோ

திருமால் நான்முகன் தமக்கறிய வொண்ணாத
இறைவரை எம்முடைய பெருமானை ஞானமாம்
வேதங்கள் நான்கின் உண்மை பொருள்கள்
அனைத்துமாகின்ற அண்ணலை முக்காலமும்
அன்பினால் விருப்புமுடன் அர்ச்சிக்கும் மறையோர்தம்
தாமரை மலரன்னத் திருவடியை வணங்கி
நெஞ்சம் கசிந்த நிறைவால் உடல்முழுவதும்
திருநீற்றைபூசிவாழும் தூய்மைமிக்க படையாரின்
திருத்தொண்டை அறிந்தபடி சொல்லானேன்.

கந்தபுராணத்தில் ஆதிசைவர்

உச்சிதமாஞ்சிவவேதியன் காளத்தியொங்குமைந்தன்
கச்சியப்பன் செய்த கந்தபுராணக் கலைக்கடலின்
மெச்சியகல்வி மதியும் வெண்டாமரை மேவுமின்னு
மிச்செவிநாவினுக்கின் பாமமுதுமெழுந்தனவே
போதமுறு சூதமுனிபு கன்றகாந்தப்புகழ்க் கடலிற் படிந்ததன்
-கட்பொருளதான
மேதகுவன்புனலருந்தி வையமுய்ய வெய்யதுயார்ப்பிரவியெனும்
-வெம்மைதீரத்

தாதவிழ் பூம்பொழிற்காஞ்சிக்கு வட்டிலேறிச்சலதியமுதினைநிகர்
செந்தமிழதான
காதன்மழை பொழிந்த வருட்கொண்டலான கச்சியப்பனி
-ருபாதமுச்சி வைப்பாம்
குமரகோட்டத்தில் அரங்கேற்றனரென்பதையும் அரங்கேற்றிய
-வருடத்தையும்
வேதமொடு வேதாங்கமம் பயின்றுவல்லோன் விரிந்தசிவாகம
முணர்ந்து மேண்மைபூண்டோன்
போதநிறைசிவமறையோன் காஞ்சி வாழும் புனித மிகுகச்சியப்ப
-குரவனானோன்
வாதமுறுபுலவர் குழாமகிழந்து போற்ற மதிமலிமாடம் புடைசூழ்
-குமரகோட்டத்
தேதமறுகாத்த மெழுநூற்றின் மேலாயிலகுந்த கந்த புராண
-மரங்கேற்றினானே.

கந்தபுராணப் பாடல்கள் பன்னீராயிரமென்பதை
அந்தப்புரமுமறுநான்கு கோட்டகத்தாருமொன்றுய்க்
கந்தபுராணம் பன்னீராயிரஞ் சொன்னகச்சியப்பர்
தந்தப்பல்லக்குக் கவிதையுந்தாங்கியச் சந்நிதிக்கே
வந்தப்புராண மரங்கேற்றினார் தொண்டை மண்டலமே

திருச்சிற்றம்பலம்.

திருவிளையாடற் புராணத்தில் ஆதிசைவர்

தருமிக்கு பொற்கிழியளித்த படலம்

ஐயுறுகருத்தை யாவராயினும் அறிந்த பாடல்
செய்யும் அவர்க்கே யின்ன வாயிரஞ்செம்பொன் னென்றக்
கையுறைவேலானீந்த பொற்கிழிகைக் கொண்டே
மெய்யுணர் புலவர் முன்னாத் தூக்கினர் வினைசெய்மாக்கள்

வங்கத்தார் பொருள்போல் வேறுவகையமைகேள்வி நோக்கி
சங்கத்தாரெல்லாம் மிற்றணித்தணிதேர்ந்து தேர்ந்து
துங்கத்தார்வேம்பனுள்ளஞ் சூழ் பொருகுழாவி யுற்ற
பங்கத்தாராகியெய்த்துப் படருறு மனத்தரானார்

அந்த வேலையிலா ஆதிசைவரில்
வந்த மாணவன் மணஞ்செய்வேட்கையால்
முந்தை யாச்சிமுழுயலும் பெற்றியான்
தந்தையாயிலான் தருமியென்றுளான்

தந்தை தாயிலேன் தனியனாகிய
மைந்தனேன் புதுவதுவை வேட்கையேன்
சிந்தை நோய்செயும் செல்லறீர்ப்பதத்
தெந்தை யேயி பதமென் றேத்தியே

நெடியவொ நூனிறைய வாகமம்
முடிய வோதிய முறையினிற் கெனும்
வருவில்லற வாழ்க்கையின்றி நின்
அடியருச்சனைக்கு அருகனாவனோ

பாண்டியநாட்டில் திருஆலவாயெனும் மதுரையில் ஆதிசைவகுலத்தில் தோன்றி வேத சிவாகமங்களைக் கற்று தேர்ந்த தருமி சிவாச்சாரியார் தனக்கு தாயுந்தந்தையுமிலாத காரணத்தாலும் மீளா அடிமையாக வழிவழியாக செய்து வரவேண்டிய ஆத்மார்த்த பரார்த்தபூஜை செய்ய, இல்லறத்தானாகி சமய விசேஷ நிர்வாண தீட்சைப்பெற்று, ஆச்சாரிய அபிஷேகம் பெற்றிட பெரும்பொருள் தேவைப்படுகிறது. அதைத்தந்தருளுமாறு வேண்டிட, சொக்கநாத பெருமான் அதனை ஒரு திருவிளையாடலாக செய்திட எண்ணி ஒருநாள் பாண்டிய மன்னன் தன் மனைவியுடன்

ஆதிசைவ த்விஜா ச்ரேஷ்ட ஸுதாயொத்வாஹகாம் க்ஷிணெ
பாண்டியேச பாவானு குணாம்தத்வார் யாம் ஸதஸீச்வர:
ஜித்வா கவீத்ராஜ பத்தாம் நீவிந்நிஷ்க ஸஹஸ்ரிகாம்
யதாப்ரதாபயாமாஸ...............

(சம்பக) பாண்டியராஜனுடைய கருத்தை யாதென்றுணர்த்தி இயற்றிய (தமிழ்) கவியைச் சிவபெருமான் சங்கத்திலே கொடுத்து அச்சங்க புலவர்களை செயித்து அரசனாற் கட்டப்பட்ட ஆயிரம் பொன் முடிச்சை விவாஹத்தில் விருப்புற்ற ஆதிசைவ பிராம்மண ச்ரேஷ்டருடைய புதல்வராகிய தருமிக்கு கொடுத்தார். என்பதை திருவிளையாடற் புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

திருநாவுக்கரசர் தேவாரம் (கி.பி. 7ல்)

மின்காட்டுங்கொடி மருங்கலு மையாட் கென்றும்
விருப்பவன்காண் பொருப்புவலிச்சிலைக்கை யோன்கா
நன் பாட்டு புலவனாய்ச் சங்கமேறி
நற்கனகக்கிழி தருமிக்கருளினோன் காண்
பொன்காட்டக் கடிக்கொன்றை மருங்கேநின்ற
புனக்காந்தன் கைகாட்டங் கண்டுவண்டு
தென்காட்டுஞ் செழும்புற வீற்றிருப்புத்தூரிற்
றிருத்தளியான் காணவனென் சிந்தையானே.

ஆதிசைவர்கள் செய்த தமிழ்ப்பணி

ஆதிசைவகுலத்தில் தோன்றிய ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகள் ஒன்பதாம் நூற்றாண்டில் செந்தமிழ்ப் பாக்களினால் நூறு பதிகங்கள் பாடியுள்ளார். அவைகளை ஏழாந் திருமுறையாக சைவ உலகம் ஏற்றுக் கொண்டது.

காஞ்சிபுரத்தில் ஆதிசைவ குலத்தில் தோன்றிய காளத்தியப்ப சிவாச்சாரியர் குமாரர் கச்சியப்ப சிவாச்சாரியார் வடமொழியாகிய ஸம்ஸ்கிருதத்தில் உள்ள ஸ்காந்த புராணத்தை தமிழில் "கந்த புராணம்" என்ற பெயரில் செய்யுளாக பாடியுள்ளதை சைவ உலகம் சிவபெருமானின் மூன்று கண்களொப்ப, மூன்று புராணங்களாக

1. கந்தபுராணம் 2. திருவிளையாடற் புராணம்
3. திருத்தொண்டர் புராணம் என்று ஏற்றுக் கொண்டது.

ஆதிசைவ குலத்தில் தோன்றிய ஸ்ரீ நம்பியாண்டார் நம்பி சோழ நாட்டு மன்னரின் வேண்டுகோளுக்கு இணங்கி தாம் உபாஸித்து பூஜித்து வந்த ஸ்ரீ பொல்லாப்பிள்ளையார் அருளால் மூவராகிய 1. திருஞானசம்பந்தர் 2. திருநாவுக்கரசர் 3. சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியிருந்த தேவாரப்பதிகங்களை சிதம்பரம் கனகசபையின் வாயுதிக்கில் இருப்பதை அறிந்து, அரசர் உதவியுடன் கண்டெடுத்து செல்லறித்ததுபோக மீதம் கிடைத்ததை ஏழுதிருமுறைகளாக வகுத்து தந்துள்ளதை சைவ உலகம் ஏற்று மகிழ்ந்துள்ளது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடிய திருத்தொண்டத்தொகை பதிகத்தை ஆதாரமாகக் கொண்டு அறுபத்து மூன்று நாயன்மார்களுடன் தொகையடியார் ஒன்பதின்மரும் சேர்த்து திருத்தொண்டர் திருவந்தாதியும்

பாடிவைத்தார். மற்றும் பல பாடல்களையும் பாடியுள்ளதை சைவ உலகம் பதினோறாம் திருமுறையில் சேர்த்து மகிழ்ந்து. இவர் பாடிய திருத் தொண்டர் திருவந்தாதியை ஆதாரமாகக்கொண்டு சேக்கிழார் சுவாமிகள் விரிவாக திருத்தொண்டர் புராணம் இயற்றினார். அதனை சைவ உலகம் பனிரெண்டாம் திருமுறையாக ஏற்றுக்கொண்டது.

சந்தானபரமாச்சாரியர்களாக விளங்கியவர்களில் ஆதிசைவ குலத்தில் தோன்றிய சிவஸ்ரீ அருணந்திசிவாச்சாரியார் இயற்றிய "சிவஞான சித்தியார்" மற்றும் பல நூல்களையும் சைவ சித்தாந்தம் கற்று அதன்வழியில் நிற்க ஆதார நூலாக சைவ உலகம் ஏற்றுக்கொண்டது.

ஆதிசைவர்கள் திருமுறைகளுக்கும், தமிழுக்கும் செய்தத் தொண்டினைப் போல வடமொழியாகிய ஸம்ஸ்கிருதத்தில் அமைந்துள்ள சிவாகமங்களுக்கும் விரிவுரை (பத்ததி) எழுதியுள்ளவர்கள் பதினெண்மர்கள்

1. தூர்வாச சிவாச்சாரியார்
2. பிங்களசிவாச்சாரியார்
3. உக்ரஜோதிசிவாச்சாரியார்
4. சுபோதக சிவாச்சாரியார்
5. ஸ்ரீ கண்ட சிவாச்சாரியார்
6. விஷ்ணு கண்ட சிவாச்சாரியார்
7. வித்யாகண்ட சிவாச்சாரியார்
8. ராமகண்ட சிவாச்சாரியார்
9. ஞானசிவ சிவாச்சாரியார்
10. ஞானசங்கர சிவாச்சாரியார்
11. ஸோமசம்பு சிவாச்சாரியார்
12. பிரம்மசம்பு சிவாச்சாரியார்
13. த்ரிலோசன சிவாச்சாரியார்
14. ராமநாத சிவாச்சாரியார்
15. ஈசான சிவாச்சாரியார்
16. வருண சிவாச்சாரியார்
17. பிராஸாத சிவாச்சாரியார்
18. அகோர சிவாச்சாரியார்

ஆஸேது ஹிமாசல பரியந்தம் தற்காலம் ஸ்ரீஅகோர சிவாச்சார்யார் பத்ததியே அனுஷ்டானத்தில் உள்ளது. பிர்ம்மசூத்திரத்திற்கு, பாஷ்யம் எழுதியவர்களில் நீலகண்ட சிவாச்சாரியாரின் பாஷ்யமும் மிக சிறந்து விளங்கி வருகிறது. சைவசமயத்தில் சிறப்பான பணிகளை செய்த ஆதிசைவ குல செம்மல்கள் ஸ்ரீ ஆலாலசுந்தரர், புகழ்த்துணை நாயனார், சடையனார், இசைஞானியார், சிவகோசரியார், சடங்கவி சிவாச்சாரியார், நம்பியாண்டார் நம்பி சிவாச்சாரியார், அருணந்திசிவாச்சாரியார் கச்சியப்ப சிவாச்சாரியார் முதலானோர்கள் சிவானுக்ரஹம் பெற்றுள்ள ஆதிசைவர்களே

வேதசிவாகமம் திருமுறை மற்றும் சைவசித்தாந்த கருத்துகளை எளிமையாக சொற்பொழிவு மூலம் தெளிவு படுத்தி பல அன்பர்களும் தீட்சை, ஆத்மார்த்த பூஜை தந்து விளங்கியவர்கள் பழனி ஈசான சிவாச்சாரியார் ஆவார்கள்.

தனது இனிமையான சொற்பொழிவு மூலம் சைவசமயத்தில் ஈடுபடுத்திய பெருமை மாணிக்கவாசகர் ஆராதித்து வந்த சிவலிங்கத்தை பாரம்பரியமாக ஆராதித்து பல சீடர்களைக் கொண்டுள்ள கூனம்பட்டி ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சரவண மாணிக்கவாசக சிவாச்சார்ய சுவாமிகளை சாரும்.

வேதபரிபாஷைகளில் பல பரிசுகள், பல தோடாக்களைப் பெற்று, ஆகமத்தில் நிகரற்று விளங்கி, பல விருதுகள் டாலர்கள் பெற்று சிறந்து விளங்கியவர் சிவஸ்ரீ திருக்கழுக்குன்றம் சந்திரசேகர சிவம் ஆவார்.

வேத சிவாகம ரத்னாகரமாக, வேத சிவாகம பாடசாலையில் ஆசிரியராக இருந்து, பல மாணவ ரத்னங்களை உருவாக்கி, கும்பாபிஷேகத்தை வேத சிவாகமத்திற்கு மாறுபடாமல் பல புதுமைகளை புகுத்தி, யாகசாலை அமைத்து சிவனுக்கு பஞ்சமுகார்ச்சனை, முருகனுக்கு ஷண்முகார்ச்சனை, தேவிக்கு நவசக்தி அர்ச்சனை, ஏகதினலக்ஷார்ச்சனை, மற்றும் கோடி அர்ச்சனை ஆகிய இவைகளை தருமை ஆதீன 25 குரு மஹா சன்னிதானத்தின் விருப்பப்படி சிறப்பாக நடத்தி, உலகறியச் செய்த பெருமை தருமபுரம் சிவஸ்ரீ சுவாமிநாத சிவாச்சாரியாரை சாரும்.

சிவாகமம், பத்ததி புத்தகங்களை பதிப்பித்து, சிவப்பணி செய்து தென்னிந்திய அர்ச்சக சங்க காரியதரிசியாக விளங்கியவர். சென்னை தம்புசெட்டித் தெரு, ஸ்ரீ சுவாமிநாத சிவாச்சாரியார் ஆவார்.

ஆதிசைவகுலத்தில் பிறந்து வேதசிவாகமங்களுடன். தேவாரத் திருமுறைகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு தக்க பக்கவாத்யங்களுடன் தேவாரத் திருமுறைகளை இன்னிசையுடன் பாடி வருகின்றார் சென்னிமலை ஆரூரன் சிவாச்சாரியார்.





ஸ்ரீ சடையனார் - ஸ்ரீமதி இசைஞானியார்

ஆதிசைவ சான்றோர்கள்

சடையனார் புராணம்

தம்முடைய தலைவராம் சிவனார் தம்மையே
தம் அன்புக்குரிய தோழராய்க் கொண்டருளி
தம் பெருந்தோள்களைத் தழுவும் பூங்கொம்பனைய
பரவையார் கொண்டிருந்த பெரும் ஊடலைத்
தீர்க்கும் பொருட்டுத் தூதாகச் செல்லுமாறு
அனுப்பிய எங்கள் அரும்பெரும் தலைவரைச்
சேரமான் பெருமானின் தனிப் பெருகும் துணைவராம்
நம்பியாரூரரை நிலவுலகமாந்தரெல்லாம்
சிறந்த பெரும் வாழ்வுபெறச் சடையனார் பெற்றளித்தார்.

இசை ஞானியார் புராணம்

நிலைத்தப் பெருமையுடைய நற்சடையனாரின்
உரிமைச் செல்வமுடைய ஒப்பற்ற மனைவியார்
முப்புரத்தை எரித்தழித்த முக்கண் சிவபெருமான்
ஆட்கொண்ட நம்பி ஆரூரர் தமைப்பெற்றார்
மேன்மை யுடைய ஆதிசைவ மரபில் வந்த இசைஞானிப்
பிராட்டியார் தம்மையென் புல்லியச் சொற்களால்
புகழ்ந்து கூற முடியுமோ புகலுவதற்கு எம்மால்
இயலாதது மட்டுமின்றி எவர்க்கும் இயலாது.

இசைஞானி அம்மையார்

ஆதிசைவகுல திலகமாய் திகழ்ந்து வந்த சிவகௌதம கோத்திரத்தில் தோன்றிய சிவஸ்ரீ ஞானசிவாச்சாரியார் திருவாரூருக்கு சமீபத்தில் உள்ள கமலாபுரத்தில் சிவப்பணியாக ஆத்மார்த்த சிவபூஜையுடன் சிவாகமத்தில் ஈடுபாட்டுடன் பல மாணவர்களுக்கு, பாடமும் கூறிவந்தார். இசையில் மிகுந்த ஈடுபாடு கொண்டு பூசையின் நிறைவாய் மனமுருகி பாடுவார். அவருடைய ஒரே குமாரிக்கு "இசைஞானி" என்று பெயர் வைத்து வளர்த்து வந்தார். இசைஞானியார் மிகுந்த சிவபக்தியுடன் ஆத்மார்த்த சிவபூஜை செய்தும் இனிமையான குரலில் பாடல்களை பாடியும் வந்தார். அவருக்கு திருமணம் செய்ய கருதி பல பெரியோர்கள் கூடி

திருமுனைப்பாடி நாட்டில் உள்ள திருநாவலூரில் ஆதிசைவ குலத்தில் கௌசிக கோத்திரத்தில் தோன்றி வேதசிவாகம விற்பன்னராக விளங்கிவந்த கபர்தீச (சடையனார்) சிவாச்சாரியாருக்கு விவாஹம் செய்து வைத்தார்கள். பிறகு சடையனாரும் இசைஞானியார் தம்பதிகள் இல்லத்தில் சிறந்து விளங்கியதுடன் சமய விசேஷ நிர்வாண ஆச்சார்யாபிஷேக (சிவதீட்சை) செய்து கொண்டு ஆத்மார்த்த சிவபூஜையுடன் திருநாவலூரில் உள்ள ஸ்ரீ பக்தஜனேஸ்வரஸ்வாமியை மிக பக்தியுடனும் ஆர்வத்துடனும் பூஜை செய்து இறைவனிடம் உலகம் போற்றும் உத்தமகுமாரனை அருள்பாலிக்க வேண்டி வந்தார்கள்.

அவர்களின் தவத்திற்கு இறங்கிய இறைவன் "ஆலால சுந்தரனை" மகனாக அருளிச்செய்தார். அக்குழந்தையை ஆரூரார் என்ற பெயரோடு வளர்த்து வந்தனர்.

ஸ்ரீ ஆலால சுந்தரர்

திருக்கயிலாயத்திலே சிவபெருமானுக்கு அணுக்கத் தொண்டராகப்பணிசெய்துக் கொண்டிருந்த ஆலால சுந்தரர், ஒருநாள் பூவெடுக்க பூங்காவிற்கு போனபோது, அவ்விடத்திலே பூக்கொய்துக் கொண்டிருந்த அநிந்திதை கமலினி என்னும் உமையம்மையாரின் சேடியரிடத்திலே விருப்புற்று நின்றமையாலும், அம்மாதர்களும் இவரிடத்திலே மனங்கொண்டமையாலும், இதனையறிந்த சிவ பெருமான் காமனையழித்த கயிலாயத்திலே காமத்திற்கு இடமில்லை, நீங்கள் பூமியிலே பிறந்து உங்கள் விருப்பங்களை நிறைவேற்றிக் கொண்டு மீண்டும் கயிலாயத்திற்கு வந்து பணி செய்யுமாறு உத்தரவு இட்டார்.

சுந்தரர் சிவபெருமானை வணங்கி, பூலோக வாழ்க்கையில் மயங்கி நிற்கும் காலத்தில் தடுத்தாட்கொள்ள வேணுமென வேண்டினார். சிவபெருமான் அப்படியே வந்து ஆட்கொள்வோமென்று கூறிட, பூலோகத்தில் தென்னாடு செய்த மாதவத்தால் திருமுனைப்பாடி நாட்டிலே திருநாவலூரிலே அருந்தவஞ்செய்துள்ள ஆதிசைவகுலத்தில் சடையனார் - இசை ஞானியார் தம்பதிகளுக்கு புத்திரராக ஆவணி மாதம் உத்திர நக்ஷத்திரத்திலே அவதரித்து நம்பியாரூர் என்னும் திருப்பெயர் பெற்றார்.

நம்பியாரூரரை தெருவிலே விளையாடிக் கொண்டிருந்த போது, பார்த்த அந்நாட்டரசராகிய நரசிங்கமுனையர் கண்டு அன்புக் கொண்டு, அவரைதம் மகவாக வளர்க்க சடையனாரிடத்தில் கேட்க, அவரும் மனமுவந்து தர குழந்தையை எடுத்துச் சென்று அவரை அந்தணர் குலத்திற்குரிய வேதசிவாகம சாஸ்திர நெறிகளுடன் அரசர்களுக்குரிய யானையேற்றம், குதிரையேற்றம், வில்வித்தை முதலியவைகளையும் கற்பித்துச் சிறப்புடன் வளர்த்து வந்தார்.

பெற்றோரும், நரசிங்கமுனையரும் நம்பியாரூரர் மணப்பருவம் எய்தியபோது புத்தூர் சடங்கவி சிவாச்சாரியாரின் மகளை மணமகளாக நிச்சயித்து மணவிழா நடத்தத்தொடங்கினர். நம்பியாரூரர் மணக்கோலத்தோடு மணமகளில்லத்திலே மணவறையிலே இருந்தார். அப்போது சிவபெருமான் கிழப்பிராமண வடிவந்தாங்கி வந்து, திருமணம் நிறைவேறாதபடி ஆவண ஓலைக்காட்டி, வழக்காடித் தடுத்து நம்பியாரூரரை தம் அடியவராக்கிக் கொண்டார்.

அடிமைக் கொண்ட சிவபெருமான் அவரைத் திருவெண்ணை நல்லூருக்கு அழைத்துச் சென்றார். அங்கே நீ நம்மோடு வன்சொற்களைப் பேசியதால் "வன்றொண்டன்" என்னும் பெயரைப் பெற்றனை. ஆவண ஓலைக்காட்டியப் பொழுது என்னைப் பித்தன் என்றாய். பித்தனென்றே தொடங்கி எனைப்பாடு. "பாடலே நீ எனக்குச் செய்யும் அர்ச்சனையாம்" என்று இறைவன் அருள் செய்ய வன்றோண்டர் "பித்தா பிறைசூடி" என்ற தேவாரப்பதிகத்தைப் பாடியருளினார். பின்னர் தலயாத்திரை செய்து திருவதிகைப் பதியை அடைந்தார். அது திருநாவுக்கரசர் அருள்பெற்ற திருத்தலமாதலால், அங்கே கால் மிதிக்க அஞ்சி, அத்தலத்தின் புறத்தே உள்ள சித்தவட மடத்திலே தங்கி, அன்றிரவு துயில் கொண்டபோது, இறைவன் அவருக்கு திருவடி தீக்ஷை செய்ய தம்மானை அறியாத சாதியார் உளரோ..... என்றெடுத்து பதிகம் பாடினார்.

நம்பியாரூரர் தில்லைப்பதியை அடைந்து சுவாமி தரிசனம் செய்தபொழுது சிவபெருமான் சுந்தரா நம்மை ஆரூரிலே வணங்க வருக! என்று அருள் புரிந்தார்.

சுந்தரமூர்த்தி நாயனார் திருவாரூரை அடைந்து சுவாமிதரிசனஞ் செய்து திருப்பதிகம் பாடிக்கொண்டு அங்கே தங்கியிருந்தார். அங்கே கமலினி என்பவர் "பரவையார்" என்னும் பெயரோடு உருத்திர கணிகையர் குலத்தில் அவதரித்து இறைபணி செய்து வந்தார். ஒருநாள்

சுந்தரரும் பரவையாரும் திருக்கோயிலினிலே ஒருவரையொருவர்க் கண்டு, முன்னைத் தொடர்பால் விருப்புற்று, இறைவனருளால் மணம் செய்தனர். திருமணக்கோலத்துடனிருந்த சுந்தரரிடத்திலே இறைவன் நாம் உனக்கு தோழரானோம். நீ கொண்ட மணக்கோலத்துடன் எப்பொழுதும் இருப்பாய்! என்று அருள் செய்தார். அன்று தொடக்கம் "தம்பிரான் தோழர்" என்னும் திருப்பெயர் அவருக்கு வழங்கலாயிற்று.

பரவையார் மாளிகையிலே தங்கியிருந்த சுந்தரர் திருவாரூர் தியாகராஜப்பெருமானை நாள் தோறும் தரிசித்து வணங்கிப்பதிகம் பாடி வருநாளில் ஒருநாள் அத்திருத்தலத்திலே தேவாசிரியர் மண்டபத்திலிருந்த அடியார்களை வணங்கி இறைவன் "தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என்று அடி எடுத்து கொடுக்க, அதை முதலாகக்கொண்டு திருத்தொண்டத் தொகைபதிகம் பாடியுள்ளார். மேலும் தம்பொருட்டுக் குண்டையூர்க்கிழார்க்கு இறைவன் கொடுத்தருளிய நெல்மலையை "நீளநினைத்துடியேன்" என்ற பதிகம் பாடி இறைவனருளால் திருவாரூரிலே சேர்ப்பித்தார்.

திருநாட்டியத்தான் குடியிலே வாழ்ந்த கோட்புலிநாயனார் ஒருமுறை சுந்தரரை அழைத்து உபசரித்து தம் புதல்விகளாகிய சிங்கடி வனப்பகை என்போரை மணந்துகொள்ளுமாறு வேண்ட, சுந்தரர் அவர்களைத் தம் மக்களாக ஏற்றுச் சிறப்பித்துப் பாடியருளினார். இதனால் சிங்கடியப்பன், வனப்பகையப்பன் என்ற திருப்பெயர்களும் இவருக்கு உண்டாயின. பரவையார் பங்குனி உத்திர விழாச் செலவுக்கு பொன்வேண்ட அதன் பொருட்டு திருப்புகலூரை அடைந்து சுந்தரர் செங்கல்லைப் பொன் கல்லாகப் பெற்று "தம்மையே புகழ்ந்து" என்னும் பதிகம் பாடியருளினார்.

திருமுதுக்குன்று நோக்கி தலயாத்திரை செய்தபொழுது சுந்தரருக்கு வழிகாட்டிச்சென்று இறைவன் அவரைக் கூடலை யாற்றூருக்கு அழைத்துப்போய் மறைந்தருள "வடிவுடைம முவேந்தி" என்னும் பதிகம் பாடியருளினார்.

பின்னர் திருமுதுகுன்றூரைத் தரிசித்துப் பன்னீராயிரம் பொன் பெற்று அங்குள்ள மணிமுத்தநதியிலிட்டுத் திருவாரூர்த் திருக்குளத்திலே பரவையாரோடு போய்த் தேடிய போது அது கிடைக்கப்பெறாமை கண்டு, ஆற்றிலிட்டுக் குளத்திலே தேடுகிறீரா? என்று பரவையார் நகைக்க "பொன் செய்த மேனியினர்" என்றும் பதிகம் பாடி அப்பொன்னைத் திருக்குளத்திலே எடுத்தார்.

மேலும் தலயாத்திரை செய்து வந்த சுந்தரர் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் அவதரித்த சீர்காழிப்பதியைக் காலால் மிதிக்க அஞ்சி அப்பதியை வலம்வந்து வணங்கி கழுமல் "வளநகர் கண்டுக் கொண்டேனே" எனப் பதிகங்கள் பாடி, அதன் மேற்றிசையில் திருஞானசம்பந்த சுவாமிகள் பொற்றாளம் பெற்றத் தலமானத் திருக்கோலக்கா சென்று வணங்கி "நாளுமின்னிசையாற்றமிழ்பரப்பும் திருஞானசம்பந்தருக்கு உலகவர் முன் தாளமீந்து" என பதிகம் பாடி வணங்கி திருக்கருகாவூருக்குச் செல்லும்போது பசியினால் வருந்த இறைவன் வழியிலே தண்ணீர் பந்தல் அமைத்துப் பொதிசோறும் தண்ணீரும் கொடுத்து மறைந்தருளினார். சுந்தரர் இறைவனின் பெருங்கருணையை வியந்து "இந்தனையா மற்றை அறிந்திலேன்" என்று பதிகம் பாடியருளினார்.

திருக்கச்சூர்த் திருத்தலத்தைத் தரிசித்தபின் உணவின்றிப் பசியோடிருந்த சுந்தரருக்கு இறைவன் பிச்சையெடுத்து அன்னங் கொடுத்தருளினார். சுந்தரர் அதனைவியந்து "முதுவாயோரி கதற" என்ற பதிகம் பாடித்துதித்தார்.

சுந்தரமூர்த்தி நாயனார் பலத்திருத்தலங்களையும் தரிசித்துக் கொண்டு திருவொற்றியூருக்கு எழுந்தருளினார். அந்நாளில் ஞாயிறுகிழார் என்பவருக்கு "அநிந்திதையார்" புத்திரியாக அவதரித்துச் "சங்கிலியார்" என்னும் பெயர் பூண்டு திருவொற்றியூர்ப் பெருமானுக்குத் திருத்தொண்டு செய்து வந்தார். அவரை சுந்தரர் கண்டு வியப்புற்று இறைவனருளியபடி அவரை பிரிவதில்லை! என்று சபதம் செய்து கொடுத்து மணம் செய்து கொண்டு இருந்தார்.

சிலநாட்கள் செல்ல திருவாரூர் பெருமானைத்தரிசிக்க விரும்பி, தாம் செய்த சபதத்தை மறந்து, ஆரூரானை தரிசிக்க எண்ணி, புறப்பட்டுத் திருவொற்றியூர் எல்லையைக் கடந்ததும் சுந்தரரின் கண்ணிரண்டும் குருடாயின. அவர் அடியார் வழிகாட்டத் திருவெண்பாக்கத்தை அடைந்து "கோயில் உள்ளீரோ" என்று பதிகம் பாட இறைவன் "உளோம்போகீர்" என்று ஊன்றுகோல் கொடுத்தருளினார்.

திருக்கச்சியேகம்பத்தை அடைந்து இறைவனருளால் இடக்கண்பார்வை பெற்று "ஆலந்தானுகந்தமுது செய்தானை" என்ற பதிகம் பாடியருளினார். பின் திருத்துருத்தி என்னும் தலத்தில் தீர்த்தமாடி உடல்நோய்கள் நீங்கப் பெற்றார்.

திருவாரூரை அடைந்து "மீளா அடிமை" என்றெடுத்துப் பதிகம் பாடி வலக்கண்பார்வையும் பெற்றார். பின்னர் பரவையாரிடத்திலே எம்பெருமானைத் தூதாக அனுப்பி அவருடன் தனித்து சிலநாள் எழுந்தருளினார்.

ஏயர்கோன் கலிக்காம நாயனார் என்பவர், சுந்தரர் இறைவனைத் தூதனுப்பியது தகாது! என்று சுந்தரர் பாற் கோபித்திருந்தார். அவரைச் சுந்தரருடன் நட்பு பூணும்படி செய்தருளத் திருவுளங்கொண்ட இறைவன் அவருக்கு சூலை நோயைக் கொடுத்தருளினார். அது தீர்க்கும் பொருட்டுச் சுந்தரர் அவரிடம் செல்லுதலும், அதனை விரும்பாத கலிக்காமர் உடைவாள் கொண்டு தம்வயிற்றைக் கிழித்து இறந்தார். அது கண்ட சுந்தரர் தாமும் அவ்வாறு இறக்கத் துணிந்து வாளை எடுத்தலும் இறைவனருளாற் கலிக்காமர் உயிர் பெற்றெழுந்து சுந்தரரைத் தடுத்து, நண்பராயினர்.

மன்னர் சேரநாட்டரசரான சேரமான்பெருமான் சுந்தரரிடம் வந்து வணங்கி நட்புப்பூண்டார். சேரமான் தோழரான சுந்தரர் சேரமானுடன் மலைநாட்டுக்குப் புறப்பட்டார். வழியிலே சேரமான் பெருமான் திருவையாற்றைத் தரிசிக்க விரும்பி சுந்தர்ரிடம் விண்ணப்பித்தார். அப்பொழுது காவேரி ஓடஞ்செல்ல முடியாதபடி பெருக்கெடுத் தோடிற்று. சுந்தரர் "பரவும் பரிசொன்றறியேன்" என்று பதிகம் பாடியருள, ஆறு பிரிந்து வழிவிட்டது. திருவையாற்றைத் தரிசித்து, வடநாட்டுக்குப் போய் மீளவும் சேரமானை காணும் பொருட்டுப் புறப்பட்டார்.

சுந்தரமூர்த்தி நாயனார் செல்லும் வழியிலே திருப்புக்கொளியூரிலே (அவிநாசி) பல ஆண்டுக்கு முன் முதலையால் விழுங்கப்பட்ட பிராமணச்சிறுவனை அந்தத் தலத்து இறைவனைப் பதிகம் பாடி, குளத்தில் ஜலத்தையும், அதில் முதலையையும், முதலையிடமிருந்துச் சிறுவனையும் மீட்டு கொடுத்தருளினார்.

ஒருசமயம் சேரமானிடம் பெற்ற பொன்னையும் பல பரிசுபொருள்களையும் பல பணியாட்கள் சுமந்து வர, திருவாரூரை நோக்கி சென்றுக் கொண்டிருக்கும் போது வழியில் திருமுருகன் பூண்டிதலத்தைத் தாண்டி செல்ல முற்படும் போது பல பூத கணங்கள் அப்பொன்னையும் பரிசுபொருள்களையும் பறித்து செல்லவே சுந்தரர் அவ்வூர் ஆலயத்திற்குச் சென்று நீர் இருக்கின்றீரா? என்றும்


எத்துக்கிருந்தீர் எம்பிரானீரே! என்று தமது வருத்தத்தைக் கூறி பதிகம்பாடிடவே இறைவன் அந்த பூதங்கள் முன்பு பறித்த பொன் மூட்டைகளை கொண்டுவரச் செய்து, சுந்தரரிடம் நீ மற்றவர்களிடம் பெறும் பொருட்கள் உனக்கு மீண்டும் பிறவியைத் தரும் இந்தப் பொருட்களை எனது பிரசாதமாக எடுத்து செல்! என்று கூறிஅருளினார்.

ஒருசமயம் சேரமானிடஞ் சென்று திருவஞ்சைக்களத்துப் பெருமானைத் தரிசிக்கச் சென்றார். அவரிடம் எனது பூலோக வாழ்க்கைப் போதும், திருக்கயிலாயத்தில் மீண்டும் பணிசெய்ய அருள்பாலிக்க வேண்டுமென்று வேண்டினார். கயிலை நாதரின் ஆக்ஞைப்படி, இந்திரன் மால் பிரமன் எழிலார் மிகுதேவரெல்லாம் வந்தெதிர்க்கொள்ள, மதயானையின் மீது கயிலைநோக்கி புறப்பட்டுச் செல்ல, அதனை யறிந்த சேரமான் தாம் உபாசித்து வந்த பஞ்சாக்ஷர மஹாமந்திரத்தை தமது குதிரைக்கு உபதேசம் செய்து, அந்த குதிரை மீது ஏறி கயிலைநாதனைக் கண்டு தரிசிக்க, ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனாருடன் தாமும் சேர்ந்து திருக்கயிலையை அடைந்து சுந்தரர் "தானெனை முன்படைத்தான்" என்ற பதிகத்தை பாடி வணங்கி நின்றார். சேரமான் "பொன்வண்ணவந்தாதி" என்ற பதிகத்தை பாடி வணங்கி நின்றிடவே, சுந்தரரை தமது அணுக்கத் தொண்டராகவும், சேரமானை சிவகணங்களுக்கு தலைவனாகவும் பணித்து அருள் பாலித்துள்ளார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கயிலையை அடைந்த நாள் ஆடி மாதம் சுவாதி நட்சத்திரம்.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்துள்ளமும் ஓங்கிட
மன்றுளாரடியாரவர் வான்புகழ்
நின்று தெங்கும் நிலவி உலகெலாம்.





புகழ்துணை நாயனார்

சிவஸ்ரீ புகழ்துணை நாயனார்

அரிசிற்கரைப்புத்தூரென அழைக்கப்பட்டு வரும் செருவிலி புத்தூரில் சிவமறையோர் திருக்குலத்தில் தோன்றி எவரும் சேருதற்குரிய மலைமேருவை வில்லாய் வளைத்தெடுத்து ஏந்திய அங்கணர் தமக்கு அணுக்கத்தொண்டினை ஏற்று செய்து வரும் இனிய அத்தன்மையில், எவரும் தமக்கு இணையற்றவராய் விளங்கி உலகில் பரந்து ஓங்கும் ஒப்பற்றப் புகழினையுடையப் பெரியார் ஒருவர்தாம் புகழ்த்துணையாரெனும் பெயரினை உடையார்.

தமது இறைவராம் சிவபெருமானைச் சிறந்த தவத்தாலும் சிவாகமமுறையாலும் ஒப்பற்ற அன்பினால் வழிபட்டும் வரும் நாளில் பொங்கும் கடல் சூழ்ந்தப் பரந்த உலகத்தில் பஞ்சம் வந்து உணவின்றிப் பசியால் நலிந்திருந்தும், எம்மிறைவன் தம்மை யான்விடுவேனல்லேன்! என்று மனத்தெண்ணி, இரவும் பகலுமாய் மணமிக்கப் பற்பல மலர்களும் குளிர்ந்த நீரையும் கொண்டு நிறை பூசைசெய்து வந்தார்.

திருமாலும் நான்முகனும் தேடியும் காணாத அரனாரை திருமஞ்சனம் ஆட்டும்பொழுது மிக்கபெரும் பசியினால் வருந்தி நிலை தளர்ந்து குளிர்ந்த நீர் நிறைந்தக் குடந்தாங்க மாட்டாமல் கைசோர்ந்து நஞ்சணிந்தக் கண்டத்தையுடைய சிவனார்திருமுடி மீது தவறவிட்டு உணர்விழந்தார்.

சிவனார்தம் திருவருளால் தமக்கங்கு உறக்கம் வந்தடைய கனவினில் வள்ளல் சிவபெருமானும், திருவருள்புரியத் திருவுள்ளங்கொண்டு "உண்ணும் உணவற்ற வறட்சியாம் பஞ்சமது நீங்கும் வரையிலும் நாமிங்கு உனக்கு ஒரு காசு நித்தமும் வைப்போம்" என்றருள, துன்பம் நீங்கி அவரும் துயிலுணர்ந்து எழுந்தார்.

அவர் தம் துன்பம் நீங்க அழகு காளை ஊர்திமீது மகிழ்ந்து ஏறுகின்ற மதியணிந்த சிவபெருமான் பீடத்தின் கீழொரு பொற்காசு வைத்தளிக்க, அன்பர் புகழ்த்துணையாரும் அதனைக் கைக் கொண்டு வந்தடைந்தப் பெரும்பசியாற் வாட்டமுற்ற உடம்புடன் ஒருவாறு மகிழ்ந்து உள்ளத்தில் பேருணர்வு வந்து பெருகிட முகமலர்ந்து களிப்புற்றார்.

அன்றுபோலவே அனைத்து நாட்களிலும் கண்ணுதலார் தந்த பொற்காசினைக் கொண்டே சிவனாரைப் பூசனை செய்து துன்ப மிக்கப்

பசிவந்து வாட்டியப் பஞ்சம் நீங்கியபின்பும் மின்னும் சிவந்த முடியுடைய சிவனார்க்கு உண்மை அடிமை ஒப்பற்றத் தொண்டு செய்து விண்ணுலகினின்று வானவர் வணங்குமாறு புனிதர் சிவபெருமானின் பொன்னடி நிழலையடைந்தார்.

மென்மையான விரல்களை உடைய உமையம்மையை இடப்பாகத்திலுடைய இறைவர்தம் திருவடிகள் வந்து தம்மை அடையும் நல் மனத்தைத் துணையாகப் பெற்ற புகழ்த்துணையாரின் பொன்னடிகள் தமை வாழ்த்தி வணங்குவோம்.

ஸ்ரீ நம்பியாண்டார் நம்பி வரலாறு

சைவசமய ஆசார்யர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் முதலிய சான்றோர்கள் பாடிய திருப்பதிகங்களை கண்டெடுத்து ஏழு திருமுறைகளாக தொகுத்து தந்த பெருமை நம்பியாண்டார் நம்பி அவர்களை சாரும்.

சிவஸ்ரீ நம்பியாண்டார் நம்பி திருநாரையூர் என்னும் ஊரில் ஆதிசைவ மரபில் அனந்தேச சிவாச்சாரியாருக்கும்-கல்யாணி அம்மாளுக்கும் திருக்குமாரனாக அவதரித்தார் என்று திருநாரையூர் தலபுராணம் கூறுகிறது.

ஸ்ரீ நம்பியாண்டார் நம்பியின் காலம் கி.பி. 870-க்கு மேல் 907-க்குள் என்று வரலாற்று ஆராய்ச்சியாளரான T.V.சதாசிவ பண்டாரத்தாரின் கருத்தாகும்.

ஸ்ரீ நம்பியாண்டார் நம்பியின் தந்தை திருநாரையூர் ஸ்ரீபொல்லாப் பிள்ளையார் ஆலயத்தின் அர்ச்சகராக பணி செய்து கொண்டிருந்தார் ஒரு நாள் அவர் வெளியூர் சென்றிருந்தவர் காலை பூஜைக்குவந்து சேரமுடியவில்லை. அச்சமயம் ஸ்ரீ நம்பியாண்டார் நம்பிக்கு வயது எட்டு உபநயனம் ஆகியிருந்து, வைதீக சந்தியாவந்தனத்துடன் சமய தீக்ஷையும் பெற்றிருந்தார். அவருடைய தாயார் பள்ளிக்கு செல்லுமுன் ஸ்ரீ பொல்லாப்பிள்ளையாருக்கு பூசனை செய்து விட்டு வா! என்று நிவேதனம் தயார் செய்து தந்து ஆலயத்திற்கு அனுப்பி வைத்தாள். தந்தையார் செய்யும் பூஜையை அறிந்திருந்ததால் ஆலயத்திற்கு சென்று ஸ்ரீ பொல்லாப்பிள்ளையாரை வணங்கிவிட்டு நிர்மால்யம் களைந்து புது நீரினால் அபிஷேகம் செய்து அலங்காரம் செய்து தானறிந்திருந்த பஞ்சாக்ஷர மந்திரத்தாலும், சம்ஹிதாமந்திரத்தாலும் அர்ச்சனைசெய்து, தூபம் காட்டி, தீபங்காட்டி

பிறகு நிவேதனத்தை பிள்ளையார் முன்பு வைத்து அவர் சாப்பிடுவார் என்று, அதற்குரிய மந்திரங்களை கூறி நிவேதனத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என பிரார்த்தித்தார். நிவேதனம் அப்படியேயிருந்ததைக் கண்டு நான் பூசனையை முறையாக செய்யவில்லையோ? தவறுகள் செய்துவிட்டேனோ? என்று வருத்தமுடன் பலமுறையும் வேண்டியும் நிவேதனம் அப்படியேயிருந்ததைக்கண்டு அங்குள்ள சுவற்றில் தலையை முட்டிக் கொள்ள ஆரம்பித்தார். நம்பீ! பொறு! என்ற குரலைக்கேட்ட நம்பியார், அங்கு ஸ்ரீ பொல்லாப்பிள்ளையார் உனது அன்பான பக்திக்காக நிவேதனத்தை உட்கொள்கிறோம் என்று கூறி திருவமுது செய்தார். ஸ்ரீ நம்பியாண்டார் நம்பி மகிழ்ச்சியுடன் வணங்கி இன்று நேரமாகிவிட்டது. பள்ளிக்கு சென்றால் ஆசிரியர் அடிப்பார் ஆகையால் தாங்களே எல்லாக்கல்விகயையும் அருள வேணும்! என்று வேண்டிக்கொள்ள சுவாமி வடமொழியையும், தென்தமிழையும், மறைகள் நான்கினையும் உபதேசித்தார். இந்த செய்தியினை அறிந்த அவருடைய தந்தையார் பெருமகிழ்ச்சியடைந்து ஸ்ரீ பொல்லாப்பிள்ளையார் சன்னதியில், பெருமானே! நான் தங்களை இதுகாரும் பூஜித்து வந்ததின் பயன் எனது குமாரன் தங்கள் திருவருளால் சான்றோனாக திகழ்வதையறிந்து மிக்க மகிழ்ச்சியடைந்துள்ளேன் என்று கூறி பலமுறை வணங்கினார். நாளடைவில் இச்செயல் நாடெங்கும் பரவிவிட்டது அப்போது சோழநாட்டையாண்ட வேந்தர்பெருமான் செவிக்கும் இச்செய்தி எட்டியது. அவர் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய பதிகங்களில் மிக விருப்பமுடையவராகயிருந்தார்.

ஒருநாள் சோழவேந்தன் திருப்பதிகங்களை ஓதவல்ல சிவனடியார் ஒருவரிடம் மூவர் தேவாரபதிகங்களில் சில பாடல்களைக் கேட்டு மகிழ்ந்த வேந்தன், எல்லா பாடல் பதிகங்களைக் கேட்க விருப்பமுடன் இருந்து வந்தான். அனைத்து பதிகங்களும் கிடைக்கவில்லையென்பதை அறிந்து வருத்தமும், ஏக்கமுமாக இருந்து வந்தான்.

திருநாரையூரில் ஆதிசைவரான ஸ்ரீ நம்பியாண்டார் நம்பி அவர்கள் ஸ்ரீ பொல்லாப்பிள்யையார் திருவருளைப் பெற்று திகழ்ந்து வருவதையறிந்து ஒருநாள் பூசனைப் பொருள்களுடன் நிறைய கனிவகைகளுடன் திருநாரையூர் ஆலயத்திற்கு வந்து விநாயக பெருமானுக்கு விசேஷ பூசனை செய்யுமாறு ஸ்ரீ நம்பியாண்டார் நம்பிகளை வணங்கி விண்ணப்பித்தான். ஸ்ரீ நம்பியாண்டார் நம்பியும்

பெரும் மகிழ்ச்சியுடன் பூசனை புரிந்து நிவேதனப் பொருள்களை திருவமுது செய்யுமாறு வேண்ட கருணையுடன் திருவமுது செய்திட்டு ஆசிவழங்கிடவே, அப்பொழுது மன்னன் ஸ்ரீ நம்பியாண்டார் நம்பியிடம் ஏழாம் நூற்றாண்டில் ஸ்ரீ உமையம்மையாரால் பாலைக்கொடுத்து ஆட்கொண்ட திருஞானசம்பந்த சுவாமிகள், சூலைநோயைக் கொடுத்து ஆட்கொண்ட திருநாவுக்கரசு சுவாமிகள், ஓலையைக் காட்டி ஆட்கொண்ட சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகியோர் மிகபக்தி பரவசத்துடன் அருளிய தேவார பதிகங்கள் எங்கு தேடியும் கிடைக்கவில்லை. தாங்கள் தான் ஸ்ரீ விநாயகப் பெருமானிடம் கேட்டுப் பெற்று தந்தால் வருங்கால மக்கள் அவைகளைப் பாடி உய்வு பெறுவார் என்று விண்ணப்பிக்கவே, ஸ்ரீ நம்பியாண்டார் நம்பியும் ஸ்ரீ விநாயகபெருமானை வணங்கி வேண்ட, அவரும். தில்லை கனகசபையில் வாயு திக்கில் பாதுகாப்பாக பூட்டி வைக்கப்பட்டுள்ளது. என்று திருவாய் மலர்ந்தருளினார். வேந்தனும், நம்பியும் விநாயகப்பெருமானை வணங்கி விடைபெற்று (தில்லை) சிதம்பரத்திற்குச் சென்றார்கள்.

முகில்போற்பொழிய மூவர் திருமுறைக்கண்டெடுக்க
சோழேசன் முக்காலத்தினியல் புணர்ந்த
முத்தர் நம்பியாண்டார் தாள்
புகழ அங்கே நிவேதித்த பொற்பார் மோத
காதியெல்லாம் பொருந்தத் துதிக்கை
யாலெடுத்து பொசிக்க அவர்தாம் பின்கேட்க
மகிழங்கரத்தோன் கனகசபை வாயுதிக்கில்
இருக்கின்றதென்றே வந்தேயருளத்
திருமுறையால் வையமெலாம் வாழவைத்தும்
திகழு நாரையூர் குமரா! சிறியேஞ்
சிற்றில் சிதையேலே தெய்வகுறப்பெண்
மணவாளா! சிறியேன் சிற்றில் சிறையேலே

தில்லையில் உள்ள மூவாயிரவரான தீட்சிதர்களை வணங்கி மூவர் அருளிய தேவாரபாடல்கள் உள்ள அறையை திறக்க வேணுமெக்கேட்க தமிழ் வைத்த மூவர் வந்தால் அறை திறக்கப்படும் என்று கூறிவிட்டார்கள். ஸ்ரீ நம்பியாண்டார் நம்பி ஆலோசனைப்படி வேந்தன் ஸ்ரீ அம்பலவாணருக்கு விசேஷ பூசனை, ஆராதனை செய்வித்து மூவர் திருவுருவங்களை திருவீதியுலா நிகழ்வித்து, திருநெறித் தமிழ் இருந்த இடத்திற்கு எழுந்தருள்வித்து மூவரும்

வந்தார் என்றார். அந்த அறை திறக்கப்பட்டது. அங்கிருந்து ஏடுகளின் மேல் புற்றுமூடிக் கொண்டிருந்தது அதனைக் கண்ட வேந்தனும், ஸ்ரீ நம்பியாண்டார் நம்பிகளும் திடுக்கிட்டுக் கலங்கி வருந்தினார்கள். அதனை நீக்கிப்பார்த்த போது பல ஏடுகள் செல்லரிக்கப்பெற்று மண்ணாகி விட்டன. அப்போது வானத்திலிருந்து அசரீரியாக ஒலிகேட்டது. வேத சைவநெறித் தலைவரெனும் மூவரின் பாடல்கள் தற்காலத்திற்கு தேவையானதை மட்டும் வைத்துள்ளோம். என்றும் மற்றவைகள் மண்மூட செய்துள்ளோம் என்றும் கூறியதைக் கேட்டு உவகையடைந்தார்கள். பின்னர் வேந்தன் ஸ்ரீ நம்பியாண்டார் நம்பியை நோக்கி அவ்வேடுகளை எடுத்து முறை செய்யுமாறுக் கேட்டுக் கொண்டான். அவரும் அவ்வாறே பேரூக்கத்துடன் செய்யத் தலைப்பட்டார்.


ஸ்ரீ திருஞானசம்பந்தர் பாடியவற்றுள் முந்நூற்றெண்பத்து நான்கு (384) பதிகங்கள் கிடைத்தன. அவற்றை முதல் மூன்று திருமுறையாக வகுத்தார். ஸ்ரீ திருநாவுக்கரசர் பாடியவற்றுள் மூன்னூத் தெழுபத்து மூன்று 373 பதிகங்களையும் அடுத்த மூன்று திருமுறையாக வகுத்தார். நம்பியாரூரர் பாடியன எனக்கிடைத்த நூறுபதிகங்களையும் ஏழாம் திருமுறையாகக் கொண்டார். இவ்வகையில் மூவர்கள்பாடிய திருப்பதிகங்கள் ஏழுதிருமுறையாக வகுக்கப்பெற்றன. பின்னர் திருவாதவூரர் அருளிய கோவைத் திருவாசகத்தை எட்டாந் திருமுறையாகவும், ஒன்பதின்மர் அருளிய பாடல்களை ஒன்பதாந் திருமுறையாகவும், திருமூலர் அருளிய திருமந்திரத்தை பத்தாந்திருமுறையாகவும் வகுத்தார்.

பின்பு வேந்தன் ஸ்ரீ நம்பியாண்டார் நம்பியை வேண்டி எஞ்சி நின்ற திருமுகப்பாசுர முதலாக உள்ளவற்றையும் தொகுத்து உதவுமாறு கேட்டுக் கொண்டான். அவரும் அதற்கிசைந்து மகாமந்திரம் ஏழு கோடியாதலால், தேவாரப் பதிகங்களை ஏழு திருமுறையாகவும் சம்ஹிதாமந்திரம் பதினொன்று என்பதால், திருவாலவாயுடையான் அருளிய திருமுகப்பாசுரம் முதலான பாடல்களை பதினோராந் திருமுறையாகவும் வகுத்தருளினார்.

திருமுறைகளைத்தொகுத்த பின்னர் ஸ்ரீ நம்பியாண்டார் நம்பி தனக்கு ஸ்ரீ பொல்லாப்பிள்ளையார் அருளியதைக் கொண்டு ஸ்ரீ திருத்தொண்டர் இயல்புகளை ஸ்ரீ நம்பியாரூரர் அருளிய திருத்தொண்டத் தொகையை ஆதாரமாகக் கொண்டு திருத்தொண்டர் திருவந்தாதியென்ற பெயரால் ஒரு நூலை செய்து உதவினார்.

திருமுறைகளைத் தொகுத்த பின்னர் அதற்கு பண் வகுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஸ்ரீ நம்பியாண்டார் நம்பி அவர்கள் (தில்லை) சிதம்பரத்திற்கு சமீபமாகவுள்ள திருவெருக்கத்தம் புலியூர்க்குச் சென்று அங்குள்ள இறைவனை பூஜித்து வழிபட்டு வேண்டினார். அப்போது இறைவன் இவ்வூரில் திருநீலகண்ட யாழ்பாணர் வழியில் தோன்றிய மதங்க சூடாமணி என்னும் பெண்ணொருத்திக்குப் பண்ணிசையளித்துள்ளோம். அவளை அழைத்துச் சென்று தில்லையம்பலத்தின் முன் இருக்க செய்து, பண்ணிசைவு செய்க! என வேந்தனும், எல்லோரும் கேட்குமாறு அசரீரி உண்டாயிற்று. அதனைக் கேட்ட அனைவரும் அந்த பெண்மணியை அழைத்துக் கொண்டு தில்லைக்கு வந்து ஸ்ரீ அம்பலவாணர் திருமுன்பு திருமுறைப் பாடலுக்கு பண்ணும், கட்டளையும் வகுக்கப்பெற்றது. திருமுறைப் பாடலுக்கு பண்ணும், கட்டளையும் அமைத்து முடிந்தபின்னர் அந்த மதங்கசூடாமணி அம்மையார் அவர்கள் பண்ணிசையுடன் பாடக்கேட்ட சோழவேந்தன் பெருமகிழ்ச்சி யடைந்தார். பின்பு அருளோடு தேடித்தந்ததுடன் அதனை ஏழுதிருமுறையாக வகுத்தது திருவெருக்கத்தம்புலியூர் ஸ்ரீ மதங்க சூடாமணியைக் கொண்டு பண்ணிசையும், கட்டளையும் அமைத்துத் தந்துதவிய ஸ்ரீ நம்பியாண்டார் நம்பி அவர்களுக்கு அன்பும் பெருமைதரத்தக்க பலப் பரிசுப் பொருளைத் தந்து மிக பாராட்டி மகிழ்ந்தார்.

ஸ்ரீ நம்பியாண்டார் நம்பி வேந்தனிடம் விடைபெற்றுக் கொண்டு திருநாரையூர் அடைந்து திருத்தொண்டர் வரலாறும், திருநெறித் தமிழின் இருப்பிடத்தை உணர்த்தியருளிய ஸ்ரீ பொல்லாப் பிள்ளையாரால் தமக்குண்டான பேரன்பால் "திருவிரட்டை மணிமாலை" பாடிப்பரவினார். இறைவன் அருளால் ஞானப்பாலுண்டு திருப்பதிகம் பல வழங்கி உதவிய திருஞானசம்பந்தர் திருவடியில் அழுத்தமான அன்புற்று அவர்மேல் பல நூல்களைப் பாடினார். தில்லைப்பெருமான் திருவருளைவியந்து "கோயிற்றிருப்பண்ணியார் திருவிருத்தம்" என்றொரு நூலைப்பாடி பரவினார். திருத்தொண்டர் திருவந்தாதி, ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி, ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம், ஆளுடையபிள்ளைார் திருமும்மணிக்கோவை, ஆளுடையபிள்ளையார் திருவுலாமாலை ஆளுடையபிள்ளையார் திருக்கலம்பகம், ஆளுடையபிள்ளையார் திருத்தொகை, திருநாவுக்கரர் ஏகாதச மாலை முதலிய பத்து நூல்களைப் பாடியிருக்கின்றார்.



ஸ்ரீ கச்சியப்ப சிவாச்சாரியார்

சிவஸ்ரீ கச்சியப்ப சிவாச்சாரியார்

தொண்டைநாட்டில் காஞ்சி மாநகரத்தில் ஆதிசைவ மரபில் தோன்றியவர் ஸ்ரீ காளத்தியப்பசிவாச்சாரியார். இவர் காஞ்சியில் உள்ள குமரகோட்டத்தில் அர்ச்சகராகயிருந்தார். இவர் நெடுங்காலம் மகப்பேரின்றிக் குமரக்கோட்டத்து அருட்பெருங்கடலாகிய குமரக்கடவுளை விதிப்படி வழிபட்டு வந்தார். கந்தபெருமான் திருவருளால் அவருடைய மனைவியாரது மணிவயிறு வாய்த்தது. நாளும் கோளும் நன்னிலையுற்ற போது சிவஞானபானுவாக ஒருபுதல்வர் தோன்றினார். அவருக்கு கச்சியப்பர் எனப் பெயர் சூட்டினர்.

"விளையும் பயிர் முளையிலே" என்ற பழமொழிப்படி அவர் இளமைத் தொட்டு முருகப்பெருமானுடைய திருவடியில் இடையறாது அன்புசெய்து வளர்ந்தார்.

அவர் ஐந்தாம்வயதில் கல்விபயிலத் தொடங்கி வடமொழி தென்மொழி என்ற இரண்டு மொழிகளிலும் வல்லுநர்ஆனார். அன்பு அருள் வாய்மை தூய்மை பொறுமை அடக்கம், முதலிய நற்குணங்களனைத்தும் அவ்வருக்கு அணிகலன்களாக விளங்கி அணிசெய்தன.

ஏழாம் வயதில் உபநயனம் செய்யப்பெற்று வேதங்களை ஓதினார். வடமொழியில் வேதவேதாங்கங்களையும், தமிழில் இலக்கண இலக்கிய்ங்களையும் முற்றும் கற்று விற்பன்னராக விளங்கினார்.

பின்னர் சமயதீட்சைபெற்றுத் தமிழ் மறையாகிய தேவார திருவாசகங்களை ஓதுவாராயினார். அதன் பின் விசேஷ தீட்சை பெற்று சிவாகமங்களில் கிரியா காண்டங்களைக் கற்றிந்தார்.

அதன் பின் நிர்வாண தீட்சையும் ஆச்சாரிய அபிஷேகமும் பெற்று சைவாகமத்தின் ஞானகாண்டங்களை ஓதினார்.

கல்வியின் பயன் கருணைக்கடலாகிய இறைவனை இறைஞ்சுவதே எனத் தெளிந்தார். குமரகோட்டத்துள் எழுந்தருளி உள்ள கந்தக்கடவுளைச் சந்ததமும் ஐந்து வித சுத்திகள் செய்து, ஆறுகாலங்களிலும், ஏழுவகை பிறப்பு நீங்கும் பொருட்டு, எண்வகை மலர்கள் சாத்தி வழிபட்டுக் கொண்டு வந்தார்.

மூவருக்கும் தேவருக்கும் எட்டாத முழுமுதற்கடவுளாகிய முருகப்பெருமான் கச்சியப்பசிவாச்சாரியாருடைய கனவில்

காட்சியளித்தார். அன்பனே, ஸ்காந்த புராணத்து ஆறு சம்ஹிதையில் சங்கரசம்ஹிதையின் முதற்காண்டமாகிய சிவரகசிய காண்டத்திலுள்ள நமது சரித்திரத்தைக் "கந்தபுராணம்" எனப் பெயரிட்டுத் தமிழில் பெருங்காப்பியமாகப் பாடக்கடவாய்! என்று கட்டளையிட்டு "திகடசக்கர" என்று அடியெடுத்துக் கொடுத்து அருள் புரிந்தார்.

கச்சியப்பர் கனவு தெளிந்து எழுந்து அனலிட்ட மெழுகு போல் உள்ளம் உருக, உரோமம் சிலிர்ப்ப உரை குழற, கரையற்ற இன்பக்கடலில் மூழ்கினார். ஐயனே! பன்னிருகையனே! ஒன்றுக்கும் பற்றாத புழுத்த நாயினுங்கடையனாகிய தமியேனையும் ஒரு பொருள் படுத்து அருள்செய்த தேவரீரது திருவருள் தான் என்னே! என்று ஆனந்த கூத்தாடினார்.

நீராடி நீறாடி நித்யகருமங்களை முடித்துக்கொண்டு குமரக்கோட்டம் சென்று வடிவேல் முருகனை வழிபட்டபின் புராணம் பாடத் தொடங்கினார். நாள்தோறும் நூறு செய்யுட்கள் பாடி எழுதிய ஏட்டையும் எழுத்தாணியையும் அர்த்தயாமபூஜை முடிந்தபின் இறைவன் இணையடியில் வைத்துவிட்டு திருக்கதவை திருக்காப்பிட்டுக் கொண்டு தமது இல்லம் போவார். மறுநாள் வழிபடும் பொருட்டுக் கோயிலுக்குள் சென்று ஏட்டை எடுத்துப் பார்ப்பார். அதில் சில இடங்களில் திருத்தப்பட்டிருத்தல் கண்டு அதிசயம் அடைந்து கந்தவேளின் கருணையை நினைந்து கண்ணீர் சொரிந்தார். கந்தவேளே தன் கரமலரால் திருத்தியருளிய அற்புத செந்தமிழ்க் காவியமாகும் கந்தபுராணம். இவ்வாறு நூல்பாடி முற்றுப்பெற்றது. அரங்கேற்றம் நன்னாளைத் தேர்ந்தெடுத்தார். அரங்கேற்றத்துக்கு வருமாறு எல்லோருக்கும் அறிவித்தார்.

அன்பர்கள் காஞ்சிமாநகரத்தை அலங்கரித்தார்கள். மெழுகிக் கோலமிட்டு நறுமண மலர்மாலைகளைத் தொங்கவிட்டார்கள். வரிசையாகப் பல விளக்குகளை ஏற்றினார்கள். நறும்புகை கமழச்செய்தார்கள். சந்நிதியில் கச்சியப்பர் அமர்ந்து, பட்டாடை விரித்த பீடத்தின் மீது புராணத்தை வைத்து அர்ச்சனை செய்தார். பின்னர் "திகட சக்கரச்செம்முகம் ஐந்துளான்", என்னும் முதற்பாடலை ஒருமுறை படித்து திகழ்தசக்கரம் செம்முகம் ஐந்து உளான் என்று பாப் பிரிவினை செய்து, "விளங்கா நின்ற பத்துத் திருக்கைகளும் செவ்விய ஐந்து திருமுகங்களும் உள்ள சிவபெருமானுடைய" என்று பொருள் செய்தார்.

அந்த அவையின் கண் இருந்த தமிழ் புலவர்களில் ஒருவர் சுவாமிகள் திகழ்தசம் என்பது திகடசம் எனப்புணர்வதற்கு விதி தொல்காப்பியம் முதலிய நூல்களுள் ஒன்றிலேயும் இல்லையே என்றார்.

அதுகேட்ட கச்சியப்பசிவாச்சாரியார் ஐயா, தாங்கள் கூறியது சரி ஆனால், இம்முதலடி என் வாக்கன்று இது "இறைவன் திருவாக்கு" "முருகன் தந்த முதலடி" என்றார்.

அதுகேட்ட அப்புலவர் புன்முறுவல் செய்து முருகன் தந்த முதலடியாயின் அவரே வந்து இதற்கு சமாதானம் கூறட்டும் இல்லையேல் அரங்கேற்ற விடமாட்டேன் என்றார்.

கச்சியப்பசிவாச்சாரியார் "நாளை அரங்கேற்றுவோம்" என்று கூறினார். சபை கலைந்தது சிவாச்சாரியார் உண்ணாது உள்ளம் உலைந்து முருகனை நினைந்து உருகித் தரையில் கிடந்து துயின்றார். கந்தவேள் அன்பனே நீ வருந்தற்க சோழதேசத்தில் வீரசோழியம் என்று ஓர் இலக்கண நூல் இருக்கிறது. திகழ்தசம் திகடசம் என்று புணர்தற்கு விதி அந்நூலில் சந்திபடலத்தில் பதினெட்டாஞ் செய்யுளில் இருக்கின்றது. சோழ தேசத்துப் புலவன் ஒருவ்ன் அந்நூலை நாளைக்கு இங்கு கொணர்ந்து கொடுத்து விளக்குவான், என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினார்.

மறுநாள் ஆலயத்தில் அவை கூடியது கலகலவென்று புலவர்கள் உரையாடிக்கொண்டிருந்தார்கள் அங்கு முருகவேள் புலவர் வடிவில் தோன்றினார். தமது கையிலுள்ள வீரசோழியம் என்ற இலக்கண நூலை நீட்டினார். சந்திபடலத்தில் பதினெட்டாஞ்செய்யுளை காட்டினார். சந்தேகத்தை ஓட்டினார். வாதிட்டபுலவரும் மற்றைப் புலவர்களும் அச்சமும், அதிசயமும் அடைந்தார்கள். சோழநாட்டுப் புலவர் வீரசோழீயத்தைக் கச்சியப்பர் கரத்தில் கொடுத்து மறைந்தருளினார். இது முருகன் செய்த திருவிளையாடல் என்று கருதி உள்ளம் உருகிக் கண்ணீர் பெருகி அழுது கச்சியப்பருடைய தாள்களில் வீழ்ந்து தொழுது துதி செய்தார்கள்.

தடைசெய்த புலவர் கச்சியப்பரைப் பலமுறை பணிந்து முருகன் அருள்பெற்ற முனிவரே! தங்கள் பெருமை தெரியாது அரங் கேற்றத்தைத் தடுத்து குரங்காட்டமாடினேன். சிறியேன் செய்த பெரும் பிழையைப் பொறுத்தருள வேண்டும், என்று பலமுறை

வேண்டிகேட்டுக் கொண்டார் கச்சியப்பர் அவரை இருகரங்களாலும் எடுத்து மார்புறத்தழுவி, ஐயரே! தாங்கள் தடை செய்ததினாலன்றோ முருகன் திருவருளை எல்லோரும் உணர முடிந்தது "எல்லாம் ஈசன்செயல்", இறைவனை இங்கு அழைத்து எல்லோரும் கண்டு களிக்குமாறு செய்த தங்கள் செய்கைக்கு யாம்செய்யும் கைம்மாறு யாதுளது? என்று பாராட்டினார்.

சபையிலிருந்த அனைவரும் கச்சியப்பரை வணங்கி இனி புராணத்தை அரங்கேற்றலாம் என்றார்கள். நாள்தோறும் புராண அரங்கேற்றம் நடைபெற்றது தொண்டை நாட்டு இருபத்துநான்கு கோட்டத்து வேளாளப் பெருமக்கள் வந்தவர்கள் எல்லோருக்கும் உணவளித்தார்கள், ஆடைகள் வழங்கினார்கள். ஆயிரக்கணக்கான அன்பர்கள் புராணங்கேட்டுப் புனிதமடைந்தார்கள் கச்சியப்ப சிவாச்சாரியார் தினந்தோறும் புராணம் வாசித்து பதவுரை, பொழிப்புரை கருத்துரை, விளக்கவுரை, பதசாரங்கள், புராணத்தின் நுண்பொருள் இவைகளைக் கூறி, கற்கண்டுமலையில் தேன்மாரிபொழிவது போல் விரிவுரை செய்தார். ஓராண்டில் அரங்கேற்றம் முற்றுப்பெற்றது.

கச்சியப்பர் செவ்வேளைப் போற்றி புராணத் திருமுறையை அர்ச்சனை செய்து வணங்கினார். அங்கு குழுமிய அன்பர்கள் கந்தபுராணத்தையும், கச்சியப்பரையும் தந்த சிவிகையில் வைத்து வீதிகள் தோறும் திருவுலா வரச் செய்தார்கள். சிலர் வெண்சாமரம் வீசினார்கள். சிலர் குடைபிடித்தார்கள். கச்சியப்பர் வாழ்க! என்று திசைகள் செவிடுபட முழக்கினார்கள். திருவுலா முடிந்ததும் கந்தபுராணத்தை ஸ்ரீ முருகன் திருமுன் வைத்து வணங்கினார்கள். கச்சியப்பருடைய புகழ் திசையெட்டும் பரவியது புராணத்தின் பெருமையைப் புலவர்கள் பாராட்டிப் புகழ்ந்தார்கள். சிலர் சொல்லழகை நயந்தார்கள் சிலர் பொருளழகை வியந்தார்கள். பலர் பிரதிகள் செய்து எங்கும் நூலைப் பரப்பினார்கள்.

இந்த முதல்வன் புராணத்தை நித்தியம் ஓதுகின்ற மெய்யன்பர்கள் எல்லா நலன்களையும் பெறுவார்கள் என்பது சத்தியம்! சத்தியம்!! சத்தியம்!!!

வேலும் மயிலும் துணை!

ஆதாரம் : டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார் எழுதிய நூல்.



ஸ்ரீ அருணந்தி சிவாச்சாரியார்

சிவஸ்ரீ அருணந்தி சிவாச்சார்யார்

சைவசித்தாந்த சாஸ்திரத்திற்கு ஆணிவேராகிய சிவஞான சித்தியார் என்ற பெரும் நூலை சைவ உலகத்தவர்களுக்கு உருவாக்கி தந்தவர் சிவஸ்ரீ அருணந்தி சிவாச்சாரியார் ஆவார்.

சிவஸ்ரீ அருணந்தி சிவாச்சாரியார் பெண்ணையாற்றின் வடகரையில் உள்ள திருத்துரையூர் என்ற ஊரில் ஆதிசைவ குலத்தில் பிறந்தவர். இவருக்கு சகலாகமபண்டிதர் என்பது சிறப்பு பெயர் அருணந்திசிவம் என்பது தீட்சா நாமம். இவர் மெய்கண்ட தேவரின் மாணவர்.

அருணந்தி சிவாச்சாரியார் செய்த சிவஞான சித்தியார் பரபக்கம் சுபக்கம் என்று இரண்டு பெரிய பிரிவுகளைக் கொண்டது. இதுவே சைவ சித்தாந்த சாஸ்திரத்தின் முதன்மையான தலைமையான நூல்.

சிவஞானப் போதப் பொருளை விரித்துப் பிற்காலத்தவர் இனிது விளங்குமாறு நூல் செய்க! என்று அருணந்தி சிவாச்சாரியாருக்கு மெய்கண்டார்கட்டளை இட்டார். அதையொட்டி சிவஞான சித்தியார் உருவாயிற்று. அருணந்தி சிவாச்சாரியாரின் சிவஞானசித்தியார் சைவர்களுக்கு பிரமாண நூல். இந்நூல் சைவ ஆகமங்களுக்கு எல்லாம் உரையாளி போன்றது, என்று சைவப் பெரியவர்கள் எல்லோரும் கொண்டாடுகிறார்கள்.

சிவஞானசித்தியார், சிவஞான போத அவை அடக்க செய்யுளை அடிப்படையாகக் கொண்ட பரபக்கம், சிவஞான போதத்தின் பன்னிரெண்டு சூத்திரங்களின் பொருளை பன்னிரெண்டு அதிகாரங்களில் விரித்துரைக்கும் சுபக்கம் என்ற பிரிவுகளுடன் கூடிய சிவஞான சித்தியார், சைவர்கள் எல்லோரும் புகழ்ந்து போற்றும் சிவஞான சித்தியார் ஆதி சைவ குலத் தோன்றலான சிவஸ்ரீ அருணந்தி சிவாச்சாரியார் உலகம் முழுவதும் வாழும் சைவப் பெருமக்களுக்கு அளித்துள்ள இணையற்ற கொடை.

தமிழ் மொழியில் திருக்குறள் மிக உயர்வான ஒரு நூல், அதுபோல சைவநெறிக்குச் சிவஞானசித்தியார் மிக உயர்வான ஒரு படைப்பு எனவே தான் திருக்குறளுக்குப் பல உரைநூல் எழுதப்பட்டிருப்பதை போல சிவஞான சித்தியாருக்கும் பல உரைநூல் எழுதப்பட்டுள்ளன.

இந்தநூலின் சுபக்கப்பிரிவுக்கு மறைஞானசம்பந்தர் சிவாக்ரயோகி, ஞானப்பிரகாசர், நிரம்பஅழகியதேசிகர், மாதவச் சிவஞான யோகிகள், சுப்பிரமணிய தேசிகர் ஆகியோர் உரை செய்துள்ளார்கள். இவற்றை அறுவர் உரை என்று தொகுத்துக் கூறுவார்கள். இவர்களில் முதலாவது உரையாசிரியர் அருணந்தி சிவாச்சாரியாரால் உபதேசம் பெற்றவர்.

சிவஞான சித்தியாரில் சுபக்கம் 328 செய்யுள்களையும் பரபக்கம் 301 செய்யுள்களையும் கொண்டது. "சிவத்திற்கு மேல் தெய்வம் இல்லை சித்திக்கு மேல் சாத்திரம் இல்லை" என்ற பழமொழி சிவஞான சித்தியாரின் பெருமையை விளக்கும்.

இருபா இருபது என்ற சீரியநூலும் அருணந்தி சிவாச்சாரியார் இயற்றியது. அந்த நூலில் அவர் தமது ஆசிரியர் மெய்கண்ட தேவரை முன்னிலைப் படுத்திக் கேள்வி எடுப்ப, அதற்கு அவர் பதில் தரும் பாங்கிலே வெண்பா, அகவற்பா ஆகிய இருவகைப் பாக்களும் மாறிமாறி வர, சைவசித்தாந்தக் கருத்துகளை இருபது செய்யுட்களில் எடுத்து கூறுவதாக அவர் அமைத்திருக்கிறார்.

சைவத்திருமுறைகளில் இடம் பெறும் அரிய தொடர்களும் விளக்கமும், ஆணவத்தின் எட்டு இயல்பு மாயையின் ஏழு இயல்பு, கன்மத்தின் ஆறு இயல்பு, ஆகியவை பற்றிய நுட்பமான விளக்கங்களும் இருபாஇருபது நூலில் மிகத் தெளிவாக அருணந்திசிவாச்சாரியார் அளித்திருக்கிறார்.





ஸ்ரீமத் அகோர சிவாச்சார்யார்

ஸ்ரீமத் அகோர சிவாச்சார்யார்

ஸ்ரீ மத்கண்டாகார, நித்திய, வியாபக, ஸச்சிதானந்த சொரூப, சுத்த ஷாட்குண்ய, பரிபூர்ணபரமபதியாகிய பரமேச்வரன், ஆன்மாக்கள். உய்யும் பொருட்டு அருளிச்செய்த முதனூல் வேதம், சிவாகமம் என்னும் இரண்டுமாம்.

அவற்றுள் வேதம் அநேகார்த்தபோதகமாய் உலகர்களுக் கெல்லாம் உபயோகமாகிய பொது நூலென்றும். சிவாகமம் சிவதத்துவார்த்த ஏக போதகமாய் சத்தி நிபாதம் ஏற்பட்ட சிவோத்த மர்களுக்கு உபயோகமாகிய சிறப்பு நூலென்றும் வழங்கப்படும்.

வேதமே, பிராமணம் என்று கொண்டவர்கள் வைதீகர்கள் என்றும், சிவாகமமே பிரமாணம் என்று கொண்டவர்கள் சைவர்கள் என்றும், வேதம் அங்கமாகவும், சிவாகமம் அங்கியாகக் கொண்டவர்கள் வைதீக சைவர்கள் என்றும், சிவாகமம் அங்கமாகவும், வேதம் அங்கியாவும் கொண்டவர்கள் சைவ வைதீகர்கள் என்றும், வேத சிவாகமவாதிகள் நான்கு வகையினர் ஆவார்கள். இந்த நான்கு வகையினரில் வைதீக சைவர்களே, சித்தாந்திகள் என வழங்கப்படுவராய்ச் சிறப்புடையவர்கள் ஆவார்கள்.

யோதீத்ய சதுரோ வேதாநு ஷடங்க பத க்ரமாநு
புரான ந்யாய மீமாம்ஸா தர்மசாஸ்த்ர புரச்சராநு
ஸர்வாகமார்த்த தத்வக்ஞ ஸமயாந்தர தத்வசிது
பதிம்பாசாத் பசூன்சைவ தத்தத் லக்ஷண லக்ஷிதாநு
ஜ்ஞாத்வா ஜ்ஞாநேந தேநைவ ஜ்ஞாதாஹம் ஜ்ஞேய ஈஸ்வர:
ஜ்ஞாநஞ்ச ஸ்வாத்ம நிஷ்டஞ்ச ச்சிவேக விஷயம் மதம்
ஜ்ஞாத்வைத த்ரியம் வித்வாம் ஸ்தந்நிஷ்டோ நியதேந்திரிய:
ஸஜீவந்நேவ முக்தச்ச மோசகச் சிவ ஸம்மத:

எவன் நான்கு வேதங்கள், ஆறு அங்கங்கள், புராணம், இதிஹாஸம், தர்மசாஸ்திரங்கள் ஆகியவைகளை ஓதியுணர்ந்து ஸர்வாகமங்களினது தத்துவங்களையும் உணர்ந்தவனாய், அறிந்தவனாய், அவற்றின் தெளிபொருளாகிய பதியையும், பாசங்களையும், பசுக்களையும், அவற்றின் ஸ்வரூப தடஸ்த லக்ஷணங்களோடு கூடியவனாக அறிந்தவனே ஜீவன் முக்தன் ஆகிறான்.

சிவாகமம் இருபத்தியெட்டு என்பர்

காமிகம் யோகஜம் சிந்தியம் காரணம் த்வஜிதம் ததா
தீப்தம் சூக்ஷ்மம் ஸஹஸ்ராஞ்சாப்யம்சுமானு ஸுப்ரபேதகம்
விஜயம் சைவ நிஸ்வாஸம் ஸ்வாயம்புவ மதாநலம்
வீரஞ்ச ரௌரவம் சைவ மகுடம் விமலம் ததா
சந்தரந்ஜ்ஞானஞ்ச பிம்பஞ்ச ப்ரோத்கீதம் லலிதம் ததா
சித்தம் ஸந்தான ஸம்ஜ்ஞஞ்ச சர்வோக்தம் பாரமேஸ்வரம்
கிரணம் வாதுளம் சைவ அஷ்டாவிம்சதி ஸம்ஜ்ஞிதா:
ஏதேஷு பூர்வதசகம் சிவபேதம் ப்ரகீர்த்திதம்
ததா பராஷ்டாதசகம் ருத்ரபேதந்து நாமத :

இந்த இருபத்தியெட்டு ஆகமங்களுக்கும் நமது தென்னாட்டில் வழங்கி வரும் முக்கிய பத்ததிகள் பதினெட்டு ஆகும். அவற்றை செய்த சிவாச்சாரியார்கள் பதினெண்மர்கள் ஆவார்கள்.

தூர்வாஸ: பிங்களச்சைவ உக்ர ஜ்யோதி ஸுபோதக:
ஸ்ரீகண்டோ விஷ்ணுகண்டச்ச வித்யாகண்டச் ததைவச
ராமகண்டோ ஜ்ஞாநசிவோ ஜ்ஞாநசங்கர ஏவச
சோமசம்பு ப்ரஹ்மசம்பு ஸ்திரிலோசநசிவ ஸ்ததா
அகோரசிவ ஏவாத ப்ராஸாதசிவ ஏவச
ராமநாதசிவச்சைவ ஈசாநசிவ ஏவச
வருணாக்யசிவச்சைவ அஷ்டாதசாச்சார்ய புங்கவா :
ஏதைர் திவ்யைர் சிவாச்சார்யை : பத்ததி : பரிபாஷிதா :

மேற்கூறிய சிவாச்சாரியார்களால் இயற்றப்பட்ட பதினெட்டு பத்ததிகளில் ஆஸேது ஹிமாசலம் வரை சிவத்வஜர்கள் உள்ளிட்ட நான்கு வர்ணத்தார்களும் வைதீக சைவ சமயிகளாலும் அவரவர் அதிகாரத்திற்கேற்ப பிராமணமாகக் கொண்டு அனுஷ்டிக்கப்பட்டு வழங்கி வரும் அனுஷ்டாபக பத்ததி ஸ்ரீமத் அகோர சிவாச்சாரியார் பத்ததியே ஆகும்.

இப்பத்ததியின் கர்த்தாவாகிய அகோர சிவாச்சாரியார் தமிழ்நாட்டில் சோழ மண்டலத்தில் ஆதிசைவ குலத்தில் கௌண்டின்ய கோத்திரத்தில் அவதரித்து ஸர்வாத்மசம்பு சிவாச்சாரியாரிடத்தில் ஆறு அங்கங்களோடு, வேதங்களையும், சிவாகமங்கயையும் ஓதியுணர்ந்து தர்க்கம் வியாகரணம் மீமாம்ஸை வேதாந்தமெனும் சதுர்சாஸ்திரங்கள் யாவற்றையும் அறிந்தவராய் புராணம், இதிஹாஸம் என

கசடறப்பயின்று ஸர்வதந்திரங்களிலும் வல்லவராய் நைஷ்டிக பிர்ம்மசார்ய நிஷ்டராய் வாழ்ந்து வந்தார்.

ஸ்ரீ மத் அகோர சிவாச்சாரியாரின் குருநாதர்

இவர் தமது முன்னை தவத்தால் ஸர்வக்ஞராகிய தூர்வாச முனிவரை உபாஸித்து அவருக்கு அனுகூலமாக, அவருக்கு உகந்த கைங்கர்யங்கள் செய்து வரலாயினர். இவரோடு தூர்வாச முனிவர் தமது சிவஸ்தல யாத்திரையில் ஒரு சமயம் சிதம்பர ஸ்தலத்திற்கு ராத்ரிவேளையில் வந்து சேர்ந்தார்.

சிதம்பரஸ்தலம் ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பிகையை காண, ஜீவ கோடிகளுக்கெல்லாம் ஸ்ரீ நடராஜ பெருமான் சித்ஸபை நடுவில் நின்று பரமானந்த நடனத்தை அனுக்ரஹம் செய்ததற்காக பொற்சபையில் நடராஜரது சிரம பரிஹாரார்த்தம் பூரி நிவேதனமாக பாவடகமென்னும் பாவாடை அன்னத்தைப் பரமபக்தியோடு ஸமர்ப்பித்தலெனும் மங்களாசரணத்தாலும் நிரந்தரமாய் நிகழும் வைதீக ஸமாராதனை, சைவ மாஹேஸ்வர பூஜைகளாலும், அனைத்து ஜீவர்களுக்கும் அஹோராத்ரம் (இரவும், பகலும்) எந்த சமயத்திலும் அன்னதானம், ஸ்வர்ணதானம் இரண்டும் வேண்டுவோர் வேண்டியவாறு அளித்து நின்றருளும் ஐஹிக பரம ஔதார்யத்தை கேள்வியுற்றும்

திருநாவுக்கரசர் திருக்குறுந்தொகையில்

"அன்னம்பாலிக்குந் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம்பாலிக்கு மேலு மிப்பூமிசை" என்று பாடியுள்ளார்.

சிதம்பராலயத்தின் மேற்கு திசையில் பதஞ்சலி முனிவர் ஆசிரமமாகிய ஸ்ரீ அனந்தேச்வரன் கோயில் பக்கத்தில் வந்து நின்று கொண்டு, எல்லோரும் உறங்கிய அர்த்தராத்திரி வேளையில் வீதியில் நின்று கொண்டு அம்மா! பிக்ஷைபோடு! என்று உரத்த குரலில் மூன்று முறை ஓலமிட்டு நின்றார்.

அந்த அர்த்தராத்திரி வேளையில் யார்தாம் விழித்தெழுந்து பிக்ஷைபோட முடியும்? ஒருவரும் பிக்ஷைபோட வராததைக் கண்டு மூலாதாரம் முதல் த்வாதசாந்த பர்யந்தம் வியாபகமாயும் அதற்கும் அப்பால் உன்மனாதீத பரமானந்த மீதான வெளியாகிய சிதம்பரம் முழுவதும் பரவும் அளவிற்கு அவருக்கு கோபம் மேலிட்டது.

இதை உணர்ந்த அறம் வளர்த்த நாயகியாம் ஸ்ரீசிவகாமசுந்தரி அம்பிகை அந்தணப் பெண் வடிவில் வந்து பிச்சையிட்டருள, அதனை தூர்வாச முனிவர் ஏற்று உட்கொண்டு அப்பிரஸாத மஹிமையால் பிக்ஷையிட்டு அருளியவர் ஸ்ரீ சிவகாமியம்மை என்பதை உணர்ந்து தெரிந்து கொண்டு பக்தி பரவசராக ஆனந்தபாஷ்பம் பொழிந்து, ஸ்தோத்திர நமஸ்காரங்களால் வழிபட்டு பணிந்து நிற்குங்கால் அம்பிகை அவருக்குப் பிரசன்னமாக தோன்றி, தூர்வாச முனிவரை நோக்கி உனக்கு சிஷ்யனாகிய இந்த அகோர சிவனைப் பரிபக்குவ பக்தகோடிகளுக்குச் சிவ தீக்ஷை செய்யும் ஆச்சார்யனாகப் பட்டாபிஷேகம் செய்வித்து இந்த ஸ்தலத்தில் இருக்க வைப்பாயாக! என்று கட்டளையிட்டு அருள்பாலித்து மறைந்தருளினார்.

அம்பிகையின் கட்டளைப்படியே தூர்வாஸ முனிவர் ஸ்ரீ அனந்தேஸ்வரன் கோயிலுக்கு தென்கிழக்கு திசையில் மடங்கட்டி ஸ்ரீமுக வருடம் வைகாசி மாதம் சுக்ல பக்ஷம் பஞ்சமி திதி புஷ்ய நக்ஷத்திரம் குருவாரம் சுபயோக சுபவேளையில் ஸ்ரீமத் அகோர சிவனுச்கு ஆச்சார்ய பட்டாபிஷேகம் செய்து வைத்து அவரைச் சிதம்பராலயத்திற்கு அழைத்து வந்து சிற்சபையில் திருவுடை யந்தணர்களாகிய தீக்ஷிதர்களைக் கொண்டு சபாநாதருக்கு ஆராதனம் செய்வித்து ஸ்வாமி நிர்மால்ய சங்கு தீர்த்தத்தால் பஞ்சாக்ஷரப்படியில் வைத்து அபிஷேகம் செய்வித்து, அரங்கேற்றி வைத்து, ஸ்ரீ அகோர சிவனை அம்மடாலயத்தின் மூல பீடாதிபதியாகயிருந்து, ஆத்மார்த்தம், பரார்த்தம் ஆகிய வைதீக, சைவ சித்தாந்த பத்ததிகளையும், உரைகளையும் செய்து, நான்கு வர்ணத்துப் பரிபக்குவ சீடர்களுக்கும் தீக்ஷை முதற்கொண்ட ஸம்ஸ்காரங்களைச் செய்து லோகாச்சார் யனாயிருக்கக் கடவாய்! என்று கட்டளையிட்டு சித்சபாநாயகரையும் தரிசித்துக் கொண்டு கைலாசத்திற்கு எழுந்தருளினார் என்று "சிதம்பரஸாரம்" என்னும் கிரந்தத்தில் "ஸ்ரீ அகோரசிவாச்சார்ய விருத்தாந்தம்" சொல்லப்பட்டிருக்கின்றது.

ஸ்ரீமத் அகோர சிவாச்சாரியாரின் நூல்கள்

ஆசார்யார் தூர்வாஸ முனிவர் சிஷ்ய பரம்பரையில் வந்த ஸ்ரீமத் அகோர சிவாச்சார்யார் வடமொழியில் இயற்றியருளிய நூல்களும், உரைகளும்

1. ஸர்வஜ்ஞானோத்தரவிருத்தி
2. ஸர்வவித்யேசினி

3. தத்துவப்பிரகாசிகா விருத்தி
4. தத்துவ ஸங்கிரஹ லகு டீகா
5. தத்துவத்ரய நிர்ணய விருத்தி
6. ரத்ன த்ரயோல்லேகினி
7. போக காரிகா வ்யாக்யா
8. நாத காரிகா வ்யாக்யா
9. மிருகேந்திர விருத்தி தீபிகை
10. கிரியாக்ரம த்யோதிகா
11. பக்தப் பிரகாசம்
12. நாட்யப்யுதயம் என்ற கிரந்தங்களும்

1. ஆச்சார்ய ஸாரம், 2. பாஷாண்டாப ஜயம் என்னும் இரண்டு காவ்யங்களும் என பலப்பல இயற்றியுள்ளார். இவற்றுள் ஆத்மார்த்தம், பரார்த்தம் ஆகிய பூஜைகளின் கிரியையும், தீக்ஷை உத்ஸவம் போன்றவற்றின் கிரியா விபரங்களையும் தாங்கி உயர்ந்து, சிறந்து விளங்குவது ஸ்ரீமத் அகோர சிவாச்சார்யாரின் "கிரியாக்ரம த்யோதிகா" என்னும் நூல் ஆகும்.

ஸ்ரீமத் அகோர சிவாச்சார்யாரின் காலம்

"க்ரியாக்ரம த்யோதிகா" என்னும் இந்தக் கிரந்தம் கலியுகத்தில் சாலிவாஹன சகாப்தம் ஆயிரத்தெண்பதில் (1080) (கி.பி.1158)-ல் இயற்றப் பெற்றது என்றும், அவரது இப்பத்ததியின் முடிவுரை வசனத்திலிருந்து தெரிய வருகிறது.

இந்நூலுக்கு நிர்மலமணிதேசிகர் "ப்ரபா" என்னும் வியாக்யானம் எழுதியுள்ளார்.



ஆதிசைவ சான்றோர்கள்

1.	சிவஸ்ரீ சைவசித்தாந்த S. ஈசான சிவாச்சாரியார்	பழனி
2.	சிவஸ்ரீ ரா.பஞ்சாபகேச சிவாச்சாரியார்	திருத்துறைப்பூண்டி
3.	சிவஸ்ரீ அ. சுந்தரேச சிவாச்சாரியார்	திருவையாறு
4.	சிவஸ்ரீ பட்டம் கி. இராமலிங்க சிவாச்சாரியார்	திருவண்ணாமலை
5.	சிவஸ்ரீ ஐயாமணி சிவாச்சாரியார்	திருவாடானை
6.	சிவஸ்ரீ S. சுவாமிநாத சிவாச்சாரியார்	தருமபுரம்
7.	சிவஸ்ரீ காசி. வைத்யநாத சிவாச்சாரியார்	ஆடுர்
8.	சிவஸ்ரீ T.S. சாம்பமூர்த்தி சிவாச்சாரியார்	சென்னை
9.	சிவஸ்ரீ வை. விஸ்வநாத சிவாச்சாரியார்	அல்லூர்
10.	சிவஸ்ரீ வி.க. அருணாசல குருக்கள்	காஞ்சிபுரம்
11.	சிவஸ்ரீ க. விஸ்வநாத சிவாச்சாரியார்	காஞ்சிபுரம்
12.	சிவஸ்ரீ S. சுந்தரேச சிவாச்சாரியார்	மாதர்வேளூர்
13.	சிவஸ்ரீ இர. பாலசுப்ரமண்ய குருக்கள்	சாத்தான்குடி
14.	சிவஸ்ரீ T.K. சுப்ரமண்ய சிவாச்சாரியார்	திருநாரையூர்
15.	சிவஸ்ரீ குருஜி D. சுவாமிநாத சிவாச்சாரியார்	மாங்காடு. திருப்பாலைவனம்
16.	சிவஸ்ரீ சாளுவ க. ராஜப்பா குருக்கள்	காஞ்சிபுரம்
17.	சிவஸ்ரீ வை. ஜகதீஸ சிவாச்சாரியார்	ஆனந்தாண்டவபுரம்
18.	சிவஸ்ரீ T.R. விஸ்வநாத குருக்கள்	திருக்கடையூர்
19.	சிவஸ்ரீ சு. கல்யாணசுந்தர சிவாச்சாரியார்	இலுப்பபட்டு
20.	சிவஸ்ரீ T.K. பாலாமணி சிவாச்சாரியார்	திருக்கண்ணங்குடி
21.	சிவஸ்ரீ K. பிச்சை சிவாச்சாரியார்	பிள்ளையார்பட்டி
22.	சிவஸ்ரீ S. கண்ணப்ப சிவாச்சாரியார்	திருவிடைமருதூர்
23.	சிவஸ்ரீ S. சபேச சிவாச்சாரியார்	கோனேரிராஜபுரம்

24. சிவஸ்ரீ D. சோமசுந்தர சிவாச்சாரியார் திருப்பாலைவனம்

25. சிவஸ்ரீ Dr. S. உமாபதி சிவாச்சாரியார் காஞ்சிபுரம்

26. சிவஸ்ரீ A.S. சுந்தரமூர்த்தி சிவாச்சாரியார் அவிநாசி

27. சிவஸ்ரீ E.S. ஏகாம்பர சிவாச்சாரியார் மண்ணடி, சென்னை

28. சிவஸ்ரீ கயிலை இரா. நாகநாத சிவாச்சாரியார் லண்டன்

29. சிவஸ்ரீ ர. கல்யாணசுந்தர குருக்கள் இலுப்பூர்

30. சிவஸ்ரீ G. நடராஜ சுந்தர சிவாச்சாரியார் திருநாரையூர்

31. சிவஸ்ரீ (குரு) T.A. தெக்ஷிணாமூர்த்தி சிவாச்சாரியார் திருவெண்காடு

32. சிவஸ்ரீ A.V. சுவாமிநாத சிவாச்சாரியார் மயிலாடுதுறை

33. சிவஸ்ரீ N. விஸ்வநாத சிவாச்சாரியார் திருகோலக்கா

34. சிவஸ்ரீ டாக்டர் சா.ப. சபாரத்ன சிவாச்சாரியார் சென்னை

35. சிவஸ்ரீ S. பாலசுப்ரமண்ய சிவாச்சாரியார் பழநி

36. சிவஸ்ரீ திருக்கயிலை K.Y. சுந்தரேச சிவாச்சாரியார் கும்பகோணம்

37. சிவஸ்ரீ S. அருணாசலம் B.A.,B.L., கடலூர்

38. சிவஸ்ரீ அச்சுவேலி ச. குமாரசாமி குருக்கள். இலங்கை

39. சிவஸ்ரீ க. சுவாமிநாத சிவாச்சாரியார் திருவாவடுதுறை

40. சிவஸ்ரீ நா. பாலச்சந்திர சிவாச்சாரியார் மயிலாடுதுறை

41. சிவஸ்ரீ G.S.V. கணேச சிவாச்சாரியார் சேலம்

42. சிவஸ்ரீ நா. சுவாமிநாத ஈசான சிவாச்சாரியார் அழகாபுத்தூர்

43. சிவஸ்ரீ K.K. உமாபதி சிவாச்சாரியார் கோவைகுறிச்சி

44. சிவஸ்ரீ V.M. குப்புசாமி குருக்கள்
சிவஸ்ரீ V.M. முத்துகிருஷ்ண குருக்கள் சாத்தம்பூர், ஊத்துகுளி

45. சிவஸ்ரீ B. அர்த்தநாரீஸ்வர சிவம் பாண்டிச்சேரி

46. சிவஸ்ரீ இஷ்டசித்தி க. ஏகாம்பர குருக்கள் காஞ்சிபுரம்

பழனி - சைவ சித்தாந்த S. ஈசான சிவாச்சாரியார்
(சுப்பு ரத்தின குருக்கள்)

தமிழ்நாட்டு தவப்புதல்வராக கொங்குநாட்டில் உள்ள சென்னிமலையில் சிவஸ்ரீ காவேரி சிவசுப்ரமணிய குருக்களுக்கும் மாதுஸ்ரீ பாக்யலக்ஷ்மி அம்மையாருக்கும் 1901 ஆம் ஆண்டு சென்னிமலையில் பிறந்தார். தனது ஏழாவது வயதில் தந்தையாரால் உபநயனம், சமயதீக்ஷை செய்விக்கப் பெற்றார்.

வேத சிவாகமங்களை தேவக்கோட்டை சிவாகம சங்க பாடசாலையில் கண்டதேவி சிவஸ்ரீ. காளீஸ்வர சிவாச்சாரியாரிடம் பயின்றார். தமிழ் இலக்கணம் மற்றும் சைவசித்தாந்த பாடங்களை தூத்துகுடி சிவஸ்ரீ. முத்தைய்யா பிள்ளையிடம் கற்றுணர்ந்தார். பின்னர் சென்னிமலை ஆண்டவன் அருளால் அன்பு அகலாத மனைவியை மணம் கொண்டார். நிர்வாணதீட்சை, ஆச்சார்யாபிஷேகம் செய்து கொண்டுத் தினம் ஆத்மார்த்தபூஜையில் நித்யாக்னி ஹோமங்கள், செய்து பூசிப்பார். மூன்று தவப்புதல்வர்களை பெற்றார். 1. திருநாவுக்கரசு சிவம்,, 2. அருணந்திசிவம், 3. மெய்கண்டசிவம், ஆகியோராகும்.

பழநியிலும், சென்னிமலையிலும் வேதசிவாகம பாடசாலை நிறுவி தலைமை ஆசிரியாராக இருந்து பல மாணவர்களை உருவாக்கினார்.

வேதசிவாகமம், திருமுறைகள், புராணங்கள், சைவசித்தந்த சாத்திரம் போன்றவற்றின் அரியகருத்துக்களை எளிமையாக சொற்பொழிவு செய்வதில் சிறந்தவராக திகழ்ந்தார்.

"யான் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம்" என்பதற்கிணங்க இவர் அநேக சிவாச்சாரியார் மற்றும் சைவ அன்பர்களுக்கு சிவதீட்சை செய்துள்ளார். அவர்களில் மிக முக்கியமானவர்கள், தமிழக மக்களால் 64வது நாயன்மாராக போற்றி வழிபடுகின்ற குஹஸ்ரீ திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள், தமிழ்கீழ்கடல் ராய. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள், செட்டிநாடு தேவக்கோட்டை நகர மக்களால் குருவாக போற்றப்படுகின்ற பாலகவி இராமநாதன் செட்டியார் (தத்புருஷ தேசிகர்), திருமிகு சொ.மீ. சுந்திரம், திருநெல்வேலி அருணாசலம்பிள்ளை போன்றோர் ஆவார். சென்னிமலை, ஈரோடு, பழனி, திருநெல்வேலி, சங்கரன் கோயில், தூத்துகுடி போன்ற பல ஊர்களில் சிவதீட்சை பெற்று பயன் பெற்றவர்கள் பலர் உள்ளனர்.

பல ஆலயங்களுக்கு ஸர்வசாதகராகவும் ஸர்வபோதகராகவும் இருந்து கும்பாபிஷேகங்கள் நடத்தி உள்ளார். குறிப்பாக சேலம் ஸ்ரீ சுகவனேஸ்வரர் ஆலயம், பழனி ஸ்ரீ தண்டாயுதபாணி ஆலயம், திருவாவினன்குடி, (பக்தவத்ஸலம் முதலமைச்சாரக இருந்த காலத்தில் நிகழ்ந்தது) மற்றும் ஈரோடு, கோபி செட்டிபாளையம், பாரியூர், பவானி, பேரூர் மற்றும் கொங்குநாட்டு திருத்தலங்கள் என பல ஆலய கும்பாபிஷேகங்களும், பழனியில் 33 குண்டங்கள் அமைத்து சிறப்பான முறையில் கும்பாபிஷேகத்தையும் நடத்தியுள்ளார்.

1940 ஆம் ஆண்டுக்கு முன்னர் காசியில் தங்கி அங்கே ஓர் குருநாதர் மூலம் ஞானசாத்திர பயிற்சிகள் பெற்று காசி விஸ்வநாதர் திருவருள் பெற்றார். நேபாளம் வரைசென்று பல அருளாளர்களையும், பசுபதி நாதரையும் தரிசித்தார்.

1941 ஆம் ஆண்டு தருமையாதீனத்தில் நடந்த சைவசித்தாந்த மாநாட்டில் தலைமை தாங்கி விரிவுரை செய்து "சிவஞான போதசூத்திரத்திற்கு விளக்கம்" என்ற நூலை எழுதி வெளியிட்டார். அப்போது தருமை ஆதீன 25வது குருமஹா சன்னிதானம் கயிலை குருமணி சுப்ரமணிய தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் "சைவ சித்தாந்த சரபம்" என்ற விருதினை வழங்கினார். அப்போது சைவசித்தாந்தத்தை மரபு வழி கற்றுக் கேள்வி பெற்ற இவர் தாம் கற்றவற்றை அனுஷ்டானத்தில் கொண்டு ஒழுகுபவர் ஆதலால் இவர்தலைமை சிறப்பு பெற்றது எனவும் பாராட்டினார்.

கோவையிலிருந்து வெளிவந்த "சிவாகமவித்யா" என்ற மாத இதழுக்கு துணை ஆசிரியராக பணியாற்றி பல கட்டுரைகள் எழுதி உள்ளார். "சைவ அனுஷ்டானவிதி" என்னும் நூலை சைவ உலகத்திற்கு அளித்துள்ளார்.

ஆகம பயிற்சி இல்லாத அர்ச்சகர்களை கோவில் பணியிலிருந்து வெளியேற்ற அரசு ஆணையிட்ட போது அறநிலையத்துறை கமிஷனர் அவர்களை சந்தித்து பாதிக்கப்பட்ட அர்ச்சகர்கள் நிலையை எடுத்துக்கூறி, அரசு ஆணையை திரும்பப்பெறுமாறு செய்து, ஆலய வருமானத்திலிருந்து, ஆகம பாடசாலை நடத்தியும், பயிற்சி வகுப்புகள் நடத்தியும் ஆகமப் பயிற்சி கொடுக்க வேண்டும், என கமிஷனருக்கு ஆலோசனை கூறி அதன்படி அறநிலையத்துறையின் பொறுப்பில் பழநியில் ஒரு ஆகமப்பாடசாலை நிறுவி அதில் தானே தலைமை ஆசிரியராக பணிபுரிந்து பல அர்ச்சகர்களை உருவாக்கினார்.

சென்னிமலையில் "கலாஞான சங்கம்" அமைத்து அதன் மூலம் சாத்திர, தோத்திர கருத்துகளை தமிழக தலைசிறந்த சான்றோர்களை வரவழைத்து சொற்பொழிவு கூட்டங்கள் நடத்தியுள்ளார். இன்னும் பல அரிய, அற்புத விஷயங்கள் இவரைப் பற்றி பல சீடர்கள் அறிந்திருப்பார்கள். அவர்கள் தற்போது இவ்வுலகில் இல்லாத படியால் தெரிவிக்க முடியவில்லை.

பல விருதுகளும் பாராட்டுகளும் பெற்ற இவர் தமது 62-வது வயதில் 10-4-1963ல் சிவசாயுஜ்யம் அடைந்தார்.

வாழ்க ஆதிசைவர்கள்! வாழ்க அவர்கள் தம் தொண்டு!

திருத்துறைப்பூண்டி - சிவஸ்ரீ ரா. பஞ்சாபகேச சிவாச்சாரியார்

திருத்துறைப்பூண்டி ஸ்ரீபவ ஔஷதீஸ்வரர் சிவாலய பரம்பரை அர்ச்சகர் சிவஸ்ரீ. ராமஸ்வாமி சிவாச்சாரியார் அவர்களுக்கு 24-9-1898 வருடம் பிறந்தார். 12-ம் வயதில் தனது தந்தையார் காலமான பிறகு தனது அண்ணா சிவஸ்ரீ சுப்பையா குருக்கள் அவர்கள் மாயூரம் வேத சிவாகம பாடசாலையில் இவரை சேர்த்து சர்வ சாஸ்த்திர விசாரதா எனும் பட்டம் பெற செய்தார்.

சிவஸ்ரீ. வைத்யநாத சிவாச்சாரியாரிடம் சப்த காண்ட யஜுர்வேத அத்யாயனம், மூலாகம வசனங்களுடன் நித்ய நைமித்திக உத்ஸவம் காரிகை பிரயோகங்கள், சாஸ்திரம் மற்றும் தர்க்கம், வியாகரண சாஸ்த்திரம் காவ்ய நாடகம் பயின்று கவிதை, ஸ்லோகங்கள் இயற்றும் ஆற்றலும் பெற்றார்.

1930-ல் தேவக்கோட்டை சிந்தாந்த பரிபாலன சங்கம் பொறுப்பு ஆசிரியராகவும் திகழ்ந்தார். கீழ்வேளூர், திருவண்ணாமலை, காஞ்சீபுரம் முதலிய பல தலங்களில் சிவாச்சாரியார்களிடம் இருந்த சுவடிகளை சேகரித்து 28 ஆகமங்களையும், அதன் நான்கு பாதங்களையும் சேகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டு, சுவடிகளை படி எடுத்து தேவக்கோட்டை சித்தாந்த சபை நூலகத்தில் வைத்துள்ளார். அவற்றில் கிரணாகமம் 4 பாதங்கள் 1932-ல் வெளியிடப்பட்டது. "கிரணாகம மஹாதந்த்ரம்" என்ற நூலும் வெளியிட்டுள்ளார். சைவபூஷணம், சைவசிந்தாந்தபரி பாகைஷ மூலமும் தமிழ் உரையும், பரார்த்த நித்ய பூஜா விதி எனும் நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். இவைதவிர பல புத்தகங்களை எழுதி தேவக்கோட்டை சிவாகம சங்கத்தில் வெளியிட்டுள்ளார். தேவக்கோட்டை ஆலால சுந்தரர் சங்க மாதவெளியீடு, திருச்செந்தூர்

சிவஸ்ரீ முத்தைய்யா பட்டர் மாத வெளியீடுகளில் பலகட்டுரைகள் எழுதியுள்ளார்.

அம்பகரத்தூர் சிவஸ்ரீ நாகநாத சிவாச்சாரியாரின் மூத்தகுமாரி ஸ்ரீமதி கமலாம்பாளை திருமணம் செய்து கொண்டார். தமது குரு சிவஸ்ரீ வைத்யநாத சிவாச்சாரியாரிடம் தீக்ஷைப் பெற்று தத்புருஷ சிவம் எனும் தீக்ஷாநாமம் பெற்றார்.

1935-ம் வருடம் சென்னை ஆர்.சி.பி.ராமஸ்வாமி அய்யர், கவர்னர், பூண்டி வாண்டையார், பாப்பா நாடு ஜமீன் இவர்கள் தலைமையில் சிவாகம வகுப்பு திருவையாறு அம்மன் அக்ரஹாரத்தில் துவங்கியது.

திருவையாறு ஸ்ரீராஜா வேதபாடசாலையில் தலைமை சிவாகம ஆசிரியராக 40 ஆண்டுகாலம் பணியாற்றினார்.

அச்சுவேலி சிவஸ்ரீ. குமாரசாமி சிவாச்சாரியார் புத்தக வெளியீடுகளில் புத்தக பரிக்ஷாதிகாரியாக இருந்து வந்துள்ளார். தமது கட்டுரை மற்றும் சந்தேக விளக்கங்களையும் வெளியிட்டுள்ளார்.

தருமை ஆதீனம் 25-ம் சன்னிதானம் விழாவில் ஆகமவசன நித்ய பூஜாலக்ஷண சங்க்ரஹம் என்ற நூல் பரிசோதகராக திகழ்ந்தார். அல்லூர் வேதசிவாகம பாடசாலையில் பல ஆண்டுகள் பரிக்ஷாதி காரியாக இருந்துள்ளார்.

பாண்டிச்சேரி பிரஞ்ச் இன்ஸ்டியூட் ஆப் இண்டாலஜி என்.ஆர்.பட் அவர்களுக்கு ஓலைச்சுவடிகளை உபசரித்து பல ஆகம நூல்கள் வெளிவர உதவியுள்ளார்.

காஞ்சி ஸ்ரீமட மஹா ஸ்வாமிகளால் நடத்தப்பட்ட வியாஸ பாரத வேதசிவாகம வைஷ்ணவ சிற்பகலா வித்வத் ஸதஸில் இளையாத்தங்குடியிலும் 1962-லும், 1963-ல் மதுரையிலும் 1964-ல் காஞ்சிபுரத்திலும் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்.

திருவாடனை அய்யாமணி சிவாச்சாரியார் தலைமையில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் சிவாகம குறுகியகால பயிற்சி வகுப்பு ஆசிரியராக இருந்துள்ளார்.

தமிழகமெங்கும் பல கும்பாபிஷேகங்களுக்கு சர்வசாதகராக இருந்து சிறப்பித்துள்ளார்.

18-01-1979 ல் சிவசாயுஜ்யத்தை அடைந்தார்.

அவர் புகழ் ஓங்குக.

திருவையாறு சிவஸ்ரீ அ. சுந்தரேச சிவாச்சாரியார்

திருவையாறு சிவஸ்ரீ அய்யாசாமி குருக்கள் மாதுஸ்ரீ சங்கர பார்வதி தம்பதிகளுக்கு 15-07-1919ம் ஆண்டு காச்யப கோத்ரத்தில் சிவஸ்ரீ சுந்தரேச சிவாச்சாரியார் பிறந்தார். வேத பாடங்களை திருவையாறு டாக்டர். சுப்ரமணிய சாஸ்திரிகளிடமும், ஆகம பாடங்களை மெலட்டூர் சிவப்ரிய ஸமஸ்கிருத பாடசாலையிலும், திருவையாறு அரசு கலைக்கல்லூரியிலும் பயின்றார்.

திருவையாறு அரசு கல்லூரியில் சமஸ்கிருத பேராசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். சைவ சித்தாந்த பாடங்களை பழனி சிவஸ்ரீ எஸ். ஈசான சிவாச்சாரிய சுவாமிகளிடமும், திரு. முத்து சு. மாணிக்கவாசக முதலியாரிடமும் கற்றுணர்ந்தார்.

தமிழகத்தில் 300 கும்பாபிஷேகங்களுக்கு மேல் கலந்து கொண்டார். "சதரத்ன சங்க்ரஹம்", "திரிபுர விஜய சம்பு" என்ற இரண்டு நூல்களையும் மொழி பெயர்ப்பு செய்துள்ளார்.

"சிவமூர்த்தங்கள்", "சைவகால விவேகம்" என்ற நூல்களை எழுதி உள்ளார். இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை சார்பாக "கவிகண்ட சித்தாந்தம்", "பகவத்கீதை" என்ற தலைப்பில் சென்னை பல்கலை கழகத்தில் சொற்பொழிவு ஆற்றினார். திருச்சி அகில இந்திய வானொலியில் "வால்மீகியும், காளிதாஸனும்", "காளிதாஸ காவியத்தில் உலகநீதி" போன்ற தலைப்பில் உரையாற்றி உள்ளார்.

"வரதட்சனை கொடுமை" என்ற சமஸ்கிருத நாடகம் எழுதி இயக்கினார்.

"சாகுந்தலம்", "மாளவிகானி மித்ரம்" போன்றவற்றை சமஸ்கிருத நாடகமாக தஞ்சை பால கணபதி வித்யாலயாவில் இயற்றி இயக்கினார்.

தவத்திரு. குன்றக்குடி அடிகளாரிடம் "சிவநெறிச்செம்மல்" என்ற விருதுடன் பொற்பதக்கமும் பெற்றார். இவருக்கு 1 புதல்வரும் 1 புதல்வியும் உள்ளனர்.

அவர் புகழ் ஓங்குக.

திருவண்ணாமலை சிவஸ்ரீ பட்டம் கி. இராமலிங்க சிவாச்சாரியார்

பஞ்ச பூத தலங்களில் இறைவன் அக்னி வடிவமாகி அருளாட்சி புரிகின்ற அருள்மிகு உண்ணாமுலை உடனருள் அண்ணாமலையார் ஆலய தலைமை சிவாச்சாரியாரான பெரியபட்டம் வி.கிருஷ்ணசாமி குருக்கள் - நாகலெக்ஷ்மி அம்மாள் தம்பதிகளுக்கு ஆனந்த வருஷம், கார்த்திகை மாதம் 11-ம் தேதி பூரட்டாதி நட்சத்திரம், 26-11-1914 அன்று காச்யப கோத்திரத்தில் பெரிய பட்டம் சிவஸ்ரீ கி. இராமலிங்க சிவாச்சாரியார் பிறந்தார். இளமை வயதிலிருந்தே பூஜை வழிபாடுகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். நாட்டுக் கோட்டை நகரத்தார் வேத பாடசாலையில் வேதம், சாஸ்த்திரம் பயின்றார். தமது பெரியதந்தை சிவஸ்ரீ வெ.சோணாத்ரி குருக்கள் அவர்களிடம் ஆகமம் பயின்று, அவராலேயே சமய விசேஷ, நிர்வாண தீக்ஷையும், ஆச்சார்யா பிஷேகமும் செய்யப்பெற்று, "தத்புருஷசிவம்" எனும் தீக்ஷா நாமத்துடன் ஸ்ரீ அண்ணாமலையார் ஆலய தலைமை அர்ச்சகராக இருந்து, வேத சிவாகம பாடசாலை தலைமை ஆசிரியராக பணியாற்றி, பல சிவாச்சாரியார்களை முறையாக பயிற்றுவித்து அர்ச்சகர் பணி செய்ய வழிவகுத்தார். சுமார் 150 நபர்களுக்கு மேல் சிவதீக்ஷை செய்து வைத்துள்ளார்கள். இவருடைய காலத்தில் ஸ்ரீ அண்ணாமலையார் ஆலயத்தில் பள்ளியறை மேரு புனருத்தாரணமும், புதிய பராசக்தி அம்பாள் கும்பாபிஷேகமும், முதன்முதலில் சுவாமிக்கு சஹஸ்ரகலசாபிஷேகமும் தன் சொந்த செலவிலேயே செய்து வைத்தார். 1976-ல் நடந்த கும்பாபிஷேகத்தில் உத்தமோத்தம முறையில் 33 குண்டம் அமைத்து, அக்காலத்திலேயே மிகவும் சிறப்பாக, தானே பிரதான ஆச்சாரியராக இருந்து நடத்தியவர் ஆவார். இது தவிர வேலூர் ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் ஆலயம், மைலம் ஸ்ரீ சுப்ரமணிய ஸ்வாமி ஆலயம், தருமபுரி கோட்டை ஸ்ரீ காமாட்சி அம்மன் ஆலயம் தவிர வெளி மாநிலங்களில் பங்காருபேட்டை ஸ்ரீ கல்யாண முருகன் திருக்கோயில், பிலாய் ஸ்ரீ பிள்ளையார் கோவில் போன்ற கும்பாபிஷேகங்களும் நடத்தி வைத்துள்ளார்.

இவருக்கு முதலமைச்சர் திரு. பக்தவச்சலம் அவர்களால் "சிவாகம வித்யா சரஸ்வதி" என்ற விருது வழங்கப்பட்டுள்ளது.

தென்னிந்திய அர்ச்சகர் சங்கத்தின் தலைவராகவும், திருவண்ணாமலை திருமுறை கழகத்திலும், திருநாவலூர் ஸ்ரீ சுந்தர

மூர்த்தி சுவாமிகள் திருப்பணியில் முக்கிய பொறுப்பும், ஸ்ரீ சுந்தர மூர்த்தி சுவாமிகள் மடம் வளர்ச்சியில் பெரும்பங்கும் வகித்தவர். திருவண்ணாமலையில் தைமாதம் நடைபெறும் திருவூடல் உற்சவத்தில் சுவாமியின் சிறப்பு அபிஷேகங்களுக்கு டிரஸ்ட் வைத்து அதன் மூலம் ஆண்டு தோறும் இத்திருவிழாவை செம்மையாக நடத்தி வந்தார். தொடர்ந்து இவரது இளவல் குமாரர் ஸ்ரீஹாலாஸ்யநாத சிவாச்சாரியார் அப்பணியை செய்து வருகிறார். இவருக்கு இரண்டு பெண் குழந்தைகள் நாகலெக்ஷ்மி, அகிலாண்டேஸ்வரி ஆவார்கள். இவருடைய சீடர்கள் பலர் பாரதம் முழுவதும் பரவி உள்ளனர். இவர் 26-6-1999 அன்று சிவசாயுஜ்யம் அடைந்தார்.

திருவாடானை - ஸித்தாந்த ரத்னாகரம்
சிவஸ்ரீ ஐயாமணி சிவாச்சாரியார்

முச்சங்கம் வளர்த்து பலசான்றோர்களை பெருமை செய்த பாண்டி நாட்டில் திருவாடானையில் பிறந்த ஐயாமணி சிவம் அவர்கள் இளமையிலேயே வேதசிவாகமங்களுடன், திருமுறைகள், சைவசித்தாந்தம், தமிழ் இலக்கணம், கவி இயற்றும் அளவிற்கு கற்றதுடன். ஆங்கிலத்தில் பேசும் வல்லமை பெற்று நம் நாட்டிலும் பலவெளி நாட்டிலும் பல கும்பாபிஷேகங்கள், விசேஷ யாகங்கள் நடத்தி ஆதிசைவ சமூகத்தில் ஒரு சிங்கம் போல் விளங்கி வந்தார்.

காஞ்சி சங்கர மடம், பல ஆதீனங்கள் மற்றும் பொதுஜனங்களிடம் பல விருதுகளும் பல பரிசுகளும் பெற்றுள்ளார். இவைகளுக்கு எல்லாம் சிகரமாக காஞ்சி பெரியவர் மஹா சுவாமிகள் இவருடைய வித்வத்தையும், திறமையையும் பாராட்டி பாரத நாட்டின் தலைநகரான டில்லி உத்திர சுவாமிமலை ஆலய கும்பாபிஷேக ஸர்வசாதக பொறுப்பு தந்ததுடன், இவருடைய பெயர் விபரங்களை வடமொழியிலும் தமிழிலும் ஆலய சுவற்றிலேயே கல்வெட்டாக எழுத செய்து ஆசி வழங்கினார். ஆலயம் உள்ளளவும் இவருடைய பெயரும் விளங்கி வரும். இதனை அந்த ஆலயத்தில் காணக் கிடைக்கிறது. பல மாணவர்களை பலவெளி நாட்டிற்கு அழைத்து சென்றும், பல நல்ல கருத்துகளை கூறுவதில் அவருக்கு நிகர் அவரே.

அவரைப் பற்றி விரிவான விபரங்கள் முயன்றும் கிடைக்கவில்லை. ஆதிசைவகுல திலகமான சிவஸ்ரீ ஐயாமணி சிவம் அவர்களின் புகழும், கருத்துக்களும் ஆதிசைவ சமூகத்தை சிறப்படைய செய்யும்.

தருமபுரம் சிவஸ்ரீ சு. சுவாமிநாத சிவாச்சாரியார்

திருநாவுக்கரசு சுவாமிகள் "வானவன்காண் வானவனுக்கு மேலான்காண்.......... வடமொழியும் தென்தமிழம் மறைகள் நான்கும் ஆனவன்காண்" என்று சிவபுரத்து பெருமானை பாடியுள்ளார். அந்த சிவபுரத்தில் 1908ல் கீலக வருஷம், சித்திரை மாதம், கிருத்திகை நக்ஷத்திரத்தில், ஸ்ரீ சுப்பிரமணிய சிவாச்சாரியார்-அனந்தலக்ஷ்மி தம்பதிகளுக்கு தவப்புதல்வனாக ஸ்ரீ சுவாமிநாத சிவாச்சாரியார் பிறந்தார். ஆரம்பக் கல்வியை சிவபுரம் பள்ளியிலே படித்து வந்தார். ஒன்பது வயதில் உபநயனம் ஆனவுடன், பருத்தியூர் சிவஸ்ரீ சுப்பிரமணிய சிவாச்சாரியாரிடம் குருகுல வாசமாயிருந்து வேத ஆகம சாஸ்திர பாடங்களைக் கற்று, குடந்தை அக்னிஹோத்ரம் பட்டுசுவாமியின் அவரது ஸகோதரர் கோபாலதீக்ஷிதர் அவர்களிடம் ந்யாய, மீமாம்ஸ சாஸ்திரம் பயின்றார். மன்னார்குடி யக்ஞசாமி தீக்ஷிதரிடமும், ஜகதீச சாஸ்திரிகளிடமும் ஸ்ரீ கண்டபாஷ்யம் பயின்றார். பழனி காசிவாசி ஈசான சிவாச்சாரியாரிடம் சைவ சித்தாந்தம் கற்றார். பிறகு சிற்பசாஸ்திரம், விக்ரஹலக்ஷணம், ஆலயலக்ஷணம் முதலிய சாஸ்திரங்களில் தேர்ச்சிப்பெற்று பல ஆலய கும்பாபிஷேகளுக்கு சர்வசாதகம் வகிக்கும் திறமைப் பெற்றார். தம் தந்தையாரிடம் மந்திர, சாஸ்திரங்கள் முறைகளையறிந்து ஸ்ரீதேவிஉபாஸகராகி மந்திர யந்திரங்களுடைய நுட்பங்களையறிந்து கொண்டார். இவருடைய திறமைகளையறிந்த தருமையாதீனம் 24வது குருமஹாஸந்நிதானம் அழைத்து, தமது ஆதீனத்தில் ஒரு வேத சிவாகம பாடசாலை அமைத்து, அதற்கு இவரை தலைமையாசிரியராக அமர்த்தியுள்ளார். ஆதீனத்திற்கு சொந்தமான 27 தேவஸ்தானங்களில் உள்ள குறைபாடுகளை நீக்கிடவும், திருப்பணி செய்து கும்பாபிஷேகம் முறையாக செய்து வரும் பொறுப்பினை தந்திடவே, இவர் கற்ற கல்விக்கு மெருகிட்டது போல இவர் திறமை எங்கும் பரவவே பாடசாலையில் மிகுந்த அளவு மாணவர்கள் வந்து கல்வி கற்றதுடன் மிக திறமைசாலியாக விளங்கிவந்தார்கள். 25வது குருமகா ஸந்நிதானம் அவர்கள் ஆதரவினைக் கொண்டு ஆகமத்திற்கு விரோதமில்லாமல் பஞ்சமுகார்ச்சனை, ஷண்முகார்ச்சனை, அஷ்டமுர்த்தியர்ச்சனை, நவசக்தியர்ச்சனை, ஷோடசார்ச்சனை, ஏகதின லக்ஷார்ச்சனை, கோடியர்ச்சனை, நவகோடியர்ச்சனை, என பல செய்ததுடன் யாகசாலை ஆகமசாஸ்திர முறைப்படியும் அதேநேரத்தில் புதுமையாக அமைத்து

பார்ப்பவர்கள் வியப்படையும்வண்ணம் அமைத்து, ஆதிசைவ சிவாச்சாரியார்களுக்கு வழிகாட்டியாக திகழ்ந்தார். இவரது யாகசாலை அமைத்திருக்கும் முறைகளைக் கண்டு 25வது குருமஹா சன்னிதானம் அவர்கள் ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோயில் முன் நடந்த கும்பாபிஷேகத்தின் போது "சிவாகம வித்வான்" என்ற விருதினையும் பொன்னாடையும் அணிவித்து பெருமை படுத்தியும், திருக்கடையூர் கும்பாபிஷேகத்தில் ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோயில் 2வது கும்பாபிஷேகத்தில் "சிவாகமரத்னாகரம்" என்ற விருதினை பொற்பதக்கத்தில் பொறித்து தந்து பொன்னாடை போர்த்தி சிறப்பு செய்தார். 1969ல் அர்ச்சகர் சங்கம் சார்பில் வள்ளலார் கோயில் ஸ்ரீ சுப்பிரமணிய சிவாச்சாரியார் தலைமையில் "சிவாகம செம்மல்" என்ற விருதினை பொற்பதக்கத்துடன் பெற்று ஆசிப்பெற்றார்கள்.

உலகநலனை வேண்டி, விரைவாகவும், சுலபமாகவும், மிகுதியாகவும் பலனளிக்ககூடிய மஹாசண்டியாகத்தை, தருமபுரம் ஸ்ரீ அஷ்டதசபுஜ துர்காபரமேஸ்வரி ஆலயத்தின் முன்பு துவங்கி தாமே ஆச்சார்யனாக இருந்து நடத்தி ஒவ்வொரு நவராத்திரியையும் சிறப்பாக நடத்தி வந்தார். பழனி ஸ்ரீ தண்டபாணி ஆலய மஹாகும்பாபிஷேகத்தில் உத்தமோத்தமபடி 33 குண்டம் அமைத்து சிறப்பாக நடத்தினார். 1976ல் இலங்கையில் பாடல் பெற்ற திருக்கேதீசுவரர் கும்பாபிஷேகத்தில் சர்வ சாதகமாகவும், 1986ல் மலேசியா நாட்டில் ஜோகூர் ஸ்ரீ மாரியம்மன் ஆலய கும்பாபிஷேகத்தால் சர்வசாதகமாகவும் இருந்து நடத்தினார். இரண்டு குமாரர்கள், இரண்டு குமாரத்திகள் பெற்ற சிவாச்சாரியார் வேத சிவாகம பாடசாலை தலைமையாசிரியராகவேயிருந்து 1989ம் ஆண்டு சிவனடி சேர்ந்தார்கள்.



ஆடூர் - சிவஸ்ரீ காசி. வைத்தியநாத சிவாச்சாரியார்

தில்லை ஸ்ரீ சிவகாமி உடனாகிய ஆனந்த நடராஜபெருமானின் அருளாட்சியில் உள்ள கீ. ஆடூர் பகுதியில் ஸ்ரீ ஹஸ்த்தாலாம்பிகை உடனாகிய ஸ்ரீ நிருத்தபுரீசுவர் சுவாமியை பூசித்து வந்துள்ள, சிவஸ்ரீ சா.காசிசிவாச்சாரியார் மீனாக்ஷியம்மை தம்பதிகளுக்கு 2-3-1914-ல் மூத்த புதல்வனாக வைத்தியநாத சிவாச்சாரியார் பிறந்தார். ஆரம்பக் கல்வியை முடித்து, உபநயன சமயதீட்சைப் பெற்று, ஆச்சாள்புரத்தில் நடைப்பெற்று வந்த வேத சிவாகம பாடசாலையில், சாத்தங்குடி பாலசுப்பிரமணிய சிவாச்சாரியாரிடம் ஆகமமும், ஆச்சாள்புரம்........ சாஸ்திரிகளிடம் வேதமும் பயின்று, பிறகு பழனி ஈசான சிவாச்சாரியாரிடம் சாஸ்திரமும் சைவசித்தாந்தமும் பயின்று, அவரின் முதல் சிஷ்யனாக விளங்கிவந்தார்.

பின்னர் கொல்லிமலை சுந்தரேச சிவாச்சாரியார் அவர்களின் குமாரி சுலோசனாவை மணந்து, ஆறுகுமாரர்களையும் நான்கு குமாரிகளையும் பெற்றார்.

பழைய ஓலைச்சுவ்டியிலிருந்து "மகுடாகமத்தை" மொழிபெயர்த்துள்ளார். பல ஊர்களில் சைவ சித்தாந்த உபன்யாசம் செய்ததுடன் மதுரை, திருநெல்வேலி, சங்கரன்கோயில், ஈரோடு, முதலிய நகரங்களில் உள்ள பல அன்பர்களுக்கு சிவதீட்சை செய்து சைவ சமயத்தை வளர்த்து வந்தார். பல ஆலயங்களுக்கு (ஆடூர் பின்னலூர், விளாகம், கீழ்நத்தம் முதலிய ஆலயங்களில்) நடந்த கும்பாபிஷேகத்தில் ஸர்வசாதகராகவும், சுமார் 500 ஆலயங்களுக்கு மேல் கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டு பணியாற்றியுள்ளார். இவருடைய சொற்பொழிவுகளை கேட்ட கூனம்பட்டி ஆதீனகர்த்தர் சிவஸ்ரீ சரவணமாணிக்கவாசக சுவாமிகள் தம் "ஆதீன வித்வான்" என்று விருதுடன் "சிவாகம ஞானபானு" என்ற விருதினை தந்து பாராட்டியுள்ளார். திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் சீர்வளர்சீர் சிவப்பிரகாச சுவாமிகள் "சிவாகம ஞான சாகரம்" என்ற விருதினை வழங்கினார்கள். ஈரோடு சென்னிமலையில் வேதசிவாகம பாடசாலை அமைத்து நூற்றுக்கும் மேற்பட்ட ஆதிசைவ மாணவர்களை சிவாச்சாரியார்களாக உருவாக்கிய இவர், தமது எண்பத்திஆறாவது வயதில் ஈரோட்டில் சிவசாயுஜ்ய பதவியை அடைந்தார்.

சென்னை - சிவஸ்ரீ T.S. சாம்பமூர்த்தி சிவாச்சாரியார்
(உலகம் சுற்றிய சிவாச்சாரியார்)

சென்னை பூவிருந்தவல்லி அருகில் உள்ள திருமழிசை என்னும் கிராமத்தில் 1925ஆம் ஆண்டு T.S. சாம்பமூர்த்தி சிவாச்சாரியார் பிறந்தார். ஆகமம், சைவசித்தாந்தம் ஆகியவற்றை சாஸ்த்ர சூடாமணி K.A. சபாரத்ன சிவாச்சாரியார், மற்றும் சிவஸ்ரீ சம்பந்த சிவாச்சாரியாரிடம் பயின்றார்.

தனது 16-வது வயதில் சென்னை அருள்தரும் ஸ்ரீ காமாக்ஷி, ஸ்ரீ காளிகாம்பாள் கோயிலில் அர்ச்சகராக பணியாற்ற துவங்கினார். இக்கோயில் சத்ரபதி சிவாஜி மற்றும் மகாகவி பாரதியார் வழிபாடு செய்த தலமாகும்.

கும்பாபிஷேகம், சண்டிஹோமம் செய்வதில் தனிப் பெருமை பெற்றவர். உலகின் தொன்மையான மதமான இந்து மதக் கருத்துகளையும், பெருமைகளையும் எடுத்துக்கூறுவதில் சிறப்புடையவராக இருந்தார்.

இந்தியாவின் பல கோயில்களில் கும்பாபிஷேகங்கள் செய்ததுடன் அமெரிக்கா, டெக்ஸாஸ், ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயம், வாஷிங்டன் ஸ்ரீ சிவாவிஷ்ணு ஆலயம், வாஷிங்டன் ஸ்ரீ முருகன் ஆலயம், ஆல்பனி ஸ்ரீ சிவா விஷ்ணு ஆலயம், பாஸ்டன் ஸ்ரீ லக்ஷ்மி ஆலயம், பில்லாஸ் ஸ்ரீ சிவா விஷ்ணு ஆலயம், ஹவாய் தீவில் உள்ள கௌவை ஆதீனத்தில் பஞ்சசிலா நியாச பூஜையும் செய்துள்ளார்.

இங்கிலாந்து நாட்டில் ஈஸ்ட்ஹாம் ஸ்ரீ முருகன் ஆலயம், டுட்டிங் ஸ்ரீ மாரியம்மன் ஆலயம், ஈஸ்ட்ஹாம் லக்ஷ்மி ஆலயம், ஆர்ச்வே ஸ்ரீ முருகன் ஆலயம், ஸ்டோன்ஸி ஸ்ரீ ராஜராஜேஸ்வரி ஆலயம், பர்மிங்ஹாம் சிவாலயம், நாஸ்டென் கனகதுர்க்கா ஆலயம், மற்றும் மலேசியா, கோலாலம்பூர், பினாங்கு, சுங்காயுசிபுட், இயோன், பெட்டலிங் ஜெய ஆகிய அயல்நாடுகளில் கும்பாபிஷேகங்கள் செய்து சிவாச்சாரியார்கள் பெருமையை உலகறிய செய்தவராவார்.

சிங்கப்பூர் சௌத்பீச், ஸ்ரீ மாரியம்மன் ஆலயம், ஸ்ரீ வடபத்ரகாளி அம்மன் ஆலயம், இலங்கையில், கண்டி, கதிர்காமம் ஆலயங்கள் மற்றும் ஆஸ்திரேலியாவின் 1997-ஆம் ஆண்டு பிரதமமந்திரி ஜான்ஹோவர்ட் தலைமையில் கேன்பரா மாகாணத்தில்

கும்பாபிஷேகம் நடத்தியுள்ளார். 1999 ஆம் ஆண்டு சிட்னி, ஸ்ரீ முருகன் ஆலயத்தில் கவர்னர் ஜெனரல் தலைமையில் கும்பாபிஷேகம் நடத்தி உள்ளார்.

வேதம், ஆகமங்களின் முக்கியத்துவத்தை ஜெர்மனி, பிரான்ஸ் மொரிஷியஸ், தாய்லாந்து மற்றும் கனடா ஆகிய நாடுகளில் பரப்பி உள்ளார்.

அவரது வாழ்க்கையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது, ஓசாகா உலக சமய மாநாட்டில், இந்து சமயத்தின் சார்பாக பங்கேற்று கர்மா பற்றிய மாபெரும் உண்மைகளையும் கோவில்களில் கர்மாக்கள் செய்யபடுகின்ற விஷயங்களையும் விரிவாக எடுத்துரைத்தார்.

இவர் சைவ ஆகமங்களுக்கு ஆற்றிய தொண்டை பாராட்டி திருப்பதி திருமலை தேவஸ்தான ஆகம பாடசாலை இவரை கௌரவித்தது.

தென்னிந்திய அர்ச்சகர் சங்கத் தலைவராக பணியாற்றி உள்ளார். உலகெங்கும் பல அர்ச்சகர்கள் இந்து மதத்தை பரப்பப் பயிற்சி கொடுத்து ஆலயங்களில் பணிபுரிய உதவியிருக்கிறார்.

இவர் "மாகாளிகா மந்திர் டிரஸ்டின்" நிறுவனர் ஆவார். இதில் சாதி, மத, பேதமின்றி அனைவரும் பங்கு பெற்று அன்னையை வழிபட வழிவகுத்தவர். மக்களுக்கு தொண்டு செய்வதே தமது குறிக்கோளாக கொண்டு மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்று கருதியவர். உலக மக்கள் இந்து மதத்தின் முழுப்பயனை பெற்று அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழப் பிராத்தனைகள் பல புரிந்தவர்.

இவர் பெற்ற பட்டங்கள் :-

சிவாகம சாஸ்த்ர நிபுணர்	திரு. பக்தவச்சலம் தமிழக முன்னாள் முதலமைச்சர்
சக்தி கருணாகர சக்ரவர்த்தி	டாக்டர் துண்.சம்பந்தம் மலேசிய முன்னாள் அமைச்சர்
சிவாச்சாரிய குல பூஷணம்	தருமை ஆதீன ஸ்ரீ சண்முக தேசிக பரமச்சாரிய சுவாமிகள்
வேதாகம ஞானகலாநிதி	லண்டன் சைவ முன்னேற்ற சங்கம்
சிவாகம ஆஸ்தான வித்வான்	வாஷிங்டன் ஸ்ரீ சிவா விஷ்ணு ஆலயம் (USA)

அனைத்துலக சிவாகமசாம்ராட்	மலேசியா டத்தின் இந்திராணி சாமுவேல்
ஹிந்து ரிலையஸன்ஸ் அவார்ட்	ஹிந்து (ஹிந்து மறுமலர்ச்சி விருது)

1986ல் காஞ்சி பரமாச்சார்யாரின் ஆசியுடன் அஸ்வமேதயாகம் நடத்தினார்.

நிறைவாக 2003 ஆம் ஆண்டு சிவசாயுஜ்யம் அடைந்தார்.

அல்லூர் - சிவஸ்ரீ வை.விஸ்வநாத சிவாச்சாரியார்

அறம் வளர்த்த நாயகி உடனுறை ஐயாரன் சுவாமிகள் ஆலய பரம்பரை அர்ச்சகரும், பழூர் ஸ்ரீ விஸ்வநாதசுவாமி ஆலய பரம்பரை அர்ச்சகருமான சிவஸ்ரீ வைத்தியநாத சிவாச்சாரியார்-மீனாக்ஷி அம்மாள் தம்பதிகளுக்கு ரக்தாக்ஷி வருஷம் மார்கழி மாதம் 2-ம் தேதி, சிவஸ்ரீ விஸ்வநாத சிவாச்சாரியார் பிறந்தார்.

தனது பிதாமஹர் தாத்தாவிடம் ஆகமங்களை கற்றுணர்ந்தார். பழூர் டெப்டிகலெக்டர் இராமச்சந்திர ஐயர் வேத சாஸ்த்ர பாடசாலையில் வேதம், சாஸ்திரங்களை படித்தார். இவரது தீக்ஷாநாமம் "ஸத்யோஜாத சிவம்". இவருக்கு 1 புதல்வரும் இரண்டு புதல்விகளும் உள்ளனர்.

பல ஆயிரக்கணக்கான ஆலயங்களுக்கு கும்பாபிஷேகம் தலைமை ஏற்று சர்வசாதகராக பணிபுரிந்து வருபவர். அவற்றில் குறிப்பிடத்தக்கவை சமயபுரம் ஸ்ரீ மாரியம்மன் திருக்கோயில் நான்குமுறையும், திருவானைக்காவல் மூன்று முறையும், குமார வயலூர் திருக்கோயில் இரண்டு முறையும், குளித்தலை, கரூர், மகாதானபுரம், பவானி, கொடுமுடி, பொள்ளாச்சி, மாந்துறை, டால்மியாபுரம், நாக்பூர், சங்கரன் கோயில், பழூர், அல்லூர், தஞ்சை, தாமிரபரணி, கும்பகோணம், நல்லிச்சேரி ஆகிய சிவாலயங்கள் கும்பாபிஷேகம் முக்கியமானவை.

இவற்றைத் தவிர விசேஷமான தனி ஆலயங்கள், பொள்ளாச்சி, ஸ்ரீ காமாக்ஷி ஆலயம், ஆனைமலை ஸ்ரீ மாசாணி அம்மன் ஆலயம், பாலக்காடு ஸ்ரீ விநாயகர் ஆலயம், ஊத்துக்குளி ஸ்ரீ முருகன் ஆலயம், திருப்பூர் ஸ்ரீ காமாக்ஷிஅம்மன் ஆலயம், உறையூர் ஸ்ரீ வெக்காளி

அம்மன் ஆலயம், மணப்பாறை ஸ்ரீ மாரியம்மன் ஆலயம், மகாகள்ளிக்குடி ஸ்ரீ அம்மன் ஆலயம், கண்ணபுரம் ஸ்ரீ ஆதிமாரியம்மன், முசிறி ஸ்ரீ கன்னிகாபரமேஸ்வரி ஆலயம், பம்பாய் ஸ்ரீ முருகன் ஆலயம், டெல்லி உத்திர சுவாமிமலை ஸ்ரீ முருகன் ஆலயம், டெல்லி பழமுதிர் சோலை ஸ்ரீ முருகன் ஆலயம், திருப்பரங்குன்றம் ஸ்ரீ முருகன் ஆலயம், கடம்பூர் ஸ்ரீ மாரியம்மன் ஆலயம், திருச்சி ஸ்ரீ கன்னிகாபரமேஸ்வரி அம்மன் ஆலயம், சோழமாநகர் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி ஆலயம், குருஜி கிருபானந்தவாரியாரால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கோவை ஸ்ரீ முருகன் ஆலயம் ஆகியவை இவருடைய ஸர்வசாதகத்தில் நிகழ்த்தப்பட்டவை.

பல அன்பர்களுக்கும் சீடர்களுக்கு தீக்ஷை செய்துவைத்துள்ளார்.

உறையூர் அருள்மிகு வெக்காளி அம்மன் ஆலயத்தில் 25 ஆண்டுகளாக "சதசண்டி ஹோமம்" நடத்திவருகிறார்.

பழூர் ஸ்ரீ விஸ்வநாத சுவாமி ஆலய திருப்பணி கமிட்டி தலைவராகவும், சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் கோயில் திருப்பணி கமிட்டி தலைவாராகவும் இருந்து வந்துள்ளார்.

பழனி ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவாராக இருந்து சிவாச்சாரிய சமுதாயத்துக்கு பெருமை சேர்த்தவர்.

சிவாச்சாரிய சமுதாயத்தினர்கள், வேதசிவாகம ஞானம் பெறுவதற்கு ஸ்ரீ காஞ்சி பெரியவர் ஸ்ரீ மஹாஸ்வாமிகள் அவர்களால் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீட வியாஸ பாரத கலாதி ஸதஸ் ஸமாஜத்தின் சார்பில் நிறுவப்பட்டு நாற்பது ஆண்டுகாலமாக சிறப்பாக நடைபெற்று வரும் வேத சிவாகம பாடசாலையின் முதல்வராக பணியாற்றி வருவதோடு பல சிவாச்சார்ய பெருமக்களை உருவாக்கியவர்.

இவர் எழுதிய நூல்கள்

1. கணபதி உபநிஷத்	கிரந்தலிபி
2. சிவாகமதியான ரத்னாவளி	கிரந்தலிபி
3. சிவபூஜா வேதமந்தரம் மஹாந்யாசம்	கிரந்தலிபி
4. நவக்ரஹ பிரதிஷ்டை	கிரந்தலிபி
5. சத்ருசம்ஹார த்ரிசதி	கிரந்தலிபி

6. ருத்ரபதம் கிரந்தலிபி
7. விநாயகர், முருகர், சுவாமி, அம்பாள் பைரவர், சனீஸ்வரர், ஸகஸ்ரநாமம் கிரந்தலிபி
8. முருகன் த்ரிசதி கிரந்தலிபி
9. பூர்வகாரணாகமம் மூலம் முழுமையும் கிரந்தலிபி
10. சிவாகம ப்ரயோக சந்திரிகா நாகரலிபி
11. தேவி உபநிஷத் நாகரலிபி
12. வ்யோமவ்யாபி பதமந்த்ரம் நாகரலிபி
13. உத்திர காமிகாகமம், தமிழ் உரையுடன் (அறநிலையத்துறை வெளீயீடு) நாகரலிபி
14. குமாரதந்தரம் தமிழ்உரையுடன் நாகரலிபி

இவர் சமயப் பணியுடன், சமுதாயப்பணியும் பல புரிந்து அருந்தொண்டாற்றி வருகிறார். வளர்க அவர் புகழ்.

காஞ்சிபுரம் - சிவஸ்ரீ வி.க. அருணாசல குருக்கள்

அருள்மிகு காமாட்சி அம்பாள் ஸமேத ஏகாம்பரநாதர் ஆலய அர்ச்சகர் திரு. வி.க.கல்யாண சுந்தர குருக்கள் - காமாட்சி அம்மாள் தம்பதிகளுக்கு குமாரனாக 20-1-1907ல் சிவஸ்ரீ வி.க.அருணாசல குருக்கள் பிறந்தார். இவருக்கு இரண்டு மகன்களும் ஐந்து மகள்களும் உள்ளனர்.

திருப்பாலைவனம் அமிர்தேச சிவாச்சாரியாரிடம் வேதசிவாகம சாஸ்திரங்களை கற்றுணர்ந்தார்.

தண்டையார் பேட்டை ஸ்ரீ அபீதகுசாம்பாள் உடனருள் அருணாசலேஸ்வரர் ஆலயத்தில் அர்ச்சகராக பணி செய்தார். திருவேற்காடு ஸ்ரீ கருமாரி அம்மன் ஆலய கும்பாபிஷேகம் 1952, 1964, 1983, 1987, 1999ல் நடத்தியவர். திருவேற்காடு ஸ்ரீ வேதபுரீஸ்வரர் ஆலயம், காஞ்சி ஸ்ரீ ஏகாம்பரஸேஸ்வரர் ஆலயம், பூண்டி ஸ்ரீ ஊன்றீஸ்வரர் ஆலயம், பஞ்சேஷ்டி அகஸ்தியர் ஆலயம் மற்றும் பல ஆலயங்களில் கும்பாபிஷேக ஸர்வசாதகராக பணியாற்றியவர். பல ஆலய அர்ச்சகர்களுக்கு சமய, விசேஷ, நிர்வாண, தீக்ஷை செய்து ஆச்சாரியாபிஷேகம் செய்து வைத்துள்ளார்.

இவர் எழுதிய நூல்கள்

கணேசர், சிவன் நித்யபூஜாவிதி
விநாயகர், சுப்ரமணியர், சிவன், தேவி, பிரதிஷ்டாவிதி
கிரியாக்ரம ஜோதி - கிரியா விளக்கம்
மாரியம்மன், பக்தபிரதிஷ்டைகள் ஆகியன.

1970ஆம் ஆண்டு சென்னை ஸ்ரீ மல்லீஸ்வரர் கோயில் நடைபெற்ற ஆகம பயிற்சி பாடசாலை ஆசிரியராக இருந்தார். அப்போது தமிழக முதல்வர் எம்.பக்தவத்சலம் அவர்களால் நற்சான்றிதழ் பல சிவாச்சாரியார்கள் பெற்றனர். சித்ரபானு வருஷம் ஐப்பசிமாதம் 27ஆம் தேதி (13-11-2002) புதன்கிழமை சிவசாயுஜ்யம் அடைந்தார்.

காஞ்சிபுரம் - சிவஸ்ரீ க.விஸ்வநாத சிவாச்சாரியார்

காஞ்சிபுரம் ஸ்ரீ ஏகாம்பரநாதர் ஆலய பரம்பரை அர்ச்சகர் சிவஸ்ரீ ஏகாம்பர குருக்கள் - மீனாட்சி அம்மாள் தம்பதிகளுக்கு சிவஸ்ரீ க.விஸ்வநாதசிவாச்சாரியார் 1920 ஆண்டு பிறந்தார். இவருக்கு 4 புதல்வர்கள், 4 புதல்விகள் உள்ளனர்.

காஞ்சிபுரம் வேதபாடசாலையிலும், குருநாதர் சோமசுந்தர குருக்களிடமும், சிவாகமம், சாஸ்த்ரபாடங்களை பயின்றார்.

காஞ்சிபுரம் ஸ்ரீ ஏகாம்பரேஸ்வரர் ஆலயம், ஸ்ரீ பிரம்மபுரீஸ்வரர் ஆலயம் சிவாஸ்தானம் போன்ற பல ஆலயங்களில் அர்ச்சகராக பணிபுரிந்தார்.

டெல்லி உத்திரஸ்வாமிமலை கும்பாபிஷேகத்தில் பங்கு பெற்றார். பல கும்பாபிஷேகங்களில் ஸர்வசாதகராக இருந்து நடத்தி உள்ளார்.

காஞ்சி காமகோடிபீட ஜகத்குரு ஸ்ரீ மஹாஸ்வாமிகள் உத்தரவு படி காஞ்சி ஸ்ரீமட ஆஸ்தான வித்வானாக பணியாற்றினார். காஞ்சிபுரம் வேதசிவாகம பாடசாலை ஆசிரியராக பணிபுரிந்தார்.

1999ம் ஆண்டு தீபாவளி அன்று சிவசாயுஜ்யம் அடைந்தார்.

மாதர்வேளூர் - சிவஸ்ரீ சொ. சுந்தரேச சிவாச்சாரியார்

குரு ப்ர்ஹ்மா : குருவிஷ்ணு குருதேவோ மஹேஸ்வரா :
குரு ஸாக்ஷாத் பரப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீகுரவே நம :

நாகை மாவட்டம், சீர்காழி தாலுக்கா, மாதர் வேளூர், மாதலிச்சரம் எனும் தலத்தில் ஆதிசைவ குலத்தில் தோன்றி, வேத சிவகாம வித்வானாக திகழ்ந்து பல ஆதிசைவ மாணவர்களுக்கு வேத சிவாகமங்களை குருகுல வாசமுறையில் தன்னுடைய இல்லத்தில் பயிற்சி தந்து, பல கும்பாபிஷேகங்களில் ஆச்சாரியராகவும், சாதகமாகவும், சர்வசாதகமாகவும் திகழ்ந்து "மாதர் வேளூர் ஐயா" என்று பலராலும் அழைக்கப்பட்டு, செட்டிநாட்டு நகரத்தாராலும் போற்றிப் புகழப்பட்ட சிவஸ்ரீ சொர்ண குருக்கள் என்ற இராமாமருத குருக்கள் மாதுஸ்ரீ யோகாம்பாள் தம்பதியினருக்கு தனது குலதெய்வம் ஸ்ரீ குடவரசி அம்பாள் அருளால் மூன்று திருக்குமாரர்கள் பிறந்தார்கள். அவர்களில் இரண்டாவதாக சிவஸ்ரீ சுந்தரரேச சிவாச்சாரியார் விசுவாவசு ஆண்டு சித்திரை மாதம் பிறந்தார்.

தமது எட்டாவது வய்தில் உபநயனம், சமயதீட்சை பெற்று ஆரம்ப பால பாடம், சிவாகமங்கள், அர்ச்சனை, தியானங்களை தமது தந்தையாரிடம் கற்றார். பின்னர் விசேஷதீட்சை, நிர்வாணதீட்சை, ஆச்சாரியாபிஷேகம் ஆகியவற்றை பல ஆதிசைவ பெரியோர்கள் துணையுடன் இவர் தந்தையார் செய்வித்தார்.

வடரங்கத்திற்கு தெற்கே ஒரு மைல் தூரத்தில் உள்ள எலத்தூர் வேதவித்வான் பிர்ஹ்மஸ்ரீ ராமசாமி சாஸ்திரிகளிடம் வேதமும், பிர்ஹ்மஸ்ரீ சுந்தரராம சாஸ்திரிகளிடம் ஸப்த காவ்ய சாத்திரங்களையும் கற்றுணர்ந்து, தனது பதினெட்டாம் வயதில் சீர்காழி தாலுக்கா, வள்ளுவக்குடியில், சிவஸ்ரீ குப்புசாமி சிவாச்சாரியாரின் மூன்றாவது புதல்வி மாதுஸ்ரீ வேதாம்பாளை விவாஹம் செய்து ஏழு குமாரர்களையும் மூன்று குமாரிகளையும் பல பேரன் பேத்திகளையும் பெற்றெடுத்தவர்.

தேவக்கோட்டை நகரத்தார்கள், கும்பாபிஷேகம் என்றவுடன் மாதர்வேளூர் அய்யா வந்தால் தான் கும்பாபிஷேகம் சிறப்பாக இருக்கும் என கூறி அவரை சர்வசாதகமாக வைத்து சிறப்பு பெறுவார்கள்.

அவருடைய மூத்த குமாரர் சிவஸ்ரீ ஸேதுபதி சிவாச்சாரியார் பல கும்பாபிஷேகங்களுக்கு சர்வசாதகராக இருந்து "சிவயாகநிர்வாக சாம்ராட்" என்ற விருதினை பெற்றுள்ளார்.

காச்யப கோத்ரத்தில் தோன்றிய இவர் பல சமூக தொண்டுகளும் செய்துள்ளார். பல ஏழை ஆதிசைவ குடும்பங்களில் திருமணங்களை தன்பொறுப்பிலும், அதற்குண்டான செலவுகளையும் தான் ஏற்று நடத்தி வைத்துள்ளார்.

பழகுவதிலும், பேசுவதிலும், தோற்றத்திலும் எளிமையுடன் நயமும் கொண்டவர். நிர்வாகம் எப்படி செய்வது? ஆச்சாரிய பெருமக்கள், நிர்வாகிகள், மற்றும் பொதுமக்களிடம் எப்படி பழகுவது? கும்பாபிஷேகத்தில் நிர்வகிக்கும் போது ஏற்படும் சில இடர்பாடுகளை எங்ஙனம் எளிமையாக தீர்ப்பது? போன்ற இனிய குணநலன்களும் ஆற்றலும் பெற்றவர். ஓர் ஆலய கும்பாபிஷேகத்தில் ஸ்தல சிவாச்சாரியாரை முன்னிலைப் படுத்தி அவ்வாலயத்தில் தொடர்ந்து பூஜை வழிபாடுகள் சிறப்பாக நடைபெற வழி காட்டியவர் ஆவார். ஆத்மார்த்த சிவபூஜையின் சிறப்புகளை அடிக்கடி உணர்த்தியவர்.

சென்னை பெரம்பூர் ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி ஆலய கும்பாபிஷேகத்தில் ஸ்ரீ பித்துக்குளி முருகதாஸ் அவர்கள் முன்னிலையில் ஆலய பரம்பரை டிரஸ்டியும், ஆலய அர்ச்சகருமான சிவஸ்ரீ சுப்ரமணிய குருக்கள் அவர்களிடம் "சிவமஹாயாக நிர்வாக மணி" என்ற விருதும் பொற்பதக்கமும் பெற்றார்.

காஞ்சி சங்கர மடத்தின் வேத சிவாகம ஸதஸில் பங்கு பெற்று அநேக அரிய ஆகம விஷயங்களை தெளிவாக்கியுள்ளார். ஸ்ரீ மஹாஸ்வாமியின் அருளாசியும், பாராட்டையும் பெற்றார்.

தமது (மணிவிழா) அறுபதாம் ஆண்டு விழாவிற்கு முன்னர் தனது குலதெய்வம் அருள்தரு குடவரசி அம்பாள் ஆலய கும்பாபிஷேகத்தை நடத்தி, தொடர்ந்து இவரது மணிவிழா சிறப்பாக பல ஆன்றோர்கள் நடத்தினர். மறுதினம் சிவசாயுஜ்யம் அடைந்தார்.



சாத்தான்குடி - சிவஸ்ரீ
இரத்தின.பாலசுப்ரமணிய குருக்கள்

மயிலாடுதுறை வட்டம், சாத்தன்குடி அருள்தரும் விஸ்வநாத சுவாமி உடனருள் விசாலாட்சி ஆலய பரம்பரை அர்ச்சகர் சிவஸ்ரீ இரத்னகுருக்கள் - அபயாம்பிகை தம்பதிகள் புதல்வராக பால சுப்ரமண்ய குருக்கள் பிறந்தார். இவரது மனைவி வள்ளுவகுடியை சேர்ந்த நாகம்மாள். இவர்களுக்கு ஓர் பெண் குழந்தை மீனாக்ஷி சுந்தரத்தம்மாளும், ஒரு ஆண் குழந்தை தண்டபாணி குருக்களும் பிறந்தனர். தனது சிறிய தந்தை சிவஸ்ரீ சாமிநாத குருக்கள் அவர்களிடம் வேத ஆகம பாடங்கள் பயின்றார். அகஸ்திய கோத்திரத்தில் தோன்றியவர். அந்த காலங்களிலேயே அயல் நாடு சென்று நமது கலாச்சாரத்தையும், ஆன்மீகத்தினையும் பரப்பி கும்பாபிஷேகங்கள் செய்து வந்தவர்.

இவர் ஆச்சாள்புரம் செட்டியார் வேதசிவாகம பாடசாலையில் ஆகமபாட ஆசிரியராகவும் இருந்தார். இவரிடம் பயின்றவர்களில் முக்கயமானவர்கள் சிவஸ்ரீ ஆடூர் காசி. வைத்யநாத சிவாச்சாரியார், சிவஸ்ரீ கடகம்பாடி ராஜம் சிவாச்சாரியார் ஆவர்.

இன்னும் ஓர் சிறப்பு ஸ்ரீ காஞ்சி மடத்தின் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹா சுவாமிகளுடன் வேதம் ஒன்றாக படித்தவர். ஸ்ரீ சுவாமிகள் வரதம்பட்டு விஜயம் செய்த போது தம்முடைய நட்பின் காரணமாக சாத்தன்குடி வந்து சிவாச்சாரியாரை கண்டு பேசி சென்றார். சிவாச்சாரியார்கள் சிவனுக்கு கைங்கர்யம் செய்வதால் தம்மை எந்த சிவாச்சாரியாரும் நமஸ்கரிக்க ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் அனுமதிப்பதில்லை. சிவாச்சாரியாரின் பெருமைக்கு இதைவிட வேறு உண்டோ? இப்படி ஸ்ரீ மஹாஸ்வாமிகள் இவரை வயதான காலத்தில் வந்து தங்களது கடந்த கால இளமையில் படித்து இருந்த விஷயங்களை உரையாடியதை கண்டு எல்லோரும் அதிசயித்தனர். பல அரிய ஆகமவிஷயங்கள் ஏட்டு சுவடியில் வைத்திருந்தார்கள்.

நிறைவாக 1939ம் ஆண்டு சிவசாயுஜ்யம் அடைந்தார்.



திருநாரையூர் - சிவஸ்ரீ T.K. சுப்ரமணிய சிவாச்சாரியார்

சித்தர்கள் வழிபட்ட நாரையூர் சித்தீஸ்வரத்தில் உள்ள ஸ்ரீ சித்தநாத ஸ்வாமியை பாரம்பரியமாக பூஜித்து வரும் ஸ்ரீ குப்புசாமி சிவாச்சாரியார் மாதுஸ்ரீ மீனாட்சி அம்மாளுக்கும் சுப்ரமணிய சிவாச்சாரியார் பிறந்தார்.

இளம் வயதில் நாச்சியார் கோயிலில் பள்ளிப்படிப்பும், தமிழ் ஆங்கிலமும் கற்று வந்தார். ஒன்பதாம் வயதில் உபநயனம் செய்து மாதர்வேளூர் சுந்தரரேச சிவாச்சாரியாரிடம் தேவ சிவாகமங்களை குருகுல முறையில் பயின்றார். இருபதாம் வயதில் திருமணம் செய்து கொண்டு, தீக்ஷையும் பெற்றார். ஐந்து குமாரர்களும் இரண்டு குமாரிகளையும் பெற்றுள்ளார்.

ஸ்ரீ சித்தநாதர் கோயில் கும்பாபிஷேகத்தில் "ஆசீர்வாத சரபம்" என்ற பட்டத்தை உத்தண்டராமன் கமிஷ்னரிடம் பெற்றார். கயிலை குருமணி தருமபுர ஆதீனம் 25-வது குருமஹா சன்னிதானம் "கற்பனை கலைஞர் ஜோதிர்மணி" என்ற பட்டத்தையும் திருபுவனம் சரபேஸ்வரர் ஆலய கும்பாபிஷேகத்தில் 1956ல் "சிவாகம பூஷணம்" என்ற விருதும் பெற்றுள்ளார்.

மூன்று முறை ஊராட்சி மன்ற தலைவராக பதவி ஏற்றுள்ளார். காரைக்குடி, தேவக்கோட்டை பள்ளத்தூர் போன்ற இடங்களில் பல பொன்னாடை சிறப்புகள் பெற்றுள்ளார். இவருடைய வாரிசாக உருவானவர்கள் திருப்பந்துறை ஜகதீச சிவாச்சாரியார் குமாரர் சுரேஷ்(எ) வெங்கடேசகுருக்கள். திருநாகேஸ்ர ஆலய பரமேஸ்வர குருக்கள் குமாரர் செந்தில்குமார், திருநாரையூர் மழலைமகாலட்சுமி அர்ச்சகர் ஞான சுந்தர குருக்கள், குமாரர், நடராஜ சிவாச்சாரியார் ஆவர்.



மாங்காடு - குருஜி சிவஸ்ரீ து.சுவாமிநாத சிவாச்சாரியார்

சென்னை திருப்பாலைவனம் ஸ்ரீ யோகாம்பிகா ஸமேத ஸ்ரீ பாலீஸ்வரர் ஆலய அர்ச்சகர் துரைசாமி குருக்கள் - கோதாவரி அம்மாள் தம்பதிகள் குமாரராக சுவாமிநாத சிவாச்சாரியார் 17-11-1944 சித்ரபானு, கார்த்திகை மாதம், சதய நட்சத்திரத்தில் பிறந்தார்.

சென்னை மல்லீஸ்வரர் வேத சிவாகம பாடசாலையில் ஸ்ரீ சபாரத்ன சிவாசசார்யாரிடம் வேதசிவாகமங்களையும், திருப்பாதிபுலியூர் பிரஹ்மஸ்ரீ மணி சாஸ்திரிகளிடம் வேதமும் பயின்றார். தனது தந்தையிடம் சிவதீட்சை பெற்று "வாமதேவசிவம்" என்னும் தீட்சா நாமம் பெற்றவர். ஸ்ரீ லோகாம்பிகா ஸமேத ஸ்ரீ பாலீஸ்வரர் ஆலயம், மாங்காடு ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலயம் போன்றவற்றில் பூஜை செய்தவர்.

பல கும்பாபிஷேகங்களில் ஸர்வசாதகம் செய்துள்ளார். பல திருப்பணி கமிட்டியில் இருந்து, பல ஆலய கும்பாபிஷேகங்களை நடத்திஉள்ளார். பல புத்தகங்கள் வெளிவர காரணமாக இருந்தார். திருப்பாலைவனம் கும்பாபிஷேகம் திருப்பணி, நித்யநைமித்திக பூஜை பொறுப்பு வகித்து வருகிறார்.

"ஸ்ரீலோகாம்பிகா வேதசிவாகம வித்யாலயம்" என்ற பாடசாலை நிறுவி அதில் 5 ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் நியமித்து 85 முதல் சுமார் 90 மாணவர்களை தமிழகத்திற்கு கற்றுணர்ந்த சிவாச்சாரியார்களை தந்துள்ளார். இந்நிர்வாகம் தமது சொந்த பொறுப்பில் நடத்துகிறார்.

இவருக்கு ஒரு புதல்வர் ரமணி, மருமகள் சுஜாதா பேத்திகள் நிவேதிதா, அனிந்திதா, இருவர்.

பெற்ற பட்டங்கள். "திருப்பணி செம்மல்" - சென்னை

"சிவாகம பாரதி" - ரத்னகிரி

"சிவாகம ரத்னாகரம்" - திருப்பரங்குன்றம்.

காஞ்சிபுரம் - சாளுவ சிவஸ்ரீ க.ராஜப்பா குருக்கள் (எ) சுப்ரமணிய நாயகர்

காஞ்சிபுரம் ஸ்ரீ ஏகாம்பரேஸ்வரர், காஞ்சி ஸ்ரீ கைலாஸநாதர் ஆலய பரம்பரை அர்ச்சகரும் சிவஸ்ரீ சாளுவ பட்டுசாமி என்கிற கச்சுகுருக்கள் (நாயகர்) திருமதி ராஜேஸ்வரி அம்மாள் தம்பதிகளுக்கு பவ வருஷம் புரட்டாசி மாதம் (14-10-1934)ல் பிறந்தார். இவருக்கு இரண்டு புதல்வர்கள் இரண்டு புதல்விகள் உள்ளனர். பேரன் பேத்திகள் உள்ளனர்.

தனது சிறிய வயதில் சென்னை வண்ணாரப்பேட்டை ஸ்ரீ சாமுண்டீஸ்வரி அம்மன் கோயிலில் தந்தைக்கு உதவியாக இருந்து தேவநாகரி, ஸம்ஸ்கிருதம் பயின்றார். காஞ்சி பச்சயப்பன் பள்ளியில் SSLC தேர்ச்சி பெற்றார். தனது 17-வது வயதில் திருமணம் நடைபெற்றது. ஆலய பணி போக, மீதி நேரத்தில் சங்கீத பயிற்சியும் பெற்றார்.

விஜயநகர சாம்ராஜ்யம் வாரிசுரிமை போர் நடைபெற்ற போது இவர்தம் மூதாதையர்கள் சாளுவ செல்லப்ப நாயகர் என்பவர் ஒரு சாராருக்கு உதவிபுரிந்து ஆட்சிபீடம் ஏற்றிவைத்தார். அவருக்கு ஒரு குறிப்பிட்ட இடத்தை ஆட்சி செய்ய அச்சுதராயர் என்பவர் அதிகாரம் வழங்கினார் (ஜமீன் போல). சில காரணங்களால் ஆட்சி பீடத்தில் உள்ளவருக்கும் திவானாக நியமிக்கபட்ட செல்லப்ப நாயகருக்கும் சண்டை ஏற்பட்டது. விஜயநகர சேனைகளை சமாளிக்க முடியாத செல்லப்ப நாயகர் திருவனந்தபுரத்தை அடைந்து அங்குள்ள அரசுக்கு உதவியாக இருந்தார். பல ஆண்டுகள் கழித்து விஜயநகர அரசர் அவரை அழைத்து மீண்டும் பதவி கொடுத்தார். இவருடைய தகப்பனார் காஞ்சிபுரம் கோயிலில் தலைமை அர்ச்சகர் என கல்வெட்டு செய்தி கூறுகிறது. "பல்லவ விஜயநகர சாம்ராஜ்ய ஆராய்ச்சி" என்ற கட்டுரையில் கிருஷ்ணமூர்த்தி என்பவரால் அறியப்படுகிறது. புழல் மற்றும் திருவண்ணாமலை போன்ற இடங்களில் கல்வெட்டாக இருக்கிறது. விஜயநகர அரசர்களுக்கு நாயகர் பட்டம் உள்ளதால் அவர்களுடைய அப்பட்டத்தை தமது ஆட்சி பீடத்தில் உட்பட்ட சிறிய ராஜ்யங்களை ஆளும் பொறுப்பை வகித்தவர்களுக்கு வழங்கியதால் இவர்தம் முன்னோர் "சாளுவ நாயகர்" என்னும் பரம்பரை பட்டம் பெற்றவர்கள். இவர்தம் முன்னோர் ஸ்ரீ ஏகாம்பரநாதர் அர்ச்சகராக இருந்தமையால் அக்கோயில் நடைமுறை பழக்கங்களில் "சாளுவ நாயகர்" என்ற

அடைமொழி கையெழுத்து செய்யும் வழக்கம் தொடர்ந்து இருந்து வருகிறது.

"அர்ச்சகஸ்ய ஸரசாக்ஷாத்" என்னும் பழமொழிக்கு இதுவே ஓர் ஆதரமல்லவா.

இவர் எழுதிய நூல் 1. தத்வார்ச்சனை, ஸ்பர்ஸாஹுதி, 2. அக்னிகார்யம், 3. சிவாகம ஆராய்ச்சி கட்டுரை, ஆகியன. இவர் வேதங்களை ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி கனபாடிகளிடமும், சாஸ்திர பாடங்களை ஸ்ரீபார்த்தசாரதி அய்யங்காரிடமும், ஆகமங்களை சோமு குருக்களிடமும் கற்றார். இவரது தீக்ஷா குரு தி.வைத்யநாத குருக்கள் சைதாப்பேட்டை ஸ்ரீ காரணீஸ்வரர் ஆலயம், வேலூர் ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் ஆலயம் நங்கநல்லூர் ஸ்ரீ தர்மலிங்கேஸ்வரர் ஆலயம், சித்தூர்ஆந்திர மாநிலம், ஓசூர் மற்றும் சென்னை மாநகரில் பல கும்பாபிஷேகங்கள் ஸர்வசாதகராக இருந்து நடத்தியவர். ரீயூனியன், சிங்கப்பூர் மலேசியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இலங்கை போன்ற இடங்களில் கும்பாபிஷேகங்கள் நடத்தி உள்ளார்.

ஸ்ரீலங்காவில் 1986ல் அஸ்வமேதயாகம் நடத்த காஞ்சி ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹா ஸ்வாமியின் ஆக்ஞையால் சென்று அதன் விபரங்கள் அறியப்பெற்று 48 நாட்கள் நடத்தி சிறப்பு பெற்றவர்.

நாடிவரும் சீடர்களுக்கு சமய, விசேஷ, நிர்வாண தீட்சையும் சிவாச்சாரியார்களுக்கு ஆச்சார்யாபிஷேகமும் நடத்தி வருகிறார். பலருக்கு தமது இல்லத்தில் வேத ஆகமசாஸ்திரபாடங்களை பயிற்றுவிக்கிறார். இவர் பெற்ற பட்டங்கள்

"சிவாகம சித்தாந்த சாகரம்" - ஸ்ரீலங்கா

"சிவாகம ஞானபானு" - வேலூர்

"சிவாகம செல்வர்" - கௌமாரமடம், கோவை.



ஆனந்ததாண்டவபுரம் - சிவஸ்ரீ வை. ஜகதீஸ சிவாச்சாரியார்

ஆனந்த தாண்டவபுரம் பரம்பரை அர்ச்சகரும் ஸ்ரீ பஞ்சவடீஸ்வர ஆலய பரம்பரை தர்மகர்த்தாவான சிவஸ்ரீ வைத்யநாத சிவாச்சாரியார் அபயாம்பாள் தம்பதிகளின் திருக்குமாரர் வை. ஜகதீஸ சிவாச்சாரியார் அக்ஷய வருஷம், ஆடி மாதம் 8ம்தேதி பிறந்தார்.

மொழையூர் ஸ்ரீ சுந்தரேச சிவாச்சாரியாரிடம் ஆகமம் பயின்றார். பளங்குடி ஸ்ரீ சுப்ரமணிய சாஸ்திரிகளிடம் வேதம் பயின்றார். ஆனந்த தாண்டவபுரம் சா.சுந்தரேச அய்யரிடம் சாஸ்திரம் பயின்றார்.

பல நூறு ஆலய கும்பாபிஷேகங்கள் நடத்தி உள்ளார். கும்பகோணம் ஸ்ரீ ஆதிகும்பேஸ்வரர் சன்னதியில் தனது தந்தையாரால் சிவதீட்சை, ஆச்சாரியாபிஷேகம் செய்து பேறு பெற்றார்.

சீர்காழி ஸ்ரீ சங்கர மட வேத சிவாகம பாடசாலையில் காவ்ய ஆசிரியராக பணிபுரிந்தார். ஆனந்த தாண்டவபுரத்தில் சங்கர வித்யா ஆகம பாடசாலை ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார்.

இவருக்கு நான்கு புதல்வர்கள் இரண்டு குமாரிகள் உள்ளனர். பல ஆகம பாடசாலைகளுக்கு மூல பாடத்தை கை பிரதியாக எழுதித்தந்து உபசரித்து வருகிறார்.

திருக்கடையூர் - சிவஸ்ரீ இரா.விஸ்வநாத குருக்கள்

"நல்லன எல்லாம் தரும்" ஸ்ரீ அபிராமி உடனாகிய ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி திருவருளால் சிவஸ்ரீ ராஜமென்கிற இராமலிங்க சிவாச்சாரியார் – மாதுஸ்ரீ அபிராமி அம்மாளுக்கு 1936 தாது வருஷம், ஐப்பசி மாதம் கேட்டை நட்சத்திரத்தில் சிவஸ்ரீ விஸ்வநாத சிவாச்சாரியார் பிறந்தார். ஆரம்பகல்வி திருக்கடையூர் பள்ளியில் பயின்றார். தமது 8-ம் வயதில் உபநயனம். சமயதீக்ஷை, தமது தந்தையாரால் செய்விக்கப்பெற்றார்.

தருமபுரம் வேத சிவாகம பாடசாலை முதல்வர் "சிவாகமரத்னாகரம்" டாக்டர். சுவாமிநாத சிவாச்சாரியார் அவர்களிடம் வேத சிவாகம சாஸ்திரங்களை படித்து "ஆகமப்ரவீணர்" என்ற பட்டத்தை தருமை ஆதீன 25வது குருமாஹா சன்னிதானம் அவர்களிடம் பெற்றார். தனது பாரம்பரிய மூதாதையர் பூஜித்த அபிராமி உடனருள் அமிர்தகடேச சுவாமியை தம் எட்டாவது

தலைமுறையாக பூஜிக்க ஆச்சாரியாபிஷேகம் (சிவதீட்சை) பெற்று "வாமதேவசிவம்" என்ற தீட்சா நாமம் பெற்று முறையாகவும், சிறப்பாகவும், ஆன்மார்த்த பூஜை, பரார்த்த பூஜை செய்து வருகிறார். காலனை வென்ற தலமாக விளங்கும் திருக்கடையூர் திருத்தலத்தல் தன்னை நாடி வரும் அன்பர்களுக்கு 59-ல் "உக்ரத சாந்தி" 60-ல் "சஷ்டியப்த பூர்த்தி சாந்தி" (மணிவிழா) 70-ல் "பீமரதசாந்தி" 80-ல் "சதாபிஷேகம்" செய்து வைப்பதில் மிகவும் வல்லவர். அதன் பொறுட்டு "சாந்திகலா பூஷணம்" என்கிற விருதும் பெற்றவர்.

திருக்கடவூர் தென் மேற்கில் உள்ள மணல்மேடு கிராமத்தில் மிருகண்டு மஹரிஷியானவர் தமக்கு புத்திர பேறு வேண்டி சிவலிங்கம் ஸ்தாபிதம் செய்து பூஜித்து வந்து பிறகு மார்க்கண்டேயர் பிறந்த வரலாற்றையுடைய சிவாலயத்தை, திருப்பணிகள் பல செய்து கும்பாபிஷேகமும் தம் சொந்த செலவில் செய்து அதன் அறங்காவலராக நிர்வாகம் செய்து வருகிறார்.

நான்கு குமாரர்களையும் மூன்று குமாரிகளையும் பெற்றுள்ளார். தமது குமாரர்களையும் தருமபுரம் சிவாகம பாடசாலையில் படிக்க வைத்து ஆச்சார்யாபிஷேகம் சிவதீட்சை செய்து ஸ்ரீ அபிராமி அமிர்தகடேஸ்வர சுவாமியை, ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் வாக்குக்கிணங்க மீளா அடிமை வழிவழியாக சிறப்பாக பூஜை செய்து வர வாழ்ந்து வருகிறார்.

தமது 60வது மணிவிழாவில் 1996ல் ஸ்ரீ அமிர்தகடேஸ்வர பெருமானுக்கு மஹாருத்ர யாகத்துடன் பல அந்தணர்களைக்கொண்டு சதுர்வேத பாராயணம், பல பிரபல ஓதுவா மூர்த்திகளைக் கொண்டு திருமுறை முற்றோதல், சிவாகம முறைப்படி தலைசிறந்த சிவாச்சாரியார்களை கொண்டு பூஜைகள் நிகழ்த்தி மணிவிழாவை அவரது வம்சாவழியினர் சிறப்பாக கொண்டாடினார்கள்.

வாழ்க சிவாச்சாரியார்!

வளர்க அவர்தம் தொண்டு!



இலுப்பப்பட்டு - சிவஸ்ரீ
சு. கல்யாண சுந்தர சிவாச்சாரியார்

பாண்டவர்கள் ஐவரும் திரௌபதியும் பூஜித்ததும் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளால் பாடல் பெற்ற திருமண்ணிப்படிக்கரை (இலுப்பப்பட்டு) ஸ்ரீ நீலகண்டேஸ்வர சுவாமி பரம்பரை அர்ச்சகரான சிவஸ்ரீ சுவாமிநாத சிவாச்சாரியார் மாதுஸ்ரீ மீனாக்ஷிஅம்மாள் தம்பதிகளுக்கு 1948ஆம் ஆண்டு பங்குனி மாதம் ஸ்ரீ கல்யாண சுந்தர சிவாச்சாரியார் பிறந்தார். "ஈசான சிவம்" எனும் தீட்சாநாமம் பெற்றவர்.

ஆரம்பக்கல்வி கற்கும்போதே, உபநயனம் செய்வித்து ஸமஸ்கிருதமொழி பயிற்சி, அர்ச்சனை, தியானங்கள், ஆகியவற்றை இவரது தந்தையாரே கற்பித்தார். கோனேரிராஜபுரம் சிவஸ்ரீ சோமாஸ்கந்த குருக்களிடம் சிறிதுகாலம் பயின்றார். பின்னர் அல்லூர் சிவாச்சாரியகுல பூஷணம் சிவஸ்ரீ டாக்டர் விஸ்வநாத சிவாச்சாரியார் தலைமையில் நடைபெறும் வேதசிவாகம பாடசாலையில் முதல் பயிற்சி மாணாக்காரக பயின்று முதல் வகுப்பில் "சிவாகம சிரோண்மணி" எனத்தேர்ச்சி பெற்றார். பின்னர் சென்னை மாநில சமஸ்கிருத கல்லூரியில் "மீமாம்சை சிரோண்மணி" பட்டம் பெற்றார். பின்னர் திருமலை திருப்பதி தேவஸ்தான தேர்வில் பூர்வ பாகம், உத்திரபாகம் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். மைசூரில் தத்தபீட கணபதி சச்சிதானந்த சுவாமிகள் மணிவிழாவை ஆகம முறைப்படி செய்வித்து அவரிடம் "ஆஸ்தான வித்வான்" என்ற பட்டம் பெற்றார்.

சுமார் 500 கும்பாபிஷேகங்களுக்கு மேல் சர்வசாதகராக இருந்து கும்பாபிஷேகங்கள் நடத்தி வருகின்றார். பலருக்கு தீட்சை செய்து வைத்துள்ளார்.

இவர் இரண்டு புத்தகங்கள் எழுதியுள்ளார். வினாயகர் பூஜா கல்பம், சிவாகம பூஜாக்ரமம், ஆகியவை.

இவருக்கு இரண்டு பெண்குழந்தையும் ஒரு ஆண் குழந்தையும் உள்ளனர்.

இவர் பெற்ற பட்டங்கள்

சிவாகம சிரோண்மணி, மீமாம்ச சிரோண்மணி
மீமாம்ச விசாரதா, சிவாகம ஞானஜோதி
சிவாகம பிரதிஷ்டாரத்னம் ஆகியன

இவர் கும்பகோணத்தில் பாணாதுறை சன்னிதியில் நடைபெற்று வரும் வேதசிவாகம பாடசாலையின் தலைமை ஆசிரியராக பணியாற்றி வருகிறார். சுமார் 60 சிவாச்சாரியார்களுக்கு தனது இல்லத்தில் சிவாகம பாடங்களை பயிற்றுவித்து, பகுதிநேர வகுப்புகள் நடத்தி பல சிவாச்சாரியார்களை உருவாக்கி வருகிறார்.

இவர்தம் பணி தொடர்ந்து சிறந்து விளங்க எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திப்போம்!

திருக்கண்ணங்குடி - சிவஸ்ரீ T.K. பாலாமணி சிவாச்சாரியார்

திருக்கண்ணங்குடி ஸ்ரீ ஞானம்பிகை உடன் அருள் காளஹஸ்தீஸ்வரஸ்வாமி திருக்கோயிலில் பரம்பரை அர்ச்சகராக பணிபுரிந்த சிவஸ்ரீ காயாரோஹண சிவாச்சாரியார்-ஜெயலெட்சுமி தம்பதிகளுக்கு விக்ருதி வருஷம் ஆனி மாதம் 9ம் தேதி 23-6-1950 பாலாமணி தத்புருஷ சிவாச்சாரியார் பிறந்தார். இவர்தம் துணைவியார் பெயர் ஜெயலெட்சுமி கௌரியாகும்.

தஞ்சை மாவட்டம், திருவையாறு ஸ்ரீ பஞ்சாபகேச சிவாச்சாரியார் தலைமையில் நடைபெற்ற பாடசாலையில் பயின்று முதல் மாணவராக தேர்ச்சி பெற்றார். சிவாகமம், வேதம், சாஹித்யம், ஆகியவற்றில் பயிற்சி பெற்றார்.

"சிவாகம வித்வான்", "பிரதிஷ்டா பூபதி" என்ற பட்டங்கள் பெற்றார்.

நாகை, சிக்கல், திருப்பாதிரிபுலியூர் போன்ற பல ஆலயங்களில் கும்பாபிஷேக சர்வசாதகராக இருந்து நடத்தியவர். சண்டீஹோமங்கள் பல நடத்திஉள்ளார். சிங்கப்பூர், ரீயூனியன், மொரிஷியஸ் போன்ற வெளிநாடுகளிலும் கும்பாபிஷேகங்கள் நிகழ்த்தி உள்ளார். 1992ல் தமது சொந்த ஊர் திருக்கண்ணங்குடி ஆலய கும்பாபிஷேகத்தினை சொந்த செலவில்செய்து உள்ளார். 10 ஆண்டுகளாக இவ்வாலய பிர்ம்மோற்சவம் நடத்தி வருகிறார். சொந்தஊர் பெருமாள் கோயில் திருப்பணியில் பங்கு பெற்றுள்ளார். தமது இல்லத்தில் பல சிவாச்சாரிய மாணவர்களுக்கு இலவசமாக ஆகமம், வேதம், பயிற்சி அளித்து பல சிவாச்சாரியார்களை உருவாக்கி உள்ளார்.

இவர் எழுதிய நூல்கள்

சிவ தேவிகண ஸ்கந்த ப்ரதிஷ்டாசங்க்ரஹம்
தேவீ அதர்வசீர்ஷம்
குஹ மூலமந்த்ர த்ரிசதி
ஷடத்வ ந்யாஸம், பதமந்த்ரம்

இவர் பெற்ற பட்டங்கள்

சிவாகம வித்வான்,
சிவாகம நிபுணர்,
சிவாகம ஞானி,
சிவாகம சிற்பி,
சிவாச்சார்ய குலதிலகம்
பிரதிஷ்டா பூபதி
வேதாகமரத்னம்
சிவாகம ஞானசாம்ராட்
சிவாகம சிந்தாமணி

இவருக்கு ஒரு குமாரனும், மூன்று பெண்களும் உள்ளனர். குமாரன் குலத்தொழிலான சிவாச்சாரியார் பணி செய்கிறார். இருபெண்களுக்கு திருமணம் ஆகி உள்ளது.

பிள்ளையார் பட்டி - சிவஸ்ரீ கி. பிச்சை சிவாச்சாரியார்

பிள்யைார்பட்டி சிவஸ்ரீ கிருஷ்ணசாமி குருக்கள்-முத்து அம்மாள் தம்பதிகளுக்கு புதல்வராக 1947ஆம் ஆண்டு பிச்சை சிவாச்சாரியார் பிறந்தார். இவருக்கு ஒரு புதல்வரும், 2 புதல்விகளும் உள்ளனர், கோத்ரம் கௌண்டின்ய கோத்ரம்.

தமது ஆகமபாட பயிற்சிகளை தந்தை சிவஸ்ரீ. கிருஷ்ணசாமி குருக்களிடமே பயின்றார். வேதபாடங்கள் காசி கனபாடிகளிடம் பயின்றார். சாஸ்த்ரம் மாதவன் நாயர் என்பாரிடம் பயின்றார். சமயதீட்சை ஆடூர் காசி. வைத்யநாத சிவாச்சாரியாரிடம் பெற்றார் ஆச்சாரியபிஷேகம் திருவாடானை ஸ்ரீ அய்யாமணி சிவாச்சாரியாரல் செய்து வைக்கப்பட்டவர்.

சுமார் 1370 கும்பாபிஷேகங்கள் செய்து உள்ளார். தமிழ்நாட்டில் உள்ள மிகப்பெரிய சிவாலயங்களில் சர்வஸாதகராக இருந்து திறம்பட கும்பாபிஷேகங்கள் செய்து உள்ளார். இராமமேஸ்வரம், பழநி, சுவாமிமலை, திருவாரூர், சுசீந்திரம், திருவண்ணாமலை போன்ற தலங்களிலும், அயல் நாடுகளில் சிங்கப்பூர், மலேசியா, அமெரிக்கா, ரீயூனியன், ஸ்விட்சர்லாந்து, ஜெர்மனி, ஆஸ்திரேலியா போன்ற

நாடுகளில் கும்பாபிஷேகங்கள் நடத்தியவர். "சிவநெறிக் கழகம்" என்ற அமைப்பை ஸ்தாபித்து செய்து பல ஆன்மீக நற்பணிகள் நூல்வெளியீடு, கருத்தரங்கள் பல நடத்தி உள்ளார். கோவிலூர் ஆதீன ஆஸ்தான வித்வானாக இருந்து பல வேத சிவாகம, சாஸ்த்ர, திருமுறை, சிற்ப, நாதஸ்வர, தவில் வித்வத்ஸதஸ்களை நடத்தி வருகிறார்.

தனது சொந்த முயற்சியால் வேதசிவாகம பாடசாலையை பிள்ளையார்பட்டியில் நிறுவி, பல ஆயிரக்கணக்கான மாணவர்களை அர்ச்சகர் பணியில், இந்தியாவில் மட்டுமல்லாமல் அயல் நாடுகளிலும் பணிபுரிய உதவியுள்ளார். பிள்ளையார்பட்டியில் ஆரம்ப பள்ளிக்கு தாளாளராக உள்ளார். மத்திய, மாநில அரசு விருதுகள் பல பெற்றுள்ளார். "கும்பாபிஷேக கிரியா விளக்கம்", சிவாகம ப்ரயோகமாலா 1, 2, 3, பகுதிகளை வெளியிட்டுள்ளார்.

திருவிடைமருதூர் - சிவஸ்ரீ S. கண்ணப்ப சிவாச்சாரியார்

திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்க சுவாமி ஆலய பரம்பரை அர்ச்சகர் சிவஸ்ரீ சாம்பசிவ சிவாச்சாரியார்-அலமேலு அம்மாள் புதல்வராக விக்ருதி ஆண்டு ஆனிமாதம் 3ம் தேதி 17-6-50 கண்ணப்ப சிவாச்சாரியார் பிறந்தார். இவருக்கு 2 புதல்வர்கள் உள்ளனர். ஆகமம், நகரத்தார் பாடசாலையில் தகப்பனாரிடம் பயின்றார். சாஸ்திரம் சீனுவாச சாஸ்திரிகளிடம் பயின்றார். இவரது தீட்சா நாமம் "ஈசான சிவம்" தந்தையிடமே சிவதீக்ஷை பெற்று கொண்டார்.

திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்க சுவாமி ஆலய அர்ச்சகராக பணிபுரிந்துள்ளார். 250 கும்பாபிஷேகங்கள் சர்வசாதகமாக இருந்து நடத்தி உள்ளார். வேதம், ஆகமம் சாஸ்திரம் பரீட்சைகளுக்கு தேர்வு அதிகாரியாக பணியாற்றிவருகிறார். சைவ சித்தாந்தமும் கற்றுணர்ந்தவர். திருவிடைமருதூர், திருவாவடுதுறை ஆஸ்தான வித்வானாக இருந்து உள்ளார்.

இவர் பெற்ற பட்டங்கள்

சிவநெறி செம்மல் - குன்றகுடி
சிவாகம பிரதிஷ்டாபூபதி - ரத்னகிரி,
சிவாகம செல்வர் - கௌமார மடம்,
சிவபிரதிஷ்டா - நல்லூர்
சிவாகம புலவர், சித்தாந்த ரத்னா - திருவாவடுதுறை.

கோனேரிராஜபுரம் - சிவஸ்ரீ ஸ்ரீ சோ. சபேச சிவாச்சாரியார்

கோனேரிராஜபுரம் ஸ்ரீ உமாமகேசுவரர் ஆலய பரம்பரை அர்ச்சகர் ஸ்ரீ சோமாஸ்கந்த சிவாச்சாரியார் - சம்பூர்ணம்மாள் தம்பதிகளுக்கு ஈஸ்வரவருஷம் கார்த்திகை மாதம் (22-11-35) பிறந்தார். இவருக்கு மூன்று புதல்வர்களும் இரண்டு புதல்விகளும் உள்ளனர். தனது தந்தையிடமே வேதம், சிவாகமம், ஸ்ரீவித்யா பூஜைகளை கற்றவர் சாஸ்திரம், நாராயணசுவாமி வாத்யாரிடம் பயின்றார். திருநள்ளம் ஸ்ரீ உமாமகேஸ்வரர் சன்னதியில் தந்தையாரிடம் சிவதீட்சை, சாக்த தீட்சை பெற்றவர். பல ஆயிரக்காணக்கான கும்பாபிஷேகங்களில் பங்கேற்று சிறப்பாக நடத்தி வருபவர். பலவெளிநாடுகளில் கும்பாபிஷேகம், சண்டிஹோமங்கள் நடத்தி உள்ளார்.

கோனேரிராஜபுரம் ஸ்ரீ கைலாசநாதர் ஆலயம் இளையாத்தங்குடி சிவாலயம், பெங்களூர் ஸ்ரீ ஞானாக்ஷி ராஜராஜேஸ்வரி ஆலயம் போன்றவற்றில் தலைமை அர்ச்சகராக பணிபுரிந்துள்ளார். பெங்களூர் கைலாச ஆஸ்ரம வேதசிவாகம பாடசாலை தலைமை ஆசிரியராக பணியாற்றி பல மாணவர்களை உருவாக்கி உள்ளார். தற்போது மயிலாடுதுறை சிவஸ்ரீ நாகநாதஅகோர வேதசிவாகம பாடசாலையில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார். இவர் எழுதிய நூல்கள் "சண்டி யக்ஞ ஆராதனாவிதி", "திருக்கல்யாண உத்ஸவவிதி", "ஆன்மார்த்த பூஜாவிதி" போன்றவையாகும். பல ஆன்மீக நூல்கள் வெளியீட்டு குழுவில் இருந்து வருகிறார். சண்டிஹோமம் பற்றிய பிரதிபா பிரசுரம் நூல் அமைப்பு குழுவில் இருந்துள்ளார்.

இரத்னகிரி பாலமுருகன் அடிமை ஆலய வித்வத் ஸதஸ்ஸில் தலைமை ஏற்று நடத்தி உள்ளார். கோவை கௌமாரமடாலயம், சென்னை, கோயிலூர், போன்ற பல இடங்களில் வித்வத் ஸதஸ்ஸில் பங்கேற்று அரிய விஷயங்களை தந்திருக்கிறார். இவர் பல விருதுகள் பட்டங்கள் பெற்றுள்ளார். பல பாடசாலைகளுக்கு ஆலேசகராகவும் ஆகம ஆராய்ச்சி நூல்கள் பல வெளிவர உதவியவர்.

திருப்பாலலவனம் - சிவஸ்ரீ த. சோமசுந்தர சிவாச்சாரியார்

சீர்காழிக்கு மேற்கே கீழத்திருப்பழனி என்று போற்றி வழிபடும் தலமாக விளங்கி வரும் கொண்டல் கிராமத்தில் அருளாட்சி புரியும் ஸ்ரீ குமாரசுப்ரமணிய சுவாமியை ஆத்மார்த்தமாக பூஜித்துவரும் ஆதிசைவ மரபில் தோன்றிய சிவஸ்ரீ தண்டபாணி சிவாச்சாரியார் மாதுஸ்ரீ தேவசேனா தம்பதிகளுக்கு முருகனருளால் மூத்த புதல்வராக 26-7-48 காச்யப கோத்ரத்தில் சோமசுந்தர சிவாச்சாரியார் பிறந்தார். ஆரம்ப பள்ளி படிப்பில் தமிழ், ஆங்கிலம் கற்று 1959 ஆம் ஆண்டு எஸ்.எஸ்.எல்சி தேர்ச்சி பெற்றார். பிறகு தருமை ஆதீன வேத சிவாகம பாடசாலையில், வேதசிவாகமங்களை சிவஸ்ரீ சுவாமிநாத சிவாச்சாரியாரிடம் பயின்று முதல் மாணவனாக "சிவாகப்ரவீணர்" என்ற பட்டம் பெற்றார். 1967ஆம் ஆண்டு அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் படித்து "சாஹித்ய சிரோண்மணி" பட்டம் பெற்றார். கோவை மாவட்டம், கோபிவட்டம் கூகலூர், கிராமம் ஸ்ரீ சிவராதாகிருஷ்ணன் கோயிலில் அர்ச்சகராக பணிபுரிந்தார். சொந்த ஊர் சோதியக்குடி ஸ்ரீ அமிர்தவள்ளி அம்பிகை உடனருள் ஸ்ரீ கைலாஸநாதர் ஆலயம் உருக்குர் ஸ்ரீ விஸ்வநாதர் ஆலயங்களில் பூஜை செய்சார். நெப்பத்தூர் ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரர் ஆலயத்தில் 6 ஆண்டுகள் பூஜை செய்தார். பின்னலூர் ஸ்ரீ பர்வதவர்த்தினி உடனருள் ஸ்ரீ ராமலிங்கேஸ்வரர் ஆலயத்தில் பூஜை செய்தார்.

திருக்கோயிலூரை அடுத்த ஸ்ரீ ஞானானந்த தபோவனத்தில் வேதசிவாகம பாடசாலையில் ஓராண்டு சிவாகம ஆசிரியராக பணி புரிந்தார். கருப்பூர் ஸ்ரீ கைலாஸநாதர் ஆலய பூஜை செய்து தன் மூத்த குமாரனிடம் பூஜையை ஒப்படைத்தார்.

வழுவூர் ஸ்ரீ வித்யா வேதசிவாகம வித்யாசாலையில் ஓராண்டு சிவாகம ஆசிரியராக இருந்தார்.

சென்னை வடபழனி ஸ்ரீ ஆண்டவர் கோயிலில் பகுதிநேர பயிற்சி கல்வியை அர்ச்சகரகர்களுக்கு ஓராண்டு அரசு பயிற்சி பணியில் வேத, ஆகம, காவிய ஆசிரியராக பணிபுரிந்தார். பின்னர் சிங்கப்பூர் எண்டோமெண்ட் மூலம் தேர்வு பெற்று சிங்ப்பூர் சிரவன்கோடு ஸ்ரீ விசாலாட்சி அம்பிகா உடனருள் ஸ்ரீ விஸ்வநாதர் ஆலயம் அர்ச்சகர் பணியில் சேர்ந்து சிங்கப்பூரில் அவ்வாலய கும்பாபிஷேகம் நடத்தி பிர்ம்மோற்சவம் நடத்தி சிறப்பித்தார். பின்னர் தாயகம் திரும்பி

திருப்பாலைவனம் ஸ்ரீ குருஜி சிவஸ்ரீ தி.து.சுவாமிநாத சிவாச்சாரியாரால் 1995ல் துவங்கிய ஸ்ரீ யோகாம்பிகா வேதசிவாகம வித்யாலயத்தில் சிவாகம ஆசிரியராகவும், முதல்வராகவும் பணிபுரிந்து பல நூற்றுகணக்கான மாணவர்களை உருவாக்கினார்.

ஸமஸ்கிருதம், தமிழ் மொழிகளில் பல ஸ்லோகங்கள், பாடல்களை எழுதியுள்ளார். சிவாகமத்தில் பல பூஜை முறைகள் சம்பந்தமான தனி புத்தங்கள் வெளியிட்டுள்ளார். தமது குல தெய்வான ஸ்ரீ குடவரசிஅம்பாள் பேரில் ஸ்ரீ கடேஸ்வரி ஸதோத்திரங்கள் பல செய்து உள்ளார். "ஸ்ரீ நவக்ரஹ குருபகவானுக்கு வர்ணமாலா" சகஸ்ரநாமம் எழுதியுள்ளார். ராகு, கேது த்ரிசதி எழுதியுள்ளார். சமய சமூகப்பணிகளும், சமுதாய பணிகளும் செய்து வருகிறார்.

இவரது மூத்தகுமாரன் "வேதசிவாகம ஞானமணி", "வேதசிவாகம சிந்தாமணி" சிவஸ்ரீ சண்முகசுந்தரசிவம் யோகம்பா வேதசிவாகம வித்யாலயத்தில் வேத ஆசிரியராக பணி புரிகிறார்.

ஸ்ரீ சோமசுந்தர சிவாச்சாரியார் பெற்ற பட்டங்கள்

டாக்டர் (முனைவர்) சிவாகமபிரவீணர்
சிவாகமகலாரத்தினம், ஸாஹித்ய சிரோண்மணி
தெய்வகுரு சிகாமணி, போதனச்சார்ய பூஷணம்
சிவாகம ஞானரத்ணாகரம், போன்றவை.

இதுபோன்ற பல பட்டங்கள், பொற்பதக்கங்கள், பொன்னாடைகள் பெற்று ஆதிசைவ சமுதாய நற்பணிக்காகவும் மக்களின் நற்பணிக்காக தன்னை ஈடுபடுத்தி கொண்டிருக்கும் இவருடைய சேவை வளரட்டும்.



காஞ்சிபுரம் - சிவஸ்ரீ டாக்டர். உமாபதி சிவாச்சாரியார்

தஞ்சை மாவட்டம் கோனேரி ராஜபுரம் ஸ்ரீ உமாமகேஸ்வர ஸ்வாமி ஆலய பரம்பரை அர்ச்சகர் சிவஸ்ரீ ஸோமஸ்கந்த சிவாச்சாரியார்-சம்பூரணம்மாள் தம்பதிகளுக்கு விளம்பி வருஷம், வைகாசி மாதம் 13ந் தேதி (27-5-1958) பிறந்தார்.

இவரது துணைவியார் பெயர் புவனேஸ்வரிகங்கா. ஒரு புதல்வியும், ஒரு புதல்வனும் உள்ளனர்.

அகரமாங்குடி சாஸ்திரபாடசாலையில் பயின்றார். சென்னை மயிலை சம்ஸ்கிருத கல்லூரியில் பட்டமும் சுப்ரமண்ய சிவாசாரியாரிடமும், தந்தையிடமும், சிவாகமும், திருவிடைமருதூர் சீனுவாச கனபாடிகளிடம் வேதமும், தனது சகோதரர் பெங்களூர் சோ. ஸபேச சிவாசாரியாரிடம் சிவாகமும், ஸ்ரீவித்யாபூஜைகளையும் பயின்றார். காஞ்சி மத்ய பல்கலைக்கழகத்தில் சிவாகமத்தில் டாக்டர் பட்டம் பெற்றார். கோனேரிராஜபுரம், பவாணி, நாகூர் போன்ற ஆலயங்களில் பணி செய்தார். 1990முதல் 1995 முடிய கௌமார மடலாய வேதசிவாகம பாடசாலை தலைமையாசிரியராக பணி புரிந்தார். 1995 முதல் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீட வேதசிவாகம பாடசாலை தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார். சுமார் 300க்கு மேற்பட்ட மாணவர்களை உருவாக்கியவர். சிங்கப்பூர், இலங்கை, மலேசியா, தாய்லாந்து, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஆகிய நாடுகளிலும் இந்திய துணைக்கண்டத்தில் தமிழ்நாடு, கர்நாடாக, ஆந்திரா, மஹாராஷ்டிரம், மத்யப்பிரதேசம், ஹரியானா, டில்லி, உத்ராஞ்சல், ஆகிய மாநிலங்களில் 300க்கும் மேற்பட்ட ஆலயங்களில் கும்பாபிஷேகத்தை நடத்தியுள்ளார். பவானிசாகர் காகிதஆலையில் உற்பத்திதிறன் மேம்பட சிவாகமமுறைபடி பூஜைசெய்து மேம்பட செய்தார். ஸ்ரீ விஜயகணபதி ஆலயத்தை பூஜை செய்த போது ஆலையின் வியாபாரம் மேம்பட தனது பூஜை முறையால் நிருபித்தார்.

300க்கும் மேற்பட்டவர்களுக்கு சமய தீட்சையும் 100க்கும் மேற்பட்டவர்களுக்கு சாக்ததீக்ஷயும் செய்து வைத்துள்ளார். "அர்ச்சகர் குரல்" என்ற பத்திரிகையில் பலகட்டுரைகள் எழுதி உள்ளார். காஞ்சி ஸ்ரீ மடத்தின் வெப்சைட்டில் (வலைதளம்) பல கட்டுரைகள், சுப்ரபாதம் குமாரதந்திரம், தமிழாக்கம், செய்து, நித்யார்ச்சன விதி விமர்சனங்கள் செய்துள்ளார். பல நூற்றுக்கணக்கான

சண்டிஹோமங்கள் குறிப்பாக 8 சகஸ்ரசண்டியாகம் செய்துள்ளார். ஸ்ரீ வித்யா உபஸனையில் தலைசிறந்தவராக உள்ளார்.

இவர்பெற்ற பட்டங்கள்

ஸாகித்ய சிரோன்மணி	சென்னை பல்கலைக்கழகம்
ஸாகித்ய விசாரதா	சென்னை சம்ஸ்கிருத கல்லூரி
மீமாம்ஸ சிரோன்மணி	சென்னை சம்ஸ்கிருத கல்லூரி
மீமாம்ஸ விசாரதா	சென்னை சம்ஸ்கிருத கல்லூரி
சிவாகம சிரோன்மணி	ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்
சிவகாம ப்ரவார	மைசூர் ஆகம சமிதி
சிவாகமத்தில் முனைவர்	காஞ்சி நிகர்நிலைபல்கலைக்கழகம்
சிவாகம செம்மல்	கௌமாரமடலாயம் கோவை
சிவாகம பூஷணம்	கொங்குவேளாளர் நற்பணி மன்றம் நசியனூர்
சிவாகம ஞானபானு	தமிழ்நாடு அர்ச்சகர் சங்கம்
சிவாகம ரத்னாகரம்	திருப்பரங்குன்றம் ஸ்ரீ காஞ்சி மஹாஸ்வாமி சதாப்தி பாடசாலை
சிவாகம கலாநிதி	தென்பாதி கதிர்காம பாலதண்டாயுதபாணி தேவஸ்தானம்

அவிநாசி - சிவஸ்ரீ சு. சுந்தரமூர்த்தி சிவாச்சாரியார்

கொங்கு நாட்டில் அவநாசி எனும் தலத்தில் சிவஸ்ரீ. சுப்ரமணிய குருக்கள்-சாந்தகுமாரி தம்பதிகளுக்கு 23-7-65ல் பிறந்து. மகாலக்ஷ்மி என்னும் இல்லத்தரசியுடன் பெங்களூர் வேத ஆகம சம்ஸ்கிருத மஹா பாடசாலையில் முதல்வராக பணியாற்றுகிறார்.

இவர் தமிழ், கன்னடம், சமஸ்கிருதம், ஆங்கிலம், ஹிந்தி, ஆகிய மொழிகளில் நல்ல வல்லுனர். தனது வேதசிவாகம, சாஸ்த்ர, காவ்ய படிப்புகளை 6 ஆண்டுகள் கர்நாடக மாநிலம், பெங்களூர், ஸ்ரீ கைலாஸ ஆஸ்ரமத்தில் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி மஹா பாடசாலையில் சிவாகம வித்வான் கோனேரிராஜபுரம் சிவஸ்ரீ சபேச சிவாச்சாரியாரிடம் பயின்று "சிவாமகவிசாரதா" என்னும் பட்டம பெற்றார். பின்னர் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தில் 1983ல் வேத சாஸ்த்ர ஆகம வித்வத் ஸதஸ் தேர்வில் வெற்றி பெற்றார். பெங்களூர் சம்ஸ்கிருத கல்லூரியில் "பிரதம காவ்ய" தேர்வுகளில் தேர்ச்சி பெற்றார். கர்நாடக அரசின்

"ஆகமப்ரவரா" மற்றும் "ஆகமசாஸ்த்ர" தேர்வுகளில் வெற்றி பெற்றார். 1997ல் அழகப்பா பல்கலைக்கழகமும் சிவநெறிக் கழகமும் பிள்ளையார்பட்டியில் நடத்திய திருக்கோயில் பயிலரங்கத்தில் பங்குபெற்றார். பாண்டி மாறிலம், காரைக்கால் வேத சிவாகம சமஸ்கிருத கருத்தரங்கத்தில் கலந்து கொண்டுள்ளார். உலக சமஸ்கிருத மாநாட்டில் 2001ல் புதுதில்லியில் கலந்து கொண்டு உரையாற்றினார். திருநாவலூர் ஸ்ரீ சுந்தரர் ஆகம வித்வ சதஸ்ஸில் பங்கு பெற்றார்.

வேலூர் ஸ்ரீ காசிவிஸ்வநாத ஆலயத்தில் நடந்த வேத ஆகம பயிற்சி வகுப்பு ஆசிரியராக திகழ்ந்தார். கூனம்பட்டி ஆதீனத்தால் 16 இடங்களில் நடத்தப்பட்ட ஆகம வேத புத்தொளி பயிற்சி வகுப்பு நடத்தினார். இந்து சமய அறநிலையத்துறையால் அவிநாசியில் நடந்த வேத ஆகம புத்தொளி பயிற்சி ஆசிரியராக திகழ்ந்தார். கர்நாடக, தமிழ்நாடு ஆகம தேர்வுகுழுவில் இடம் பெற்றார்.

இவர் கலந்து கொண்ட பெரிய யாகங்கள் ராமேஸ்வரம் ஸ்ரீ மஹாருத்ர ஜபம் (1995) ஸ்ரீ சைலம் மஹாருத்ரஜபம் (1996) காசி மஹாருத்ர ஜபம் (1997) உஜ்ஜயனி மகாகாளீ மஹாருத்ரஜபம், ஓங்காரேஸ்வரர் ருத்ரஜபம் (1998) பெங்களூர் சிவபுரி சமஸ்தான மஹாருத்ரஜபம் ஆகியவற்றில் பங்கு பெற்று சிறப்பித்தார். இவர் பங்கேற்ற பெரிய கும்பாபிஷேகங்கள் ஸ்ரீ ஞாநாக்ஷி ராஜராஜேஸ்வரி கும்பாபிஷேகம் (1992) ஸ்ரீ அவிநாசியப்பர் கும்பாபிஷேகம் (1993) பிள்ளையார்பட்டி ஸ்ரீ கற்பக விநாயகர் கும்பாபிஷேகம் (1995), பழனி ஸ்ரீ தண்டாயுதபாணி கும்பாபிஷேகம் (2000) ராமேஸ்வரம் கும்பாபிஷேகம் (2001).

அயல்நாடுகளில் இவர் ஆற்றிய ஆலயப்பணிகள்

பேங்காக் ஸ்ரீ மாரியம்மன் கும்பாபிஷேகம், சதசண்டியாகம் (1998), கோலாம்பூர் ஸ்ரீ சுப்பரமணிய சுவாமி கும்பாபிஷேகம் (1998), சிங்கப்பூர் மஹாசிவராத்திரிபூஜை (1998), கனடா ஸ்ரீ துர்க்காதேவி அம்பாள் கும்பாபிஷேகம் (2001), கனடா, மஹாயாகம் மற்றும் குருபூஜை, கனடா, ஒன்டரியோவில் மஹோத்ஸவம், நாகபூஷண கோயிலும் லண்டன் ஸ்ரீ மாரியம்மன் கோயில் தீப பூஜை (2001), லண்டன் இந்துகோயிலில் சண்டிஹோமம், ஜெர்மனி, சித்திவிநாயகர் கோவிலில் மஹாகணபதி ஹோமம்.

இவர் வெளியிட்ட நூல்கள்

போதாயன் பூர்வம், போதாயன அபரம், சண்டியக்ஞ, ஆராதனாவிதி, ஆலய வழிபாட்டு சடங்குகள் ஆகியவை அவிநாசி ஆகம புத்தக வெளியீட்டு குழு செயலாராகவும், பெங்களூர் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி வேத சிவாகம பாடசாலை நல அமைப்பு செயலாளராகவும், வேலூர் ஸ்ரீ பாலமுருகன் கோயில்-ரத்னகிரி, ஆலய ஆகம சிறப்பு ஆலோசகராகவும் திகழ்ந்து வருகிறார்.

சிருங்கேரி, சேலம், ரத்னகிரி, பூரி, ரிஷிகேஷ், துவரகா, போன்ற இடங்களில் சண்டிஹோமம், ஸ்கந்தயாகம், மகாவிஷ்ணு யாகம், சிவராத்திரி பூஜைகள் செய்து புகழ்பெற்றார்.

ஆகமவித்வசதஸ்-ரத்னகிரி, ஆகமசதஸ்-கோவை கௌமர மடாலயம், அர்ச்சகசங்க சதஸ்-சென்னை. கோவிலூர்-ஆதீன வித்வசதஸ், மைசூர்-சதஸ், ஆகியவற்றில் பங்குபெற்றார்.

இவர் பெற்ற பட்டங்கள்

சிவாகம பூஷணம்	இந்து நமய அறநிலையத்துறை
ஆகம ஆச்சாரியார்	திருச்சி சமஸ்கிருத பல்கலைகழகம்
சிவாகம ஞான திலகம்	ரத்னகிரி சதஸ்
சிவாகமச் செல்வர்	பேரூர் ஆதீனம்
சிவாகம செம்மல்	கோவை கௌமாரமடம்
வேதஆகம சிரோன்மணி	பெங்களூர்

மண்ணடி - சிவஸ்ரீ E.S. ஏகாம்பர சிவாச்சாரியார்

காஞ்சிபுரம் ஸ்ரீ ஏகாம்பரநாதர் பரம்பரை அர்ச்சகர் சிவஸ்ரீ சுப்ரமணிய சிவாச்சாரியார்-லட்சுமி அம்மையார் தம்பதிகளுக்கு குரோதன ஆண்டு, ஐப்பசி மாதம், பூர நட்சத்திரம் (10-11-1925) அன்று சிவஸ்ரீ ஏகாம்பர சிவாச்சாரியார் பிறந்தார். இவருக்கு நான்கு புதல்வர்கள். ஒரு புதல்வி மற்றும் பேரன் பேத்திகள் உள்ளனர். தீக்ஷாநாமம் அகோரசிவம். இவர் ஆகமம் சிவஸ்ரீ தர்மராஜ சபாரத்ன சிவாச்சாரியாரிடம் பயின்றார். வேதம் சிவஸ்ரீ சாம்பசிவ கனபாடிகளிடம் பயின்றார் சாஸ்திரம் சிவஸ்ரீ புண்யகோடி சோமசுந்தரசிவாச்சாரியாரிடம் பயின்று காரண ஆகமமுறைப்படி, பிரதிஷ்டாதி, உத்ஸவாந்தம் சிறப்பாக செய்ய வல்லவர்.

சென்னை, மண்ணடி ஸ்ரீ செல்வ விநாயகரை பல ஆண்டுகள் பூஜித்துள்ளார். திருவொற்றியூர் ஸ்ரீ நந்தீகேஸ்வர ஆலயம் பூஜித்துள்ளார். காஞ்சி ஸ்ரீஏகாம்பரநாதர் பூஜை முறையும் கொண்டவர்.

சென்னை ஸ்ரீ கச்சபேஸ்வர ஆலயம், திருவெட்டீஸ்வரர் ஆலயம், சைதை ஸ்ரீ காரணீஸ்வரர் ஆலயம் போன்றவற்றில் 33 குண்டம் அமைத்தும் காஞ்சி ஸ்ரீ ஏகாம்பரேஸ்வரர், வேலூர் ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் ஆலயங்களில 33 குண்டம் அமைத்து பல கும்பாபிஷேகங்கள் சர்வசாதகமாக இருந்து வருகிறார். காஞ்சிபுரம் அர்ச்சக சமுதாய அமைப்பில் தலைவராக இருந்து வேத சிவாகம சாஸ்திரபாடங்களை மாணவர்களுக்கு போதிக்க ஏற்பாடுகள் செய்துள்ளார். பலருக்கு தீக்ஷ குருவாக இருந்து ஆச்சாரியபிஷேகம் செய்து வந்துள்ளார். கடந்த இரண்டு ஆண்டுகாலமாக ஒவ்வொரு ருதுவிலும் 16-பக்கங்கள் கொண்ட பல அறிய ஆகம வேதசாஸ்த்ர சத்விஷயங்களை வெளியிட்டு வருகிறார்.

மணல்மேடு (கயிலை) சிவஸ்ரீ இரா. நாகநாத சிவாச்சாரியார்

மயிலாடுதுறை தாலுக்கா, மணல் மேடு ஸ்ரீ நாகநாதர் ஆலய பரம்பரை அர்ச்கர் சிவஸ்ரீ இராமநாத சிவாச்சாரியார் மாதுஸ்ரீ பர்வதவர்தனியின் தவபுதல்வராக துன்முகி வருஷம் சித்திரை 1ம் தேதி பிறந்தார்.

சிக்கல் வேத பாடசாலையில் நான்கு ஆண்டுகள் பயின்றார். தருமபுரம் வேதசிவாகம பாடசாலையில் சிவஸ்ரீ சுவாமிநாத சிவாச்சாரியிடம் வேதசிவாகம சாஸ்த்ரங்கள் பயின்றார். பின்னர் திருப்பதியில் மூன்றாண்டுகள் பட்டப்படிப்பு படித்து பட்டம் பெற்றார்.

சுமார் 1000க்கு மேல் கும்பாபிஷேகங்கள் செய்துள்ளார். சிறந்த பேச்சாளர், பண்பாளர், இனிமையாக பழகுவதில் வல்லவர்.

தமிழகத்தில் ஸ்ரீ காளிகாம்பாள் ஆலய சிவஸ்ரீ T.S. சாம்பமூர்த்தி சிவாச்சாரியார், திருவாடானை சிவஸ்ரீ அய்யாமணி சிவாச்சாரியார் தலைமையில் நடைபெறும் கும்பாபிஷேகங்களை இவரே நிர்வகித்து, முக்கிய பொறுப்பை ஏற்று நடத்தி சிறப்பு செய்வார்.

லண்டன் ஸ்ரீ முருகன் ஆலயத்தில் தலைமை அர்ச்சகராக பணிபுரிந்து வருகிறார். அர்ச்சகர் சமூகத்திற்கும், தமிழ் சமுதாயத்திற்கும் பெருந்தொண்டு ஆற்றி வருகிறார். இவரை "தமிழ் அகத்தியர்

முனிவர்" என்று லண்டனில் கூறுவர். பழைய கூடலூர் ஸ்ரீ அப்பய்யதீட்சிதர் வேதசிவாகம பாடசாலை தலைமை ஆசிரியர், N. விஸ்வநாத அகோர சிவாச்சாரியார் புதல்வி மனோஹரியை திருமணம் செய்து 1 மகனும் 2 மகளும் உள்ளனர். லண்டன் மாநகரில் நடைபெறும் அனைத்து இந்து சமய தமிழ் ஆன்மீக விழாவில் பங்கு பெறுவதுடன், தமிழகத்திலிருந்து வரும் இசைக் கலைஞர்கள், ஆன்மீக சொற்பொழிவாளர்கள், சிவாச்சாரியார்கள் வேதவிற்பன்னர்கள், சிற்பிகள் ஆலய கலைஞர்கள் அனைவரையும் கௌரவித்து தமிழின் உயர்வை உலகறிய செய்த பெருமை இவரை சேரும்.

இல்லாதவர்களுக்கு உதவுவதும், பொருள், பணம், ஆகியவற்றில் பற்றில்லாத ஒரு தவபுதல்வராகவும் திகழ்கிறார். இவரால் நம் தமிழக மட்டுமல்லாது, இந்திய துணைக் கண்டமே சிறப்பு பெறுகிறது.

திருக்கயிலாய யாத்திரை லண்டனிலிருந்து ஒருமுறையும், இரண்டாவது முறையாக இந்தியாவிலிருந்து பல சிவாச்சரியார்கள், பல அன்பர்களை தன்பொறுப்பில் அழைத்துக் கொண்டு தரிசித்து வந்தார்.

பல ஆலய குழுப்பணிக்கு கும்பாபிஷேக உதவி செய்வதுடன் தன் சொந்த ஊரான மணல்மேட்டு சிவாலய கும்பாபிஷேக பொறுப்பினை முழுமையாக நடத்தி வருகிறார்.

இலுப்பூர் - சிவஸ்ரீ ர. கல்யாண சுந்தர குருக்கள்

நாகை, இலுப்பூர் ஆலய பரம்பரை அர்ச்சகர் சிவஸ்ரீ ஜகதீஸ குருக்கள்-இராஜாமணி அம்மாள் தம்பதிகளுக்கு ஸ்ரீ முக வருஷம், ஐப்பசி மாதம் சிவஸ்ரீ ர.கல்யாண சுந்தர குருக்கள் பிறந்தார். இவருக்கு இரண்டு புதல்வர்கள் உள்ளனர். ஆத்ரேய கோத்ரம் கீவனூர் சுப்பிரமண்ய குருக்களிடம் வேத சிவாகம பாடங்களை கற்று உணர்ந்தார். நிரவி ஸ்ரீ ஜம்புநாதர் ஆலய அர்ச்சகராக பணிபுரிந்தார். சுமார் 150 கும்பாபிஷேகங்களுக்கு மேல் ஸர்வசாதகராக இருந்துள்ளார். 1000 கும்பாபிஷேகங்களில் கலந்து கொண்டுள்ளார். தற்போது பிர்ம்மவித்யா டிவைன் டிரஸ்ட் நடத்தும் திருவெண்காடு பிர்ம்மவித்யா வேத சிவாகம பாடசாலையின் தலைமை ஆசிரியராக பணியாற்றி வருகிறார்.

"சிவாகம வித்யா" என்ற விருதும் பெற்றுள்ளார். இவரிடம் பாடம் பெற்றவர்கள் சிங்கப்பூர் போன்ற நாடுகளில் பணிபுரிகின்றனர்.

திருநாரையூர் - சிவஸ்ரீ ஞா.நடராஜ சுந்தர சிவாச்சாரியார்

நாச்சியார் கோயில் அருகில் உள்ள ஸ்ரீ மஹாலட்சுமி அவதாரத்தலமான திருநாரையூர் ஆலய அர்ச்சகரான சிவஸ்ரீ ஞான சுந்தர சிவாச்சாரியார்-மாதுஸ்ரீ தேவகுஞ்சரி அம்மாள் தம்பதிகளுக்கு விசுவாசு வருஷம், கார்த்திகை மாதம் (18-11-65) உத்திர நட்சத்திரத்தில் நடராஜ சுந்தரசிவாச்சாரியார் பிறந்தார்.

இளம்வயதில் பள்ளியில் தமிழ், ஆங்கிலம் பயின்று தேர்ச்சி பெற்றார். தமது ஒன்பதாவது வயதில் உபநயனம் செய்ய பெற்று அல்லூர் வேத சிவாகமபாடசாலை முதல்வர் டாக்டர் விஸ்வநாத சிவாச்சாரியாரிடம் வேத சிவாகமங்களை பயின்று வரும் போதே, ஒரு தவில் வித்வானிடம் கணபதி தாளத்தை தாளக்கட்டுடன், ஜதி, ஸ்வரம் கூட்டி, பயின்று நல்ல தேர்ச்சி பெற்றார். அல்லூரில் தனது கல்வியை முதன்மையாக பெற்று "சிவாகம சிரோன்மணி" என்ற பட்டமும் பெற்றார்.

1991ல் திருக்கோலக்கா சிவஸ்ரீ ந. இராமநாத சிவாச்சாரியார் குமாரி ஸௌமந்தாகினியை திருமணம் செய்து கொண்டார். இரண்டு புதல்வர்கள் பெற்றுள்ளார்.

பல ஆலய கும்பாபிஷேகங்களில் ஸர்வசாதகராக பணியாற்றியவர். சிங்கப்பூர், மலேஷியா, அமெரிக்கா, கனடா, போன்ற வெளிநாடு கும்பாபிஷேகத்தில் பங்குபெற்றார்.

1993ல் சிங்கப்பூர் வடபத்ர ஸ்ரீ காளிஅம்மன் ஆலய கும்பாபிஷேகத்தில் "ஸௌமிய சாக்தவிலாசா" என்ற விருது பெற்றார். 1994ல் கோவையில் நடைபெற்ற கும்பாபிஷேகத்தில் "சிவாகம செல்வர்" என்ற விருதும் கும்பகோணம் ஸ்ரீ இராஜவிநாயகர் ஆலய கும்பாபிஷேகத்தில் "கணபதி தாள கலாநிதி" என்ற விருதும், தங்கப் பதக்கமும் பெற்றார்.

1999ஆம் ஆண்டு தனது ஊர் ஆலய கும்பாபிஷேகத்தினை பெருமுயற்சியுடன் செய்தார். அப்போது நிர்வாக அதிகாரியால் "சிவாகமதிருச்செல்வர்" என்ற விருது பெற்றார்.

2000ஆம் ஆண்டில் அமெரிக்கா வாஷிங்டன் நகரில் "சிவாகமவித்வான்" என்ற விருதினை பெற்றார்.

2004ல் திருநாரையூர் மழலை ஸ்ரீ மஹாலட்சுமியின் பேரில் பல பாடல்களை இயற்றி தானே இசையமைத்து தக்க பக்கவாத்யங்களுடன் தவில் புகழ் திருவனப்புத்தூர் கலியமூர்த்தி தவிலுடன் பாடி ஆடியோ, மற்றும் குறுந்தட்டு (CD) வெளியிட்டுள்ளனர்.

இவரது பணி தொடர வாழ்த்துகிறோம்.

திருவெண்காடு - சிவஸ்ரீ குரு என்கிற தி.அ. தக்ஷிணாமூர்த்தி சிவாச்சாரியார்

சீர்காழி வட்டம், திருவெண்காடு அருள்தரு பிர்ம்ம வித்யாம்பிகை உடனருள் சுவேதாரண்யேஸ்வர ஆலய பரம்பரை அர்ச்சகர் சிவஸ்ரீ தி.அப்பு(எ)அகோர குருக்கள்-மோஹாம்பாள் தம்பதிகளுக்கு (13-9-1956)ல் துன்முகி வருஷம், ஆவணி மாதம் 27ம் தேதி பிறந்தார். இவர்தம் துணைவியார் பெயர் பானுமதி. இரண்டு மகன் ஒரு பெண் பிறந்துள்ளனர்.

தருமபுர ஆதீன வேதசிவாகம பாடசாலை தலைமை ஆசிரியர் சுவாமிநாத சிவாச்சாரியாரிடம் வேத சிவாகம பாடங்களை பயின்று பட்டம் பெற்றார்.

குடியாத்தம் ஸ்ரீ படைவெட்டியம்மன் ஆலயம், காசிமடம் ஸ்ரீ கேதாரீஸ்வரர்கோயில், திருவெண்காடு ஸ்ரீ பிர்ம்மவித்யாம்பிகை சுவேதாரணயேஸ்வர ஆலயம் போன்றவற்றில் அர்ச்சகராக திகழ்ந்து வருகிறார். தனது சொந்த முயற்சியில் ஸ்ரீ பிர்ம்மவித்யாம்பிகா வேத சிவாகம பாடசாலை நிறுவி, சிவாச்சாரியார் சமுதாயம் தழைக்க பாடுபட்டுவருகிறார். சுமார் 108 கும்பாபிஷேகங்களுக்கு மேல் நடத்தி உள்ளார். இவர் பல ஆலயத்தை முழுமையாக திருப்பணி கைங்கர்யம் மேற்கொண்டு கும்பாபிஷேகங்களும் நடத்தி உள்ளார். இப்பணி தொடர இறைவன் திருவருள் புரியட்டும். அவர் முழுமையாக திருப்பணி செய்த ஆலயங்கள் கீழே தரப்பட்டுள்ளன. மெய்கண்டார், துவக்கபள்ளி கட்டிடம் கட்டி பல ஏழை மாணவ மாணவியருக்கு உணவு, உடை, பாடபுத்தகங்கள் கொடுத்து உதவி வருகிறார். பெற்றோர் ஆசிரியர் கழக தலைவராகவும், லயன்ஸ்கிளப்பில் அங்கத்தினராக இருந்தும் பல சமூகப் பணிகளை செய்து வருகிறார். சைவ, வைணவ வேறுபாடின்றி பல ஆலய, ஆன்மீக தொண்டுகள் செய்து வருபவர். "பிர்ம்மவித்தையே ஸ்ரீ வித்யை" என்னும் நூலை வெளியிட்டுள்ளார்.

திருப்பணி செய்து கும்பாபிஷேகம் நடத்திய ஆலயங்கள்

திங்களூர் ஸ்ரீ கைலாஸ நாதர் ஆலயம்
மேலப்பாதி ஸ்ரீ நவநீதீஸ்வரர் ஆலயம்
ஆரண்யேஸ்வரம் ஸ்ரீ ஆரண்யேஸ்வரர் ஆலயம்
நாங்கூர் ஸ்ரீ மதங்கீஸ்வரர் ஆலயம்
இலயமடம் ஸ்ரீ பிர்மம்புரீஸ்வரர் ஆலயம் (பகுதி திருப்பணி)
திருவெண்காடு ஸ்ரீ பிர்ம்மவித்யாம்பிகை உடனருள் சுவேதாரண்யேஸ்வரர் ஆலயம்
தேரழந்தூர் ஸ்ரீ வேதபுரீஸ்வரர் ஆலயம்
பெருந்சேரி ஸ்ரீ வாகீஸ்வரர் ஸ்வாமி ஆலயம்
செம்பொன்னார் கோயில் ஸ்ரீ ஸ்வர்ணபுரீஸ்வரர் ஆலயம்
முடிகண்டநல்லூர் ஸ்ரீ திருக்குளம்பீஸ்வரர் ஆலயம்
கும்பகோணம் ஸ்ரீ வியாழசோமேஸ்வரர் ஆலயம்
சாக்கோட்டை ஸ்ரீ அமிர்தகடேஸ்வரர் ஆலயம்
மருதாநல்லூர் ஸ்ரீ கற்குபீஸ்வரர் ஆலயம்
கொட்டையூர் ஸ்ரீ கோடீஸ்வாரர் ஆலயம்
கும்பகோணம் மகாமககுளம் ஸ்ரீ சோடசலிங்க ஆலயங்கள்
குருமாணக்குடி ஸ்ரீ கண்ணாயிரமுடையார் ஆலயம்
காசி ஸ்ரீ கேதாரீஸ்வரர் ஆலயம்
திருவெண்காடு அரிசன தெரு, ஸ்ரீ கன்னிகாபரமேஸ்வரி ஆலயம்

இவ்வாலயங்கள், மலேசியா டாக்டர் அன்பழகி சுந்தரேசன் என்பவர் அருள் உள்ளத்தினால் மேற்கண்ட திருப்பணிகள் செய்யச் செய்த முழு முயற்சியும் இந்த சிவாச்சாரியாரை சாரும்.

மயிலாடுதுறை - சிவஸ்ரீ A.V. சுவாமிநாத சிவாச்சாரியார்

தருமை ஆதீனத்திற்கு சொந்தமான அருள்தரு தையல்நாயகி உடனருள் வைத்யநாத சுவாமி ஸ்ரீ செல்முத்துக்குமார சுவாமி ஆலயம் வைதீஸ்வரன் கோயில் பரம்பரை அர்ச்சகர் சிவஸ்ரீ A.V. வைத்யநாத குருக்கள்-திருமதி லக்ஷ்மி அம்மாள் தம்பதிகளின் புதல்வராக 13-07-1965 அன்று சிவஸ்ரீ A.V. சுவாமிநாத சிவாச்சாரியார் பிறந்தார். தருமை ஆதீன வேதசிவாகம பாடசாலையில் சு. சுவாமிநாத சிவாச்சாரியாரிடம் வேத சிவாகம, சாஸ்த்ர பாடங்களையும்,

திருமுறைகளையும் கற்றுணர்ந்து "ஆகம ப்ரவீணர்" என்ற பட்டத்தை முதன்மை மாணக்கராகப் பெற்றார். தமது தந்தையாரிடம் சிவதீக்ஷை பெற்று "தத்புருஷசிவம்" என்ற தீக்ஷாநாமம் பெற்றார்.

1989 முதல் 1996 முடிய தருமை ஆதீன வேதசிவாகம பாடசாலை தலைமை ஆசிரியராக பணிபுரிந்தார். பின்னர் 1997-ல் தனது குருநாதர் நினைவாக சிவபுரம் வேதசிவாகம பாடசாலை ஒன்றை மயிலாடுதுறையில் நிறுவி பல நூற்றுக்கணக்கான சிவாச்சார்ய மாணவர்கள் வேதசிவாகம சாஸ்த்ர திருமுறைகளை கற்று தேர்ச்சிபெற உதவி வருகிறார்.

இவர் எழுதிய நூல் "ஆத்மார்த்த பரார்த்த பூஜா விளக்கம்". தமிழ்நாட்டில் மற்றுமல்லாது, கிழக்கிந்திய ஆசிய நாடுகள் இலங்கையில் கும்பாபிஷேகங்கள் பல நடத்தியுள்ளார்.

சுமார் 150-க்கு மேற்பட்டவர்களுக்கு சமய தீக்ஷையும் 25-க்கு மேற்பட்டவர்களுக்கு ஆச்சார்யபிஷேகமும் செய்து வைத்தார்.

பல சமுகப் பணிகளும் சமுதாயப் பணிகளும் செய்துள்ளார். ஆலய பூஜை வழிபாடுகள் திறம்பட நடக்க சிவாச்சாரியார்கள் பலரை உருவாக்குதே தனது குறிக்கோளாக கொண்டவர்.

இவர் பெற்றபட்டங்கள்

ஆகமப் பிரவீணர்	தருமை ஆதீனம்
சிவாகம பூபதி	வேலூர் (ரத்னகிரி)
சிவாகம ரத்னாகரம்	திருப்பரங்குன்றம்
சிவாக சித்தாந்தசரபம்	சீர்காழி (தென்பாதி)

இவரது பணி சிறக்கவும், சிவத்தொண்டு பல்கி பெருகவும் எல்லாம் வல்ல இறைவன் துணை இருக்க ப்ரார்த்திக்கிறோம்.

திருக்கோலக்கா - சிவஸ்ரீ N. விஸ்வநாத சிவாச்சாரியார்

திருக்கோலக்கா ஞானசம்பந்தபெருமானுக்கு பொற்றாளமும் ஓசையும் கொடுத்தருளிய அருள்தரு ஓசைநாயகி உடனருள் தாளபுரீஸ்வரர் ஆலய பரம்பரை அர்ச்சகர் சிவஸ்ரீ S. நடேச சிவாச்சாரியார்-மீனாக்ஷி அம்மாள் தம்பதிகளின் இரண்டாவது புதல்வராக N. விஸ்வநாத சிவாச்சாரியார் பிறந்தார்.

தனது ஆரம்ப கல்வியை சீர்காழியில் பயின்று பின்பு தமது பெரியதந்தையார் சிவஸ்ரீ மாதர்வேலூர் எஸ். சுந்தரேச சிவாச்சாரியார் அவர்களிடம் வேதசிவாகம, சாஸ்த்ர பாடங்களை பயின்றார்.

வள்ளுவகுடி சுந்தரேச சிவாச்சாரியார் இரண்டாவது புதல்வி அகிலாண்டேஸ்வரியை திருமணம் செய்து, இரண்டு புதல்வர்களையும் ஐந்து குமாரிகளையும் பெற்றவர். இவரது தீக்ஷா நாமம் அகோர சிவாச்சாரியார் ஆகும்.

மத்யபிரதேசத்தில் உள்ள பிலாய் சித்திவிநாயகர் ஆலயம் தலைமை அர்ச்சகராக பணிபுரிந்து, பின்னர் குத்தாலம் பழைய கடலூர் G.K.R. டிரஸ்ட் அப்பயதீக்ஷதர் வேதசிவாகம பாடசாலையின் தலைமை ஆசிரியர் பதவி பெற்று பல ஆதிசைவ மாணவர்களுக்கு வேதசிவாகம பாடங்களை பயிற்றுவித்து வருகிறார். இவரது பணி தொடர்ந்து பல ஆலயங்களுக்கு கும்பாபிஷேகம் நிகழ்த்தி வருகிறார். இவரது பணி சிறக்கவும், வளரவும் எல்லாம் வல்ல குலதெய்வம் ஸ்ரீ குடவரசி அருள்புரிய ப்ரார்த்திக்கிறோம்.

சாலவேடு - பேராசிரியர் முனைவர் சிவஸ்ரீ S.P. சபாரத்னம் சிவாச்சாரியார்

வந்தவாசி அருகே சாலவேடு கிராமத்தில் ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் சமேத ஸ்ரீ அகஸ்தீஸ்வரர் திருக்கோயிலின் பரம்பரை அர்ச்சகர் சிவஸ்ரீ பட்டுசாமி குருக்கள்-ஸ்ரீமதி ஞானாம்பாள் தம்பதியர்க்கு கௌசிக கோத்ரத்தில் 24-7-1942 ஆம் ஆண்டு சிவஸ்ரீ S.P. சபாரத்ன சிவாச்சாரியார் பிறந்தார். இவர் தன் தந்தையாரிடமே ஆகமம், சாஸ்த்ரம் பயின்று மாங்காடு சிவஸ்ரீ. ஏகாம்பர சிவம் அவர்களை குருவாக கொண்டு சிவதீக்ஷை பெற்று "வாமதேவ சிவம்" எனும் தீக்ஷா நாமத்தோடு சிதம்பரம் ஸ்ரீ ராஜகணேச தீக்ஷிதரிடம் வேதம் பயின்றார். இவர் தமிழ். சமஸ்கிருதம், இந்தி, ஆங்கிலம், பிரஞ்சு, ஜெர்மன், போன்ற மொழிகளில் பயிற்சிஉடையவராக திகழ்ந்து வருகிறார். கல்லூரி படிப்பில் எம்.ஏ. (தமிழ்), எம்,ஏ, (சமஸ்கிருதம்), எம்.ஏ. (தத்துவம்), பிரஞ்சி, ஜெர்மன் மொழிகளில் பட்டயம் பெற்றார். சிவாகமங்களை கற்றுணர்ந்தவர். கிரணாகமத்தை ஆராய்ச்சி செய்து, தனது ஆராய்ச்சியின் பயனாக முனைவர் பட்டம் பெற்றார்.

30 ஆண்டுகளுக்கும் மேலாக கல்லூரியிலும், பல்கலைக் கழகத்திலும், தமிழ் பேராசிரியராகவும், தத்துவப் பேராசிரியராகவும் பணியாற்றியவர். இந்திய இயல் (Indology) பல துறை ஆராய்ச்சியாளர்கள் முனைவர் பட்டம் பெற நெறி படுத்தியவர், (வழிகாட்டி) தொடர்ந்து பலர் Ph.D. பட்டம் பயில உதவி வருகிறார்.

பேராசிரியராக ஆகம ஆய்வியல் நிறுவனத்தில் இந்தியவிலும் மற்றும் அமெரிக்காவிலும் பணிபுரிகிறார். பன்னாட்டு தொல்லியல் பண்பாட்டு ஆய்வுக்கழகம் கிண்டியில் செயலராக இருந்து வருகிறார்.

ஆகமத் தொடர்பான பல நூல்கள் ஆங்கிலத்தில் வெளிகொண்ர்ந்திருக்கிறார் சர்வக்ஞானோத்தர ஞானபாதம், தேவி காலோத்தரம் மதங்கபரமேஸ்வர ஆகமம், ரௌரவ ஆகம வித்யா பாதம், மிருகேந்திர ஆகமம், பொறகர ஆகமம், மகுடாகம யோக வித்யா பாதம், ஸுப்ரபேத ஆகம யோகஞான பாதம், கிரணாகமம் முழுதையும், சைவ சந்நியாஸ பத்ததி, இரத்தின திரயம், கண்ணுடை வள்ளலாரின் ஒழிவில் ஒடுக்கம் இவையனைத்தும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பெருமையுடையவர்.

இவர் மயனின் ஐந்திரம், சிற்பமாச் செந்நூல் ஆகிய இரண்டும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகத்தில் சிவாகமங்கள் ஓர் அறிமுகம், திருஞானசம்பந்தரும பிரம்மபுரமும் எனும் நூல்களை எழுதிஉள்ளார். திரு. வை.கணபதி ஸ்தபதி எழுதிய விண் ஞானக் கோயில்கள் என்பதன் ஆங்கில மொழி பெயர்ப்பினை படைத்தவர். மேலைநாட்டு அறிஞர்களுடன் இணைந்து தியானப்புரட்சி (Meditation Revolution) என்னும் நூலை எழுதியுள்ளார். சிவாகமங்கள் ஓர் அறிமுகம், அமெரிக்கா வெளியீடு திருமந்திரம் ஆங்கில மொழிபெயர்ப்பு, பாம்பன் ஸ்வாமிகளின் குமாரஸ்தவம், விளக்கம், பாம்பன்சுவாமிகள், திருப்பா விளக்கம் ஆகமநெறியில் அனந்தேஸ்வரர் என்றும் நூல்கள் எழுதியுள்ளார்.

இவருடைய ஆராய்ச்சியில் முக்கிய பங்கு பெறுபவை சிவாகமங்கள், வேதங்கள், சைவ, சாக்த, வைணவ, பௌத்த, ஜன, ஆகமங்கள், சிற்ப ஆகமங்கள், வேத ஆகம தொடர்பு பத்ததிகள். உபநிடதங்கள், இந்திய தத்துவ மரபுகள், மேலைநாட்டு தத்துவ மரபுகள், ஆகமத்தின் பின்னனியில் வேதவிள்க்கங்கள், யோக சாஸ்திரங்கள், புராணங்கள், சங்க இலக்கியங்கள் தமிழ் காவியங்கள், திருமுறைகள், சித்தாந்தங்கள், ஞானாமிர்தம் சிவஞான போத ..பாடியம், திருப்புகழ், தமிழ் சித்தர் இலக்கியங்கள் ஆகியவையாகும்.

இவர் பங்கேற்ற மாநாடுகள், கருத்தரங்கங்கள் பலவாகும், அவற்றில் சில

சைவ ஆகமங்களில் இறையியல் கோட்பாடுகள்
சைவ ஆகமங்களில் யோக விஞ்ஞான நுட்பம்
சைவ ஆகமங்களில் பன்முகப்பட்ட தத்துவ விளக்கம்
சைவ ஆகமங்களில் பிரபஞ்ச விஞ்ஞானம்
சைவ ஆகமங்களில் பிரதிமா விஞ்ஞானம்
சமுதாய மேம்பாட்டுக்கும் சுற்று சூழல் வளத்துக்கும், சைவ ஆலயங்களில் செயல்பாடுகள்
ஆலய பெருவிழாக்களும், இயற்கை இணக்கமும், மனித ஒருமைப்பாடும்
சங்க இலக்கியங்களில் சைவ ஆகம கோட்பாடுகள்
சைவ ஆகமங்களும், உபநிடதங்களும்
சைவ ஆகமங்களும் வானியல் கோட்பாடுகள்
சைவ ஆகம மண்டலங்களும் வழிபாட்டு முறையும், வாழ்வியல் வளமும்
சைவ ஆகம, சாக்த ஆகம,. காஷ்மீர ஆகம, கோட்பாடுகள்
சிவாகம வேள்விமுறையும், வேத வேள்விமுறையும்
யாக குண்டங்களும் அண்ட பிண்ட இயலும்
சதுர,ம் முக்கோணம், அறுகோணம் முதலான வரை படங்கள் வெளிப்படுத்தும் ஆகம நுட்பங்கள்
அண்ட பிண்ட இயலும் ஆலய அமைப்பும்
ஆலய கொடிமர கோட்பாடு யோகதத்துவ ப்ரபஞ்ச தத்துவம்
யாகசாலை அமைப்பும் பிரபஞ்ச விஞ்ஞான ஆன்ம விஞ்ஞான கோட்பாடுகளும்
கும்பாபிஷேகம், பிரதிஷ்டை இவற்றின் செயல்முறைவிளக்கம்
சீர்மிகு வாழ்க்கைக்கு சில வடிவங்கள்
சிவலிங்கம் வடிவ வகைகள் தத்துவ நுட்பங்கள்
நடராஜ வடிவமும் சிவலிங்க வடிவமும்
உமையொருபாக கோலம் தமிழ்நெறி தத்துவம்
யந்திர வடிவங்களும் படிமங்களும்
சைவ ஆகம அடிப்படையில் வேதப்பாசுர விளக்கம்
சிவஞான போத முதல் நூற்பாவும் சிவலிங்க வடிவமும்

சைவாகம மண்டலங்களும் பௌத்தாகம மண்டலங்களும்
யோக விஞ்ஞானம், சைவாகம பௌத்தாகம
அபிநயகுப்தரும் சிவாகமங்களும்
வேள்வித்தீ வேத நெறியிலும் ஆகமநெறியிலும்
சிற்பநூல்களும் சிவாகமங்களும்
மயன் இயல் வெளிபடுத்தும் வாஸ்து மண்டலங்கள்
பிர்மம் ஞானமும் பிம்ப ஞானமும்
ஆகமவிஞ்ஞான அடிப்படையில் திருமுறை விளக்கங்கள்

ஆலயத்தேர் ஒரு பிரபஞ்ச தேர் அதன் தத்துவம் மேற்படி தலைப்புகளில் தமிழ், சமஸ்கிருதம் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பேசப்பட்டவை.

இவர் பெற்றுள்ள விருதுகள்

வேத ஆகம சில்ப வித்யா வாசஸ்பதி
மய விஞ்ஞான கலாநிதி
சைவாகம சில்பாகம கலாநிதி
சைவாச்சார்ய ரத்னம்
சைவாகம ரத்னம்
திருமுறை நாவரசர்

1998 ஆண்டு திருவாவடுதுறை ஆதீன பாராட்டு பத்திரம், பொன்ஆழி, பொற்கிழி பெற்றுள்ளார்.

தனது மரபு வழி பணியாகிய கும்பாபிஷேகம், நூதன பிம்பப் பிரதிஷ்டை ஆகியன இந்தியமாநிலங்கள் மற்றும் மேலை நாடுகளிலும் நன்கு விளக்கி நடத்திவருபவர்.

இவருடைய பிறபணிகள்

வாஸ்து வேத ஆய்வு என்ற நிறுவனத்தில் முக்கிய அங்கம் வகித்து வருகிறார். மயவிஞ்ஞான தொழில் நுட்ப பன்னாட்டு நிறுவனத்தில் முக்கிய பொறுப்பேற்றுள்ளார்.

வாஸ்து விஞ்ஞான பயிற்சி வகுப்பு வாஷிங்டனில் டாக்டர் கணபதி ஸ்தபதியுடன் நடத்தியுள்ளார். வாஷிங்டனில் பெரிய வாஸ்து நகரம் உருவாகி வருகிறது. அதற்கென தேவாலய வாஸ்து எனும் பெரிய நூல் எழுதி வருகிறார். இவருடைய சமூக சமுதாய வளர்ச்சிக்கு பெரிதும் பாடுபடும் இவரது தொண்டு சிறக்க வாழ்த்தி நிறைவு செய்கிறேன்.

பழனி - சிவஸ்ரீ பாலசுப்ரமணிய சிவாச்சாரியார்

கோனேரிராஜபுரம் ஸ்ரீ உமாமகேஸ்வரி சுவாமி ஆலய பரம்பரை அர்ச்சகர் சிவஸ்ரீ சோமாஸ்கந்த சிவாச்சாரியார்-திருமதி சம்பூர்ணத்தம்மாள் தம்பதிகளுக்கு ஸ்ரீ மூகாம்பிகையின் திருவருளால் விகாரி வருஷம், பங்குனி மாதம், ரேவதி நட்சத்திரம் 27-03-1960 மூன்றாவது குமாரனாக பிறந்தார்.

இவர் தமது ஆரம்ப கல்வியை கோனேரி ராஜபுரத்தில் படித்து உபநயனம் முடிந்தவுடன், அல்லூர் வேதசிவாகம பாடசாலை தலைமை ஆசிரியர் டாக்டர் வி. விஸ்வநாத சிவாச்சாரியார் அவர்களிடம் வேதம், சிவாகமம், சாஸ்திரங்கள் பயின்று முதன்மை மாணவராக தேர்ச்சி பெற்றார்.

இவருக்கு இயற்கையாகவே தமிழிலும், சம்ஸ்கிருதத்திலும் கவி இயற்றக்கூடிய ஆற்றல் உள்ளவர். இவர் எழுதிய பழனி ஸ்ரீ தண்டாயுதபாணி சுப்ரபாதம் இசைபுகழ் நிக்யஸ்ரீ மகாதேவன் பாட திரைஇசைபுகழ் எம்,எஸ். விஸ்வநாதன் இசையமைத்து ஒலிநாடாகவாக வெளிவந்துள்ளது.

இவர் தமிழ்நாடு இந்துசமய அறநிலைய ஆட்சித்துறையின் கீழ் நடத்தப்பெற்று வரும் பழனி வேத சிவாகம பாடசாலையின் தலைமை ஆசிரியராக பணி ஆற்றி வருகிறார். இவர் கலந்து கொண்டுள்ள கும்பாபிஷேகங்கள் சுமார் 850-க்கு மேல் ஆகும். சர்வசாதகமாக சுமார் 250 கும்பாபிஷேகங்களுக்குமேல் செய்துள்ளார். பலவெளி நாட்டில் சிவாகம பூஜா முறைகளை நெறிபடுத்தியவர் சிங்கப்பூர், மலேசியா, ஈஸ்டன் மலேஷியா, தாய்லாந்து, மொரீஷியஸ், ரீயூனியன் போன்ற அயல் நாடுகளிலும் கும்பாபிஷேகம் செய்து உள்ளார்.

இவர் எழுதிய நூல்கள், மஹா பிரதோஷ விதி, குமாரதந்திர உரை, சுப்ரபேத ஆகமத்திற்கு நான்கு படலங்களுக்கு உரையும் பல சிறு கட்டுரைகள் எழுதியுள்ளார். இவர் தலைசிறந்த பேச்சாளர். பல கருத்தரங்கங்கள், பட்டி மன்றங்கள் கலந்து கொண்டுள்ளார். பழநி பிராம்மண சங்க குழுவிலும், சில தர்ம ஸ்தாபனங்களில் தலைவராகவும், செயலாளராகவும் உள்ளார். பழனியில் காஞ்சி சங்கர மடத்தின் சார்பில் அமைக்கப்பட்ட அர்ச்சக சேமநலநிதி குழுவின்

தலைவராகவும் இருந்து வருகிறார். பல பொது சமூக சேவைகளில் ஈடுபட்டு வருகிறார்.

இவர் பெற்ற பட்டங்கள் :

கோனேரிராஜபுரம் ஆஸ்திக சமாஜம் சிவாகமரத்னம் என்ற விருதினையும், கோவை கௌமார மடாலயம் சிவாக செம்மல் என்ற விருதினையும், அகில இந்திய அளவில் நடந்த திருப்பதி தேர்வில் முதல் மாணவராக வந்து "சிவாகம வித்வான்" என்ற பட்டம் பெற்றார். சீர்காழி குன்னம் பூமீஸ்வரர் சுவாமி கோயில் கும்பாபிஷேகத்தில் "சிவாகம ரத்னாகரம்" என்ற விருதினை பெற்றார்.

இவரது தொண்டு வளரட்டும்.

கும்பகோணம் - திருக்கயிலை K.Y. சுந்தரேச குருக்கள்

ஹரித்துவாரமங்கலம் ஸ்ரீகண்ட பரமேசுவர சுவாமி பரம்பரை அர்ச்சகரான சிவஸ்ரீ யோகவன குருக்களுக்கு யுவ ஆண்டு ஆவணி மாதம் 32-ம் தேதி திங்கட்கிழமை அசுவினி நட்சத்திரத்தில் 1935-ல் பிறந்தார்.

ஆரம்பக்கல்வியை துவங்கி எஸ்.எஸ்.எல்.சி. வரை சொந்த ஊரில் படித்து பிறகு வேத ஆகமங்களை 3 ஆண்டுகள் கும்பகோணம் பாடசாலையில் படித்து, தன் தந்தையாரிடம் தீக்ஷை பெற்று குடந்தை சோலையப்பன் தெரு ஸ்ரீ விசுவநாத சுவாமி ஆலய அர்ச்சகராக பணி செய்து கொண்டு, ஆதிசைவ சமூகத்தினர்க்காக திருக்கயிலை என்ற ஆன்மீக பத்திரிக்கை நடத்தி பல ஆகம ஆன்மீக விஷயங்களை தெளிவுபடுத்திவருகிறார். கௌசீக கோத்திரத்தில் பிறந்த இவர் பல அன்பர்களுக்கு சிவதீக்ஷை பெற்று ஆத்மார்த்த பூஜை செய்வதற்கு பேருதவி புரிந்துவருவதுடன் மக்களின் நலன்களை வேண்டி ஹோமங்கள், பூஜைகள் பல செய்து வருபவர். 8-4-93 ல் தமிழக முதல்வர் மாண்புமிகு ஜெயலலிதா அம்மையார் நலனுக்காக பூஜை ஹோமங்கள் செய்து பிரசாதம் தந்து அவர் நன்மதிப்பைப் பெற்றார். 1-7-1982 ல் திருமுருக கிருபானந்தவாரியார் "முருகமணி" என்ற விருதினையும், 21-8-1983ல் திருப்பனந்தாள் மடாதிபதி அவர்கள் "திருப்பணிச் செல்வர்" என்ற விருதினையும் பெற்றார். 25-10-1995ல் கூனம்பட்டி ஆதீனம் அவர்கள் "சிவயாக சாம்ராட்" என்ற விருதினையும், 22-6-1998ல் கொடும்பு தெய்வசிகாமணி சிவாச்சாரியார் அவர்களால் "சிவாகமதிலகம்" என்ற

விருதினையும், 11-7-1999 குடந்தை சோலையப்பன் ஸ்ரீவிஸ்வநாத சுவாமி ஆலய கும்பாபிஷேக ஸர்வஸாதகம் வகித்ததை பாராட்டி ஆஸ்திக சமாஜத்தாரால் "சிவாகம பிரதிஷ்டா பூஷணம்" என்ற விருதினையும் பெற்றுள்ளார்.

சிறந்த பேச்சாளராகவும் பல சமூகத் தொண்டும் புரிந்துவரும் சுந்தரேச குருக்களுக்கு இரண்டு குமாரர்கள், இரண்டு குமாரிகள். 13-9-1995ல் அல்லூர் ஸ்ரீ விசுவநாத சிவாச்சாரியார் தலைமையில் மணிவிழாக் கொண்டாடியதை எல்லோராலும் பாராட்டப் பெற்றவர்.

வாழ்க சுந்தரேச குருக்கள்
வளர்க திருக்கயிலை பத்திரிக்கை ஆன்மீக பணி

கடலூர் - வக்கீல் S. அருணாசலம் சிவாச்சாரியார் B.A.,B.L.,

அருள்தரும் ஸ்ரீவெள்ளி பிள்ளையார் ஆலய பரம்பரை அர்ச்சகரான சிவஸ்ரீ சுப்பிரமணிய குருக்கள்-மாதுஸ்ரீ சுந்தராம்பாள் தம்பதிகளுக்கு பிரமாதி வருடம், ஆவணி மாதம், ஹஸ்த நட்சத்திரத்தில் 18-8-1939-ல் சிவஸ்ரீ எஸ். அருணாசலம் அவர்கள் பிறந்தார். 1947ல் உபநயனம் முறையாக செய்யப்பட்டு, திருப்பாதிரிப் புலியூர் சிவஸ்ரீ மணி தீக்ஷிதர் வேதபாடசாலையில் வேதம் பயின்று, தந்தையிடத்தில் சமய, விசேஷ நிர்வாண ஆச்சாரியாபிஷேகம் பெற்று சிவஆகமங்களைக் கற்று, கல்லூரியில் ஆங்கிலம், 1957ல் எஸ்.எஸ்.எல்.சி., 1960ல் B.A., 1966ல் B.L., ஹிந்தியில் பிரவீண் படித்து. சில ஆண்டுகள் ஆதிசைவர்களுக்காகவே "சைவாலயம்" என்ற மாத சஞ்சிகைக்கு ஆசிரியராக இருந்து. தமிழ், கிரந்தம், தேவநாகரி ஆகிய மூன்று லிபிகளிலும் அச்சிட்டு நடத்தி வந்தார்.

தமிழ்நாடு அர்ச்சகர்கள் சமூக நலச்சங்கத்தின் தென்னாற்காடு மாவட்ட தலைவராக முதலில் பணியாற்றி பின்னர் அதன் மாநில தலைவராக இரண்டுமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி, தற்போது அதன் பெருந்தலைவர் பொறுப்பில் இருந்து வருகிறார். இவரது பதவிக்காலத்தில் சென்னையில் 7-நாள் மாநில மாநாடு நடைபெற்றதும், ஆதிசைவர்களுக்கு பொருளாதார அடிப்படையில் சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை மனு கொடுத்ததும் சிறப்பு அம்சங்களாகும்.

கடந்த 12 ஆண்டுகளாக திருக்கோயில் அனுஷ்டானவாக்ய பஞ்சாங்கம் என்ற ஒரு பஞ்சாங்கத்தை போஷகராக இருந்து நடத்தி

வருகிறார். இவருக்கு "அர்ச்சகர் சமுகநலக்காவலர்", "சிவாச்சாரிய குல திலகம்", "சுந்தர ரத்னா" ஆகிய விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு பிராமண சங்கத்தின் மாநில கிளையின் உபதலைவராகவும் தக்ஷிண பாரத ஹிந்தி பிரசார சபையின் அறங்காவலர் குழு தலைவராகவும், சரஸ்வதி கானசபாவின் தாளாளராகவும், ஹிந்து ஆலய பாதுகாப்பு கமிட்டியின் மாநிலத் துணைத்தலைவராகவும் ஏகல் வித்யாலயாவின் மாவட்டத் தலைவராகவும், ஆகவல்லுநர் குழுவின் செயலாளராகவும் இருந்து பணியாற்றி வருகிறார்.

கடந்து 38 ஆண்டுகளாக கடலூரில் வழக்கறிஞராக பணியாற்றி வருகிறார். இவரிடம் பயிற்சி பெற்ற 20-க்கு மேற்பட்ட ஜுனியர்கள் பல்வேறு துறைகளில் பணியாற்றி வருகின்றனர். ரோட்டரி சங்கத்தின் தலைவராக இருந்த காலத்தில் உலகிலேயே சிறந்த தலைவர்களுள் ஒருவராக தேர்ந்தெடுக்கப்பட்டு துணைவியாருடன் ஸ்பெயின் நாட்டிற்கு சிறப்பு அழைப்பாளராக சென்று அகில உலக ரோட்டரி மாநாட்டில் கலந்து கொண்டார்.

ஸ்ரீலங்கா அச்சுவேலி குமாரசாமி குருக்களின் வாரிசுகளால் வெளியிடப்பட்ட "சிவலிங்க பிரதிஷ்டா விதி" நூல் வெளியீடு விழாவிற்கு சிலோனுக்கு சிறப்பு அழைப்பாளராக தம் துணைவியாருடன் சென்று வந்தார். கடலூர் மாவட்டத்தில் சுமார் 50-க்கும் மேற்பட்ட ஆலயங்களின் திருப்பணிக் கமிட்டி தலைவராக இருந்து திருப்பணி மற்றும் தேர் திருப்பணிக் கமிட்டியிலும் மற்றும் ஆலயங்களின் திருப்பணி கமிட்டிகளிலும் இருந்து வருகிறார்.

திருநாவலூர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் மடாலயத்தின் மதில் சுவர் சம்பந்தமான பிரச்சனைகளை சுமூகமாக தீர்த்து வைத்து மதில் சுவர் எழும்ப காரணமாக இருந்தார்.

காஞ்சி சங்கராச்சாரியார், தருமபுர ஆதீனம் திருவாவடுதுறை ஆதீனம் ஆகியோர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட பல சதஸ்களில் உரையாற்றியிருக்கிறார். ஆலயங்களில் ஆகம முறைப்படி வழிபாடுகள் மற்றும் கும்பாபிஷேகங்கள் நடைபெறவும். அவற்றிற்கு முரணாக நடைபெறாமல் இருக்கவும் அரும்பாடுபட்டு வருகிறார். பாண்டிச்சேரி வானொலியில் 100-க்கு மேற்பட்ட ஆன்மீக தலைப்புகளில் பேசியுள்ளார். A.T. ராஜன், A. உமாசுதன் என்ற இருகுமாரர்களும், சௌ. அபர்ணா, சௌ. வந்தனா என்ற இரு குமாரத்திகளும் உள்ளனர்.

வாழ்க எஸ். அருணாசலம். வளர்க அவர்தம் தொண்டுகள்

இலங்கை அச்சுவேலி - சிவாகமபானு
சிவஸ்ரீ ச. குமாரசாமி குருக்கள்

இலங்கை அச்சுவேலி ந. சபாபதி குருக்கள்-மாதுஸ்ரீ தங்கம்மா அம்மையாருக்கும் விய வருஷம் கார்த்திகை மாதம் 21-ம் தேதி (16-11-1886) புதல்வராக பிறந்தார்.

நீர்வேலி ச. சிவப்பிரகாச பண்டிதர், நல்லூர் த. கைலாசபிள்ளை அன்னாகம் அ.குமாரசாமி புலவரிடம் சைவசித்தாந்தம் பயின்றார். வேதபாடங்களை சங்கானை அ.அருணாசல சாஸ்திரியாரிடம் பயின்றார். புலோலி ம.முத்துகுமார சுவாமி குருக்களிடம் சிவாகமங்களை பயின்று தெளிவுபெற்றார்.

1910-ஆம் ஆண்டு வாரெமு சிவ. சதாசிவ குருக்களிடம் ஆச்சார்யாபிஷேகம் பெற்றார். ஈசான சிவாச்சாரியார் என்னும் தீக்ஷா நாமம் பெற்றார்.

மாதகல் பராசக்தி என்ற மாதரசியை மணமுடித்தார். வைத்தீஸ்வர குருக்கள், மனோன்மணி அம்மாள் ஆகிய இரு நன்மக்களை பெற்றார். இவரது புதல்வர் வைத்தீஸ்வர குருக்கள் "திருக்கேதீஸ்வர" புராணம் பாடியவர் ஆவார்.

யாழ்பாணம் ஆறுமுக நாவலருக்கு பின்னர் சைவ சித்தாந்த கருத்துகள் கொண்ட வெளியீடுகளை பாதுகாத்து நூல்களை வெளியிட்டு செயலாற்றினார். 1911 முதல் 1915 முடிய தமது இல்லத்தில் சைவ அந்தணர்களை, சைவ பிள்ளைகளுக்கு தமிழ் பாடங்களை போதித்து வந்தார்.

1918-ம் ஆண்டு சைவவித்யாசாலை ஆரம்பித்து திறம்பட நடத்தி வந்தார். பின்னர் யாழ்பாண இந்து கல்லூரியில் சைவபரிபாலன சபையினர் நடத்திய குருகுல வகுப்புக்கு ஆசிரியராக திகழ்ந்தார். கொழும்பு விவேகானந்த சபை சமய பாடபரிட்சாதி காரியாகவும், திருக்கேதீஸ்வர சிவானந்த குருகுல தலைமை குருவாகவும் நல்லூர் வேத சிவாகம பாடசாலைக்கு பல அருந்தொண்டாற்றினார்.

1939 ஆம் ஆண்டு ஆவணி மாதம் முதல் 1941 ஆம் ஆண்டு மார்கழி மாதம் வரை சைவ சமயத்தை மக்களுக்கு தெளிவாக

உணர்த்தும் வகையில் சஞ்சிகை வெளியிட்டார். யாழ்பாணம் வேதாகம சைவசித்தாந்த சங்கத்தினர் வெளியிட்ட ஆறுமுக நாவலர் என்ற பத்திரிகை ஆசிரியராக திகழ்ந்தார்.


வேதசிவாகம, சாஸ்திர, சைவசித்தாந்தங்கள், திருமுறைகள் மட்டுமல்லாது சங்கீதத்தையும், தமிழினையும் ஒப்பு நோக்கி விளக்கும் சிறப்புடையவராவர். வேதஆகமங்களை போல தேவாரம் அருள் நூல்களை அடியொற்றி பலசைவசமய நூல்களை காலத்திற்கு ஏற்றாற்போல் வெளியிட்டார்.

இவர் எழுதிய நூல்கள் 1. சைவப் பிரகாசிகை, 2. முப்பொருள் விளக்கம், 3. ஆலய அமைப்பு, 4. ஆலய சோலை, 5. சைவ சாஸ்திர பிராமணம், 6. விநாயக பரத்துவ சரிதங்கள், 7. நித்திய நைமித்திககிரியை, 8. புவேனஸ்வரி மகத்துவம், 9. சிவஞானபோதம் ஒன்பதாம் சூத்திரவிளக்கம் (தருமை ஆதீன வெளியீடு) 10. வேதாகம நிருபணம் (இரண்டு பாகங்கள்), இவை தவிர பல சிவாகம நூல்கள் வெளியிட்டுள்ளார்.

இலங்கையில், மிகவும் பிரசித்தி பெற்ற சைவாச்சார்ய குருவாக திகழ்ந்து மந்திரம், கிரியை, பாவனை வழுவாது பல கும்பாபிஷேகங்கள் உற்சவங்கள் செய்து பிரசித்தி பெற்றவர்.

மேலும் பல அரிய நூல்களை எழுதி பதிப்பித்துள்ளார். அவையாவன 1. சிவபூஜை விளக்கம், 2. சிவபூஜாவிதி, 3, மகோத்ஸவ சந்திரிகை, 4. மகோற்சவ விளக்கம், 5. பிரசாத தீபவுரை, 6. சிராத்ததீபிகை, 7. அனுஷ்டான அகவலுரை போன்றவையாகும்.

சாதாரண வருஷம் மாசி மாதம் (1971) சிவசாயஜ்யம் அடைந்தார்.



திருவாவடுதுறை - சிவஸ்ரீ க. சுவாமிநாத சிவாச்சாரியார்

திருவாவடுதுறை ஸ்ரீ மாசிலாமணி ஈஸ்வரர் ஆலய பரம்பரை அர்ச்சகரான சிவஸ்ரீ கணபதி சிவாச்சாரியார்-அலமேலு அம்மாள் தம்பதிகளுக்கு 1901-ம் வருஷம் சிவஸ்ரீ சுவாமிநாத தத்புருஷ சிவாச்சாரியார் பிறந்தார். ஆரம்பகல்விக்கு பின் ஆச்சாள்புரம் வேதசிவாகம பாடசாலையில் வேதம், சிவாகமம் பயின்றார். வியாகரண, மீமாம்ச, சிரோன்மணி பரிட்சை தேர்வு பெற்று திருவாவடுதுறை ஆதீன வித்வானாக இருந்து ராஜகோபாலபுரம் வேதசிவாகம பாடசாலை தலைமை ஆசிரியராக பணிபுரிந்தார்.

"மகுடாகம த்திற்கு விளக்கம்", "ஆகம வசன பூஷணம்" போன்ற நூல்களை எழுதியுள்ளார். பல ஆகம நூல்களை வெளியிட்டு பரிசோதகராக இருந்தார். இவருக்கு 2 ஆண் குழந்தைகளும், 2 பெண் குழந்தைகளும் உள்ளனர். இவர் 1987-ல் சிவசாயுஜ்யம் அடைந்தார்.

இவரது புகழ் ஓங்குக!

மயிலாடுதுறை - சிவஸ்ரீ நா. பாலச்சந்திர சிவாச்சாரியார்

மயிலாடுதுறை ஸ்ரீ அபயாம்பாள் உடனருள் ஸ்ரீ மயூரநாத ஸ்வாமி ஆலய பரம்பரை அர்ச்சகர் சிவஸ்ரீ நாகநாத சிவாச்சாரியார் ஞானாம்பாள் தம்பதிகளுக்கு 30-03-1959 அன்று புதல்வராக சிவஸ்ரீ நா. பாலச்சந்திர சிவாச்சாரியார் பிறந்தார். மயிலாடுதுறை சிவஸ்ரீ நாகநாத சிவாச்சாரியார் விசாலாட்சி அம்மையார்க்கு ஸ்வீகார குமரரானார்.

தருமை ஆதீன வேதசிவாகம பாடசாலையில் பயின்றார். திருக்கடையூர் சாந்திகலாபூஷணம் சிவஸ்ரீ T.R. விஸ்வநாத சிவாச்சாரியார் மூத்தபுதல்வி ஸௌ. தேவகுஞ்சரியை மணந்தார்.

ஆன்மீகம், அரசியல், மற்றும் பொது பணிகளில் தம்மை ஈடுபடுத்தி சாதனை புரிந்தவர்.

சிங்கப்பூர், ஸௌத் பிரிட்ஜ் ரோடு ஸ்ரீ மாரியம்மன் ஆலயத்தின் தலைமை அர்ச்சகராக இருந்து அவரது அரும்பணியை பாராட்டி இந்து சமய அறக்கட்டளை வாரியம் சிங்கப்பூர் தலைமை அர்ச்சகர் உயர்பதவி அளிக்கப்பட்டு சிறப்பு பெற்றவர்.

மயிலாடுதுறை, துலாகட்டம் ஸ்ரீமங்கள விநாயகர் திருக்கோயில் சங்கடஹர சதுர்த்தி தோறும் பூஜை, ஹோமங்கள் செய்து "கணபதி தாசன்" என்ற அருளாசியுடன் திகழ்ந்து வருகிறார்.

இந்தியா மற்றும் சிங்கப்பூரில் பல கோயில்களில் கும்பாபிஷேகங்கள், ஹோமங்கள், உற்சவங்கள் பல நிகழ்த்தி வருபவராவார். பல சிவாச்சாரியார்கள் சிங்கப்பூரில் பணிபுரிய வாய்ப்பை நல்கியவராவார்.

மயிலாடுதுறையில் வேதசிவாகம பாடசாலை நிறுவி பல ஆதிசைவ மாணவர்கள் பயில வாய்ப்பளித்து வருகிறார்.

மயிலாடுதுறை நகர காங்கிரஸ் பொருளாளராக பதவி வகித்தார். மயிலாடுதுறை நகரமன்ற உறுப்பினராக தொகுதி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு 6 ஆண்டுகாலம் பதவி வகித்தார். இவர் மயில் சின்னத்தில் நின்றதால் "மயில் ஜெக்கு" என்று தொகுதி மக்களால் அன்புடன் அழைக்கப்பட்டு வருபவர். காவிரியின் குறுக்கே இருந்த நடைபாதை மூங்கில் பாலத்தை சிமெண்ட் பாலமாக மாற்றியவர். கட்சி பாகுபாடின்றி அனைத்து அரசியல்வாதிகள் அன்பையும், நட்பையும் பெற்றவர். அர்ச்சகர் சங்கம், பிராமணர் சங்கம் போன்றவற்றில் பதவிகள் வகித்தவர்.

பொதுவாழ்வில் பல ஏழைகளுக்கும் அனாதை இல்லங்களுக்கும் மன வளம் குன்றியவர்களுக்கும் பலஉதவி செய்துவருபவர்.

திருக்கோயில் உழவாரணப்பணி, நந்தவனம் அமைத்தல், மரம் நடுதல், தண்ணீர் பந்தல் அமைத்தல், ஏழை மாணவர்களுக்கு கல்வி பயில உதவிகள் பல செய்து வருபவர். மனித நேயம், மத நல்லிணக்கம், கூட்டு பிராத்தனை போன்ற உயரிய பண்புநலன்கள் கொண்டவர்.

இவரது சமுதாய பணியை பாராட்டியும், தெய்வீக சேவையை பாராட்டியும் "சிவதர்ம பாஸ்கரா" என்ற விருது பெற்று கௌரவிக்கப்பட்டவர்.


இவரது தொண்டு வளரட்டும்.

சேலம் - சிவஸ்ரீ G.S.V. கணேச சிவாச்சாரியார்

சேலம் ஸ்ரீ ஸ்வர்ணாம்பிகை உடனருள் ஸ்ரீ சுகவனேஸ்வரர் கோயில் பரம்பரை அர்ச்சகரும், சேலம் ஸ்ரீ ஸ்வர்ணாம்பிகை சைவசித்தாந்த சபை, ஸ்ரீ கண்டாச்சார்ய குருபீடத்தின் பரம்பரை சிவாச்சாரியாருமான சிவஸ்ரீ சிவ சுப்ரமண்ய சிவாச்சாரியார் சகோதரர், சிவஞானசம்பந்த சிவாச்சாரியார் என்கிற விஸ்வநாத சிவாச்சாரியார் ஸ்வர்ணாம்பாள் விசாலாட்சி தம்பதிகளுக்கு தவப்புதல்வராக கணேச சிவாச்சாரியார் பிறந்தார்.

தனது ஆரம்பக் கல்விக்கு பிறகு அல்லூர் வேதசிவாகம பாடசாலையிலும், திருப்பதியிலும் பயின்றார். தமிழ்நாடு அர்ச்சகர் சங்கத்தின் மாநில தலைவராகவும், சேலம் ஸ்ரீஸ்வர்ணாம்பிகை சைவசித்தாந்த சபை, திருநாவலூர் ஸ்ரீஆலால சுந்தரர் மடாலய திருப்பணி குழுதலைவராகவும் இருந்து வருகிறார். தமது சொந்த பொறுப்பில் வேதசிவாகம திருமுறை பாடசாலை சேலத்தில் நடத்து வருகிறார். ஆதிசைவகுலகுரு ஸ்ரீ கண்டாச்சார்ய குரு பீடம் (சேலம்) குருவாக திகழ்ந்து வருகிறார். தமிழ் திருமுறை வளர்ச்சிக்கழகம் பொறுப்பாளராகவும் இருந்து வருகிறார். பல ஆலயங்கள் கும்பாபிஷேகங்களின் சர்வசாதகராக இருந்து சிறப்பு செய்தவர். சிங்கப்பூர் மலேஷியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் கும்பாபிஷேகம் மற்றும் யாகங்களை செய்து சிறப்பு செய்தவர். பல சமூக, சமுதாய பணிகளை செய்து வருபவர். "திருமுறை விழா" என்ற விழாவை துவங்கி நால்வர் விக்ரஹத்தை அமைத்து தருவது போன்ற சிறப்பான காரியங்களை செய்து வருபவர்.

இவர் எழுதிய நூல்கள் 1. பண்டிகைகளும், பயன்களும், 2. சைவசமயம், 3. தெரிந்தவை புரியாதவை, 4. சித்தாந்த ரகசியம் போன்ற நூல்களை வெளியிட்டார். அகில உலக ஆதிசைவ நல இயக்கம் என்ற அமைப்பினை இலங்கையில் நிறுவியுள்ளார். மேலும் பல அருந்தொண்டுகளை செய்துவர எல்லாம் வல்ல இறைவன் துணை நிற்பாராக.



அழகாபுத்தூர் - சிவஸ்ரீ நா.சுவாமிநாத ஈசான சிவாச்சாரியார்

அழகாபுத்தூர் நாராயணசாமி சிவாச்சாரியார்-வாலம்பாள் தம்பதிகளுக்கு சுவாமிநாத ஈசான சிவாச்சாரியார் 1935-ல் பிறந்தார். குற்றாலம் ராஜகோபாலபுரம் ஆகமபாடசாலையில் வேதசிவாகமங்கள் பயின்றார். சுமார் 125 கும்பாபிஷேகங்களுக்கு மேல் நடத்தியவர்.

1954-ல் திருமணஞ்சேரி ஸ்ரீ கோகிலாம்பாள் உடனருள் உத்வாக நாதசுவாமி ஆலயத்தில் அர்ச்சகராக பணியேற்று, அவ்வாலயத்தின் சிறப்பினையும், பயனையும் உலக மக்களுக்கு தெரிவித்து அவ்வாலய திருப்பணியிலும் ஈடுபடுத்தி கொண்டார்.

1999-ல் சிவசாயுஜ்யம் அடைந்தார். இவரது புகழ் பரவட்டும்.

கோவைகுறிச்சி - சிவஸ்ரீ K.K. உமாபதி சிவாச்சாரியார்

கோவைகுறிச்சி சிவஸ்ரீ கந்தசுப்பிரமணிய சிவாச்சாரியார்-ஸௌ. சீதாலெக்ஷ்மி தம்பதிகளுக்கு சிவஸ்ரீ K.K. உமாபதி சிவாச்சாரியார் பிறந்தார். கொங்கு நாட்டில் சித்தாந்தசரபம் ஈசான சிவாச்சாரியார் அவர்களை குருவாகவும், பல ஆதிசைவர்கள் வாழ்வு மேம்படவும் பாடுபட்டு கந்தசுப்ரமணிய சிவாச்சாரியாரின் மகனாவார். இவர் அர்ச்சகர் சங்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு அர்ச்சகர் சங்கம் மூலம் பாடுபட்டு வருபவர்.

தமது இல்லத்தில் ஆதிசைவகுல மாணவர்களுக்கு வேதசிவாகமம் பயிற்றுவித்து வருகிறார்.

கொங்குநாட்டில் பல சிவ ஆலயங்களுக்கு கும்பாபிஷேகங்கள் நடத்தி வருபவர். கோவை மாவட்ட நீதிமன்றத்தில் ஆதிசைவ சமுதாயத்திற்கு பல வழக்குகள் போட்டு வெற்றி கண்டவர்.



சாத்தம்பூர் ஊத்துகுளி

சிவஸ்ரீ V.M. குப்புசாமி குருக்கள்

சிவஸ்ரீ V.M. முத்துகிருஷ்ண குருக்கள்

ஈரோடு மாவட்டம், சாத்தம்பூர், ஊத்துகுளி ஆதிசைவ புரந்திர பண்டித குரு ஸ்வாமிகளாக விளங்கிய V.M. குப்புசாமி குருக்கள், V.M. முத்துகிருஷ்ண குருக்கள் திகழ்ந்து வந்தனர்.

சேலம், நாமக்கல், தர்மபுரி, ஈரோடு மாவட்டங்களில் பல கும்பாபிஷேகங்களை நடத்தி உள்ளார். பல ஊர்களில் தேர்திருவிழா நடத்தி உள்ளார். இவரை பாராட்டி பிரதிஷ்டா ரத்னம் என்ற பட்டத்தை சௌந்திரகைலாசம் அவர்களிடம் பெற்றுள்ளார்கள்.

இவர்கள் உப்பிலிய நாயக்கன் அவர்களுக்கு குலகுருவாக இருந்து வருகிறார். உப்பிலிய நாயக்கர் 64 பட்டத்துக்கும் இவர்களே குலகுருவாக இருந்து வருகிறார்.

இவர்கள் பரம்பரையில் தற்சமயம் சிவஸ்ரீ M. ஷண்முக சுப்பிரமணிய குருக்கள், சிவஸ்ரீ பழனிசாமி குருக்கள், சிவஸ்ரீ M. இரத்தின சபாபதி குருக்கள், சிவஸ்ரீ S. சரவண மாணிக்க குருக்கள் இருந்து வருகிறார்கள். குருக்கள்பட்டி மடத்தில் வேத சிவாகமம் பயின்றனர்.

இவர்கள் தொண்டு சிறக்கட்டும்.

பாண்டிச்சேரி - சிவஸ்ரீ B. அர்த்தநாரீஸ்வர சிவம்

பாண்டிச்சேரி, சிவஸ்ரீ நடேச சிவாச்சாரியார்-கருணாம்பாள் தம்பதிகளுக்கு ரோமரிஷி கோத்திரத்தில் அர்த்தநாரீஸ்வர சிவம் பிறந்தார். வேதம், ஆகமம் சொல்லங்கோடு சிவாச்சாரியாரிடம் பயின்று உள்ளார். மேல்நிலைக்கல்வி நிலையத்தின் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வருபவர்.

நாகலாந்து மாநிலத்தில் ஜெயபிரகாஷ் நாராயணன் தலைமையில் அமைதி குழுவில் செயலாளராக 7 ஆண்டுகள் பணிபுரிந்தார். டாக்டர் மார்ட்டின் லூதர்கிங் குழுவுடன் ஓராண்டு அமைதி பணியில் ஈடுபட்டார். உலக சர்வ சமய அமைதி அமைப்பில்

இந்திய தேசிய செயற்குழு உறுப்பினராக 1980-ல் இருந்து பணிபுரிந்து வந்துள்ளார். இந்தியாவின் சார்பில் நேபாளம் (1991-ல்) இத்தாலி (1994) தாய்லாந்து (1996) உலக சர்வ சமய மாநாட்டில் இந்து சமய பிரதிநிதியாக கலந்து கொண்டவர். இலங்கை, ஜெர்மனி, ஹாலந்து, பெல்ஜியம் ஆகிய நாடுகளில் அமைதி கருத்தரங்கில் கலந்து கொண்டுள்ளார். பாண்டிச்சேரியில் தெய்வ சேக்கிழார் மன்றத்தில் அமைக்கப்பட்ட விஸ்வ ஹிந்து பரிஷித் தலைவராக பணியாற்றி உள்ளார். உலக நாடுகளில் இந்து சமய, சமதர்ம அமைதிக்காக பாடுபட்டு வருபவர். அவர் தம் தொண்டு வளரட்டும்.

காஞ்சிபுரம் - சிவஸ்ரீ இஷ்டசித்தி க. ஏகாம்பர குருக்கள்

காஞ்சி ஸ்ரீகாமாட்சி உடனாகிய ஸ்ரீஏகாம்பரேசுவர சுவாமி ஆலய பரம்பரை அர்ச்சகரான சிவஸ்ரீ இஷ்டசித்தி கச்சபேசுவர குருக்கள்-திருபுரசுந்தரி அம்மாள் தம்பதிகளுக்கு அக்ஷய வருடம், வைகாசி மாதம் 17-5-1926-ல் இஷ்டசித்தி ஏகாம்பர குருக்கள் பிறந்தார்.


ஆரம்பகல்வி பயின்ற பிறகு காஞ்சிபுரம் நகரத்தார் வேத சிவாகமபாடசாலை பிர்ம்மஸ்ரீ புண்ணியகோடி சோமசுந்தர குருக்கள் பிர்ம்மஸ்ரீ இஷ்டசித்தி சோ.கச்சிபேசுவர குருக்கள், பிர்ம்மஸ்ரீ விளக்கடி கோவில் விஸ்வநாத குருக்களிடம் வேதம், சிவாகமம் பயின்று போதாயன சூத்திரம், ப்ரயோகம் செய்து வைக்கும் வல்லமை படைத்தவர்.

தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா முதலிய மாநிலங்களிலும், டில்லியிலும் பிரதான ஆச்சார்யராகவும், சாதகராகவும், சர்வசாதகராகவும் பல ஆலய கும்பாபிஷேகங்களை சிறப்பாக நடத்தி உள்ளார். பாரதபிரதமர் இந்திராகாந்தி, தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். முதலானவர்களுக்காக, பலவேள்விகள் செய்து பாராட்டுப் பெற்றவர். திருத்துறைப்பூண்டி ஆகமவித்வசதஸ்ஸில் "சிவாகமரத்னம்" என்ற விருதினையும், காஞ்சி செம்பொற்கோவில் கும்பாபிஷேகத்தில் காஞ்சி சங்கராச்சாரியார் தங்கத்தோடாவும், வித்வத் சால்வையும் 1976-ல் வழங்கப்பட்டது. 1984 சென்னையில் காஞ்சி காமகோடி பீடம் பொன்விழாவில் வெள்ளி பதக்கமும் வாங்கியுள்ளார்.

1964 வருடம் "அகோர சிவாச்சாரியார் பத்ததி", "சிவப்பிரதிஷ்டா விதி" ஆகிய நூல்களை தென்னிந்திய அர்ச்சக அசோசியேஷன் மூலமாக மறுவெளியீடாக சீர்திருத்தத்துடனும், விளக்கத்துடனும் தகப்பனார் பெயரில் வெளியிட்டார்.

காஞ்சி நகரத்தார் பாடசாலையில் பயின்று அதே பாடசாலையில் ஆசிரியராகவும் இருந்து வந்தார். காஞ்சி மஹாபெரியவரிடம் ஸ்ரீமடத்தின் மூலமாக வேதசிவாகம, சாஸ்திர பாடசாலை அமைக்க வேண்டியதை ஏற்று காஞ்சி ஸ்ரீமடத்தில் வேதசிவாகம பாடசாலை அமைத்து அதன் தலைமை ஆசிரியர் பொறுப்பை இவருக்கு அளித்தார். அந்த பாடசாலை தற்கால வேடல் கிராமத்தில் நடந்து வருகிறது. அவருக்கு 6 குமாரர், 2 குமாரிகளும் உள்ளார்கள்.

வாழ்க அவர் பரம்பரை! வளர்க அவர் சிவத்தொண்டு!



கொங்குநாட்டு ஆதிசைவ மடங்களின் அருந்தொண்டுகள்

சைவசமய பரிபாலனம், சீவதீக்ஷை செய்து சிவம் பெருக்குதல் சிவமணம் கமழ திருமணம் செய்து வைத்தல், அந்தியேஷ்டி மூலம் சிவசாயுஜ்யம் அடைய செய்தல், இம்மை, மறுமை இரண்டிற்கும் ஏற்றநலங்களை எப்பொழுதும் எடுத்துக் கூறி நல்வழிபடுத்துதல்.

ஆதீன கர்த்தர்களின் திருநாமங்கள்

1. **ஸ்ரீலஸ்ரீ இராஜலிங்க மாணிக்கவாசக சுவாமிகள்**
   கூனம்பட்டி ஆதீன குருமஹாசன்னிதானம்.

2. **ஸ்ரீமத் நாயனார் தில்லைச்சிற்றம்பல குருசுவாமிகள் மடம்**
   தாரமங்கலம், குருக்கள்பட்டி.

3. **ஸ்ரீமத் அழகிய தில்லைச்சிற்றம்பல குருசுவாமிகள் மடம்**
   கல்லங்குளம், இராசிபுரம்.

4. **ஸ்ரீமத் இம்முடி சிற்றம்பல குருசுவாமிகள் மடம்**
   அருணகிரி, அய்யம்பாளையம்.

5. **ஸ்ரீலஸ்ரீ சிவசமய பண்டித குருசுவாமிகள் மடம்**
   சிவகிரி.

6. **ஸ்ரீமத் ஆதிசைவ புரந்திர பண்டித ஜெகத்குரு சுவாமிகள் மடம்**
   சாத்தம்பூர், ஊத்துக்குளி.

7. **ஸ்ரீமத் ஆண்ட சிவசுப்பிரமணியன் பண்டித குருசுவாமிகள் சான்றோர் (நாடார்) குல ஜகத்குரு மடம்**
   கருமாபுரம்.

8. **ஸ்ரீமத் உமாபதி பண்டித குருசுவாமிகள் மடம்**
   இடையாறு.

9. **ஸ்ரீமத் மூவேந்திர பண்டித குருசுவாமிகள் மடம்**
   தோளூர், மொஞ்சனூர்.

10. ஸ்ரீமத் மேட்டுவாய் ராமலிங்க பரமேஸ்வர பண்டித குருசுவாமிகள் மடம்.
வள்ளிபுரம், நாமக்கல்.

11. ஸ்ரீ கல்யாண பசுபதி பண்டித குரு சுவாமிகள் மடம்
கருவை ஆதீனம், கரூர்.

12. ஸ்ரீமத் மாணிக்க நாயக சந்திரசேகர பண்டித குருசுவாமிகள் மடம்
கொடுமுடி.

13. ஸ்ரீமத் சுப்பிரமணிய வேதாந்தமூர்த்தி குருசுவாமிகள் மடம்
கத்தாங்காணி, முதலிபாளையம்.

14. ஸ்ரீ மார்க்கண்டேய பண்டித குருசுவாமிகள் மடம்
மருதமலை, இருகூர்.

15. ஸ்ரீ ஆலாலசுந்தர பண்டித குருசுவாமிகள் மடம்
வளையாப்பாளையம், கருவனூர்.

16. ஸ்ரீ ஏனாதி நாயனார் திருமடம்
திருமுருகன் பூண்டி

17. ஸ்ரீ சிவத்திரு ஞானசுவாமிநாத பண்டித ஒக்கலிகர் குருசுவாமிகள் மடம்
காரமடை.

18. ஸ்ரீமத் விஸ்வநாத சைவபுரந்தர பண்டித குருசுவாமிகள் மடம்
பவித்ரம், கரூர்.

19. ஸ்ரீமத் தேவேந்திர சைவ புரந்திர பண்டித குருசுவாமிகள் மடம்
புகளூர், கரூர்.

20. ஸ்ரீமத் இம்முடி சிற்றம்பல குருசுவாமிகள் மடம்
நடந்தை.

21. ஸ்ரீமத் ஆகம பண்டித குருசுவாமிகள் திருமடம்
புத்தூர், சேலம்.

22. ஸ்ரீமத் விகிர்தீஸ்வர வேதாந்த பண்டித ஜெகத்குரு சுவாமிகள் மடம்,
வெஞ்சமாங்கூடல்.

23. சிவஸ்ரீ நவரத்னநாயக பண்டித குருசுவாமிகள் மடம்
பவானி.

24. சிவத்திரு உத்தமபண்டித குருசுவாமிகள் மடம்
காங்கேயம்.

25. சிவத்திரு கனகசபாபதி பண்டித குருசுவாமிகள் மடம்
வள்ளியறச்சல்.

26. ஸ்ரீமத் மீனாட்சி சைவ புரந்தர பண்டித குருசுவாமிகள் மடம்
காடையூர்.

27. சிவத்திரு கனககிரி பண்டித குருசுவாமிகள் மடம்
பட்டாலி.

28. சிவத்திரு கொடுமுடி பண்டித குருசுவாமிகள் மடம்
கீரனூர்.

29. சிவத்திரு ஒரு நான்கு வேதாந்த பண்டித குருசுவாமிகள் மடம்
பார்ப்பதி, வீரசோழபுரம்.

30. சிவத்திரு பாலசக்தி குருதேசிக பண்டித குருசுவாமிகள் மடம்
பரஞ்சேர்வழி.

31. சிவத்திரு சிவஞான பண்டித குருசுவாமிகள் மடம்
கரையூர்

32. சிவத்திரு மருதுறை ஆலாலசுந்தர பண்டித குருசுவாமிகள் மடம்
குறுக்குபாளையம்

33. சிவத்திரு குலசேகர பண்டித குருசுவாமிகள் மங்களப்பட்டி சந்தான மடம்.
ஸ்ரீமுத்தூர்.

34. சிவத்திரு கனகசபாபதி பண்டித குருசுவாமிகள்
ஸ்ரீகண்ணபுரம்.

35. சிவத்திரு சந்திரசேகர பண்டித குருசுவாமிகள் மடம்,
வெள்ளக்கோயில், மயில்ரங்கம்.

36. சிவத்திரு சடைய பரமேசுவர பண்டித குருசுவாமிகள் மடம்
ஸ்ரீ கொற்றனூர், லக்கமநாய்க்கன்பட்டி

37. ஸ்ரீமாம்பாடி காவேரி பரமேஸ்வர பண்டித குருசுவாமிகள் மடம்
மாம்பாடி.

38. சிவத்திரு பரமேஸ்வர பண்டித குருசுவாமிகள் மடம்
ஸ்ரீமூலனூர்

39. சிவத்திரு பாராபர பரமேசுவர பண்டித குருசுவாமிகள் மடம்
அலங்கியம்.

40. சிவத்திரு குலசேகர சுப்பிரமணிய பண்டித குருசுவாமிகள் மடம்
திருச்செங்கோடு.

41. ஸ்ரீஏமுகரைநாட்டு நம்பிசதாசிவ பண்டித குருசுவாமிகள் மடம்
திருச்செங்கோடு.

42. ஸ்ரீநாககிரி பண்டித குரு சுவாமிகள் மடம்

43. ஸ்ரீகுலோத்துங்க வேதநாயக பண்டித குருசுவாமிகள் மடம்
திருச்செங்கோடு.

44. கலூான்ஸி அர்த்தநாரி பண்டித குருசுவாமிகள் மடம்
திருச்செங்கோடு.

45. ஸ்ரீ சேனாபதி பண்டித குருசுவாமிகள் மடம்
திருச்செங்கோடு.

46. சிவத்திரு கனகசபாபதி பண்டித மடாலயம்
ஒத்தக்கால் மண்டபம், பேரூர்.

47. ஸ்ரீமத் ஞான சிவாச்சாரியார் சுவாமிகள் மேல்மடம்,
பேரூர்.

48. ஸ்ரீமத் ஆண்ட சுப்பிரமணிய பண்டித குருசுவாமிகள் மடம்
பெருந்துறை.

49. ஸ்ரீமத் ஆண்ட சிவசுப்பிரமணிய பண்டித குருசுவாமிகள் மடம்
பூந்துறை.

50. ஸ்ரீமத் மூவேந்தர் பண்டித குருசுவாமிகள் மடம்
வெள்ளோடு.

51. ஸ்ரீலஸ்ரீ ஆலால சுந்தர ஹர்தன வாக்கிய புத்திர சந்தான திருமடம்,
தெஞ்சேரிமலை.

52. ஸ்ரீமத் சாமிக்கண்ணு தியாகராஜ பண்டித குருசுவாமிகள் மடம்
பல்லாக்கோயில், பொட்டிக்காம்பாளையம்.

53. ஸ்ரீலஸ்ரீ ஆலாலசுந்தர சுவாமிகள் சந்தான மடம்,
செட்டிபாளையம்.

54. ஸ்ரீலஸ்ரீ சிவசமய பண்டித குருசுவாமிகள் மடம்,
கீழசாத்தம்பூர், நாமக்கல்.

உ

நன்றியுரை

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வுஇல்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

இந்த ஆராய்ச்சி நூலை எழுத என் உள்ளத்திலிருந்து செயல்படுத்திய என் இதயத்தாய் ஸ்ரீகுடவரசிக்கு எனது அன்பான நமஸ்காரங்கள்.

எனது குருநாதர்களுக்கு எனது மனம் மொழி மெய்யினால் அனேக கோடி நமஸ்காரங்கள்.

இந்நூலை முழுமையாக வெளிவருவதற்கு இரவு பகல் பாராது அயராது உழைத்து, திருத்தங்கள் செய்து பெரும் பணி செய்துள்ள, என்னிடம் சைவ சாக்த தீக்ஷை உபதேசம் பெற்று புரச்சரணம் செய்துள்ள அன்பு சிஷ்யன் திருவண்ணாமலை ஸ்ரீ தண்டபாணி சர்மாவிற்கு ஸ்ரீதேவியின் திருவருள் எல்லா நலன்களை தந்திட வேண்டுகிறேன்.

நான் எழுதியவைகளை கொண்டு நகல் எழுதி, திருத்தங்கள் செய்து அயராது உழைத்து வந்துள்ள எனது சிஷ்யன் திருவெண்காடு சுவாமிநாத சிவாச்சாரியார் அவர்களுக்கு எல்லா நலங்களையும் தந்திட ஸ்ரீதேவியை வேண்டுகிறேன்.

இந்நூலின் அணிந்துரை எழுதியதுடன் அச்சாகி வந்துள்ள எல்லா கட்டுரைகளையும் திருத்தம் செய்துள்ள, எனது சிஷ்யன் பூம்புகார் கல்லூரி தமிழ் பேராசிரியராக இருந்து ஓய்வு பெற்று என்னிடம் சிவதீக்ஷை பெற்றுள்ள திருவெண்காடு த. அகரமுதல்வன் அவர்களுக்கும் திருவருள் நிறைந்து எல்லா நலங்களும் கிடைக்க வேண்டுகிறேன்.

எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய காரைக்கால், ஆடிட்டர் பிர்மஸ்ரீ கணபதி சுப்பிரமணியம் அவர்கள் பெருமுயற்சி செய்து கல்வெட்டு ஆராய்ச்சி செய்து வைத்திருந்த கல்வெட்டில் ஆதிசைவர்


என்ற கட்டுரையை நான் ஆதிசைவ மரபு என்ற புத்தகம் எழுதுவதை கூறியவுடன் அந்தக் கட்டுரையை தந்தார். அவருக்கு எனது மனபூர்வமான நன்றியையும், ஸ்ரீதேவி அவருக்கு எல்லா நலன்களையும் நீண்ட ஆயுளையும் அருள்புரிய வேண்டுகிறேன்.

இந்நூலை மிக அழகாகவும் குறுகிய காலத்தில் உருவாக்கி தந்த திருவண்ணாமலை விஸ்வம் பிரிண்டர்ஸ் உரிமையாளர் சிவ.கோவிந்தராஜன் அவர்களுக்கும், கையெழுத்து பிரதிகளை அழகிய முறையில் கனனியில் அச்சுகோர்ப்பு செய்த திருவண்ணாமலை, ராஜேஸ்வரி N.R. பாபு அவர்களுக்கும் ஸ்ரீதேவியின் திருவருள் எல்லா நலங்களும் வழங்கிட வேண்டுகிறேன்.

இந்நூலை வெளியிடும் பொறுப்பை அனைத்திந்திய ஆதிசைவ மாநாட்டின் பொறுப்பாளர்களான சிவஸ்ரீ N. பாலசந்திர சிவாச்சாரியார், சிவஸ்ரீ A.V. ரவிசுவாமிநாத சிவாச்சாரியார் அவர்களுக்கு எனது நன்றியையும் அவர்கள் ஆதிசைவ சமூகத்திற்காக இன்னும் பல மாநாடுகள் நடத்தி சமூகம் மேன்மையடைய செய்ய எல்லா நலன்களுடன் பல்லாண்டு வாழ்ந்துவர விரும்பி வேண்டி மகிழ்கின்றேன்.

இங்ஙனம்
நூல் ஆசிரியர்
சிவாகமஞானசாகரம், ஸௌம்ய சாக்த கலா ரத்னா
திருக்கோலக்கா **N. இராமநாத சிவாச்சாரியார்**
தலைமை ஆசிரியர், வேதசிவாகம பாடசாலை
திருஞானசம்பந்தர் அவதார இல்லம்
சீர்காழி - 609 110.
போன் : 04364-272116

நம: பார்வதீ பதயே
ஹரஹர மஹாதேவா



தென்னாடுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!